வரு. 75 இல. 47 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-
தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி (Sinhala)
2023 நவம்பர் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
November 26 Sunday, 2023







/ Thinakaran.lk / ThinakaranLK













## அரச ஊழியர்களின் வாழ்க்கை செலவு கொடுப்பனவு

# ஜனவரி முதல் ரூ. 5,000 வழங்க அரசு தீர்மானம்

### முன்மொழியப்பட்ட 10,000 ரூபாவில் முதற்கட்டமாக வழங்க முடிவு



2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 10,000 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவில் முதற்கட்டமாக 5,000 ரூபாவை ஜனவரி மாதம் முதல் வழங்க அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதேபோன்று ஓய்வூதியக்காரர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 2,500 ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை ஜனவரி மாதம் முதல் முழுமையாக வழங்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக வழங்குவதற்கு முன்மொழியப்பட்டதுடன், அதில் 5,000 ரூபாவை ஏப்ரல் மாதத்திலும் மீதித் தொகையை ஒக்டோபர் மாதத்திலும் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. 06

### ஓய்வூதியக்காரர்களுக்கும் 2,500 ரூபா முழுமையாக ஜனவரியில் வழங்கப்படும்

### 25ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருது விழா



இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றிய ஏற்றுமதியாளர்களை கௌரவித்து அவர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்காக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை வருடாந்தம் ஏற்பாடு செய்துள்ள ஜனாதிபதி ஏற்றுமதி விருது வழங்கும் நிகழ்வு கடந்த 23ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது. கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கடந்த இரண்டு நிதியாண்டுகளுக்கான சிறந்த ஏற்றுமதியாளர்கள் மதிப்பீட்டுக்காக இரண்டு பிரிவுகளின் கீழ் 51 விருதுகள் வழங்கப்பட்டன. ஆண்டின் புத்தாக்க ஏற்றுமதி தயாரிப்பு, சிறந்த ஏற்றுமதியாளர் உள்ளிட்ட 16 விருதுகளை வென்ற MAS Holdings சார்பாக MAS Active பிரதம நிறைவேற்று அதிகாரி செலன் குணதிலக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து விருதைப் பெற்றுக்கொண்டார். முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மற்றும் MAS Holdings குழு உறுப்பினர் எம். தீபிகா குமாரியும் படத்தில் காணப்படுகிறார். *(படம்: சுலோச்சன கமகே)*

## O/L, A/L மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி நெறிகள்

### புதிய திட்டம் குறித்து கல்வியமைச்சர் விளக்கம்



கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளை எதிர்கொள்ளும் மாணவர்களுக்காக பல தொழில் பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கவுள்ளதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

தேசிய கல்வி நிறுவனம், தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் திறந்த பல்கலைக் கழகத்தினூடாக தொழில் 06

## தோட்டத் தொழிலாளருக்கு விரைவில் சம்பள அதிகரிப்பு

### அமைச்சர் மனுஷ தலைமையில் விசேட கூட்டம்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் சம்பள அதிகரிப்பை மேற்கொள்வதற்கான விசேட கூட்டம், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் அவரது அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்ற தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். 06

## அரிசியை பதுக்குவோர் மீது பாயவுள்ள புதிய சட்டம்

### அமைச்சர் நளின் பெர்னாண்டோ கடும் எச்சரிக்கை



நாட்டில் அரிசியை பதுக்குவோர் மீது புதிய சட்ட நடவடிக்கை கொண்டு வரப்படவுள்ளதாக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ எச்சரித்துள்ளார்.

அந்த வகையில், இலங்கையிலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்கள் மறைத்து வைத்திருக்கும் சம்பா மற்றும் கீரி சம்பா அரிசியை கையகப்படுத்தி சந்தைக்கு வழங்குவதற்கான சட்டமூலம் விரைவில் தயாரிக்கப்படவுள்ளதாகவும், அவர் 06

## DOOR TO DOOR சேவை தற்காலிக இடைநிறுத்தம்

### உடனடியாக அமுல்



வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு பொருட்களை அனுப்பும் 'DOOR TO DOOR' சேவையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கான நடவடிக்கையை இலங்கை சுங்கத் திணைக்களம் எடுத்துள்ளது. வெளிநாட்டிலுள்ளோர் 'DOOR TO DOOR' சேவையின் மூலம் இலங்கைக்கு பல்வேறு பொருட்களை அனுப்புவதுடன், இப்பொருட்கள் தனியார் போக்குவரத்து முகவர் நிலையங்களினூடாக நேரடியாக உரியவர்களின் 06

## பொருளாதாரம் குறித்து அமைச்சர் பந்துல – சஜித் மோதல்







அரசாங்க நிதிக்குழு தொடர்பிலும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி தொடர்பாகவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்குமிடையே பாராளுமன்றத்தில் காரசாரமான மோதல் இடம்பெற்றுள்ளது. பொருளாதாரம் தொடர்பில் 07 நாட்கள் விவாதத்துக்கு தான் தயாரென அமைச்சருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சவால் விடுத்ததையடுத்து, 07 நாட்களல்ல 03 மணிநேரம் தொலைக்காட்சியில் விவாதத்துக்கு தயாரெனக் கூறி அமைச்சர் பந்துல குணவர்தன அவரது சவாலை ஏற்றுக்கொண்டார். அரச நிதிக்குழுவின் தலைவராக எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற 06

## நெதர்லாந்திலுள்ள இலங்கையின் தொல்பொருட்கள் மீண்டும் நாட்டுக்கு!

### டிசம்பர் முதல் வாரத்தில் பணிகள் ஆரம்பம் –சாகல ரத்நாயக்க



நெதர்லாந்தின் ஆட்சிக் காலத்தில் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு தற்போது நெதர்லாந்தின் அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ள சில தொல்பொருட்களை கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கும் பணி எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படுமென தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பில் தேசிய அருங்காட்சியகத்துக்குச் சென்று பார்வையிட்ட அவர், டச்சுக்காரர்களால் 06

### வட்டுக்கோட்டை அசம்பாவிதம்;

## நீதிமன்ற உத்தரவில் 04 பொலிஸார் கைது



யாழ். சித்தங்கேணியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக 04 பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது, 06


## எங்கள் கருத்து...

## வெறுப்பை வெளிக்காட்டும் பக்குவமற்ற உள்ளங்கள்!

மனித குலத்துக்குள்தான் எத்தனை பேதங்கள், முரண்பாடுகள், வெறுப்புகள்! மற்றொரு தரப்பின் மீது வெறுப்பு கொள்வது ஒருபுறமிருக்க, அவ்வெறுப்பை வெளிக்காட்டுவதில் சிலர் காண்பிக்கின்ற தீவிரம் அதிகம்.

மதம், இனம், பிரதேசம், மொழி என்றெல்லாம் பல்வேறு பேதங்களின் பேரில் யுத்தங்களும் மோதல்களும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. மனித உயிர்களும் உடைமைகளும் அழிந்து கொண்டேயிருக்கின்றன. இம்மோதல்களில் பாதிக்கப்படுவோரில் அதிகமானவர்கள் அப்பாவி மக்களேயாவர்.

உலகின் பெரும்பாலான நாடுகளில் மனிதகுலத்தினுள் பேதங்கள் நிலவுகின்றன. இலங்கையிலும் இவ்வாறு பேதங்கள் நிலவுவதால்தான் எமது நாட்டில் நிரந்தர ஐக்கியத்தை இன்னுமே தோற்றுவிக்க இயலாதிருக்கின்றது. மதம், மொழி, இனம் என்றெல்லாம் மக்கள் தங்களுக்குள்ளேயே பேதங்களை உருவாக்கியுள்ளனர். 06



## 06 காணாமல் போன பொலிஸ் அதிகாரி சடலமாக மீட்பு



## 06 பெருந்தோட்ட பிரதேசங்களில் அனைவரது முழு ஒத்துழைப்புடன் அனைத்து பிரச்சினைக்கும் தீர்வு

## இஸ்ரேல் செல்லும் இலங்கையருக்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்படுவதில்லை

### ஹக்கீம் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் மனுஷ பதில்




**லோரன்ஸ் செல்வநாயகம்**

இஸ்ரேலுக்கு அனுப்பப்படும் இலங்கையருக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுவதாக தெரிவிக்கும் கூற்று முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார். 06

## CTB திருட்டுகளை பிடிக்க STF அதிகாரி நியமனம்

### அமைச்சர் பந்துல அதிரடி தீர்மானம்



விசேட அதிரடிப் படை தலைமையக பணிப்பாளர்(கட்டடங்கள்) மற்றும் திட்டப் பணிப்பாளராகவும் கொழும்பு பிராந்தியத்துக்கு பொறுப்பான முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். அபயகோன், இலங்கை போக்குவரத்து சபையின் பாதுகாப்பு மற்றும் விசாரணை 06

### பிலிப்பைன்ஸில் இரு தங்கம் வென்ற

## அகிலத்திருநாயகிக்கு பாராட்டு நிகழ்வு



பிலிப்பைன்ஸில் நடைபெற்ற National Masters & Seniors Athletics போட்டியில் இரு தங்கப்பதக்கங்களை பெற்று வெற்றி பெற்ற முள்ளியவளையைச் சேர்ந்த 72 வயதுடைய அகிலத்திருநாயகியை பாராட்டிக் 06

### வடக்கு, கிழக்கில் தாழமுக்கம்;

## புயலாக மாறலாம் என எச்சரிக்கை

**யாழ். விசேட நிருபர்**



எதிர்வரும் திங்கட்கிழமை (27) வங்காள விரிகுடாவில் அந்தமான் தீவுகளுக்கு தெற்காக காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகும் வாய்ப்புள்ளதாக, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை 06

# ஆரோக்கியமான ஊடகக் கலாசாரத்துக்கான அத்திவாரம்

## லேக்ஹவுஸ் நிறுவன ஊடக அகடமியின் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழா




பெருமைமிக்க பத்திரிகைப் பாரம்பரியத்தை கொண்ட லேக்ஹவுஸ் நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ஊடக அகடமியானது பாரம்பரிய ஊடகத்துறைக்கு அப்பாற் சென்று அறிவும் செயற்றிறனும் மிக்க ஊடகவியலாளர்களை எதிர்காலத்துக்கும் நாட்டுக்கும் வழங்கும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் இலங்கையின் மக்கள் அபிப்பிராயத்தை மாற்றியமைப்பதில் லேக்ஹவுஸ் நிறுவனம் முக்கிய பங்காற்றியதை நினைவுகூர்ந்த அவர், பெருமைமிக்க பாரம்பரியத்திற்கு உரிமை கோருவதற்குரிய வேறு எந்த ஒரு நிறுவனமும் இலங்கையில் இல்லை என்றும், அதன் காரணமாக லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தரத்தை எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவதற்காக கடந்த வருடத்தில் லேக்ஹவுஸ் ஊடக அகடமி ஆரம்பிக்கப்பட்டதாகவும் கூறினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழனன்று (23) பிற்பகல் இடம்பெற்ற டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். ஊடகத்துறையில் பணியாற்றுவதற்காக அறிவும் பொறுப்பும் வாய்ந்த ஆக்கபூர்வமான ஊடக தலைமுறையை உருவாக்கும் நோக்கில் இலங்கையின் அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட லேக்ஹவுஸ் ஊடக அகடமியால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறி மற்றும் டிஜிட்டல் மீடியா தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த 26 மாணவர்களுக்கு இதன் போது டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. இவர்களுள் ஊடகத் தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்த 10 மாணவர்களும், டிஜிட்டல் ஊடகத் தொடர்பாடல் பாடநெறியைப் பூர்த்தி செய்த 16 மாணவர்களும் அடங்கியிருந்தனர்.





இதன் போது தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது,

“எமது நாட்டின் பொருளாதார, அரசியல் நிலைமைகளுக்கு மத்தியில் முன்னேறிச் செல்லும் போது வழிகாட்டிய ஒரு நிறுவனமாக லேக்ஹவுஸ் நிறுவனத்தைக் குறிப்பிட முடியும். சுதந்திரத்தைப் பெறுவதற்கு முன்பிருந்தே சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்துக்கும், சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் சமூக கலாசார உருவாக்கத்திற்கான மக்கள் விருப்பை மாற்றியமைத்த மற்றும் அதற்குத் தேவையான பின்னணியை உருவாக்கிய நிறுவனமே லேக்ஹவுஸ் ஆகும். அந்த வரலாற்றுப் பாரம்பரியத்திற்கு உரிமைகோரக் கூடிய வேறு எந்த நிறுவனமும் இலங்கையில் இல்லை. எனவே, அந்த நிறுவனத்தின் தரத்தை எதிர்கால சந்ததியினருக்கு வழங்கும் வகையில் கடந்த ஆண்டு லேக்ஹவுஸ் ஊடக அகடமியை ஆரம்பித்தது.

இது ஆரம்பிக்கப்பட்ட போது நாம் எதிர்பார்த்தது பாரம்பரிய ஊடகவியலாளர்கள் நினைப்பதை விட அதிகமாக சிந்திக்கக்கூடிய, அவர்கள் பார்ப்பதை விட கூடிய விடயங்களைப் பார்க்கக்கூடிய மற்றும் அவர்கள் கேட்பதை விட அதிகமாக கேட்கக்கூடிய அறிவார்ந்த பத்திரிகையாளர்களின் குழுவை எதிர்காலத்துக்கும், நாட்டிற்கு வழங்குவதேயாகும். அறிவற்ற ஊடகங்களுக்கு மத்தியில் அறிவுமிக்க ஊடகத்தைப் படைப்பதற்காகவும், பண்பாடற்ற ஊடகம் இருக்கும் போது, அதை பண்பாடுள்ள ஊடகமாக மாற்றிக் கொள்வதற்காகவும், எதிர்க்கும் ஊடகம் இருக்கும் போது, அதை பயனுள்ள ஊடகமாக மாற்றிக் கொள்வதற்காவும், ஊடகச் செயற்பாட்டை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பில் கற்பிப்பதற்கும் டிப்ளோமா பாடநெறியாக முன்னெடுத்திருக்கலாம் என நினைக்கின்றேன்.




வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்காக பல்வேறு துறைசார் நிபுணர்கள் அறிஞர்கள் ஒன்றிணைந்து சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய வேலைத்திட்டத்திற்கான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். எமக்குள்ள முக்கிய பிரச்சினை டொலர் பற்றாக்குறை மற்றும் அந்நிய செலாவணி பற்றாக்குறைகளாகும்.

(19 ஆம் பக்க பார்க்க)

தமிழில்
எம். எஸ். முஸப்பிர்

## சிறந்த திரைக்கதைக்கான போட்டியில் தெரிவு செய்யப்பட்டுள்ள

# “ 19:53 Lost in Language”

ஜெர்மனிய அரசின் டார்ம்ஸ்டாட் பல்கலைக்கழக திரைப் படக் கல்லூரி மாணவர்களின் குறும்திரைப்படம் “19:53 Lost in Language” சிறந்த திரைக்கதைக் கான போட்டியில் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

**நாநலவுடைமை அந்நலம் யான் நலத்து உள்ளதூஉம் அன்று**

(குறள் : 641)






மொழித் தடைகளால் ஏற்படும் துன்பநிலைகளையும், அதனால் ஏற்படும் பிரிவினையையும் காட்சிப்படுத்த முயல்கிறது.

இந்த திரைப்படம் ஜெர்மனிய அரசின் டார்ம்ஸ்டாட் பல்கலைக்கழக திரைப்படக் கல்லூரியால் பகுதியாக தயாரிக்கப்படுகிறது.

இதில் பங்குபெறும் பன் நாட்டைச் சேர்ந்த திரைத் துறை மாணவர்களும் கலைஞர்களும் தங்கள் உழைப்பை இலவசமாகவே வழங்குகின்றனர். இருப்பினும் தயாரிப்பு செலவுகளுக்கு 800 பணம் தேவைப்படுகிறது.

இதற்காக ஒரு கூட்டு நிதிநல்கை (Crowd funding) தொடங்கப்பட்டுள்ளது. lostinlanguage.de என்ற இணையதளத்தில் உங்கள் பங்களிப்பை வழங்கலாம்.

உங்களில் சிறிய பங்களிப்பு எங்களுக்கு பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும்

தனது சொந்த மொழியில் உரையாடும் சந்தர்ப்பம் மறுக்கப்படும் போது ஒரு மனிதனோ அல்லது ஒரு சமூகமோ எவ்வாறான சவால்களை சந்திக்கும் என்பதை விவரிக்கும் ஒரு குறும் திரைப்படம் இது.

வெளிநாட்டில் வசிக்கும் அனைவருக்கும், சொந்த நாட்டில் தாய்மொழியில் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களுக்கும், இந்த திரைப்படத்தில் "சமத்" ஜெர்மன் மொழி தெரியாமல் ஜெர்மனியில் உயிராபத்தின்போது உதவி தேடும் தருணங்கள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன் இது 1953 ஆம் ஆண்டு சிங்கள மொழி சட்டம் (Sinhala only act) தமிழ் பேசும் மக்கள்மீது ஏற்படுத்திய தாக்கத்தை இந்த குறும் திரைப்படம் நினைவு படுத்துகிறது. இந்த திரைப்படம்



பதுர்ஜன் விஜயசேகர & குல்யா அமடோவா

## இறந்த ஆத்மாக்களுக்கான திருப்பலி







இறந்த ஆன்மாக்களை நினைவு கூரும் மாதத்தையொட்டி லேக்ஹவுஸ் கிறிஸ்தவ சங்கத்தினரின் ஏற்பாட்டில் விசேட திருப்பலிபூஜை அருட்தந்தை பிரகீத் டில்சாந்தினால் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் ஹரேந்திர காரியவசம், ஆசிரிய பீட பணிப்பாளர் சிசிர பரணதந்திரி உள்ளிட்ட நிர்வாக தலைவர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.


www.masholdings.com
16 நாடுகள் | 100,000+ பணியாளர்கள்
MAS
துணிவே மாற்றம்
இலங்கையர்களால்,
இலங்கையர்களுக்காக.
2021ம், 2022ம் ஆண்டுகளுக்காக மீண்டும் இலங்கையின்
முன்னணி ஏற்றுமதியாளராக மீண்டும் மகுடம் சூட்டும் MAS.
EDB
EDB
MAS Active (Active மற்றும் Kreeda பிரிவுகள்) இலங்கையின் ஜனாதிபதி ஏற்றுமதி விருதுவிழாவில் 2021/22 மற்றும் 2022/23ஆம் ஆண்டுகளுக்குரிய இலங்கையின் ஒட்டுமொத்த சிறந்த ஏற்றுமதியாளராக நிர்ணயிக்கப்பட்டு, இலங்கையின் பொருளாதாரத்தில் வழங்கும் பங்களிப்பிற்கு மீண்டும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. இவை 2021 மற்றும் 2022இல் வளர்ந்து வரும் சந்தைகளில் சிறந்த செயலாற்றுகையுள்ள ஏற்றுமதியாளர், ஆண்டின் புதுமையான ஏற்றுமதி உற்பத்தி, 2022இல் ஏற்றுமதி துறைசார் நிலைபேறான அபிவிருத்தி பங்களிப்பாளர் அடங்கலாக பெறுமதியான 7 விருதுகளையும் வென்றுள்ளன.
MAS Intimates ஆனது 2021 மற்றும் 2022இல் நிகர அந்நிய செலாவணி ஈட்டுனர், 2021இல் உற்பத்தி பன்முகப்படுத்தலில் சிறந்த ஏற்றுமதியாளர், 2021 மற்றும் 2022இல் ஏற்றுமதி விநியோகச் சங்கிலியில் பிராந்தியங்களில் இருந்து சிறந்த பங்களிப்பாளர் அடங்கலாக பரந்த பிரிவுகளில் 7 விருதுகளைப் பெற்றுள்ளது.
சமூக பின்னலில் சகலரது வாழ்வையும் வளப்படுத்தும் MAS ஆனது, இலங்கையை மேம்படுத்துவதற்குரிய திடசங்கற்பத்தை தொடர்ந்தும் நிரூபித்து வருகிறது.
MAS ACTIVE
MAS KREEDA
MAS INTIMATES





# சர்ச்சையாக உருவெடுத்துள்ள அரசியலமைப்பு பேரவை விவகாரம்

லோரன்ஸ் செல்வநாயகம்

## அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியே: சபையில் வலியுறுத்திய ஜனாதிபதி

## பேரவையின் செயற்பாடுகளை ஆராய்வதற்காக விசேட தெரிவுக்குழு ஒன்று அடுத்த வாரம் நியமனம்







பாராளுமன்றத்தில் சில வாரங்களாக பெரும் பூதாகரமெடுத்திருந்த கிரிக்கெட் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் சற்று தணிந்துள்ள நிலையில் அரசியலமைப்பு பேரவை தொடர்பில் இந்த வாரம் பாராளுமன்றத்தில் கருத்துக்களும் விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு அவை சர்ச்சைகளுக்கு காரணமாகவும் அமைந்தன.

ஜனாதிபதி, சபாநாயகர், ஆளும் கட்சி எதிர்க்கட்சி என பலரும் வாதப்பிரதிவாதங்களை சபையில் முன்வைத்த நிலையில், சபையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் அது சர்ச்சையாக மாறியதையும் குறிப்பிட வேண்டும். அரசியலமைப்பு பேரவையில் உள்ளவர்களே அதன் நடவடிக்கைகளை சீர்குலைப்பதற்கு முயற்சிப்பதாக ஜனாதிபதி குற்றம் சாட்டினார். அதன் நடவடிக்கைகளை ஆராய்வதற்காக குழு ஒன்றை அடுத்த வாரம் நியமிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் சபாநாயகரும் தமது கருத்துக்களை முன்வைத்தார்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவோ அரசியலமைப்பு பேரவை சுயாதீனமானது. அதில் நிறைவேற்று அதிகாரம் அழுத்தம் கொடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி வருகின்றார்.

அரசியலமைப்பு பேரவையில் உறுப்பினர்கள் பிளவு பட்டு செயற்படுவதாகவும் அதற்குள்ளேயே சிலர் அதன் செயல்பாடுகளை சீர்குலைப்பதற்கு முயற்சிப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகிறது.

அந்த வகையில் அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியே என்பதை ஜனாதிபதி சபையில் தெரிவித்தார். இந்த கூற்றுக்கள் சபையில் பெரும் சர்ச்சைகளுக்கு வழி வகுத்தன.

அத்துடன் அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயர் முன் வைக்கப்பட்டுள்ளது. ஏன் அவர் இன்னும் அந்த பதவிக்கு நியமிக்கப்படவில்லை என்ற கேள்விகளும் சபையில் எழுந்தன. அது தொடர்பில் ஜனாதிபதியும் சபையில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் அது தொடர்பில் கருத்துப் பரிமாற்றங்களும் குற்றச்சாட்டுகளும் நிறைவடைந்ததாக தெரியவில்லை. பாராளுமன்றத்தில் அவை இன்னமும் தொடர்கின்றன. இனி அரசியலமைப்பு பேரவை தொடர்பில் சபையில் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக பார்ப்போம்

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க**

அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதி என அன்று நீதிமன்றத்தில் தெரிவித்த சுமந்திரன் எம்பி, இன்று பாராளுமன்றத்தில் அவ்வாறில்லை என மாற்றுக் கருத்தை தெரிவிப்பது விந்தையானது. அவர் ஏன் அவ்வாறு செயற்படுகின்றார் என எனக்குப் புரியாதுள்ளது.

அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதி என நான் தெரிவித்தபோது அது தொடர்பாக சபையில் முரணான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக சுமந்திரன் எம்.பி அதற்கு மாறான கருத்துக்களை தெரிவித்தார். ஆனால் அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது அரசியலமைப்பின் 17ஆம் திருத்தத்தின் வழக்குத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்கவே அரசியலமைப்பு சபையை நாம் ஏற்பாடு செய்தோம். அதே போன்று 2002இல் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான 7 நீதியரசர்கள் குழாம் வழங்கிய தீர்ப்பும் உள்ளது.

அதன் பிரகாரமே தற்போது நாம் செயற்படுகின்றோம். அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதி என அன்று சுமந்திரன் எம்.பி நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் இன்று பாராளுமன்றத்தில் அவ்வாறில்லை என தெரிவிக்கின்றார்.அத்துடன் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பது தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்திருந்தார். எனினும் சட்டத்தரணிகள் சங்கத்துடன் நான் அது தொடர்பில் எந்த சந்தர்ப்பத்திலும் பேசவில்லை

அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகளை சீர்குலைப்பதற்கு அதற்குள்ளேயே மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் காரணமாக பொலிஸாருக்கும் நீதிமன்றத்திற்கும் செயற்பட முடியாத நிலை காணப்படுகிறது. இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அந்த வகையில் உயர் பதவிகளுக்கு நியமிப்பதற்கு அனுப்பப்பட்டுள்ள பெயர்களை அரசியலமைப்பு பேரவை தாமதப்படுத்துவது ஏன் என்பதை ஆராய்வதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்குமாறும் நான் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொண்டுள்ளேன்.

பாராளுமன்ற தெரிவுக் குழு, அரசியலமைப்பு பேரவை என எந்த பெயர்களில் குறிப்பிடப்பட்டாலும் அரசியலமைப்பு பேரவை நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியே. அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகளை ஆராய்வதற்காக விசேட தெரிவுக்குழு ஒன்றை அடுத்த வாரம் நாம் நியமிக்கவுள்ளோம்.

அரசியலமைப்பு பேரவை முறையாக செயற்படாததால் தற்போது நாட்டில் பொலிஸ்மா அதிபரும் இல்லை, நீதிபதிகளும் இல்லை. இவ்வாறான நிலையில் நாட்டில் நீதியை நிலைநாட்டமுடியாமல் உள்ளது.

அத்துடன் மேன்முறையீட்டு நீதிபதி பந்துல கருணாரத்னவின் பெயரை அடுத்த பதவி உயர்வுக்காக பிரதம நீதியரசரே எனக்கு வழங்கினார். நான் அதனை அரசியலமைப்பு பேரவைக்கு அனுப்பினேன். எனினும் அரசியலமைப்பு பேரவை அதனை தடுத்து வைத்திருப்பது ஏன் என எனக்குத் தெரியாது.

குறிப்பாக அரசியலமைப்பு பேரவையின் சில உறுப்பினர்கள் அதன் நடவடிக்கைகளை குழப்புவதற்கு உள்ளே இருந்து செயற்படுவார்களானால் எமக்கு இந்த முறைமையை செயற்படுத்த முடியாமல் போகும்.

பொலிஸ்மா அதிபர் நியமனம் மற்றும் நீதிபதியின் பதவி உயர்வு தொடர்பாக அரசியலமைப்பு பேரவையால் ஒரு தீர்மானத்துக்கு வர முடியாமல் போனதாக சபாநாயகர் எனக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

அந்த நியமனத்துக்கு குறித்த பேரவையில் 3பேர் ஆதரவாகவும் 3பேர் எதிராகவும் வாக்களித்திருப்பதுடன் 2பேர் வாக்களிப்பிலிருந்து விலகிக்கொண்டுள்ளனர்.

ஒருவர் இன்னும் அரசியலமைப்பு பேரவைக்கு நியமிக்கப்படாமல் உள்ளார். இவ்வாறு செயற்படும்போது எவ்வாறு எம்மால் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும்?

ஜனாதிபதி பெயர்களை முன்மொழிந்தால் பேரவை அப்பெயர்கள் தகுதியானவையா இல்லையா என ஆராய்ந்து பொருத்தமானவர்களின் பெயரை அந்தப் பேரவைக்கு அனுப்புவதே நடைமுறை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

அரசியலமைப்பு பேரவைக்ககான இறுதி நியமனம் இதுவரை இடம்பெறாமை தொடர்பில் எவரும் எவர் மீதும் குற்றம் சுமத்த முடியாது.

அரசியலமைப்பு பேரவைக்கு சித்தார்த்தன் எம்.பியின் பெயரை இதுவரை நியமிக்காமை தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பாக சபைக்கு தெளிவுபடுத்தும் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியலமைப்பு பேரவைக்கான இறுதி நியமனம் தொடர்பாக ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தி எழுத்துமூலம் அறிவிக்கவுள்ளேன். அரசியலமைப்பின் 21ஆம் திருத்தத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் காரணமாகவே இந்த நியமனத்தில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் தொடர்பில் அரசியலமைப்பின் பிரகாரமே செயற்பட வேண்டும் என்றே சட்டமா அதிபரின் ஆலோசனையும் இருந்தது.

இதனை மீறி செயற்பட எமக்கு சட்ட ரீதியான அதிகாரம் எதுவும் கிடையாது. அதனால் இது தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுப்பேன். அவ்வாறில்லாவிட்டால், இந்த பிரச்சினையைத் தீர்ப்பதானால் அரசியலமைபிலுள்ள அதற்கான உறுப்புரையை மாற்ற வேண்டும். அதனால் அரசியலமைப்பு பேரவைக்கு இறுதியாக பரிந்துரை செய்யப்பட்டவரை இதுவரை நியமிக்கவில்லை என யாரும் எவரையும் குற்றம் சுமத்த முடியாது.

அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள குறைபாடே இந்த விடயம் இடம்பெறாமைக்கு காரணமாகும் என்பதை சபாநாயகர் தெளிவுபடுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச:

அரசியலமைப்பு பேரவையின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வ தற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அவ்வாறு செயற்படுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளதா? அத்துடன் அரசியலமைப்பு பேரவையின் நியமனம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்காமல் காலம் தாழ்த்துவது ஏன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரிடம் சபையில் கேள்வி எழுப்பினார்.

(17ஆம் பக்கம் பார்க்க...)

# பொலித்தீன் பாவனை ஒழிப்பில் தவறான முன்னுதாரணம்

## நாவலப்பிட்டி பாடசாலை சம்பவம் உணர்த்தும் உண்மை!

நாவலப்பிட்டி பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் காலை உணவை மாணவர்கள் பொலித்தீன் தாள்களில் சுற்றி வந்திருப்பதாக குற்றம்சாட்டி அதிபர் அவற்றை மாணவர்களை உண்ணுமாறு வற்புறுத்திய சம்பவம் பெற்றோர் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர், காலை உணவை பொலித்தீன் தாள்களில் சுற்றிவந்துள்ளனர். சாப்பிட்டு முடிந்தவுடன் அகற்றப்பட்ட பொலித்தீன் மற்றும் செய்தித்தாள்களை மறுபடியும் வீட்டுக்கு கொண்டு செல்வதற்காக புத்தக பையில் வைத்துள்ளனர். இதை வகுப்பறை வகுப்பறையாய் சோதனையில் ஈடுபட்டு வந்த பாடசாலை அதிபர் கண்டுள்ளார். இதனையடுத்து மாணவர்களை தண்டிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் தங்களது பைகளில் வைத்த பொலித்தீன் தாள்கள் மற்றும் செய்தித்தாள்களை வெளியே எடுக்குமாறு பணித்ததுடன் அவற்றை உண்ணுமாறும் மாணவர்களை கட்டாயப்படுத்தியுள்ளார்.

இதனால் பாதிக்கப்பட்ட ஐந்து மாணவர்களில் இருவர் நாவலப்பிட்டி மாவட்ட ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் தொண்டை வலி, வாந்தி, தொண்டை அழற்சி போன்ற நோய்ப் பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதுதொடர்பில் பெற்றோர் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் பதிவுசெய்த முறைப்பாட்டுக்கமையவே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்களை பொலித்தீன் தாள்களை உண்ணுமாறு வற்புறுத்திய அதிபர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கம்பளை கல்வி வலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இப்பாடசாலை பொலித்தீன் அற்ற வலயமாக சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருவதால், மாணவர்களை தண்டிக்கும் முகமாக பொலித்தீன் மற்றும் செய்தித்தாள்களை உண்ணுமாறு பாடசாலை அதிபர் வற்புறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

எனினும் பொலித்தீன் பாவனை கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாக காணப்படுகின்ற போதிலும் மாணவர்களின் மீதான அதிபரின் அணுகுமுறை கண்டிக்கத்தக்கது. இதனை எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்திவிட முடியாது.

இலங்கையில் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்துவதில் பாடசாலைகள் ஆற்றும் பங்கு அளப்பரியது. பிள்ளைகளை பாடசாலையில் அனுமதிக்கும் போதே பொலித்தீன் பாவனையின் தீமைகள் பற்றியும் அதற்கு மாற்றீடாக உபயோகிக்கக் கூடிய பொருட்கள் பற்றியும் விளக்கமளிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அநேகமான பாடசாலைகளில் உள்ள உணவகங்களில் கூட பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. எனினும் இவ்விடயத்தில் பெற்றோர்களின் ஒத்துழைப்பும் மிக அவசியமானது.







பொலித்தீனில் காணப்படும் இலகுத் தன்மை, மலிவு காரணமாக அது எமது அன்றாட வாழ்வில் ஒன்றிப்போன ஒன்றாகவே ஊறிப்போன ஒன்றாகவே அது காணப்படுகின்றது.

எதிலீனில் மேற்கொள்ளப்பட்ட உயர் அழுத்தப் பரிசோதனையில் தவறுதலாக உருவான விளைவுதான் பொலித்தீன். ஆனால் இன்று உலகம் முழுவதையும் அது ஆக்கிரமித்துள்ளது.

இலகுவில் உக்கும் தன்மையற்ற அதன் இயல்பு காரணமாக படிப் படியாக சூழலில் சேர்ந்து நேரடி மறைமுகத்தாக்கங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைக்கு மனிதகுலத்தை தள்ளியுள்ளது.

இலங்கையில் பொலித்தீன் மாசு குறித்து ஹொரண ஆதார வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டொக்டர். குமாரவின் கருத்துப் படி நாளொன்றுக்கு 200,000 மதிய உணவு சுற்றிவரும் பொலித்தீன் தாள்களும் சுமார் 150,000 பொலித்தீன் பைகளும் பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கின்றார். மாதாந்தம் தனிநபரின் பொலித்தீன் பாவனை சுமார் 0.5 கிலோ ஆகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதன்படி 2050 ஆம் ஆண்டுக்கிடையில், பருவநிலை மாற்றம் ஊட்டச்சத்து குறைபாடு, மலேரியா, வயிற்றுப்போக்கு மற்றும் வெப்ப அழுத்தத்தால் ஆண்டுக்கு 250,000 கூடுதல் இறப்புகளை இது ஏற்படுத்தும். 2030ஆம் ஆண்டளவில் சுகாதாரத்துக்கு ஏற்படும் நேரடி செலவுகள் USD 24 பில்லியன்களுக்கும் இடையில் அமைந்திருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும் பல வருடங்களாகவே பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த கடும் பிரயதனத்தை மேற்கொண்டு வருகின்ற போதும், இதனுடைய பயன்பாட்டை முற்றுமுழுதாக கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கு சில நடைமுறை சிக்கல்களும் காரணமாகவுள்ளதாக சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பொலித்தீன் பாவனைக்கான கட்டுப்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஒருசில நிறுவனங்களிடம் மட்டுமே மட்டுப்படுத்தப்படல், பொலித்தீனுக்கு பதிலாக மலிவானதும் இலகுவானதுமான மாற்றீட்டு பொருட்கள் அறிமுகப்படுத்தப்படாமை, சட்டத் திட்டங்களில் காணப்படும் நெகிழ்வுத் தன்மை போன்ற விடயங்கள் பொலித்தீன் பாவனையை முற்றாக இல்லாதொழிப்பதில் அரசாங்கத்துக்கு சவாலாகவுள்ளதாக சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சில நாடுகள், பொலித்தீன் பை வர்த்தகத்திற்கான வரியை அதிகரித்துள்ளன. தென்னாபிரிக்காவில் பொதுமக்கள் இலவசமாக பெற்றுக்கொள்ளும் பொலித்தீன் பைகளுக்கு தண்டப்பணத்தை அறவிடுகிறது. 1380 டொலர் அல்லது 10 வருட சிறைத் தண்டனையை பொலித்தீன் பாவனையால் அனுபவிக்க நேரிடுகிறது. இதனால் பொதுமக்களிடையே பொலித்தீன் பாவனை குறைவடைந்திருக்கிறது. பொருட்களை வாங்குவோர் இலகுவாக மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடிய தடித்த, தரமான பொலித்தீன் பைகளை கொள்வனவு செய்கின்றனர். வேறுசில நாடுகள் பொலித்தீன் பைகள் மூலம் ஏற்படும் ஆபத்துகளை களைய தொடங்கியிருக்கின்றன. பெரும்பாலான நாடுகள் பொதுமக்களுக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்கியிருக்கிறது.

எனவே இலங்கையில் பொலித்தீன் தடையை முறையாக அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இவ்வருடம் ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் இலங்கையில் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டது. இதன்மூலம், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் ஸ்ட்ராக்கள், கிளறிகள், கோப்பைகள், தட்டுகள், கத்திகள், ஃபோர்க்ஸ் மற்றும் ஸ்பூன்கள் மற்றும் பிளாஸ்டிக் கயிறுத் தட்டுகள் மற்றும் மாலை போன்ற பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு நாட்டில் தடை விதிக்கப்பட்டது.

இந்த ஆண்டு பெப்ரவரியில், நாட்டில் பல பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கும் சுற்றாடல் அமைச்சால் முன்வைக்கப்பட்ட திட்டத்திற்கு அமைச்சரவை பச்சைக் கொடி காட்டியது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் பிளாஸ்டிக் பொருட்களை உடைமையில் வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் சுபோகரன் தெரிவித்திருந்தார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த 09 மாத கால பகுதிகளில் 13 தடவைகள் விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். அதன் போது, உணவகங்கள், விற்பனை நிலையங்கள் என 205 வர்த்தக நிலையங்களில் சோதனையிட்டுள்ளோம்.

அவற்றில் 14 உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றார்.

எதிர்வரும் காலங்களிலும் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். எனவே வர்த்தகர்கள் தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றை விற்பனை செய்யவோ, பயன்படுத்தவோ உடைமையில் வைத்திருக்கவோ வேண்டாம் என தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கைகள் பரவலாக்கப்பட வேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமாக அன்றி பரவலான சோதனைகள் தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.

அதேபோல் பொலித்தீனை பயன்படுத்தும்போதும் அவற்றை அழிக்கும்போதும், சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து ஒவ்வொரு குடிமகனும் அக்கறை கொண்டாலே போதுமானது. பல பிரச்சினைகளை தீர்த்துவிடலாம்.



வசந்தா அருள்ரட்ணம்

## அரசியல் அரங்கம்

அர்ஜுன்



# அரசின் இலட்சியங்களை பிரதிபலிக்கும் பட்ஜட்!

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுடன் சந்திப்பு

**பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் இலட்சியத் திட்டங்களை வரவுசெலவுத்திட்டம் பிரதிபலிக்கின்றது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவுசெலவுத் திட்டம் குறித்து நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: அரசு ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை 10,000 ரூபாவினால் அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளீர்கள். இதனால் மக்களின் வரிச்சுமை அதிகரிக்குமா?**

பதில்: அரசாங்கம் ஏற்கனவே வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவை வரவு செலவுத்திட்டத்தில் இணைத்துள்ளது. கோட்பாட்டு ரீதியாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை வினைத்திறனான நடைமுறைப்படுத்தலின் மூலம் சாத்தியமாக்க வேண்டும். நடைமுறைப்படுத்தல் என்பதே முக்கிய காரணி என்பதுடன், இந்த வார்த்தைகளை நடைமுறைச்சாத்தியமாக்கக் கூடிய நபர்களையே நாம் அங்கீகரிக்கின்றோம்.

ஆக்கபூர்வமான விமர்சனங்களுக்கு மதிப்புக் கொடுத்தாலும், இதனைப் பூர்த்தி செய்வதற்கான அர்ப்பணிப்பு அவசியமாகும். 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், அது நாட்டை ஸ்திரப்படுத்துவதில் முக்கிய பங்காற்றியது. 2024 வரவுசெலவுத் திட்டம், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் தீவிர கவனம் செலுத்துகிறது, இது தேசத்திற்கு சாதகமான பாதையை ஏற்படுத்துகிறது. புதிய வரிகளை அறிமுகப்படுத்தும் திட்டங்கள் எதுவும் இல்லை. முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் ஒரு அங்கமாகும்.

**கே: வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை 20,000 ரூபாவாக உயர்த்த வேண்டும் எனத் தொழிற்சங்கங்கள் கோருவதுடன், அதற்கு எதிராக தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் எச்சரிக்கின்றன. இதனை அரசாங்கம் எவ்வாறு பார்க்கின்றது?**

பதில்: பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து தொழிற்சங்கங்களுடனும் ஆக்கபூர்வமான உரையாடலுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அவர்களின் கவலைகளை நிவர்த்தி செய்வதில் நெகிழ்வுத் தன்மை காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நாட்டை சீர்குலைக்கும் மற்றும் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளின் பரந்த விளைவுகளை தொழிற்சங்கங்கள் புரிந்து கொள்ள வேண்டும். 22 மில்லியன் மக்களின் நல்வாழ்வுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூறுகிறது. கடந்த 12 மாதங்களில் அழுத்தமான பிரச்சினைகளை நாங்கள் தீவிரமாக எடுத்துரைத்துள்ளோம், மேலும் எந்தக் காலாண்டில் இருந்தும் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வரவேற்கிறோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் எமது தேசத்தின் ஸ்திரத்தன்மையையும் சுபீட்சத்தையும் உறுதிசெய்து பொறுப்புடன் ஆட்சியமைப்பது எமது அர்ப்பணிப்பாகும்.

> பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து தொழிற்சங்கங்களுடனும் ஆக்கபூர்வமான உரையாடலுக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்



> மிகவும் சவாலான காலகட்டத்தைக் கடந்து அரசு தனது இலக்குகளில் கவனம் செலுத்துகிறது. வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கவும், உள்ளூர் கடனை மேம்படுத்தவும், கடன் தீர்வுக்காக உலகளாவிய நிதி நிறுவனங்களுடன் நேர்மறையாக ஈடுபடவும் முயற்சிகள் இடம்பெறுகின்றன

**கே: அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கம் எதுவும் அரசுக்கு உள்ளதா?**

பதில்: சில பொருளாதார வல்லுநர்கள் அதற்கான பரிந்துரைகளை முன்வைத்திருந்தாலும் அரசாங்கம் என்ற ரீதியில் இதுபற்றிய முடிவு எதனையும் அரசாங்கம் இன்னமும் எடுக்கவில்லை. சுகாதாரத் திணைக்களத்தில் அத்தியாவசியப் பணிகளுக்கான ஆட்சேர்ப்பு குறைவாகவே உள்ளது. அரசின் செலவினங்கள் கடுமையாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. 2025 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதத்தை இலக்காகக் கொண்டு, வருவாயை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மிகவும் வலுவான மற்றும் பயனர்களுக்கு நட்பான நடைமுறையை அறிமுகப்படுத்தி வரி வலையை விரிவுபடுத்த முயற்சிக்கிறது.

**கே: அரசாங்கத்தின் வருவாய் இலக்குகள் எதிர்பார்ப்பைவிட அதிகமானவை என்று பொருளாதார நிபுணர்கள் சிலர் விமர்சிக்கின்றனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: கடந்த 15 மாதங்களில் மின்சாரத் தட்டுப்பாடு, எரிவாயு பற்றாக்குறை, உரத் தட்டுப்பாடு, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் போன்றவற்றைக் கடந்து குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டுள்ளோம். பணவீக்கம் ஒரு காலத்தில் 70 சதவீதமாக இருந்தது. இப்போது வெறும் 1.5 சதவீதமாகக் குறைந்துள்ளது. மேலும் உணவுப் பணவீக்கம் 95 சதவீதத்திலிருந்து எதிர்மறையில் 5 சதவீதமாகக் குறைந்துள்ளது. விமர்சனம் மட்டும் போதாது, உறுதியான, நம்பகமான முன்மொழிவுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியம்.

மிகவும் சவாலான காலகட்டத்தைக் கடந்து அரசு தனது இலக்குகளில் கவனம் செலுத்துகிறது.

(17ஆம் பக்கம் பார்க்க)

# உணவு, மருந்து, தண்ணீர் இன்றி காஸாவில் தொடரும் அவலம்!

**இஸ்ரேலுக்கும்–ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் இடையேயான போர் தீவிரமாகத் தொடருகின்ற நிலையில், பலஸ்தீனத்துக்கான இரண்டாவது தொகுதி உதவிப் பொருட்களை இந்தியா கடந்த வாரம் அனுப்பி வைத்தது. இதனை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.**



இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள பதிவில், "பலஸ்தீன மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை நாம் தொடந்து வழங்கி வருகிறோம். இரண்டாவது ஏ.ஐ. எஃப்.எம்.சி.சி.சி_17 விமானம் 32 தொன் உதவிப் பொருட்களை ஏற்றிக்கொண்டு எகிப்தின் எல்அரிஷ் விமானநிலையத்துக்கு புறப்பட்டுச் சென்றது" என்று தெரிவித்துள்ளார்.

எல்அரிஷ் விமான நிலையம் எகிப்தின் எல்லைப்பகுதியில் காஸாவுக்கு செல்லும் நுழைவுப் பாதையான ரஃபாவில் இருந்து 45 கி.மீ அப்பால் உள்ளது. காஸாவுக்கான மனிதாபிமான உதவிகளைக் கொண்டு செல்வதற்கான ஒரே பாதையாக காஸா மட்டுமே உள்ளது. இஸ்ரேஸ்_ ஹமாஸ் போர் தொடங்கியதில் இருந்து இந்தப் பாதை முழுமையாக பயன்பாட்டில் இருக்கவில்லை.

இந்தியா அனுப்பி வைத்துள்ள இந்த இரண்டாவது நிவாரணத் தொகுதிக்கு முன்னதாகவும் அந்நாடு பலஸ்தீன மக்களுக்கான உதவிப் பொருட்களை அனுப்பி வைத்திருந்தது. மருந்துகள் மற்றும் பேரிடர் நிவாரணப் பொருள்கள் உள்ளிட்டவை அந்த உதவிப் பொருட்களுள் அடங்கியிருந்தன. பலஸ்தீன மக்களுக்கான மனிதாபிமான அடிப்படையிலான தனது முதல் தொகுதி உதவிப் பொருட்களை கடந்த ஒக்டோபர் 22 ஆம் திகதியன்று இந்தியா அனுப்பி வைத்திருந்தது.

இதேவேளை ஹமாஸ் மீதான போரை உலக நாடுகள் உற்று நோக்கிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில், போரில் பொதுமக்களின் உயிரிழப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

"மேற்கு ஆசிய பிராந்தியத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளில் இருந்து புதிய சவால்கள் உருவாகி வருவதை நாம் அனைவரும் பார்க்கிறோம். ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் நடந்த தீவிரவாத தாக்குதலுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. இந்தப் பிரச்சினையில் நாங்கள் நிதானத்தையும் கடைப்பிடித்தோம். போர் குறித்த பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம்.

> இரண்டாவது தொகுதி உதவிப் பொருட்களை அனுப்பி வைத்தது இந்தியா!



இஸ்ரேல்_ ஹமாஸ் இடையேயான மோதலில் பொதுமக்கள் உயிரிழப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். போர் குறித்து பலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸிடம் பேசினேன். இந்தியா சார்பில் அவர்களுக்கு மனிதாபிமான உதவிகளையும் அனுப்பியுள்ளோம். உலகளாவிய நலனுக்காக குளோபல் சவுத் நாடுகள் ஒன்றுபட வேண்டிய நேரம் இது" என்று நரேந்திர மோடி தெரிவித்திருந்தார்.

இஸ்ரேல் நாட்டின் மீது ஒக்டோபர் 7ஆம் திகதி பலஸ்தீனத்தின் ஹமாஸ் குழு திடீர் தாக்குதலை நடத்தியது. அதைத் தொடர்ந்து இஸ்ரேலும் தொடர்ந்து தன்னுடைய எதிர்த் தாக்குதலை நடந்தி வருகிறது. இந்த மோதலில் குழந்தைகள், பெண்கள் உள்பட பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்திருக்கின்றனர். இந்த நிலையில் பலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் உலக நாடுகள் இரண்டாகப் பிரிந்து கிடக்கின்றன.

பலஸ்தீனத்துக்கு சீனா, ஈரான், சிரியா, லெபனான் முதலான நாடுகளும், இஸ்ரேலுக்கு இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளும் ஆதரவளித்திருக்கின்றன.

காஸா மீது கடந்த ஒன்றரை மாதகாலத்துக்கு மேலாக இஸ்ரேல் கடும் தாக்குதலை நடத்தி வரும் நிலையில், காஸாவில் இலட்சக்கணக்கான மக்கள் உணவு, மருந்துப் பொருட்கள் இன்றி தவித்து வருகின்றனர். அவர்களுக்கு பல்வேறு நாடுகளும் உதவிப் பொருட்களை அனுப்பி வருகின்றன. இந்தியாவும் தொன் கணக்கில் மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்திருக்கிறது.

காஸா மீதான தாக்குதல்களில் காயமடைந்துள்ள மக்களுக்கு மருத்துவ சிகிச்சையை அளிக்க போதுமான அளவில் மருத்துவ உபகரணங்கள், மருந்துப் பொருட்கள் காஸாவில் இல்லை. காஸாவுக்கான குடிநீர், மின்சாரம், எரிபொருள் விநியோகத்தை இஸ்ரேல் துண்டித்திருப்பதால் சுமார் 23 இலட்சம் காஸா மக்கள் பெரும் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர்.

> 23 இலட்சம் மக்கள் நிர்க்கதி நிலையில்!

இஸ்ரேலின் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவி தேவைப்படுவதால் இஸ்லாமிய நாடுகளும், ஐ.நாவும் உதவிப் பொருட்களை அனுப்பி வைத்திருக்கின்றன. இந்தப் பொருட்கள் சில நாட்களாக ராஃபா எல்லையில் இஸ்ரேலால் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. பின்னர் அப்பொருட்கள் காஸாவுக்குள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. பலஸ்தீனத்தில் பாதிப்பு கடல் அளவுக்கு இருக்கும் நிலையில், உதவிப் பொருட்கள் கடுகளவுக்குத்தான் இருப்பதாக சொல்லப்படுகிறது.

(17ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...



# ஜிந்துப்பிட்டி ஆலயத்தில் திருக்கார்த்திகை தீபம்

ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் இன்று (26) திருக்கார்த்திகை தீபம் மிகச் சிறப்பாக நடைபெறும்.

காலை 6.00 மணிக்கு ஸ்ரீசண்முகப்பெருமானுக்கும் இராஜராஜேஸ்வரி, விசாலாட்சி அம்பாளுக்கும் ஸ்நபன அபிஷேகம் நடைபெறுவதுடன், காலை 8.00 மணிக்கு வசந்த மண்டபத்தில் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீசண்முகப்பெருமானுக்கு விசேட 108 கலச சங்காபிஷேகம், சிறப்பு அலங்கார பூஜை நடைபெற்று சண்முகா அர்ச்சனை நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு திருவிளக்கு பூஜையும் மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டபத்தில் ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமிக்கு விசேட அலங்கார பூஜையும் நடைபெற்று, சுவாமி உள்வீதி உலா வந்து சொக்கப்பானை எரித்தல் நடைபெறுமென, ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

பெருந்தோட்ட பிரதேசங்களில்

# அனைவரது முழு ஒத்துழைப்புடன் அனைத்து பிரச்சினைக்கும் தீர்வு

லோரன்ஸ் செல்வநாயகம்

பெருந்தோட்டப் பகுதியில் காணப்படும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் குடிநீர் பிரச்சினை காணப்படுகிறது என்பதை தாம் ஏற்றுக்கொள்வதாக சபையில் தெரிவித்த அமைச்சர், ஏற்றுக்கொள்கிறேன். அப்பகுதிகளில் 44 வீதமான குடிநீர் திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

பெருந்தோட்டப் பகுதியில் ஒரு இலட்சத்து 76,000 தனி வீடுகளுக்கான கேள்வி காணப்படுகிறது. தற்போது அமைக்கப்படும் தனி வீடுகளுக்கு முகவரியும் வழங்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், காணி உரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

அத்துடன் மலையக மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி வழங்குவதற்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களதும் ஒத்துழைப்பு அவசியம் என தெரிவித்த அவர், காணி உரிமை வழங்குவது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தின் போது மக்கள் விடுதலை முன்னணி எம்.பி விஜித ஹேரத் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2015 ஆம் ஆண்டு பெருந்தோட்டபகுதிகளுக்குச்சென்றுகாணி உரிமை வழங்குவதாக வாக்குறுதி வழங்கியதாக விஜித ஹேரத் எம்பி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மலையக மக்களுக்கு மாத்திரம் சொந்தமானவர் அல்ல. அவர் ஒட்டுமொத்த நாட்டு மக்களின் தலைவர்.

ஆகவே ஜனாதிபதி வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்குண்டு.

தற்போது வழங்கப்பட்டுள்ள வாக்குதியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எனக்கும் எனது தரப்பினருக்கும் உரித்தாக்கப்பட்டுள்ளது. எம் மீது அனைவரும் நம்பிக்கை கொள்ளுங்கள். வாக்குறுதிகளை நிறைவேற்ற அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள்.



அத்துடன் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதலாளிமார் சம்மேளனத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் மக்கள் விடுதலை முன்னணியினரும் கலந்து கொண்டார்கள். இறுதியில் சம்பள பேச்சுவார்த்தை தொடர்பான கூட்டு ஒப்பந்தம் நீக்கப்பட்டது. அந்த வகையில் சம்பளப் பிரச்சினைக்கு மாற்று நடவடிக்கைகள் மூலம் தீர்வு காண வேண்டும்.

பெருந்தோட்ட மக்களுக்கு முகவரி இல்லை என விஜித ஹேரத் எம். பி குறிப்பிட்ட விடயம் தவறு. சபையில் விஜித ஹேரத்தின் மேசை மீதுள்ள தாளில் நான் குறிப்பிடும் முகவரிக்கு கடிதம் அனுப்புங்கள். நாளைய தினமே உரிய நபருக்கு அந்த கடிதம் சென்றடையும். ஆகவே தவறான விடயங்களை தெரிவித்து மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம்.

நீர்வழங்கல் அமைச்சின் ஊடாக வழங்கப்படும் குடிநீரை விட ஊற்று நீர் தூய்மையானது என பெருந்தோட்டங்களில் பெரும்பாலானோர் கருதுகிறார்கள். அவர்களுக்குப் போதிய விழிப்புணர்வு கிடையாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

# 'சூப்பர் சன்ஸ்' வசந்த கீதங்கள்

கடந்த கால் நூற்றாண்டுக்கு பின்னர் இலங்கையின் பிரபல முன்னணி தமிழ் இசைக்குழுவான பயாஸ் ரட்ணம் இரட்டையர்களின் 'சுப்பர் சன்ஸ்' வசந்த கீதங்கள் திரை இசை நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (03) மாலை 6.30 மணிக்கு கொழும்பு 07, ஜே.ஆர். ஜெயவர்தன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரபல பாடகர்கள் பங்குபற்றி இசைக்கவுள்ள இந்நிகழ்வை இசைக் கலைஞர் பயாஸ் சவாஹிர், கலைஞர் கலைக்கமல், பாடகர்களான கவிகமால், பாலவில் ஆகியோர் ஏற்பாடு செய்துள்ளனர்.

நீர் மின் உற்பத்தியில் அதிகரிப்பு;

# மின் கட்டணத்தில் விரைவில் திருத்தம்

அதிகளவான மழை வீழ்ச்சி மற்றும் அதிகரித்த நீர் மின் உற்பத்தி காரணமாக மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படலாமென, இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த தெரிவித்தார்.



நீர் மின்சாரம் உற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்கள் உள்ள பிரதேசங்களில் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதுடன், நேற்றைய நிலவரப்படி 96% நீர்த்தேக்கங்கள் கொள்ளளவுக்கு நிரம்பியுள்ளன. இதன் காரணமாக சுமார் 1,200 ஜிகாவாட் மணித்தியாலம் நீர் மின்சாரம் மூலம் சேமிக்கப்பட்டுள்ளது.

தற்போது 65% நீர் மின்சாரம் மூலமும் 17% அனல் மின்சாரம் மூலமும் மின் உற்பத்தி செய்யப்படுவதுடன், புதுப்பிக்கத்தக்க சக்தி 75%ஆக அதிகரித்துள்ளது. நாட்டின் மின்சார விநியோகத்தில் 80% புதுப்பிக்கத்தக்க சக்தி மூலமாகவே இடம்பெறுகிறது.

ஆகையால், இது தொடர்பாக உரிய தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# தோட்ட...

தொழில்துறை எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பாகவும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# DOOR...

வீடுகளுக்கு அனுப்பப்பட்டன. ஆயினும், பொதுமக்களின் தொடர்சியான முறைப்பாடு மற்றும் பல்வேறுபட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக கிடைத்த தகவல்களைத் கவனத்திற்கொண்டு இச்சேவையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு சுங்கத் திணைக்களம் தீர்மானித்தது. இதேவேளை, டிசெம்பர் முதலாம் திகதி முதல் அனுப்பப்படும் பொருட்களை சுங்கத் திணைக்களத்தின் சாதாரண முறை மூலம் இலங்கைக்கு அனுப்ப முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 3 நாட்களில் சேவை விநியோக முறை மூலம் சுமார் 20 கிலோகிராம் போதைப்பொருள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டமையை சுங்க அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். வெளிநாட்டு போதைப்பொருள் கடத்தல்காரர்களால், தற்போது போதைப்பொருள் விநியோகம் 'DOOR TO DOOR' சேவையினூடாக இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும், சுங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

# CTB திருட்டுகளை பிடிக்க...


மேற்பார்வை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். நெடுஞ்சாலைகள், போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவினால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் விசேட புலனாய்வுப் பிரிவு, நடமாடும் பரிசோதனைப் பிரிவு மற்றும் பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றினூடாக டிப்போக்களின் பாதுகாப்பை பலப்படுத்துதல், முறைகேடுகள், திருட்டுகள், மோசடிகள், ஊழல் மற்றும் பயணச்சீட்டு முறைப்பாடுகள், ஒழுக்காற்றுப் பிரச்சினைகளைக் கையாளுதல், நடமாடும் திடீர் சுற்றிவளைப்பு மூலம் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகளை எடுத்தல் என்பன அவருக்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இவர் இந்த மூன்று துறைகளையும் கண்காணிக்கும் தகுதியான அதிகாரியாக அவர் செயல்படப் போகிறார். இது தவிர, இ.போ.சவின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அதிபரின் கீழ் மேற்பார்வையின் கீழ் விசேட நடமாடும் சோதனைப் பிரிவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கை போக்குவரத்து சபையில் இடம்பெறும் மோசடிகள் மற்றும் ஊழல்களுக்கு சரியான தலைமைத்துவத்தை வழங்குவதன் மூலம் வருமானம் அதிகரிக்கப்படுவதுடன் சிறந்த ஒரு நிறுவனமாக மாற வேண்டும் என்பது அவரது நம்பிக்கையாகும்.

# காணாமல் போன பொலிஸ் அதிகாரி சடலமாக மீட்பு

ஜா–எல பிரதேசத்திலுள்ள கால்வாயொன்றில் குதித்து தப்பிச்செல்ல முற்பட்ட சந்தேகநபரைக் கைது செய்வதற்காக அக்கால்வாயில் குதித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஜாஎல பொலிஸ் நிலையத்தில் புதிதாக கடமைக்கு இணைந்த சாவகச்சேரியை சேர்ந்த 26 வயதுடைய கிருஷ்ணமூர்த்தி பிரதாபனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



பமுனுகம, சேதவத்த பிரதேசத்தில், நீர்கொழும்பு களப்புக்கு அருகில் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

வீடுகளை உடைத்தல், போதைப்பொருள் உள்ளிட்ட பல குற்றங்கள் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை (23) இச்சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

# நெதர்லாந்திலுள்ள இலங்கையின்...

எடுத்துச் செல்லப்பட்டு அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இலங்கையின் புராதன தொல்பொருட்கள் திரும்பக் கொண்டு வரப்பட்ட பின்னர் அவற்றை காட்சிக்கு வைக்கும் இடங்களைப் பார்வையிட்டதன் பின்னர், பேசிய சாகல ரத்னாயக்க, நெதர்லாந்து அரசாங்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையிலான பேச்சுவார்த்தையின் பலனாகவே இந்தப் புராதனப் பொருட்களை இலங்கைக்கு மீளத் திரும்பக் கொடுக்க தீர்மானித்ததாகக் குறிப்பிட்டார். முதற்கட்டமாக வாள் உறைகள் உள்ளிட்ட சில தொல்பொருட்களை இலங்கையிடம் ஒப்படைக்க நெதர்லாந்து அரசாங்கம் தற்போது இணக்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் தலைமைத்துவத்தின் ஒருங்கிணைப்புடன் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# பொருளாதாரம் குறித்து அமைச்சர்...

உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைவராக செயற்படுகிறார். பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் 121/31 இன் கீழ், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, அறிக்கையின் பல முக்கிய பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துக்கொண்டிருந்த போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அமைச்சருடன் காரசாரமான உரையாடலை மேற்கொண்டார்.

இருவருக்கும் இடையே நடந்த உரையாடலில் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கையில்,

"ஏழு நாட்கள் தேவையில்லை. மூன்று மணி நேரம் விவாதத்துக்கு வருமாறு உங்களை அழைக்கிறேன். தொலைக்காட்சி அலைவரிசையில் 03 மணிநேரம் விவாதத்திற்கு வாருங்கள். ஏழு நாட்கள் கேட்டீர்கள் தானே. தேவையில்லை. மூன்று மணி நேரம் வாருங்கள். அரசாங்க நிதி பற்றி மட்டும் விவாதிப்போம். என் தாயார் பாலூட்டிய என் தாய் மொழியான சிங்களத்தில் உங்களுடன் எந்த நேரத்திலும் பகிரங்க விவாதத்திற்கு நான் தயார்.

இதற்கு எதிர்க்கட்சி தலைவர் தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார். அப்படியென்றால் ஒரு நாள் அவர்களுக்கு ஆட்சி கிடைத்தால், நாட்டுக்கு அப்படி ஏதாவது நடந்துவிடுமா என்பதை பின்னர் யோசிப்போம். துரதிஷ்டவசமாக நடந்துவிட்டால் இந்த ஏற்பாட்டை முற்றிலுமாக மாற்றினால் நாடு முழுவதுமே அழிந்து விடும் என்று அர்த்தம். அதனால்தான் நாம் விவாதம் நடத்த வேண்டும். இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா இல்லையா? இந்த அறிக்கை விவாதிக்கப்பட வேண்டும். சபாநாயகர் சம்மதித்தால் மூன்று நாட்களுக்கு விவாதம் நடத்த வேண்டும். நாங்கள் ஒப்புக்கொள்வோமோ இல்லையோ விவாதத்தை பரிந்துரைக்கிறோம். இது நிதி தொடர்பான பாராளுமன்றத்தின் பொறுப்பு. அவரது கூற்றிலிருந்து, ஒரு நாட்டைப் பொறுப்பேற்கப் போகும் ஒரு அரசின் தலைவரின் தரம் குறித்து, அவரது இயல்பு குறித்து. இந்நாட்டு அறிவாளிகள் ஒரு முடிவுக்கு வர வாய்ப்புள்ளது. மிகச் சிறிய ஒன்றைப் பற்றிய உண்மையான புரிதல் எங்களிடம் உள்ளது. சபாநாயகர் அவர்களே, இந்த வருமானக் குறைவு ஒரே நாளில் ஏற்பட்டதல்ல என்பதை சபையில் நான் தெளிவாகக் கூறியுள்ளேன். 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்தை முழுமையாகப் புறக்கணித்ததாலும் அமுல்படுத்தப்படாததாலும் இந்த நாடு வங்குரோத்தானது. இதை தரவுகள் ரீதியாக நிரூபிக்க முடியும்.

நாட்டின் பொருளாதாரம் சரிந்தது வரி நீக்கியதால் அல்ல.

அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சராக அவர் அமைச்சரவையில் அமர்ந்திருந்தபோது, அந்த 05 வருடங்களில் இந்த பொருளாதார வீழ்ச்சியடைந்ததை 'பொருளாதார ஆசான் சியா' என்ற பொருளாதார வீழ்ச்சியை மையமாக கொண்டு தரவுகளுடன் புத்தகம் எழுதியுள்ளேன்.

எனவே தரவுகளைப் பாருங்கள். உயர் நீதிமன்றம் முன்வைத்த உண்மைகளின்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதை நாங்கள் மதிக்கிறோம்" என்றார்.

# இஸ்ரேல் செல்லும் இலங்கையருக்கு...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் கட்சி என்ற வகையில் தமது அரசியல் நோக்கத்துக்காக இவ்வாறான அடிப்படை யற்ற கூற்றுக்களை சபையில் முன் வைப்பதாகவும் அமைச்சர் குற்றம் சாட்டினார்.

சபையில் நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்பி எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் என்ற வகையில் நாம் இனவாத நோக்குடன் ஒருபோதும் செயற்பட முடியாது என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அவர், யுத்தம் நடைபெறும் பகுதிகளுக்கு அருகில் உள்ள மாகாணங்களுக்கு கூட நாம் எமது நாட்டவரை அனுப்புவதில்லை என்றும் குறிப்பிட்டார். வடக்கில் யுத்தம் நடக்கும்போது காலி, மாத்தறை பகுதியில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளை ஆட்களை அனுப்புவது போன்ற நிலைமையே இது.

அங்குள்ள எமது தூதுவர் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனைகளைப் பெற்றே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் அவர்களுக்கு எந்த யுத்தப் பயிற்சியும் வழங்கப்படுவதில்லை.அது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தமது கேள்வியின் போது,

காஸாவில் இடம்பெறும் வரும் உக்கிரமான மோதல்களுக்கு மத்தியில் நாட்டுக்கு கிடைக்கும் சொற்ப வருமானத்துக்காக இலங்கையரை அங்கு வேலைவாய்ப்புக்காக அனுப்புவது தொடர்பில் அரசாங்கம் மீள பரிசீலனை செய்ய வேண்டும். பலஸ்தீனர்களின் வீடு தீக்கிரையாகும் போது அதில் சுருட்டுப் பற்றவைப்பது போன்ற செயல்பாடு இது.

அத்துடன் இஸ்ரேலுக்கு அனுப்பப்படும் இலங்கையருக்கு அங்கு துப்பாக்கிகள் வழங்கப்பட்டு ஆயுதப் பயிற்சி வழங்கும் ஏற்பாடுகள் காணப்படுகிறது என்றும் நாம் சந்தர்ப்பவாதிகளாக செயல்படக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளில் இலட்சக்கணக்கான இலங்கையர் தொழில் வாய்ப்பில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் மூலமாக பெரும் வருமானம் நாட்டுக்கு கிடைக்கின்றது. யுத்த மோதல்களுக்கு மத்தியில் அந்த நாட்டுக்கு எமது நாட்டவரை அனுப்புவது முறையற்றது என்றும் அவர் தெரிவித்தார். அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

# வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி
# எங்கள் கருத்து

# வெறுப்பை வெளிக்காட்டும் பக்குவமற்ற உள்ளங்கள்!

மக்கள் மத்தியில் பேதங்கள் தானாகவே உருவாகுவதில்லை. அப்பேதங்களை மக்களுக்கு ஊட்டி வளர்ப்பதற்கென்றே பலர் உள்ளனர். அரசியல்வாதிகளில் மாத்திரமன்றி சமூகப் பிரமுகர்கள் மத்தியிலும் அவ்வாறான தீயநோக்கம் கொண்டவர்கள் உள்ளனர்.

இந்திய தேசம் மீது இலங்கைத் தமிழர்களுக்கு எப்போதுமே அபிமானம் உள்ளது. அது 'தொப்புள் கொடி உறவு' போன்றது. இலங்கைத் தமிழர்களுக்கு இன்னல் நேருகின்ற போதெல்லாம் ஆதரவுக்குரல் தருகின்ற நாடு இந்தியா ஆகும். எனவேதான் இலங்கைத் தமிழர்கள் இந்திய தேசத்தை எப்போதும் பாசத்துடன் நோக்குகின்றனர்.

ஆனால் இலங்கைத் தமிழர்கள் மீது மாத்திரமன்றி, ஒட்டுமொத்த இலங்கையர்கள் மீதும் அக்கறையும் பற்றுதலும் கொண்ட நாடு இந்தியா என்பது பல தடவைகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. கொவிட் தொற்று ஒட்டுமொத்த உலகையும் அச்சுறுத்திக் கொண்டிருந்த காலப்பகுதியில், தடுப்பூசி மருந்தை உடனடியாகவே இலங்கைக்கு அனுப்பி வைத்த தேசம் இந்தியா.

அதுமாத்திரமன்றி, இலங்கையில் மிகமோசமான பொருளாதார நெருக்கடி நிலவிய வேளையில் உணவு, மருந்துப்பொருட்கள், எரிபொருள் போன்றவற்றை அனுப்பி எமது மக்களின் துயர்துடைத்த நாடு இந்தியா என்பதை மறந்து விடலாகாது.

'இலங்கை எமது சகோதர நாடு' என்று இந்தியத் தலைவர்கள் பெருமையுடன் கூறுவதுண்டு. 'அயல்நாட்டுக்கே முன்னுரிமை' என்பது இந்தியாவின் கோட்பாடு ஆகும். அக்கொள்கையை தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது இந்தியா.

இவ்வாறான நாட்டுடன் நெருக்கமான நட்புறவை இலங்கை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறிருக்கையில், சர்வதேச கிரிக்கட் போட்டி முடிவில் நடந்துள்ள சில சம்பவங்கள் வேதனை தருகின்றன. இந்தியாவின் தோல்வியைக் கொண்டாடும் வகையில் ஒரு சிலர் பட்டாசுகள் கொளுத்தி மகிழ்ந்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

ஒருசிலரின் மனப்பக்குவமற்ற இச்செயலானது இலங்கை மக்கள் பலரின் உள்ளத்தில் வேதனையை ஏற்படுத்தியதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டாமலிருக்க முடியாது!

# அகிலத்திருநாயகிக்கு...

கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நினைவுச்சின்னம் மற்றும் பணப்பரிசில் வழங்கி, பொன்னாடை போர்த்தி அவர் கௌரவிக்கப்பட்டதுடன், அவரது சாதனை தொடர்பாக வாழ்த்துரையாற்றப்பட்டது. பிலிப்பைன்ஸில் 1,500 மீற்றர் ஓட்டப்போட்டி மற்றும் 5,000 மீற்றர் விரைவு நடைப்போட்டி ஆகியவற்றில் 2 தங்கப்பதக்கங்களையும் 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் அகிலத்திருநாயகி பெற்றிருந்தார். இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) எஸ்.குணபாலன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் லிங்கேஸ்வரன் , பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், சமுர்த்தி பணிப்பாளர் எம்.முபாரக், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் க.ஜெயபவானி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நீதிமன்ற உத்தரவில்...

இந்த இளைஞரின் உயிரிழப்பு மனித உயிர் போக்கல் அல்லது அட்கொலை எனும் நிலைப்பாட்டுக்கு நீதிமன்றம் வந்தது.

இந்நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையோரை கைது செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டதை தொடர்ந்து இந்தக் கைது இடம்பெற்றது. வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக கடந்த 11ஆம் திகதி வட்டுக்கோட்டை பொலிஸாரால் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போதே, இந்த இளைஞர் உயிரிழந்திருந்தார்.

# O/L, A/L மாணவர்களுக்கு...

பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

எதிர்வரும் உ/த பரீட்சை முடிவடைந்தவுடன் தொழில் பயிற்சிக்கான விண்ணப்பங்களை கோரவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், ஆங்கிலமொழி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பாடங்களுக்கு மேலதிகமாக தாம் விரும்பிய 2 தொழில்நுட்பப் பாடங்களை தெரிவுசெய்து, பாடநெறியை மாணவர்கள் தொடரலாமெனவும் தெரிவித்தார்.

உ/த பரீட்சை பெறுபேறு வெளி யாகும்வரை 4 மாதங்கள் இப்பாடநெறியை மாணவர்கள் தொடர முடியுமென்பதுடன், பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களைத் தவிர, ஏனைய மாணவர்களுக்கு பரீட்சை நடத்தி, பொருத்தமான பாடநெறிக்கு தெரிவுசெய்யவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார். மாணவர்களுக்கேற்ற தொழில் பயிற்சிநெறியை தொடரும் வாய்ப்பும் குறைந்த வருமானமுடைய பிள்ளைகளுக்கு இப்பயிற்சியை தொடரும் வாய்ப்பும் வழங்கப்படவுள்ளதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலை விடுமுறை எதிர்வரும் டிசெம்பர் 22ஆம் திகதி முதல் பெப்ரவரி 2ஆம் திகதிவரை வழங்கப்படுமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

# ஜனவரி முதல் ரூ. 5,000...

ஏப்ரல் முதல் ஓய்வூதியக்காரர்களுக்கு ரூ.2,500 வழங்கவும் வரவு செலவு திட்டத்தில் முன்மொழியப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அரச வருமானப் பிரிவின் கூட்டத்தில், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் உரிய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பில் ஒரு பகுதியை வழங்குவது குறித்தும், ஜனவரி மாதம் முதல் 5,000 ரூபாவும், ஏப்ரல் மாதம் 10,000 ரூபாயும் வழங்குவது குறித்தும் அங்கு விவாதிக்கப்பட்டது.

ஜனாதிபதி அலுவலகத்தின் அரச வருவாய் பிரிவின் 2003ஆம் ஆண்டு ஏற்பாடாக்கப்படும் நிதி நிலை அறிக்கையின் புள்ளிவிபரங்களின்படி, சம்பள அதிகரிப்பை ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்த முடியுமென்பது தெரியவந்துள்ளது. இது தொடர்பான கூட்டம் கடந்த 23ஆம் திகதி அரசாங்க வருவாய் பிரிவு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் பங்கேற்ற கூட்டம் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

2023 ஜனவரி முதல் நவம்பர் வரையிலான வருவாய் சேகரிப்பு நிறுவனங்களிடமிருந்து வரி வருவாய் வசூல் மதிப்பீடும் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின்படி, நவம்பர் 21 ஆம் திகதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1,457 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது. சுங்க வருமானம் 842 பில்லியன் ரூபா வாகவும், கலால் வருமானம் 70 பில்லியன் ரூபாவாகவும், இந்த நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட மொத்த வருமானம் 2,446 பில்லியன் ரூபாவாகும். மற்றைய நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம் 29 பில்லியன் ரூபாவாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# புயலாக மாறலாம்...

விரிவுரையாளர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா எதிர்வுகூறியுள்ளார். இது எதிர்வரும் புதன்கிழமை (29) காற்றழுத்த தாழ்வு நிலையாக உருவாகி வடமேற்கு திசை நோக்கி நகரும் வாய்ப்பு உள்ளதுடன், இதனால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை (03) வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளிலும் கன மழை பெய்வதற்கான வாய்ப்பு உள்ளதாகவும், அவர் தெரிவித்தார். தற்போதைய மாதிரிக் கணிப்புக்களையை இந்தக் காற்றழுத்த தாழ்வு நிலை வடக்கு, கிழக்கிலாகவே நகரும் வாய்ப்பு உள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இது உருவாகும் காலப்பகுதியில் நிலவும் வளிமண்டல வெப்பநிலை, சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை, காற்றழுத்த தாழ்வு நிலையின் அமுக்க சாய்வுத்தன்மை மற்றும் தாழ்வு நிலைக்கு கிடைக்கும் மறை வெப்ப சக்தி ஆகியவற்றை பொறுத்து நகரும் திசை மாற்றமடையலாம். மேற்குறிப்பிட்ட காரணிகளால் இது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையிலிருந்து புயலாக வலுப்பெறும் சாத்தியக்கூறுகளை உருவாக்க வாய்ப்பு உள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# அரிசியை பதுக்குவோர்...

தெரிவித்தார். நாட்டில் தற்போது நிலவுகின்ற சம்பா மற்றும் கீரி சம்பா அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வாக இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இன்னும் இரண்டு மாதங்களினுள் இந்த சட்டமூலம் தயாரித்து முடிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் அரிசி இருப்பு கையகப்படுத்தப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார். சம்பா மற்றும் கீரி சம்பா அரிசியை பாரிய அரிசி ஆலை உரிமையாளர்கள் மறைத்து வைத்திருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

**2024ஆம் நிதியாண்டுக்குரிய வரவுசெல–வுத் திட்டத்தின் இரண்டாவது மதிப்பீடு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டு 45 வாக்குகளால் வரவுசெலவுத் திட்டத்தின் இரண்டாவது மதிப்பீடு நிறைவேற்றப்பட்டது.**



# அரசாங்கத்தின் பெரும்பான்மை பலத்தை மீண்டும் நிரூபித்த வாக்கெடுப்பு வெற்றி!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

## 2024ஆம் நிதியாண்டுக்குரிய வரவுசெலவுத் திட்டத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்கு கிடைத்த அங்கீகாரம்!

## அனைத்துத் தரப்பினரதும் தேவைகளை வரவு செலவுத்திட்டம் கவனத்தில் கொண்டுள்ளதாக பலரும் கருத்து

நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த இரண்டாவது வரவுசெலவுத் திட்டம் இது என்பதுடன், கடந்த 13ஆம் திகதி ஜனாதிபதி இதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

13ஆம் திகதி முதல் கடந்த செவ்வாய்க்கிழமை வரை 7 நாட்கள் விவாதித்து இரண்டாவது மதிப்பீட்டுக்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஆளும் பொதுஜன பெரமுன, எதிர்க்கட்சித் தரப்பில் உள்ள சுயாதீன உறுப்பினர்கள் சிலர் மற்றும் எதிர்க்கட்சியில் உள்ள அரசுக்கு ஆதரவான சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவுசெலவுத்திட்டத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

எதிர்க்கட்சிகள் சார்பில் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுயாதீனக் குழுவினர், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர், எதிர்க்கட்சியில் உள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் வரவுசெலவுத் திட்டத்தை எதிர்த்திருந்தனர்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நாடு எதிர்கொண்டிருந்த பாரிய நெருக்கடிகளிலிருந்து இலங்கையை மீட்டு ஓரளவுக்கு சுமுக நிலையை ஏற்படுத்திய பின்னர், பொருளாதாரத்தை மேலும் சரி செய்யும் நோக்கத்துடன் இந்த வரவுசெலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைத்திருக்கும் கடன்வசதியின் இரண்டாவது தவணையைப் பெறுவதற்கான இறுதிக்கட்டத்தை அடைந்திருக்கும் சூழ்நிலையில். நாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் பல எதிர்பார்க்கப்படுகின்றன.

சட்டரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புக்கள், கொள்கை ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புக்கள் மற்றும் நடைமுறை ரீதியில் மேற்கொள்ளப்படவேண்டியமறுசீரமைப்புக்கள் எனப் பல்வேறு திருத்தங்கள் எதிர்பார்க்கப்படும் நிலையில், தாக்கல் செய்யப்பட்ட வரவுசெலவுத் திட்டம் இது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

சாதாரண சூழ்நிலையில் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு மானியங்கள் எதிர்பார்க்கப்பட்டாலும், நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள சவால்களுக்கு மத்தியில் மானியங்களுக்கான நடைமுறைச் சாத்தியம் மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

இருந்தபோதும், சவால்களுக்கு மத்தியிலும் அரசாங்க ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 10,000 ரூபாவினாலும், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 2,500 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியிலும் அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கையை எடுத்துள்ளது. இருந்தபோதும், இதனைவிட அதிகரித்த தொகையை முன்வைத்து தொழிற் சங்கங்கள் போராட்டங்களுக்கான ஆயத்தங்களுக்கும் சிலர் தயாராகின்றன.

அவர்கள் கோரும் 20,000 ரூபா அதிகரிப்பு என்பது தற்போதைய நாட்டு நிலைமைக்கு நடைமுறைச் சாத்தியமற்றது என்பதும் தெளிவாகிறது. அரசாங்க ஊழியர்கள் மாத்திரமன்றி, தனியார் துறையினரின் சம்பளத்தை அதிகரிக்குமாறும் ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார். இது மாத்திரமன்றி, சமூகத்தில் பல்வேறு மட்டத்தில் உள்ள தரப்பினர் பற்றியும் இந்த வரவுசெலவுத் திட்டம் கவனம் செலுத்தியிருப்பது குறித்து பாராளுமன்றத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக தோட்டக் காணிகளின் உரிமையை தோட்டத் தொழிலாளர்களிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் வரவுசெலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்க நடவடிக்கையாகும். அவர்கள் இந்த நாட்டிற்கு வந்து 200 வருடங்கள் கடந்த பின்னரும் தமக்குச் சொந்தம் என்று சொல்லக் கூடிய நிலம் இன்றி ஆக்கிரமிப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மலையகத்தில் சமூக அபிவிருத்திக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை சாதகமான அபிவிருத்தியாகப் பார்க்கப்படுகிறது.

மக்களின் நிதிச் சுமைகளை குறைக்கும் மற்றைய நடவடிக்கைகளும் இதில் காணப்படுகின்றன. அரசாங்கத்தினால் கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகளில் வசிக்கும் 50,000 நகர்ப்புற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வாடகைக் கட்டணம் வசூலிப்பதை விடுத்து, அவர்களுக்கு வீடுகளுக்கான உரிமையை ஒப்படைப்பதற்கும் வரவுசெலவுத் திட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நிலைமையில் நகர்ப்புறத்தில் உள்ள குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு இது பாரியதொரு சலுகையாகும். சிரேஷ்ட பிரஜைகளுக்காக மாதாந்தம் வழங்கப்படும் உதவித்தொகை, கர்ப்பிணித் தாய்மாருக்கான மாதாந்தக் கொடுப்பனவு உள்ளிட்ட கொடுப்பனவுகளுக்கும் அரசாங்கம் ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளது.

இவற்றுக்கும் அப்பால் தொலைநோக்கு சிந்தனையுடன் நீண்டகால யோசனைகளுக்கும் ஜனாதிபதி முன்னுரிமை அளித்துள்ளார். குறிப்பாக இலங்கையின் உயர்கல்வித்துறையை மேம்படுத்தும் நோக்கில் புதிய பல்கலைக்கழகங்களை அமைப்பதற்கான முன்மொழிவு இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.


நாட்டின் கல்வித்துறையை மறுசீரமைக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருப்பது இதன் ஊடாகத் தெளிவாகத் தெரிகிறது. ஜனாதிபதி வழங்கிய வழிகாட்டலுக்கு அமைய கல்வி மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேற்கொண்டுள்ளார். இதற்கான வரைபு தயாரிக்கப்பட்டு பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. இது தற்பொழுது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

மறுபக்கத்தில் நாட்டின் உயர் கல்வி வாய்ப்புக்களை விஸ்தரிப்பது குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்ற விசேட குழு நியமிக்கப்பட்டு இதன் அறிக்கையும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளுக்கு வலுவூட்டும் வகையில் வரவுசெலவுத் திட்டத்தில் புதிய பல்கலைக்கழகத்துக்கான யோசனை அமைந்துள்ளது.

குறுகியகால மற்றும் நீண்டகால யோசனைகளை உள்ளடக்கியதாக வரவுசெலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டிருந்தாலும் இது தேர்தலை இலக்காகக் கொண்ட வரவுசெலவுத் திட்டம் என்ற விமர்சனம் எதிர்த்தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், "தேர்தலை இலக்குவைத்து இந்த வரவுசெலவுத் திட்டத்தை நாம் தாக்கல் செய்யவில்லை, நாட்டின் எதிர்காலத்தையும் மக்களையும் நோக்காகக் கொண்டே இதனைத் தாக்கல் செய்துள்ளோம்" என்று ஜனாதிபதி தனது உரையில் கூறியிருந்தார்.





அவர் மேலும் குறிப்பிடுகையில், 'சிலர் இந்த வரவுசெலவுத் திட்டத்தை தேர்தல் வரவுசெலவுத் திட்டம் என்கிறார்கள். அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவிருப்பதால் இவ்வாறு அழைக்கின்றனர். தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் முடிவில்லாத சலுகைகளையும் சம்பள அதிகரிப்பையும் வழங்குவதே அத்தகைய தேர்தல் வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. சுதந்திரம் அடைந்த பின்னரும் 75 வருடங்களில் பலமுறை அதுதான் நடந்தது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டம் வித்தியாசமானது. இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் வரவு செலவுத் திட்டமாகும். தற்போதைய சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப ஒரு புதிய பொருளாதார அமைப்பின் அடித்தளத்தை அமைக்கும் வரவு செலவுத் திட்டம் இதுவாகும்.

தேர்தல் வெற்றியை விட நாட்டின் வெற்றியே எனக்கு முக்கியம். இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் வெற்றிக்காகத் தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டமாகும். பௌத்த பொருளாதார தத்துவத்தின் படி தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம். சமநிலைவாழ்வு என்ற எண்ணக் கருவின் அடிப்படையில், நாட்டுக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கும் பல முன்மொழிவுகள் இந்த வரவுசெலவுத் திட்ட ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன"என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்தை ஆமோதிக்கும் வகையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதன் காரணமாகவே வரவுசெலவுத் திட்டத்தை அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடிந்துள்ளது. அது மாத்திரமன்றி அரசாங்கம் தொடர்ந்தும் பலமான நிலையில் உள்ளது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**கல்வி, சுகாதார அபிவிருத்தி, ஓய்வூதிய அதிகரிப்பு, வறிய மக்களுக்கான உதவி, அரச ஊழியர் சம்பள உயர்வு உட்பட சாதகமான அம்சங்கள் ஏராளம்**



# அனைத்துக் கட்சிகளும் தேர்தலுக்கு ஆயத்தம்!

**2024ஆம் ஆண்டு தேர்தல்களுக்கான ஆண்டாக அமையும் என்பது அனைவரும் எதிர்பார்த்துவருகின்ற ஒரு விடயமாக இருந்தாலும், தேர்தல்கள் நடத்தப்படுமா என்பதில் நிச்சயமற்ற தன்மை நிலவி வந்தது. எனினும், தேர்தல்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் காணப்படும் சந்தேகத்தை ஜனாதிபதி மீண்டும் ஒருமுறை தெளிவுபடுத்தியுள்ளார்.**

## அடுத்த வருடத்தில் இரு தேர்தல்கள்; ஜனாதிபதியின் திடீர் அறிவிப்பையடுத்து பரபரப்பாகும் அரசியல் களம்!



ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் ஆகியன அடுத்தவருடம் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் அறிவித்தார். 2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் ஜனாதிபதிக்கான செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

தேர்தல்களை நடத்தாது இழுத்தடிப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கியிருப்பது அரசியல் அரங்கத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் ஜனநாயகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தலை நடத்துவதற்கு அச்சப்பட வேண்டிய அவசியமில்லை எனப் பாராளுமன்றத்தில் தெரிவித்த ஜனாதிபதி, ஒரு தேர்தலும் பிற்போடப்படாது அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் நடத்தப்படும் எனக் கூறினார்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியும் எனவே, வாக்காளர்களுக்கு நாங்கள் பயப்படுகிறோம் என்று யாரும் கூற முடியாது. அடுத்த ஆண்டு ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்கள் இரண்டையும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று அவர் தெரிவித்திருந்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றமான தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 2025ஆம் ஆண்டுடன் முடிவடையும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜனாதிபதிப் பதவிக்காலம் அடுத்த வருடத்துடன் முடிவடைகிறது.

இதன் அடிப்படையில் பார்க்கும்போது ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் அடுத்தவருடம் நடத்தப்பட வேண்டும். பாராளுமன்றத் தேர்தலை நினைத்தால் அதற்கடுத்த வருடம் கூட நடத்த முடியும். எனினும், ஜனாதிபதி இரண்டு தேர்தல்களையும் அடுத்த வருடம் நடத்தப் போவதாகக் கூறியுள்ளார். இந்த இரண்டு தேர்தல்களிலும் எந்தத் தேர்தல் முதலில் நடத்தப்படும் என்பது இன்னமும் அறிவிக்கப்படாத நிலையில், அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் தம்மைத் தேர்தலுக்குத் தயார்படுத்தும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளனர்.

பிரதான அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர்கள் யார் என்பது குறித்து இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்காதபோதும், வேட்பாளர்கள் குறித்த பேச்சுக்கள் பல்வேறு மட்டங்களில் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

ஐக்கிய தேசிக் கட்சி தமது வேட்பாளராகத் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் களமிறக்குவது குறித்து ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தமது கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தான் என்பதை பகிரங்கமாகக் கூறியிருந்தார். ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கிவரும் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்து ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடும் என்பது போன்ற செய்திகள் முன்னதாக வெளியாகியிருந்தன. எனினும், கட்சியின் தலைமைத்துவத்திடமிருந்து எதுவித உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் வெளியாகவில்லை.

அதேநேரம், பொதுஜன பெரமுன தமக்கான வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகத் தெரிய வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்ற அக்கட்சியின் கூட்டத்தில் சிரேஷ்ட உறுப்பினர்கள் இதற்கான முன்மொழிவை வைத்திருப்பதாகவும் ஊடகங்கள் பல அறிக்கையிட்டிருந்தன.

இவ்வாறான நிலையில், நாட்டின் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டமையால் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது எனத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அடுத்துவரக்கூடிய தேர்தல்களில் ஒரு சில தரப்புக்குத் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். தற்பொழுது ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துக்கு முன்னர் இருந்த அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலரே நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அரசியல் தளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது இதற்குக் காரணமாகியுள்ளது.




## தேர்தல் கூட்டணி அமைக்கும் முயற்சியில் கட்சிகள் தீவிரம்!

உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் கடந்த சில நாட்களாகப் பாராளுமன்றத்திலும் அதிகம் பேசப்பட்டதுடன், இதனை அடிப்படையாகக் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்ப முற்பட்டபோது ஆளும் கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையில் குழப்பநிலையும் ஏற்பட்டிருந்தது. இதுபோன்ற விடயங்கள் அடுத்தவருடம் நடத்தப்படவிருப்பதாக் கூறப்படும் தேர்தல்களில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தைச் செலுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

விசேடமாக விலைவாசி அதிகரிப்புப் போன்ற விடயங்களால் மக்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், தமது அதிருப்தியை வெளிப்படுத்த மக்களும் சந்தர்ப்பமொன்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். மறுபக்கத்தில், நாட்டு மக்கள் தற்பொழுது ஓரளவுக்கேனும் சுமுகமான நிலையில் இருப்பதற்குக் காரணம் யார் என்பதும் இங்கு நோக்கப்பட வேண்டியுள்ளது.

ஏறத்தாழ ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நாட்டில் காணப்பட்ட மக்கள் வரிசை நிலைமை மாற்றப்பட்டு தமக்குத் தேவையானவற்றை நினைத்தவுடன் பெற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலைக்குக் கொண்டுவந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. "அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவீர்களா?" என அண்மையில் நடைபெற்ற ஊடகத் தலைவர்களுடனான சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "தேர்தலில் போட்டியிடுவதைவிட நாட்டைப் பொருளாதாரப் பாதிப்பிலிருந்து மீட்பதே அவசியமானது" எனக் கூறியிருந்தார்.

மறுபக்கத்தில், எதிர்க்கட்சிகளும் தேர்தலுக்கான தயார்படுத்தல்களைத் தொடங்கியுள்ளன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிப்பு வெளியாகாத போதும், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அக்கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவே தமது ஜனாதிபதி வேட்பாளர் என்ற முடிவு எடுக்கப்பட்டிருந்ததாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன.

இருந்தபோதும் இது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் இன்னமும் வெளியிடப்படவில்லை. அதேபோல, தேசிய மக்கள் சக்தி அதாவது ஜே.வி.பி தலைமையிலான கூட்டணி அதன் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவை முன்னிலைப்படுத்தி அரசியல் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றது. தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அநுரகுமார போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அடிப்படையாக்க கொண்டு அவர்கள் பல்வேறு கூட்டங்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர்.

இது இவ்விதமிருக்க, வேறு கட்சிகள் மற்றும் சுயாதீனமாச் செயற்படும் தரப்பினரையும் ஒன்றிணைத்து பாரிய கூட்டணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகளும் எதிர்க்கட்சியில் உள்ள அரசியல் தலைவர்களால் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றை வைத்துப் பார்க்கும்போது அனைத்துக் கட்சிகளும் தேர்தலுக்குத் தயாராகத் தொடங்கிவிட்டன என்பது உறுதியாகிறது.

**பி.ஹர்ஷன்...**

---

# கைதிகளை விடுவிக்கும் நோக்குடன் இஸ்ரேல்–ஹமாஸ் யுத்தநிறுத்தம்!

**இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் நான்கு நாட்கள் யுத்தநிறுத்தம் ஏற்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை காலை முதல் இது நடைமுறையில் இருக்கிறது.**



அமெரிக்கா, எகிப்து ஒத்துழைப்புடன் கட்டார் முன்னெடுத்துவந்த கடும் முயற்சியின் பயனாக இந்த யுத்தநிறுத்தத்திற்கு இருதரப்பினரும் இணக்கம் கண்டு செயற்படுத்தி வருகின்றனர்.

இந்த யுத்தநிறுத்தத்தை சவூதி, ஜோர்தான், எகிப்து உள்ளிட்ட நாடுகள் பெரிதும் வரவேற்றன. ஐ.நா மத்திய கிழக்கு அமைதி செயற்பாடுகளுக்கான விஷேட இணைப்பாளரும் இதனை வரவேற்றதோடு, 'கைதிகள் விடுதலையுடன் முழு அளவில் யுத்தநிறுத்தம் நீடிக்கப்பட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை இந்த யுத்தநிறுத்தத்திற்கு வழிவகுத்த கட்டார் நாட்டின் பிரதமர் முகமது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாசிம் அல் தானி, 'இந்த ஒப்பந்தம் போர் மற்றும் இரத்தக்களரிக்கு முற்றுப்புள்ளி வைக்கும்' என்றும் 'ஒரு விரிவான மற்றும் நிலையான ஒப்பந்தத்தை உருவாக்கும் என்றும் ஒரு விரிவான, நியாயமான அமைதி செயல்முறைக்கான பேச்சுவார்த்தைக்கு வழிவகுக்கும்' என்றும் தான் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேலியர்களை விடுவிக்கவும் இஸ்ரேலுக்குள் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கவுமே காஸா மீது தாக்குதல்கள் முன்னெடுக்கப்படுவதாக இஸ்ரேல் கூறுகிறது. இந்நிலையில் ஹமாஸ், தாம் பிடித்துள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிக்கத் தயார். ஆனால் இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பலஸ்தீன சிறைக்கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றுள்ளது. எனினும் தண்ணீர், எரிபொருள், மருந்து பொருட்கள், உணவு என்பவற்றின் விநியோகத்தையும் தடுத்து நிறுத்தியபடி காஸாவை சுற்றி வளைத்து இஸ்ரேல் யுத்தத்தை முன்னெடுத்தது. இந்த யுத்தத்திற்காக நாளொன்றுக்கு 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை இஸ்ரேல் செலவிடுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காஸா மீதான யுத்தத்தை உடனடியாக நிறுத்தி அமைதி வழிக்கு திரும்புமாறு மத்திய கிழக்கு பிராந்திய நாடுகளும், ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமும் வேண்டுகோள் விடுத்தனர்.

இச்சூழலில், ஹமாஸ் இரு இஸ்ரேலிய பெண் பணயக் கைதிகள் உட்பட நால்வரை ஒக்டோபர் 20 ஆம் திகதி மருத்துவக் காரணங்களுக்காக மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விடுவித்தது. அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களில் ஒருவரான 85 வயது மதிக்கத்தக்க யோஷேவேத் லைஃப்ஷிட்ஸ் என்ற இஸ்ரேலியப் பெண்மணி ஊடகங்களிடம் கூறுகையில், 'பணயக்கைதிகளான நாம் சுரங்கப் பாதைகளுக்குள் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு எமக்கு சுத்தமான பகுதிகளில் தங்க வசதி அளிக்கப்பட்டதோடு படுத்துறங்கவும் மெத்தைகள் வழங்கப்பட்டன. இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை எனது ஆரோக்கிய நலன்களை கண்காணிக்க ஒரு மருத்துவர் வருவார். அதேநேரம் காஸாவுக்கு கொண்டு செல்லப்பட்ட போது காயமடைந்த எமது பணயக்கைதிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. சுரங்கப்பாதையில் தங்கியிருந்தபோது, எமக்கு வெள்ளைப் பாலாடைக்கட்டி, வெள்ளரிகள் உணவாக வழங்கப்பட்டன. அதே உணவையே ஹமாஸ் அமைப்பினரும் சாப்பிட்டனர்' என்றார்.



அமைதி தொடர வேண்டுமென உலகநாடுகள் விருப்பம்



இந்நிலையில் 193 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. சபை காஸாவில் உடனடி மனிதாபிமான யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி 120 நாடுகளின் ஆதரவுடன் தீர்மானமொன்றை நிறைவேற்றியது. அதன் பின்னர் 15 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்ஸிலும் காஸாவில் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்திய தீர்மானமும் நிறைவேறியது. இதேபோன்று மக்காவில் கூடிய 57 நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய நாடுகள் அமைப்பு, அரபு லீக் என்பனவும் கூட உடனடி யுத்த நிறுத்தக் கோரிக்கையை முன்வைத்தன. மலேசியா, இந்தோனேசியா, புரூணை ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து காஸா மீதான யுத்தத்தை நிறுத்தக் கோரி கூட்டறிக்கையும் விடுத்தன.

அமெரிக்கா, பிரான்ஸ், கனடா உள்ளிட்ட நாடுகளின் வலியுறுத்தல்களை இஸ்ரேல் பொருட்படுத்தாத நிலையில் சவூதி, ஜோர்தான், பலஸ்தீன், இந்தோனேசியா உள்ளிட்ட அரபு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தலைவரும் காஸா மீதான யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவென சீனா, ரஸ்யாவுக்கு நேரில் சென்று பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர்.

இச்சூழலில் இவ்வாரத்தின் முற்பகுதியில் இஸ்ரேலியருக்கு சொந்தமான 'கலக்ஷி லீடர்' என்ற கப்பல் துருக்கியிலிருந்து இந்தியாவுக்கு சென்று கொண்டிருந்த வேளையில் காஸா மீதான யுத்தத்தை நிறுத்தக்கோரி 22 மாலுமிகள் உட்பட 52 பேருடன் ஹுதி கிளர்ச்சியாளர்கள் அக்கப்பலை யெமனுக்கு கடத்தி சென்றுள்ளனர். இக்கப்பலின் அதிக பங்குகளை வைத்திருப்பவர் இஸ்ரேலிய தொழிலதிபரான ஆப்ரகாம் அங்கர் என்பவராவர்.



(17ஆம் பக்கம் பார்க்க)

**மர்லின் மரிக்கார்...**





ஸ்ரீ சத்ய சாயி பகவானின் 98ஆவது ஜனன தின நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில், பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் நடைபெற்றன. இதன்போது, பிரசாந்தி கொடியேற்றம் மற்றும் பிறந்த நாள் கேக் வெட்டும் நிகழ்வும் இடம்பெற்றன. சாயி மகளிர் சங்க மூத்த உறுப்பினர் செல்வி சரஸ்வதி வீரையா சாயி நிலையத்தின் சார்பில் கௌரவிக்கப்பட்டார்.

(படங்கள்: எஸ்.ராமதாஸ்)

# இலங்கை நீதித்துறை வரலாற்றில் இளவயதில் நீதிபதியாகும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ்ப் பெண்!

*யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி மாதுரி நிரோசன் நீதிபதியாக பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார். இலங்கை நீதித்துறை வரலாற்றில் மிக இளவயதில் நீதிபதியாகும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண் இவராவார்.*

*யாழ். சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் பழைய மாணவியான இவர் தனது 31 ஆவது வயதில் நீதிபதியாக பதவியேற்கவுள்ளார். நீதிச் சேவை ஆணைக் குழுவினால் நடத்தப்படும் நீதிபதிகளைத் தெரிவு செய்யும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி 67 புள்ளிகளைப் பெற்று தமிழ்மொழி மூலமாக அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.*

*பிரபல சட்டத்தரணியான நிரோசனின் மனைவியான இவர் யாழ்ப்பாணம் தொல்புரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்.*

*தற்போது இவர் தனது கணவருடன் வேலணையில் வசித்து வருகிறார்.*

*உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த இவர், பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் படிப்பை விரும்பிய போதிலும் பெற்றுக் கொண்ட அதிக பெறுபேறு காரணமாக சட்டப் படிப்பைத் தொடர்ந்தார். நான்கு வருடங்களில் தனது சட்டக் கல்வியை முடித்துக் கொண்ட இவர், அதே பல்கலைக்கழகத்தில் சில வருடங்கள் சட்டத்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றினார். பின்னர் வடக்கிலுள்ள பல நீதிமன்றங்களில் நான்கு வருடங்கள் இவர் சட்டத்தரணியாக முன்னிலையாகியமை குறிப்பிடத்தக்கது.(சி.கா)*







## பரிசுப் படிவத்திற்கு பாதணிகளை வழங்குவதற்காக உங்கள் வியாபார நிலையங்களையும் பதிவுசெய்து கொள்ளுங்கள்

இலவசக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் நாடு பூராகவும் வசதி குறைந்த, மிகவும் வசதி குறைந்த தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பிரிவேணாக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் பிக்குகளுக்குமாக பாடசாலைப் பாதணிப் பரிசுப் படிவத்தை வழங்குவதற்குக் கல்வி அமைச்சு இம்முறையும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற நாடு முழுவதும் உள்ள வியாபார நிலைய உரிமையாளர்கள் உங்களுடைய கையடக்கத் தொலைபேசியில் **play store** இல் பிரவேசித்து **Thilinapath Android** செயலியைத் தரவிறக்கம் செய்து அதனூடாகச் சென்று ரூபாய் 500.00 கட்டணம் செலுத்தி பதிவுசெய்து கொள்வது கட்டாயமானதாகும்.

இப்புதிய முறையின் கீழ் பரிசுப் படிவம் மூலம் பாதணிகளைக் கொள்வனவு செய்யும் மாணவர்களுக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பாடசாலைப் பாதணிகளைச் சந்தைப்படுத்துவதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

### பதிவுசெய்து கொள்வதற்குத் தேவையான தகவல்கள்

- வியாபாரத்தின் பதிவுச் சான்றிதழ்
- பதிவுசெய்யப்பட்ட வியாபாரத்தின் / வியாபார உரிமையாளரின் பெயரில் திறக்கப்பட்ட வங்கி கணக்கின் விபரங்கள்
- இந்தச் செயலியைப் பயன்படுத்துவதற்காகத் தெரிவுசெய்த தொலைபேசி இலக்கம்
- மேற்குறிப்பிட்ட செயலியில் நுழைவதன் மூலம் இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
- உங்களுடைய கையடக்க தொலைபேசியிலிருந்து **play store** இல் பிரவேசித்து Thilinapath Android செயலியைத் தரவிறக்கம் செய்து ரூபா 500.00 செலுத்துவதன் மூலம் பதிவுசெய்தலை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.
- பதிவுசெய்யும் வியாபாரிகள் கணினி செயலி ஒன்றிற்கும் உரிமை பெறுவதுடன் அச்செயலியின் மூலம் மாத்திரமே பரிசுப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள QR குறியீட்டை ஊடுகதிர் (Scan) செய்வதனூடாகப் பாதணிகளைச் சந்தைப்படுத்துவதற்கு வசதிகள் செய்து தரப்படும்.
- இதன்படி இம்முறையின் கீழ் பதிவு செய்யும் சகல வியாபாரிகளும் பாதணிப் பரிசுப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள QR குறியீட்டை ஊடுகதிர் Scan செய்வதற்காக கையடக்க தொலைபேசியொன்றையோ அல்லது வேறு கணினித் துணைக் கருவியொன்றையோ வைத்திருப்பது அவசியமாகும்.
- வியாபார உரிமையாளர்கள் பாதணிகளைக் கொள்வனவு செய்வோருக்காக வழங்கும் பரிசுப் படிவங்களின் செல்லுபடியாகும் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும். ( பதிவு செய்த விநியோகத்தர்களுக்கு கல்வி அமைச்சு மூலம் சகல அறிவுறுத்தல்கள் மற்றும் மேலதிக ஆலோசனைகள் வழங்கப்படும்.)
- உங்களால் விநியோகிக்கப்படும் பாதணிகளுக்குரியதான பரிசுப் படிவத்தின் பெறுமதி உங்கள் வங்கிக் கணக்கிற்கு வாராந்தம் நேரடியாக அனுப்பிவைக்கப்படும்.

තිළිණපත්
**play store** இல் பிரவேசித்து
**Thilinapath Android**
செயலியைத் தரவிறக்கம்
செய்துகொள்ள முடியும்

**Hot Line: 0117484800**




- 2023.12.01 ஆம் திகதியிலிருந்து பதிவுசெய்தல் ஆரம்பமாகின்றது.
- 2023-12-09 ஆம் திகதியிலிருந்து பரிசுப் படிவம் மூலம் பாதணிகளைக் கொள்வனவு செய்வதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education



ஓமானின் 58வது சுதந்திர தினம் கொழும்பிலுள்ள சங்ரில்லா ஹோட்டலில் அண்மையில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வின் போது இலங்கை வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளரும் ஓமான் நாட்டுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவருமான சட்டமுதுமாணி ஓ.எல். அமீர் அஜ்வத் எழுதிய "இலங்கை ஓமான் உறவுகள்: நேற்று, இன்று, நாளை" என்ற இருதரப்பு உறவுகள் பற்றிய நூல் இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் மற்றும் விழாவில் கலந்துகொண்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் விருந்தினர்களுக்கும் இலங்கைக்கான ஓமான் நாட்டுத் தூதுவர் அஹ்மத் அல்றஷ்தியினால் வழங்கப்பட்டது. "இலங்கை ஓமான் உறவுகள்: நேற்று, இன்று, நாளை" என்ற இந்நூலுக்கான முன்னுரையை ஓமான் நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் செய்யித் பத்ர் அல்புசைதி எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கைக்கும் ஓமானுக்குமிடையிலான வரலாற்றுத் தொடர்புகளை ஆராயும் இந்நூல் இருநாடுகளுக்குமிடையிலான கூட்டுறவை வலுப்படுத்தச் சாதகமான பல்வேறு துறைகளை பட்டியலிட்டுள்ளது.

# லண்டனில் மலையகம் – 200 மாநாடு



இலங்கையின் மலைநாட்டு பகுதிகளில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளி மலையக மக்களின் வருகைக்கு 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பிரித்தானியாவில் இயங்கிவரும் 'Solidarity for Malayagam' அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த வாரம் (18) லண்டன் வெம்பிளி SUDBURY METHODIST CHURCH மண்டபத்தில் மலையகம் 200 என்ற தொனிப்பொருளில் சிறப்பு மாநாடு, ஓவியக் கண்காட்சி, கலை நிகழ்ச்சிகள் மற்றும் சமூக ஒன்றுகூடல் நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. இலங்கையிலிருந்து மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், லண்டன் குரொய்டன் நகர துணை மேயர் அ. தாமோதரன், பாரிஸ்டர் பத்ரிநாத் பாலவெங்கடேசன், ஹவுன்ஸ்லோ மாநகர கவுன்சிலர்களான அலன் ஜோசப், மேரி குரூஸ் உள்ளிட்டோர் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டனர்.

பி.ஏ.காதர் எஸ்.இராமலிங்கம், கலைசேகர், பெ.சிவஞானம், ஹேமாராஜ், பாலசபேசன், சட்டத்தரணி ஜெயரட்ணராஜா, சார்ள்ஸ் அந்தோணிதாஸ், புஸ்பா வினோத், ருக்ஷான் செல்வரத்தினம், சந்திரன் கிருபாகரன் உள்ளிட்டோர் ஆய்வரங்க பேச்சாளர்களாக கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களின் ஐக்கியத்தை வலியுறுத்தும் நோக்கில் வட கிழக்கு, இந்திய தமிழர் என்ற ரீதியில் லண்டனில் செயற்பட்டுவரும் பல்வேறு புலம்பெயர் சமூக அமைப்புகளினதும் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், கலைஞர்கள் என பெருந்திரளானோர் இந்நிகழ்வில் ஆர்வத்துடன் பங்கேற்றமை மேற்படி மாநாட்டின் வெற்றிக்கு வலுச்சேர்த்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.





இந்தியாவிலிருந்து வருகை தந்த பிரபல சகோதரிகளான Dr. சரோஜா மற்றும் Dr. சுஜாதா சகோதரிகளின் (TK Sisters) சிறப்பு வாய்ப்பாட்டு இசை நிகழ்ச்சி கொழும்பு சுவாமி விவேகானந்தர் கலாசார மண்டபத்தில் 21.11.2023 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்று பலரது பாராட்டுக்களையும் பெற்றது. இதில் அணிசேர் கலைஞர்களாக வயலின்: வாசுகி சுவாமிநாதன் சர்மா, மிருதங்கம்: பிரம்மஸ்ரீ AGS சுவாமிநாதன் சர்மா மற்றும் கஞ்சீரா: S. அரவிந்தன் சர்மா ஆகியோர் பங்கேற்றனர்.



யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட புனித பத்திரிசியார் கல்லூரி பொறியியல் தொழிற்துறை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான வழிகாட்டி கையேடு கல்லூரி அதிபர் தலைமையிலான குழுவினர் தயாரித்து அதற்கான விளக்க உரையையும் மாணவர்களுக்கு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதற்கான நிதியை யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் தேசமான்ய லயன் கலாநிதி நா.தனேந்திரன் 50,000 ரூபாவை பாடசாலை அதிபரிடம் கையளித்தபோது பிடிக்கப்பட்ட படம்.

(வேலணை குறூப் நிருபர்)



அண்மையில் கொழும்பு சாஹிரா கல்லூரியில் கல்லூரி அதிபர் திஸ்வி மரிக்கார், ஆளுநர் சபையின் தலைவர் பவ்சூல் ஹமீத் ஆகியோரின் தலைமையில் "தருவன்ட ரடக் ரட்டட ஹெடக் " எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற சாள்ஸ் அன்ரனியின் கருத்தரங்கில் இந்துமதம் சார்பாக சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மாவுக்கு கல்லூரி பிரதிஅதிபர் சாசுலி மற்றும் உபஅதிபர் மிஹிலார் ஆகியோர் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# கொழும்பு YMBAயின் கலந்துரையாடல்



கொழும்பு இளையோர் பௌத்த சங்கமானது (YMBA,Colombo) யாழ்ப்பாண வர்த்தக சம்மேளனத்துடன் (Jaffna Chamber of Commerce) இணைந்து, அண்மையில் கொழும்பு இளையோர் பௌத்த சங்க சபை அறையில் " இளையோர், மகளிர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் 2024ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுதிட்டத்தின் தாக்கம்" பற்றிய வெற்றிகரமான கலந்துரையாடலை நடத்தியது.

லங்கா டைல்ஸ் நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அலுவலரும் கொழும்பு இளையோர் பௌத்த சங்கத்தின் தலைவருமான மகேந்திர ஜயசேகரவினால் திறம்பட நடத்தப்பட்ட இவ்வமர்வில், சட்டத்தரணியும், கொழும்பு சங்கத்தின் (Colombo Associates) பணிப்பாளருமான அஜ்ரா அஸ்ஹர், இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் தலைவர் சஞ்ஜய பண்டார, இலங்கை பைவர் குழுத் தலைவர் (Fiverr Community) ஜனித் விக்ரமசிங்க, எச். சி பியின் தவைர்/முதன்மை ஆலோசகர் சமிந்த குமரசிறி, அட்வகேட்டாவின் முதன்மை நிறைவேற்று அலுவலர் தனனாத் பெர்னாண்டோ மற்றும் சட்டத்தரணியும் யாழ்ப்பாண வர்த்தக சம்மேளனத்தின் நிறுவனச் செயலாளருமான இராமலிங்கம் செந்தில்குமரன் ஆகியோர் பேச்சாளர்களாக பங்கேற்றனர்.

# இக்ரஃ தொழில்நுட்பக் கல்லூரியின் 30ஆவது சான்றிதழ் வழங்கும் விழா

(அஜ்வாத் பாஸி)

பேருவளை இக்ரஃ தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் 30ஆவது சான்றிதழ் வழங்கும் விழா இன்று 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஜாமியா நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் முகாமைத்துவ சபைத்தலைவர் யாகூத் நளீம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில், கனடாவில் வசிக்கும் இலங்கையைச்சேர்ந்த மூத்த பொறியியல் ஆலோசகரும் பிரபல சமூக சேவையாளருமான பொறியியலாளர் ஏ.ஜீ.ஏ. பாரி பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில், ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வரும் இக்ரஃ தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தின் முகாமைத்துவ சபை அங்கத்தவருமான அஷ்ஷெய்க் ஏ. ஸீ. அகார் முகம்மத் (நளீமி) சிறப்புரையாற்றவுள்ளார். இக்ரஃ தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பல்வேறு கற்கை நெறிகளை பூர்த்தி செய்த சுமார் 325 மாணவர்களுக்கு இதன்போது சான்றிதழ் வழங்கப்படவுள்ளதோடு இந்நிகழ்வில் நிர்வாக சபை உறுப்பினர்கள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வை.ஐ.எம். றமீஸ் வாரமஞ்சரிக்கு தெரிவித்தார்.


# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343

Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

**வர்த்தகம்**

**201 வியாபார வாய்ப்புகள்**

உங்கள் வியாபாரத்திற்கான எந்தப் பொருட்களையும் சீனா அல்லது இந்தியாவிலிருந்து தருவிற்றுத் தருவோம். தொடர்புகள் 076 3310119. 076855

**வேலைவாய்ப்பு**

**312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்**

கம்பஹா நகரில் வாகன டயர் வீல் எலைன்மன்ட் வேலைத் தளத்திற்கு சிங்களமொழி பேசக்கூடிய பயிற்சிபெற்ற / அரை பயிற்சிபெற்ற ஊழியர்கள் தேவை. தங்குமிட வசதி உண்டு. 077 6318953 077347

**317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ட்ரஸ்மேக்கர்கள்**

சிறந்த தரத்திலான பெக்டரிகளிலிருந்து அகற்றப்பட்ட பெரிய டெனிம் Cut Pieces பெருந்தொகையில் கொள்வனவு செய்யப்படும். டெனிம் ஜெக்கட் மற்றும் காற்சட்டை தைப்பதற்கு தெரிந்தவர்கள் Call செய்யுங்கள். இரத்மலானைக்கு அருகில் இருப்போர் விரும்பத்தக்கது. 112611436, pattidora1961@hotmail.com. 077069

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

கம்பஹா நகரில் வீட்டில் தங்கி உணவு சமைப்பதற்கு, 4560 வயதிற்கி டைப்பட்ட சிங்கள மொழி பேசக்கூடிய அனுபவமுள்ள பெண் தேவை . சம்பளம் பேசித் தீர்க்கலாம். கிராம சேவகர் சான்றிதழ் அவசியம். 0776204277 077349

வீட்டு ப்ப ணி ப்பெண் ம ற்றும் சுத்திகரிப்பாளர் தேவை. வயது 17 முதல் 35 வரை. சம்பளம் 25000 மற்றும் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். தொடர்பு 75/1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு 06. தொ.பே. இல. 0012 5 9 1169, 077745 2 4 47, 075509 1 3 79 077316

வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை. முஸ்லிமான வீடு ஒன்றிற்கு இஸ்லாமிய மார்க்கப்பற்றுள்ள பணிப்பெண் தேவை. எங்கள் குடும்பத்துடன் இணைந்து கொள்ளுங்கள். சௌகரியமான வீடு மற்றும் தங்குவதற்கு இடம், உணவு கொடுக்கப்படும். சம்பளம் 30, 000+ உணவு. தொடர்புகொள்ளுங்கள் : 0722087777 077394




**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொழும்பில் இயங்கும் பிரபல்யமான உணவகத்துக்கு சமையல் உதவியாளர், ரொட்டி, சோடிஸ், ஜூஸ் தயாரிப்பாளர், பெண்றி உதவியாள ர், உணவு பரிமாறுபவர், சுத்திகரிப்பாளர், பில் மேக்கர் உ டன டியாகத் தேவை. இலக்கம் 94/8, 14வது ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி. 07 5 0 2 22666, 07 7 7 6 62345. 076469

ஜாஎல நகரில் 10 அறை கொண்ட சிறிய ஹோட்டலுக்கு சாதாரண ஆங்கில அறிவுடைய தங்கி வேலை செய்யக்கூடிய ஆண்கள் மட்டும் தேவை. தங்குமிடம் உண்டு. சாதாரண சம்பளம். ஹோட்டல் அனுபவம் தேவையில்லை. 071 4394199 077353

8 பேஸ்ரி ஊழியர் பேக்கரிக்கு தேவை TIMOR LESTE அழைக்கவும். 0710142322 மின்னஞ்சல் sdsutlple@gmail.com 077215

**322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்**

கொழும்பிலுள்ள தொடர்மாடி கட்டிட வேலைத்தளத்திற்கு, Electrician, டைல் பாஸ், லேபர்ஸ், தேவை. Metro h abitat (Pvt) Ltd., No-14, Rudra Mawath a , Colombo - 6. 0777380558, 077738 0 62 2, 0773629518. 077066

**323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்**

கொழும்பு பாடசாலையொன்றின் பார்வையாளர் அரங்கு பராமரிப்பு அலுவலர் தேவை. அதியுயர்ந்த சம்பளம் மற்றும் படிகள் வழங்கப்படும். 0704421590. 076459

**325 தொழில்துறை பொது**

கோழியிறைச்சிக் கடைக்கு ஊழியர்கள் தேவை : 0711886299 076939

**சொந்த விடயம்**

**518 ஆடை தயாரிப்பு/டெயிலரிங்**

எல கந்த, வத்தளையில் பெண்களுக்கான ஆடைகள் நேர்த்தியாக நியாயமான கட்டணத்தில் குறித்த தவணையில் தைத்துத் தரப்படும். அழைக்கவும். THE STITCHERY 0717889939 077251

**காணி/தோட்டம்**

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

அண்மையில் 6.4 Perch இல் கட்டப்பட்ட 6 படுக்கையறைகள், 6 குளியலறைகள் மற்றும் Parking வசதிகளுடன் கூடிய 2 மாடி வீடு Dehiwa l a Kadawatha கட வத்த பிரதான வீதியில் விற்பனைக்கு உண்டு. Contact No : 0768624984, 0778688901 076715

நவ கம்புர ஸ்டேஸ் வீதியில் வீடு விற்பனைக்கு உள்ளது. விலை ரூபா நாற்பது இலட்சத்திற்கு உட்பட்டது. விலை பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு 0777820968/ 0772094408. 076863

பிட்டகோட்டேயில் ஆனந்த மகளிர் மாவத்தையில் வெறுங்காணி 18.1 பேர்ச். தெளிவான உறுதி, நீர், மின்சாரம் குடியிருப்புக்கு உகந்தது. பாதுகாப்பான சூழல். விபரங்களுக்கு 0778800243 ஐ அழைக்கவும். 076461

மொறட்டுவை, கட்டுபெத்த, ராஹுல வீதி , தேவல வீதி, 06 பேர்ச் புதிய வீடு கீழ் மாடி முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. மேல் மாடியை கட்டக்கூடியவாறு வரைபடம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 03 படுக்கையறைகள், உயர்தர மூலப்பொருட்களை இட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மிகவும் பாதுகாப்பான வீடாகும். விலை 225/ இலட்சம் கொள்வனவாளர்கள் அழையுங்கள். 0752911451 076654

6.6 பேர்ச் காணி மற்றும் 6 கடைகள் பிரதான வீதிக்கு முகப்பாக, முகவரி 275/ஏ, ஜோர்ச் பீரிஸ் மாவத்தை , பெர்குஸன் வீதி, மட்டக்குளி, கொழும்பு 15. தொடர்பு 0 7 2 1423899. 076965

தினகரன் வாரமஞ்சரி

**திருமண சேவைகள்**

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk



**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

கனேமுல்ல நகரிற்கு 1 கி.மீ. தார் இடப்பட்ட பிரதேச சபை பாதைக்கு எல்லையாக 3 அறையுடன் முழுமையான வீடு, குழாய் நீர், கிணற்று நீர், மின்சாரம், முழுமையான மதில், விசாலமான கேட் 12.5 பேர்ச். சிக்கலற்ற உறுதி. 077 6310113 077357

வத்தளை, ஹெந்தளை ஐந்து படுக்கையறை மாடி வீடு விற்பனைக்கு இருபது பேர்ச்சில் சகல வசதிகளுடன். 07 73082032, 07 16464185. 076279

**671 வீடு சொத்து தேவை**

திருகோணமலை / மன்னார்/ வவுனியாவில் (A part-ment வேண்டாம்) 3 அறைகள் Attached Bathroom, Hall, சமையலறை, பார்கிங் உடனான தனி வீடு வேண்டும். 076 7 011272. 077525

# BUDGET ADZ

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## கேகாலை

12 பேர்ச் கேகாலை நகரின் வளவ்வத்த விக்கிரமசிங்ஹ பங்களாவிற்கு அருகில் கல்லூரி, மகளிர் கல்லூரி, வைத்தியசாலை என்பவற்றிற்கு 5 நிமிட தூரத்தில், கூடிய விலைக் கோரிக்கைக்கு.

071 80 73 925 / 072 870 52 92

## PALAWATTA - BATTARAMULLA

LUXURY HOUSE FOR SALE

3 STORIED NEWLY BUILT FOUR BED ROOMED, FULLY A/C HOUSE ON 6 PERCH LAND IS FOR SALE

65 MILLION

0777 489 369

## கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு

Solution to Get rid of Termites

Pre & Post Construction treatments For Termites

RODENT CONTROL — To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean

COCKROACHES, FLIES, MOSQUITOES, ANTS, BED BUGS, WOOD BORES

Hotline: 074 031 5517

Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides

Leemaka Industries (Pvt)Ltd. (PV 120625)
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

## இரத்தினபுரி நகருக்கண்மையில் 150 ஏக்கர் தோட்டத்தில் இறப்பர் பால் வெட்டுவதற்கு தொழிலாளர் கணவன்-மனைவி தேவை.

2 வெட்டு வெட்டுவதற்கு நாளொன்றிற்கு 2000 ரூபா. 210 மரங்கள் அல்லது தனியொரு வெட்டிற்கு 1200 -1500 ரூபா. சில்லறை வேலைக்கு ஆணுக்கு 1500. பெண்ணுக்கு 1200 ரூபா. நீர், மின்சாரம் மற்றும் தங்குமிடம் வசதி மற்றும் ஊசேறி, பணிக்கொடை, போனஸ் மற்றும் பொருத்தமான படிகள் வழங்கப்படும்.

070 2 350 553







## Student / Tourist / Dependant

Visa Consultancy for -

- UK, Australia, Canada, & EU Countries.
- Visa Refusals and Fresh Applications.

We provide you our best professional service & all payments after success. (Conditions Apply)

The consultant was an employee of Sam & Co. Solicitors UK with 20 years experience in immigration law related issues.

PR VISA CONSULTANCIES - SRI LANKA

No. 53, Sanasa Square, Courts Road, Gampaha.
077 3 051 518 / 071 5 857 282
00447901113824 (WhatsApp Only)
Email - pandoralanka53@gmail.com




## 17.5 PERCHES BARE LAND FOR SALE IN NAWALA KOSWATTA

for Rs. 4.5 million (Per Perch) Negotiable. Prime Residential Area, De Mel Watta, Mawatha. Land has 2 road accesses. Tar Road is large enough for containers to be moved in and out.

0722 451 303

## Christmas Trees & Santa Costumes FOR SALE

| | |
|---|---|
| 2 Ft | Rs. 580 |
| 3 Ft | Rs. 1,400 |
| 4 Ft | Rs. 2,650 |
| 5 Ft | Rs. 4,800 |
| 6 Ft | Rs. 6,600 |
| 7 Ft | Rs. 8,900 |

0777 664 655/ 0742 864 600

## WANTED DISTRIBUTORS

A LEADING "ORGANIC" COCONUT MILK MANUFACTURER NEEDS AGENTS/DISTRIBUTORS IN KANDY, JAFFNA, MANNAR & GALLE.

THOSE WHO ARE PRESENTLY IN DISTRIBUTING FIELD WILL BE GIVEN PRIORITY.

AALAM HOLDINGS (PVT) LTD.
20/1, KOTHALAWELA AVENUE, COLOMBO 4.

Pls contact on 0712 727 920
or send your company profile to
email - alglobe786@gmail.com

## APARTMENT BUILDING FOR SALE KALUBOWILA

HOSPITAL ROAD FACING
14.5 PERCH
FOR STOREY WITH SIX APARTMENTS BUILDING
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814




## RATHNA CONSTRUCTION WORK

House Renovation, Plumbing, All Painting, Electrical, Solar Hot Water Installation, Marble and Tile & Titanium Wardrobe Work, Modular Kitchen, wood work, Planning & Designing, New Construction of Building, Structural Work Renovation Maintenance

NO. 157,80/1 COLOMBO - HORANA ROAD, PILIYANDALA.

Call Now 076-2 237 786/ 074-2 881 915

## Super Luxury Brand New House for Sale IN KIRIBATHGODA

130 Million

Brand New, 2 Storied, 63 Perches, 4268 sq.ft., Fully Air Conditioned House, 7 Bedrooms with 4 Attached Bathrooms, Hot Water, 2 Living Areas, Dining Room with Teak Pantry Cupboards, Curtained Separate Kitchen, Separate Store Room, 2 Car Porches Parking for 20 Vehicles, Remote Gate.

FOR EXCHANGE OF VEHICLE CAN BE CONSIDERED
HIGHWAY ENTRANCE WITHIN 10 MINUTES
KIRIBATHGODA / DELGODA MAIN ROAD WITHIN 02 MINUTES (50METRES)
FOR IMMEDIATE SALE
0777 315 250

ADZ | dgn

## வாரமஞ்சரி BUDGET ADZ — போட்டோ குறும் விளம்பரம்

Montero sport, 2011, KU-XXXX, Automatic, Multifunction, 3rd row AC, Winker mirror, Fog lights, 4WD, Reverse camera, Original paint, Excellent. 077 6 925 963

kum-1

## THALAWATUGODA HOKANDARA

Viskam Villas

Rs. 58 M Upwards

Facing Paddy Field
Vicinity Of Hokandara Junction

- Architecturally Designed 05 Villas
- Spacious Living with 05 Bedrooms
- Ground Floor Ideal For Parents/Elders
- Staff Accommodations
- Wide Access Road
- 50 m to Main Road
- 100 m to Banks & Supermarkets
- 5 minutes from Athurugiriya Highway Exit
- Clear Deeds & Titles

Scan Me

FAIRWINDS

0773 721 155 / 0777 264 265

## தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

## Advertise Here

வாரமஞ்சரி BUDGET ADZ

5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com




## Looking for Your Life Partner..,

Gather with, SUNDAY OBSERVER

Marriage Proposals

Decades of Trusted Service

Pay online and save your precious time

BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch

E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067

077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# முஸ்லிம் வித்தியாலய விழாவில் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு



பாணந்துறை, ஹொரேதுடுவை முஸ்லிம் வித்தியாலயம் ஏற்பாடு செய்த "ஆரோக்கியமான சூழல் அர்த்தமுள்ள வாழ்க்கை" செயற்திட்டத்தின் முக்கிய அங்கமாகவுள்ள போதைப் பொருட்களை தவிர்ப்போம் என்ற தொனிப்பொருளில் அமைந்த கண்காட்சி, வீதி நாடகம், சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு என்பன அதிபர் எஸ்.எச்.முத்தலிப் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாணந்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டப்லியூ. எம். சமந்த வெதகே கலந்து சிறப்பித்தார். ஹொரேதுடுவை வித்தியாலய பழைய மாணவரும் தொழிலதிபருமான ஷியாம் நளீம் கௌரவ அதிதியாக கலந்துகொண்டதுடன், பாடசாலையின் பழைய மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றார்கள், அபிமானிகள், ஊர்மக்கள் என பெருந்திரளானவர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். பாடசாலைக்கு பலவழிகளிலும் ஊடகத்துறைக்கு பங்களிப்பு செய்த சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் இதில் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். தினகரன் பத்திரிகை சார்பில் கலாபூசணம் எம்.கே.எம். அஸ்வர், அஷ்ரப் ஏ.சமத் மற்றும் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சத்தார், கலாபூஷணம் ஏ.எல்.எம். அஸ்வர், ஏ.எம்.மொஹம்மத் ரலீன் ஆகிய ஊடகவியலாளர்கள் இதில் கௌரவிக்கப்பட்டனர்.

(எம்.கே.எம்.அஸ்வர் மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

# ஸ்கை தமிழ் விருது விழா–2023

## கத்தார் விழாவில் புரவலர் ஹாசிம் உமர் அதிதி

## தலைமை ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே . எம்.பாஸித்




கத்தாரில் மிக பிரம்மாண்டமாக நடைபெறவுள்ள இலங்கை மற்றும் இந்திய கத்தார் வாழ் ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது 2023 ஆனது எதிர்வரும் நவம்பர் 30ஆம் திகதி ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித்தின் தலைமையில் இந்திய கலாசார மையம் அசோகா ஹோலில் நடைபெறவுள்ளவுள்ளது.



இவ்விருது விழாவில் பிரதம அதிதியாக கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீனும் கௌரவ அதிதியாக இந்திய கலாச்சார மையத்தின் பொதுச் செயலாளர் மோகன் குமாரும்,

சிறப்பு விருந்தினராக இலங்கையிலிருந்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமரும், இலங்கை தேசிய பத்திரிகையான தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவரும், இந்தியாவில் இருந்து தி.மு.க கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா சந்திரசேகரனும், இந்தியா சேது தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் தலைவர் முஹம்மது ஜலீலும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் இவ்விழாவில் அதிதிகளாக ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் நிறுவன முதல்வர் டாக்டர் நிஷான் ஜெமீல், யாழினி டிரேடிங் உரிமையாளரும் பிரபல தொழிலதிபரான யாழினி குமார், கத்தார் தமிழர் சங்கத்தின் நிறுவனரான டாக்டர் துரைசாமி குப்பன், கத்தார் தமிழர் சங்கத்தின் முன்னாள் தலைவர் விஜயன் பாபுராஜ், கத்தார் தமிழர் சங்கத்தின் தலைவர் மணி பாரதி, கத்தார் எழுமின் அமைப்பின் தலைவரான சக்திவேல் மகாலிங்கம், தமிழ்மகன் அவார்ட்ஸ் குழு தலைவர் சாதிக் பாட்சா சம்சுதீன், கத்தார் தமிழர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் கௌரி சங்கர் மற்றும் கத்தார் முத்தமிழ் மன்றம் நிர்வாக குழு உறுப்பினர் குரு ஸ்ரீ, ADDONit நிறுவனத்தின் பணிப்பாளர் ஷாஹித் சராபத் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.



இவ்விழாவில், கல்வி, கலை, விளையாட்டு, வணிகம், சமூக செயற்பாடு, ஊடகத்துறை, எழுத்து துறை மற்றும் இலக்கியத்துறை போன்ற துறைகளில் சாதித்தோருக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**தகவல் கட்டாரில் இருந்து**
**ராஜு ராஜயோகன்**

# சர்வதேச தமிழ் வானொலி சேவை

## இயக்குனர் சரவணையூர் விசு செல்வராஜா



தமிழர்கள் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்றாலும் தாங்கள் வாழ்கின்ற இடங்களில் அல்லது நாடுகளில் தமிழ் மொழியையும் தமிழ் பாரம்பரிய கலாசாரத்தையும் பேணுவதிலும் வளர்ப்பதிலும் அளப்பரிய பணிகள் ஆற்றி வருகின்றனர்.

இவ்வாறு புலம்பெயர்ந்து போனவர்கள், தமிழையும் கலை கலாசாரத்தை வளர்ப்பதிலும் காட்டும் கரிசனையை தாம் பிறந்த நாட்டின் மீதும் காட்டத்தவறுவது இல்லை.

அவ்வாறு சென்றவர்களில் சரவணையூர் விசு செல்வராசாவும் ஒருவர். இவர், கவிஞர், அறிவிப்பாளர், மேடை நாடகக் கலைஞர், எழுத்தாளர், நாடக ஆசிரியர் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என பல்வேறு துறைகளிலும் தன்னிகரில்லா விளங்கும் ஒரு கலைஞன் கவிஞர் சரவணையூர் விசு செல்வராசா.

இவர், இலங்கையை விட்டுச் சென்று 37 வருடங்களாகின்றன. இலங்கையை விட்டுப் போகும் போது ஒரிரண்டு வருடங்கள் வேலை செய்து விட்டு மீண்டும்




இலங்கைக்கு திரும்பலாம் என்ற நோக்கத்துடன்தான் இவர் இலங்கையை விட்டுச் சென்றார். ஆனால் காலமும் நேரமும் இவரை நிரந்தரமாகவே அங்கு இருக்கச் செய்து விட்டது.

அங்கு இருந்தாலும் இவரது மனவலைகளும் எண்ண அலைகளும் இலங்கையைப் பற்றி எண்ணியே அலை மோதிக் கொண்டிருந்தன. யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். வறுமை கோட்டுக்குள் வாழுகின்ற மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றே நினைத்துக் கொண்டிருந்தன. விளைவு யுத்தம் முடிவுற்று இலங்கைக்கு திரும்பக் கூடிய வாய்ப்பு கிடைத்ததும் திரும்பி வந்து இம்மக்களை பார்த்ததுடன் உதவியும் செய்ய ஆரம்பித்தார்.

விசு செல்வராசாவின் தாயார் பூமணி அம்மா. விசு செல்வராசா தனது தாயாரின் பெயரில் "பூமணி அம்மா அறக்கட்டளை" என்ற பெயரில் அமைப்பொன்றை நிறுவி வறிய மக்களுக்கு உடைகள் மற்றும் உலர் உணவுப்பொருட்கள் வழங்கி வரு




கின்றார். அதுபோல் மாணவ மாணவிகளுக்கு கணினிகள், கற்றல் உபகரணங்கள் வழங்கி வருகின்றார். விசேட தேவையுடையோருக்கு சைக்கிள்கள் ஆகியவற்றையும் வழங்கி வருகின்றார். ஒரு பிரதேசத்திலும் ஒவ்வொரு பிரதிநிதிகளை நியமித்து இந்த அறப்பணிகளை ஆற்றிவருகின்றார். சரவணையூர் விசு செல்வராசா, சர்வதேச தமிழ் வானொலியின் இயக்குனராகவும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் துணைத் தலைவராகவும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பிரான்ஸ் கிளையின் தலைவராகவும் விளங்குகின்றார்.

இவர் பிறந்தது யாழ்ப்பாணத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற சரவணையூர் என்ற சின்ன கிராமம். அங்கு இருக்கின்ற பாடசாலை ஒரு சிறிய பாடசாலை. அது சின்ன மடு றோமன் கத்தோலிக்க பாடசாலை. இவர், ஆரம்பக் கல்வியை இங்கு பயில ஆரம்பித்துள்ளார். இங்கு 5ஆம் வகுப்பு வரை படித்து விட்டு உயர் கல்வியை வேலணை மத்திய கல்லூரியில் பயின்றுள்ளார்.

இவருக்கு, இலங்கை போக்குவரத்துச் சபையிலே பணியாற்றுவதற்கான வேலை கிடைத்ததும், அங்கு சில காலம் பணியாற்றியுள்ளார். படிக்கின்ற காலத்திலேயே கிராமத்து மண்வாசனை என்று சொல்லுவார்கள். அந்த காலத்திலே கிராமங்களில் மட்டுமல்ல, நகரங்களில் கூட தொலைக்காட்சி இல்லாத காலம். வானொலி கேட்பதாக இருந்தால்கூட நாலு வீட்டுக்கு அப்பால் சென்று தான் கேட்க வேண்டும். அவ்வாறான ஒரு காலத்திலே இந்த மக்களுக்கு பொழுதுபோக்குக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு ஏற்பட்டுள்ளது. இந்த





ஆர்வத்தின் விளைவாக அவரது ஊரிலே, 16 வயதில் ஒரு நாடகத்தை மேடையேற்றியுள்ளார். அந்த நாடகம் பரவலாக பேசப்பட்டது. இதன் விளைவாக இந்த நாடகம், யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல மேலும் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டது. இவரது உறவு முறை உறவினர் ஒருவர் இருந்தார். அவரது பெயர் இன்னாசி முத்து. இந்த இன்னாசி முத்து. ஈழநாடு பத்திரிகையிலே உதவி ஆசிரியராகக் கடமையாற்றியவர். அவர் இந்த நாடகத்தைப் பற்றி விமர்சனம் எழுதினார். இது விசு செல்வராசாவின் கலை ஆர்வத்தை மேலும் தூண்டியது. இன்னும் இன்னும் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தை உண்டாக்கியது. கவிதை, கட்டுரை, நாடகம் என்று எழுதினார்.

நாடகங்களை மேடையேற்றி மக்களை மகிழ்ச்சிப்படுத்தி வந்த இவர், 50 குடும்பங்கள் வாழ்ந்த இவரது கிராமத்து மக்களை மேலும் மகிழ்ச்சிப்படுத்த சைக்கிளோட்டப் போட்டி, மாட்டு வண்டி ஓட்ட போட்டி என இன்னொரன்ன போட்டிகளை நடத்தி மக்களை மகிழ்ச்சிப்படுத்தி வந்துள்ளார்.

இங்கு இருந்து அவர் வெளிநாட்டுக்குச் சென்றவுடன் 1981 ஆம் ஆண்டு தேவகுமாரன் என்பவர் ரியூனன் நாட்டிலே பண்பலை வானொலி என்ற வானொலி சேவையை ஆரம்பித்தார்.


இந்த வானொலி ஒரு நாளைக்கு இரண்டரை மணித்தியாலயம் தனது ஒலிபரப்பு சேவையை நடத்தியது. அது தான் ஐரோப்பாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் வானொலி. ஐரோப்பாவின் முதல் தமிழ் வானொலியில் அறிவிப்பாளராக சரவணையூர் விசு செல்வராசா கடமையாற்றத் தொடங்கினார். இது இடைநடுவில் நிறுத்தப்பட்டது. அதன்பின் பல வருடங்களாக ஒரு வானொலி சேவையை ஆரம்பிக்க முயற்சிகள் செய்யப்பட்டாலும் 1995ஆம் ஆண்டு வரை அது கைகூடவில்லை. 1995இல் ரேடியோ கனடா என்ற வானொலி சேவையை மாபெரும் இரு கலைஞர்களான பரமேஸ் கோணேஸ் ஆரம்பித்தார்கள். அதில் நான் பிரான்ஸுக்கு பொறுப்பாளராக இருந்தேன்.

இதுவும் பெரும் செலவில் நடத்தப்பட்டது. செலவு கட்டுப்பாடாகாத காரணத்தால் அதுவும் இடையில் நிறுத்தப்பட்டது. இவ்வாறு பல தமிழ் வானொலி சேவைகள் ஆரம்பிக்கபட்டு இடையில் நிறுத்தப்பட்டன. 2000 ஆம் ஆண்டு இன்னுமொரு வானொலி சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதுவம் 2009ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. அதன்பின் இணையத்தில் இவர் ஆரம்பித்த வானொலி சேவை தான் தற்போதுள்ள சர்வதேச தமிழ் வானொலி சேவை. இது 24 மணித்தியாலயமும் இயங்கிக் கொண்டிருக்கும் வானொலி சேவை. இந்த வானொலி சேவை மொன்டியலிலும் கனடாவிலும் 24 மணித்தியாலமும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதில் செய்திகள், கலை, இலக்கிய நிகழ்வுகள், தமிழ் தலைவர்களின் பேட்டிகள், பாடல்கள் , சிறுவர் நிகழ்ச்சிகள், திருக்குறள்கள், தேவாரம் என்பன ஒலிபரப்பப்பட்டு கொண்டிருக்கின்றன.

இதனை ஆரம்பிப்பதற்கு இவரது தாயாரான பூமணி அம்மாவும் பெரும் உதவி புரிந்துள்ளார். அதன் இயக்குனராகவும் அறிவிப்பாளராகவும் இவர் விளங்குகின்றார்.

இவர் 21 வருடங்களாக தமிழ் சுடர் என்ற சஞ்சிகையை நடத்தி வந்துள்ளார். பாரதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாரிஸில் தமிழ் இலக்கிய மாநாடொன்றையும் நடத்தியுள்ளார்.

சர்வதேச தமிழ் வானொலியின் 27ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு எதிர்வரும் 2023.12.02ஆம் திகதி மு.ப. 9 மணி முதல் பி.ப. 5 மணி வரை யாழ் பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் முனைவர் சதீஸ்குமார் சிவலிங்கம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள்.



முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543




# ஏற்றுமதி பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் ஏற்றுமதியாளர்களைப் பாராட்டும் விழா





புதிய புதிய விடயங்களை உருவாக்காத தேசம் உலகில் உயராது என முனிதாச குமாரதுங்க கூறியிருக்கிறார். பெரிய பொருளாதாரப் படுகுழியிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு வரும் இலங்கை போன்ற நாட்டுக்கு இதுபோன்ற புதிய கண்டுபிடிப்புகள் தேவைப்படும் காலம் இது. குறிப்பாக ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இலங்கைக்கு, புதிய கண்டுபிடிப்புகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். கடந்த நவம்பர் 23ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் 25வது தடவையாக இடம்பெற்ற 'ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் விழா' இதற்கு சான்றளிக்கும் வாய்ப்பாக அமைந்தது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக சிறந்த சேவையாற்றிய ஏற்றுமதியாளர்களைக் கௌரவிப்பதற்காக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் வருடாந்தம் இந்த விருது விழா ஏற்பாடு செய்யப்படுகிறது. 2021/22 மற்றும் 2022/23 நிதியாண்டுகளுக்கான இலங்கையின் சிறந்த ஏற்றுமதியாளர்களை கௌரவிப்பதற்காகவே இந்த ஆண்டு இந்த விருது வழங்கும் விழா இடம்பெற்றது.

இதன்பிரகாரம், ஒவ்வொரு நிதியாண்டுக்கும் மொத்தம் 13 விருதுகளும், உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் 51 விருதுகளும் என இரண்டு முக்கிய பிரிவுகளின் கீழ் இதன்போது விருதுகள் வழங்கப்பட்டதோடு, விண்ணப்பதாரிகளின் செயற்திறன்களின் அடிப்படையில் நடுவர் குழுவினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் தகுதி பெற்ற துறைகளுக்காக இவ்வருடம் திறமைக்கான விருதுகள் வழங்கப்பட்டமை முக்கிய அம்சமாகும். திறமைக்கான விருது பெற்றவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் மற்றும் சான்றிதழ்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கி வைக்கப்பட்டது. நாட்டினுள் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்கும் போது, தற்போதுள்ள ஏற்றுமதியை மேம்படுத்துவது மாத்திரம் போதுமானதல்ல, இதற்காக புதிய ஏற்றுமதி துறைகளிலும் கவனத்தைச் செலுத்த வேண்டும் என இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். இதற்காக புதிய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும் எனவும் அவர்களுக்குத் தேவையான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

"நாம் எமது ஏற்றுமதியினை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அத்துடன் எமது கைத்தொழில் துறைகளையும் முன்னேற்றிக் கொள்ள வேண்டும். இந்த வரவு செலவுத் திட்டத்தில் முதற் தடவையாக சிறிய மற்றும் மத்திய தர கைத்தொழில்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாம் புதிய ஏற்றுமதித்துறை தொடர்பில் கவனத்தைச் செலுத்த வேண்டும். அதற்காக புதிய முதலீடுகளுக்கு அழைப்பு விடுக்க வேண்டும்"





இந்த ஆண்டு விருது வழங்கும் விழாவில், 2021/22 மற்றும் 2022/23 ஆகிய ஆண்டுகளில் சிறந்த ஏற்றுமதியாளர் விருது உள்ளிட்ட 16 ஜனாதிபதி விருதுகளை இந்நாட்டின் உலகளாவிய ஆடை மற்றும் ஜவுளி உற்பத்தி நிறுவனமான MAS Holdings ன் துணை நிறுவனமான MAS Active Trading (Pvt) Ltd, MAS Intimates (Pvt) Ltd பெற்றுக் கொண்டது.

இதன் போது இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கான கம்பனிப் பங்களிப்பைக் கௌரவித்து MAS Active (Active மற்றும் KREEDA துறைகள்) யினால் 2021/22 மற்றும் 2022/23 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்காக இலங்கையின் சிறந்த ஏற்றுமதியாளர் விருதை வென்றதோடு, இதற்குப் புறம்பாக MAS Active MAS Intimates இணைந்து 16 விருதுகளை வெற்றி கொண்டது.

இந்த கௌரவிப்பானது கைத்தொழில் துறையின் முன்னணியாளர் மற்றும் தேசியப் பொருளாதாரத்துக்கு முக்கியமான பங்களிப்பையும் வழங்குபவராக MAS Holdings ன் நிலைப்பாட்டை உறுதி செய்த தருணமாகவும் அமைந்தது.

இந்த விருது வழங்கும் விழாவில், 2021/22 ஆம் ஆண்டில் முன்னேறி வரும் ஏற்றுமதியாளருக்கான விருது Alumex PLC நிறுவனத்துக்கும், 2022/23ம் வருடத்தில் முன்னேறி வரும் ஏற்றுமதியாளருக்கான விருது Jaya Farm நிறுவனத்துக்கும் கிடைத்தது. 2021/22ம் ஆண்டின் சிறந்த பெண் ஏற்றுமதியாளர் விருது Senikma Holdings தனியார் நிறுவனத்துக்கும் கிடைத்தது. 2022/23ம் ஆண்டுக்கான இந்த விருதை New Lanka Cinnamon தனியார் நிறுவனம் வென்றுள்ளது.

இந்த விருது வழங்கும் விழாவில் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவும் உரையாற்றினார். அமைச்சர்களான கலாநிதி பந்துல குணவர்தன, நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான தாரக பாலசூரிய, கனக ஹேரத், அரவிந்த குமார், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளர் எம். எம். நைமுதீன், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி கிங்ஸ்லி பர்னார்ட், வெளிநாட்டுத் தூதுவர்கள், அரசாங்க அதிகாரிகள், ஏற்றுமதித் துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் உள்ளிட்ட பெருமளவிலானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

**சுரேகா நில்மிணி இலங்கோன்**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

---



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்




# அடுத்த கட்ட யுத்தத்துக்கான கால அவகாசமா?

ஹமாஸ், இஸ்ரேலிய போர் முடிவற்ற மனித அவலத்தை ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய சட்டங்களையும் வரைபுகளையும் தொலைத்துள்ள இஸ்ரேல், ஹமாஸ் போர் மீளமுடியாத நெருக்கடிக்குள் உலகத்தை தள்ளியுள்ளது. மேற்குலகத்தின் அவல முகத்தை வெளிப்படுத்திய இஸ்ரேலிய, ஹமாஸ் போர் ஒடுக்கப்பட்டுள்ள தேசியங்களது இருப்புக்கு புதிய வடிவத்தை கொடுத்துள்ளது. ஹமாஸ் அமைப்பின் போர் அடக்குமுறைக்குட்பட்ட தேசியங்களின் இருப்பினை பாதுகாக்க புதிய அணுகுமுறைகளைகளையும் வழிகளைத் தேட ஆரம்பித்துள்ளதாகவே தெரிகிறது. ஹமாஸின் அணுகுமுறைகளை உலகத்திலுள்ள அடக்கு முறைக்குள்ளான தேசியங்கள் பின்பற்ற முனைகின்ற சூழல் தவிர்க்க முடியாததாக மாறிவருகிறது. அதேநேரம் ஹமாஸ், இஸ்ரேல் போர் நிறுத்தத்துக்கு உடன்பட்டிருப்பதாகவும் ஹமாஸ் கைது செய்த பணயக்கைதிகளை விடுவிக்க முன்வந்ததுடன் இஸ்ரேலிய சிறையில் அடைக்கப்பட்ட பாலஸ்தீனர்களை கைமாற்றவும் இஸ்ரேல் முன்வந்துள்ளது. இக்கட்டுரையும் ஹமாஸ், இஸ்ரேல் தரப்புக்களுக்கிடையே நான்கு நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்கான யதார்த்தத்தை தேடுவதாக அமையவுள்ளது.

இஸ்ரேல், ஹமாஸ் போர் நிறுத்தத்துக்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக (24.11.2023) கட்டார் அறிவித்துள்ளது. அமெரிக்கா, கட்டார், இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இந்த உடன்பாட்டை எட்டியுள்ளனர். இந்த உடன்பாட்டின் பிரகாரம் ஹமாஸ் தரப்பு முதல் நாள் போர் நிறுத்தத்தின் போது 25 பணயக்கைதிகளை விடுவிப்பதாகவும் இஸ்ரேல் இதற்கு பதிலாக 50 பாலஸ்தீன சிறைக் கைதிகளை விடுவிப்பதாகவும் உடன்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 12 தாய்லாந்து பணயக் கைதிகளை ஹமாஸ் முதற்கட்டமாக எகிப்து காஸா எல்லையில் கைமாற்றியுள்ளது. இப்பத்தி எழுதப்படும் போது அத்தகைய கைமாற்றும் நடைமுறை நிறைவு பெற்றுள்ளதாகவும், ஏனைய 13 பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் கட்டார் அறிவித்துள்ளது. அதனையே தாய்லாந்து ஜனாதிபதி தமது நாட்டுப் பிரஜைகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமே அத்தகைய விடுவிப்பு நிகழ்வதாக தெரியவருகிறது. இத்தகைய போர் நிறுத்த காலத்தில் காஸா மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் அனுப்பப்படும் எனவும் பெற்றோலியம் மற்றும் உணவுப் பொருட்களுடன் பாரஊர்திகள் காஸாவுக்குள் நுழைவதற்கு போர் நிறுத்த உடன்பாடு உறுதியளித்துள்ளதாகவும் தெரியவருகிறது. அதேநேரம் காயப்பட்ட பாலஸ்தீனர்களை சிகிச்சைக்காக எகிப்துக்குக் கொண்டு செல்வதும் உடன்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஹமாஸ் ஒரு பயங்கரவாத அமைப்பு எனவும் அதனை முழுமையாக துடைத்தழிக்கும் வரை போர் நிறுத்தப்படாது எனவும் தெரிவித்த இஸ்ரேல் அரசாங்கம், தற்போது ஏன் போர்நிறுத்த உடன்பாட்டுக்கு செல்லவேண்டியிருந்தது என்பது அடிப்படையான கேள்வியாகும். அது மட்டுமன்றி தற்போதைய மனிதாபிமான நடவடிக்கை பதினையாயிரம் பாலஸ்தீனர்கள் கொல்லப்படும் வரை ஏன் மேற்கொள்ளப்படவில்லை? ஏன் உலகத்திற்கு இவ்வாறான போர்நிறுத்தத்தை ஏற்படுத்த முடியவில்லை? என்பது மட்டுமல்ல, பணயக்கைதிகளை மீட்கும்வரை போர் என்று தெரிவித்த இஸ்ரேல், காஸா முழுவதும் துடைத்தழிக்கப்படும்போது ஏன் தனது பிரஜைகள் மீது கவனம் கொள்ளவில்லை என்ற அடிப்படைச் சந்தேகங்கள் தவிர்க்க முடியாதவை. இதற்கான பதிலை விரிவாக தேடவேண்டிய நிலை உள்ளது.

ஒன்று, இது ஒரு போரியல் இராஜதந்திரமாகவே தெரிகிறது. போர் நிறுத்தம் என்பது இரு தரப்புக்கும் தேவையான ஒரு விடயமாகவே அமைவதுண்டு. உலகளாவிய ரீதியில் மட்டுமல்ல இஸ்ரேல் மேற்கொண்ட அனைத்து போர்களிலும் உடன்பாடுகள் போரை மேற்கொள்வதற்கான தயாரிப்புக் காலமாகவே அமைந்துள்ளது. அராபிய நாடுகள் எப்போது ஒரு பலவீனத்தை கொண்டிருப்பார்கள் என்றும் அதனை கண்டறிவதற்கான காலமாக போர் நிறுத்த காலத்தை இஸ்ரேல் பயன்படுத்தியிருக்கிறது. அதே நடைமுறையை நோக்கி ஹமாஸும் பயணிப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் இந்தப் போரில் ஹமாஸ், இஸ்ரேலுடன் ஒப்பிடும் போது அதிக சாதகமான சூழலை கொண்டுள்ளது. வெளிப்படையாகப் பார்த்தால் இஸ்ரேலுக்கு ஹமாஸ் நெருக்கடியை கொடுத்துள்ளதுடன் மணித்தியாலத்திற்கு ஒரு இஸ்ரேலிய இராணுவ வீரர் அடக்கம் செய்யப்படுவதாகத் தெரியவந்துள்ளது. அதனை இராணுவ வீரர்களை அடக்கம் செய்யும் பணியாளர் ஒருவர் வெளிப்படுத்தியிருந்தார். இத்தகைய சூழலிலேயே போர் நிறுத்த உடன்பாடு இஸ்ரேலியர் பக்கம் உணரப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. ஹமாஸ் அமைப்பினைப் பொறுத்தவரை இஸ்ரேலுடனான போரை வெற்றிகரமான நடைமுறையாகக் கருதுகிறது. இதுவரை காலமும் இத்தனை நாட்கள் இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனர்களுக்கும் போர் நீடித்ததாக பதிவு இல்லை. அதனாலேயே இஸ்ரேலுக்கு பாரிய பின்னடைவென்ற விவாதம் நிகழ்கிறது. இஸ்ரேல் இராணுவ ரீதியில் ஆயுததளபாடங்களிலும் போர்க் களத்திலும் வலிமையானது என்பது தெரிந்த விடயம். ஆனால் ஆளணி குறைந்த நாடு. போர் நீடித்தால் தனது இராணுவத்தைக் கொண்டு போரை எதிர்கொள்ள முடியாது திணறடிக்கும் நிலை தவிர்க்க முடியாததாகும். இஸ்ரேலின் பிரதான இராணுவ வலிமை ஆயுததளபாடங்களுடன் அதன் புலனாய்விலேயே தங்கியிருந்தது. அதனை தற்போது இஸ்ரேல் இழந்துள்ளதாகவே தெரியவருகிறது. அதனால் இஸ்ரேலுக்கு இரு முக்கியமான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. அதாவது புலனாய்வின் தோல்வி, மறுபக்கத்தில் ஆளணியற்ற நிலை படிப்படியாக நெருக்கடியை தந்துள்ளது. அதுமட்டுமன்றி கடந்த 49 நாட்களாக காஸா மீதான தாக்குதலில் பாரியளவான குண்டுகள் பாவிக்கப்பட்டுள்ளன. கட்டடங்களை தகர்ப்பதற்கு பிரயோகப்படுத்திய ஆயுதங்களை அமெரிக்கா மற்றும் ஜேர்மனியிடமிருந்து இஸ்ரேல் தருவிப்பதில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது. இத்தகைய போர் நிறுத்த சூழலைப் பயன்படுத்திக் கொண்டு புதிய ஆயுதங்களை தயாரிக்கவும் பற்றாக்குறையை நிரப்பவும் இஸ்ரேல் முனைகிறது. போர் நிறுத்தங்கள் ஆயுததளபாடங்களை கொள்வனவு செய்யும் போருக்கான தயாரிப்புக் காலமாகவுமே உள்ளது. அதனையே இருதரப்பும் மேற்கொள்ள முனைவதாக விவாதிக்கப்படுகிறது. ஆனால் போர்நிறுத்த நகர்வை முன்வைத்த கட்டார், போர்நிறுத்தம் நீடிப்பதற்கான வாய்புக்களே அதிகமுண்டு எனக் கூறுகிறது. காரணம் இஸ்ரேலியர்கள் போரை கைவிடுமாறு கோருவதற்கு அப்பால் 49 நாள் போர் யூதர்கள் மத்தியில் அதிக இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அதனால் போரை நிறுத்தி அடுத்த போருக்கான துல்லியமான தயாரிப்பை எட்ட முனைவார்கள் என விவாதிக்கின்றது. ஆனால் யூதத் தீவிர அணுகுமுறையை கொண்டுள்ள தரப்புகள் போரை நீடிக்குமாறும் ஹமாஸ் அமைப்பினை முழுமையாக அழிக்குமாறும் இஸ்ரேலிய அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுத்துவருகின்றனர். அதேநேரம் இஸ்ரேலிய பிரதமர் பதவியை விட்டு விலகுமாறு நிர்ப்பந்திக்கும் போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன.

இரண்டு, ஹமாஸ் தரப்பைப் பொறுத்தவரை தமது மக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த யூதர்களை பயன்படுத்துவதென்ற தெளிவான இலக்குடனேயே போரை ஆரம்பித்திருந்தது. அது தற்போது ஹமாஸ் அமைப்புக்கு கைகொடுத்துள்ளது. இதில் ஹமாஸ் அமைப்பு மட்டுமல்லாது பாலஸ்தீனர்கள் மத்தியிலும் அராபியர்கள் மத்தியிலும் வளர்ந்து இஸ்லாமிய அமைப்புக்கள் பல அத்தகைய கைதுகளை மேற்கொண்டு பணயக் கைதிகளாக யூதர்களை வைத்துள்ளது. அதனால் இஸ்ரேலிய அரசாங்கம் யூதர்களை பாதுகாப்பதென்பது பாலஸ்தீனர்களோடு சுமூகமான உறவைக் கொள்ளும் வரை கடினமானதென்ற செய்தியைத் தந்துள்ளது. ஹமாஸ் தரப்பினைப் பொறுத்தவரை பயங்கரவாத அமைப்பு என்பதற்கு அப்பால், வலுவான இராணுவ தந்திரத்தை கொண்ட அமைப்பென்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. இது பாலஸ்தீனர்களுக்கு வலுவான நம்பிக்கையையும் பலத்தையும் கொடுத்துள்ளதாகவே தெரிகிறது. போர்நிறுத்தம் பாலஸ்தீன மக்களுக்கு ஒரு மாற்றத்தை தந்துள்ளது. காஸாவை நோக்கி நகரும் மக்களது ஆவலும் எண்ணமும் நிரந்தரமான போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதாகவே உள்ளது. அது மட்டுமல்லாது இத்தனை இடிபாடுகளுக்கு பின்னரும் அந்த மக்கள் நம்பிக்கையுடன் காஸாவை நோக்கி பயணிக்கிறார்கள். இது ஹமாஸ் அமைப்பின் மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இராணுவ ரீதியில் ஹமாஸின் ஆயுத தளபாடங்களுக்கான வாய்ப்புக்களும் ஆளணியை சரிசெய்வதற்கான சூழலையும் ஏற்படுத்த உதவக் கூடியது. போர் நிறுத்தத்தை இராணுவ ரீதியில் எதிர்கொள்வதென்பது ஹமாஸ் அமைப்பைப் பொறுத்தவரை இரண்டாவது பட்சமானதாகவே உள்ளது. முதலில் காஸா மக்களது உணவுத் தேவைகள் மற்றும் மருத்துவத் தேவைகளை முதன்மைப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

காரணம் போரில் ஹமாஸ் இழப்புக்களை விட இஸ்ரேலிய இராணுவத்தின் இழப்புக்களே அதிகமானதாக உள்ளது. அதனால் போர்நிறுத்தம் இராணுவ ரீதியில் இஸ்ரேலுக்கு தேவைப்பட்டது போல் ஹமாஸுக்கு இல்லை என்றே தெரிகிறது. இதுவே இப்போரின் திருப்பமாகும்.

எனவே ஹமாஸ், இஸ்ரேல் போர் நிறுத்தம் இஸ்ரேலுக்கு மீளவும் நெருக்கடியாக மாற வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. ஏனெனில் ஹமாஸ் பணயக்கைதிகளை முழுமையாக இஸ்ரேலிடம் ஒப்படைக்குமா என்ற சந்தேகம் அனைத்துத் தரப்பிடமும் உண்டு.

அது மட்டுமன்றி அதற்கான எத்தனத்தை ஹமாஸ் மீளவும் மேற்கொள்ளாது என்பதில் உறுதிமொழி வழங்க முடியாதுள்ளது. போர் நீடிக்குமாயின் அத்தகைய நிலையை ஹமாஸ் மீளவும் எத்தனிக்க வாய்ப்புள்ளது. அதேநேரம் ஹமாஸ் அமைப்பை முழுமையாக அழித்தல் என்பது இலகுவானதல்ல என்பதை இஸ்ரேலிய போர் உணர்த்தியுள்ளது. இஸ்ரேலியரது இராணுவ தந்திரோபாயம் மரபுவழி போரியல் படைகளுக்கு பொருத்தமானதாக அமைந்தாலும் ஹமாஸ் போன்ற கொரில்லா போர் உத்திக்கு முன்னால் சாத்தியமாகுமா என்பது சந்தேகமானதே. அதிலும் பதுங்குகுழிகளுக்குள் மறைந்திருந்து தாக்குதல் மேற்கொள்ளும் பிரிவுக்கு பொருத்தமானதாக அமையுமா என்பது சந்தேகமானதே. எனவே ஹமாஸ் இஸ்ரேலியப் போர் ஒடுக்கப்பட்ட தேசியங்களுக்கும் போரியல் தந்திரோபாயத்துக்கும் புதிய வியாக்கியானங்களை ஏற்படுத்த வாய்ப்பினைக் கொண்டுள்ளது.




# வாசிப்பை நேசிப்போம்

வாசிப்பு வாழ்க்கையை
வளப்படுத்தும்
விதைகளை விருட்சமாக
மாற்றியமைக்கும்
விந்தைகள் படைக்க
வித்துக்களை விதைக்கும்
வீண் எண்ணங்களை விரட்டியொழிக்கும்
சொற்களுக்குள் சுவர்க்கம் கண்டிட
எழுத்தினால் ஏழ்வானங்களையும் எட்டிவிட
காகிதங்கள் கவலைகளை கரைக்க
மைவாசம் மெய்சிலிர்க்க வைக்க
அறியாததை
அரைநொடியில் அறிந்திட
அழியாத அனுபவத்தை அடைந்திட
அமைதியான அகத்தை அனுபவிக்க
ஆழ்கடலின் ஆழத்தையும் அளந்திட
நூல்களை உயிராக நேசி
நூலகங்களை உறவாக போசி
நுண்ணறிவை உயர்த்திட யோசி
நூற்றாண்டுகள் உயர்ந்திட வாசி



**ஷஹாமா ஸனீர்**
**சீனங்கோட்டை**

# முதுமை பேசும் வலிகள்

தெருவோரம் வீசிய
முதியவனின் பேசும்
நினைவுப் படமிது.
தனிமையோடு பேசிக்
கொண்டு அநாதையென
கூறி யாசகம்
வாங்கி வாழ்வினை
கடந்தும் போகும்
வாலிபமிழந்த மானிடன்
நான்.
வலியினைக் கூற
யாருமில்லை விழிகளில்
வரும் கண்ணீரை
துடைந்தெறிந்து போக.
பத்திரமாய் பார்த்தவள்
பக்குவமாய் கூறிப்
போனாள் பத்து
மாதம் சுமந்தெடுத்த
பிள்ளையிருக்கென.
பக்குவமாய் யோசித்துப்
பார்த்தேன் பத்திரமாக
பார்த்தவள் கூறியதை
பத்து ரூபாயில்லாத
காலம் என்பதால்
பெற்றேடுத்தது தத்து
கொடுத்து போகிறது
தெருவோரம் என்று.
இருந்தும்!
எனக்கான வாழ்வையும்
உனக்கான காலத்தில்
இறைவன் கொடுத்து
விட வேண்டும்
என்று மனம்
பிரார்த்தனையுடன்
நகர்த்திப்
போகிறேன் எனது
பொழுதுகளை.

**பொத்துவில் அஜ்மல்கான்**

# புன்னகை புரிந்திடு

வரித்திட வென விரும்பி
வந்துனைப் பார்ப்போர்
சிரித்த முகச் சீதேவியெனச்
சிறப்புறப் புகல்வார்.
பொன் பூத்த கொடியாய் நீ
பூரித்திருந்தாலும்
புன்னகை யின்றேல் உன்
பொன்னகையால்
என்ன பயன்.
அலரியின் மலரே – உன்
அழகு முகம் பார்த்து
மலரம்பை வீசுகிறேன்
முகமலர்ந்து ஏற்று விடு.
பல்லெழில் காட்டிச் செம்
பவள இதழ் விரித்து
அல்லி மலர்ந்தது போல்
அழகு நகை புரிந்திடு.
'அப்பிள்' இரண்டு உன்
அழகு தளிர்க் கன்னத்தில்
கொப்பளிக்கக்
கோமளமே!
குறு நகை நீ
புரிந்திடு.
மச்சு மனை
வேண்டேன்
மற்றெதுவும்
நான் வேண்டேன்.
அச்சாரமாய்
வேண்டுவது – உன்
அல்லி மலர்ப் புன்னகையே!
அருட்கொடையாய்
உனக்கந்த
ஆண்டவன் தந்தது,
பொருட்
செலவேதுமில்லை – ஒரு
புன்னகை புரிந்திடு.



**அப்துல் ஹலீம்**
**ஏறாவூர்**

# கடைசி ஆசை

பாலஸ்தீனக் குழந்தைகளின்
உயிர்களை பறித்து
உள்ளக்களிப்பு காணும்
யூதர்கள்
மனிதர்களில்
மனிதாபிமானமற்றவர்கள்
'இரத்தக் காட்டேறிகள்'
மன்னிக்க முடியாத
இவர்களின் செயற்பாடுகள்
கண்டு "மனம்"
அழாமல் இல்லை.
இருந்தாலும்;
எத்தனை நாளுக்குத்தான்
அழுவது?
இனி "நான் அழப்போவதில்லை".
'இஸ்ரேலரை, அழிப்பதற்கான
'அறிவை கூர்மை' செய்து
அதனூடாக என்னை
தயார் படுத்திக்கொள்கிறேன்.
என்னால் இந்த மண்ணுக்கு
செய்திட இயலுமானதை
செய்கிறேன்.
இந்த யுத்தத்தில்
சிலவேளை;
எனது மரணம்
உறுதிப்படுத்தப் பட்டால்
எனது சின்ன மகளை
இதே பயணத்திற்காக
வழிகாட்டிடுங்கள்
உங்களால் முடியுமானால்?

**கவிச்சுடர் ஏ எம் கஸ்புள்ளா**



# தணியாத அநியாயம்

அஞ்சி வந்து
கெஞ்சி நின்ற உன்னை,
தஞ்சம் தந்து
அரவணைத்த மண்ணை,
கொஞ்சமேனும்
நெஞ்சமின்றி இன்று,
வஞ்சனைகள்
செய்து கொண்டு நின்று,
கொஞ்சித் தவழும்
பிஞ்சுக் குழந்தை வந்து,
அஞ்சி அருகில்
அணைந்து நின்று கொண்டு,
பதறிக் கொண்டு
கதறி அழும் போதும்,
குதறிக் கொண்டு
கொன்று குவித்து விட்டாய்.
கொஞ்சமேனும்
உன் மனதில்
ஈரம் என்பதில்லையா?
பிஞ்சு மனம்
துடிக்கும் போதும்
ஈவிரக்கமில்லையா?
போர் தர்மம் பேணாமல்
போர் வெறியை மட்டுமேந்தி,
பார் முழுதும் பரிதவிக்க
ஊர் வெறியை ஊட்டி விட்டு,
ஆறாட்டம் ஓடுகின்ற
ரத்தத்தில் சாதனையாய்,
போராட்டம் எனும் பெயரில்
போர்க் கொடுமை புரிகின்றாய்.
அந்நிய மதத்தவருக்கும்
அநியாயம் இழைக்கப்பட்டால்,
திரையின்றி அவர் அழைப்பும்
இறைவன் பால் ஏற்கப்படும்.
இறைவன் பால் இருக்கின்ற
நிறைவான நீதியினை,
மறைவில் நீ ஒளிந்தாலும்
விரைவில் நீ அனுபவிப்பாய்.
அகங்கார வேட்கையினால்
அநியாயம் புரிபவனை,
அகிலத்தின் இரட்சகனே
அடக்கி வைத்து அதிர வைப்பான்.
அல்லாஹ்வின் தீர்ப்புக்காய்
கண் கலங்கிக் கரமேந்தி,
காலமெல்லாம் மனம் உருகி
கண்ணீருடன் காத்திருப்போம்.



**கிண்ணியா**
**ஆரிப் மௌலவி**

# வாழ்க்கை என்பது யாதெனில்

வாழுங்காலத்தில் வாழ்விங்கு வாழ்தல்
தாழ்வும் உயர்வும் தாங்கியே வந்திடும்
உயர்வை நோக்கி உன்னிப்புடன் நீ
வியர்வை சிந்தி வேலை செய்திடில்
காடும் செந்நெற் கழனியாகும்
வீடும் சிறந்து விளங்கும் செல்வத்தில்

வாழ்க்கையில் நீ வளம் பெறவேண்டில்
உபாயம் இதுவே
உணர்ந்து செயற்படுவாய்
வாழ்க்கையில்
ஆயிரம் வேதனை வரினும்
ஊழ் வினை என்று உள்ளம் கலங்கி நீ
தாழ்வுப் பாதையில் தடம் புரளாமல்
படிக்கல் எனப் பாதம் வைத்து
துடைப்பாய் துன்பத் தூசுப் பாதையை

எடுப்பாய் குறிக்கோள் என்னும் கோலை
கல்வியில் சிறந்து கவினுடன் மிளிர
கணிதம் விஞ்ஞானம் கவின் கதைகளும்
படிப்பாய் பட்டம் பெற்றே வாழ்வில்
வளமுடன் சிறந்து வாழ்வாய் மனிதா

எந்தத் தொழிலும் எடுக்குமுன் நீ
சிந்தித்துப் பார்த்துச் செயற் பட்டாலே
நொந்திடாமலே நேர்த்தியாய் வாழலாம்
ஏர் முனைக்கு நேர் எதுவும் இல்லை
ஊர் வாழ்ந்திட உழைத்தாலே அதனால்
வாழ்க்கை என்றும் வளமாய் மிளிரும்

பேனா முனையே பெரிதும் வெல்லும்
வானில் ஏற்றியே வளம் பெறச் செய்யும்
உள்ள அருவியில் ஊறிடும் எண்ணங்கள்
பேனா முனையில் பெருகி ஓடியே
முள்ளும் கல்லுமாம்
முரட்டுத்தனங் கொண்ட
மக்களைத் திருத்தி உத்தமராக்கிடும்
வாழ்க்கைப் பாதையை வளம்படுத்தும்

நிம்மதியின்றி நீயலையாமல்
உம் மதியை உரசிப் பார்த்து
இல்லற வாழ்வில் இன்புடன் வாழ
நல்லறம் புரிந்து நலமுடன் வாழ
செய்யுந் தொழிலைத்
தெய்வமெனக்கொண்டு
மெய்யுணர்வோடு செய்து முன்னேறு
உய்வுண்டு வாழ்வில்
உவந்து வாழ்ந்திடலாம்

**தங்கமுத்து தம்பித்துரை**
**ஓய்வுநிலை ஆசிரியை**
**கனடா**

# முள்ளு வலையில் சிக்காதே

வலிய வந்து கதைப்பாள்....
வாய் நிறைய சிரிப்பாள்....
நேர்த்தியாய் உடுத்திக் கொண்டு
நெளிய நெளிய நடப்பாள்....
அன்பை அள்ளித் தருவாள்....
அழகில் மயங்கச் செய்வாள்....
கண்ணைக் கவர வைப்பாள்....
காதல் வலையில் வீழ்த்திடுவாள்...!
உண்ணப் பருகத் தருவாள்....
உள்ளங் காலில் சுளுக்கு எடுப்பாள்....
வர்ண ஜாலம் காட்டிடுவாள்....
வார்த்தைகளால் கவர்ந்திழுப்பாள்....!
சொக்கத்தங்கம் போலாவாள்.....
சிக்கி சிக்கித் தவிக்க வைப்பாள்......
மக்கு பிள்ளையாக்கி மடிமீது
போட்டிடுவாள்.....
மந்திரங்கள் பேசிப் பேசி
தந்திரமாய் வலை விரிப்பாள்...!!
பையில் இருக்கும் பணத்தைக் கேட்பாள்...
பக்குவமாய் பிடுங்கப் பார்ப்பாள்....
செய்வதறியாது திகைக்க வைப்பாள்....
செய்திகள் சொல்லி இனிக்கச் செய்வாள்...!
கட்டிய வீட்டை கேட்பாள்....
கடையையும் எழுதிக் கேட்பாள்.....
விரட்டியே வேலையை முடிப்பாள்.....
விண்ணுக்கும் கூட்டிப் போவாள்......!
ஓடிய காரைக் கேட்பாள்....
வீடியோ வருமென்று சொல்வாள்....
சூடிட நகை கேட்டழுவாள்....
செல்லமாய் சுகமும் தருவாள்.....!
பூவை பறிப்பது போல்
உறவுகளை பறிப்பாள்......
தேவை முடிந்த பி
ன் துரத்தி விரட்டுவாள்....
முள்ளு வலையில் சிக்காதே......!!!
மின்னுவதெல்லாம் பொன்னல்ல.....!!

**மாஜிதா தவ்பீக்**



# அடடா மழையே...!

சின்ன சின்னதாய்
சிணுங்கி வந்து நீ...
சில்லென காற்றும்
அள்ளி வந்து மேனி.. எங்கும்
உரசி செல்லும்போதும்.
உதிரத்தில் ஏனோ உற்சாகம்.
துள்ளிக்குதித்து .....
கால்கள் ரெண்டும்..
உயரப் பாய்ந்து ...
கைகளினாலே
தட்டி விளையாடும் ....
போதினிலே.......!
தத்தித்தாவுது உள்ளமெல்லாம்...
குழந்தை போலே.....
அடடா மழையே உன்னாலே.
கோபம் கொண்டவன் ....
உள்ளம் போலே..
இருட்டி வந்த உந்தன் மேகம்...
சண்டை கொண்டு ....
மின்னல் வந்ததால்...
இடி சத்தம் கொண்டு ....
இம்சை செய்கிறாய்.! இதனால்
இயற்கையும் உன்னால் ....
அதிர்ந்து போகிறது.
இதயமும் சில நேரம் ....
நின்று போகிறது.
அடடா மழையே!
குடை கொண்டு ...
மெல்ல நடை போட்டு...
கடை சென்று .....
வருவதற்கு இடையில்..
நல்ல உடையெல்லாம்..
புயல் காற்றோடு நீ வந்து..
புடை சூழ்ந்து செல்கின்றாய்....
இதுதானா உன்னோடு....
வீர விளையாட்டு...
பள்ளமெல்லாம் ...
வெள்ளம் கொண்டு ...
நீரோடும் போது..
உள்ளமெல்லாம் தட்டுத் தடுமாறி...
தவித்துத்தான் போகிறது...
தங்குமிடமெல்லாம் .....
தவிடு பொடியாக்கி...
விடுவாயோ என்று.!
தரை மீது நீ விழும் போது..
வரமா? சாபமா ?
யாரறிவார்....



**கிண்ணியா எம். நௌபர்**

# அரக்க குணம்

காஸாவில்
இரவுகள் சிவந்தன.
கண் இமை பொழுதிலும்
இரவில்
சூரியன் தும்முகிறது.
குண்டு மழையே
விளக்கு.
குடியிருப்புகள்
குப்பையாய்.
சூறாவளியில் சிக்கிய
கைக் குட்டையாய்.
கடலில் விழுந்த
கண்ணீராய்.
கூட்டுக் குடும்பங்கள்
கூண்டோடு
கொத்துக் கொத்தாய்
மாயமாய்.
எல்லாம்
எரிந்ததும்
குருதி படிந்தும்
சிவப்பாய்.
குடியிருந்த தாயகம்
வானம் பார்த்த பூமியாய்.
காய்த்த நாட்டை
ஆணி வேரோடு பிடுங்கும்
இஸ்ரேலியனே!
நீ
நரகத்திலும் கேவலம்.

**மூதூர் றிஸ்வின்**

# தொலைந்த நதிகள்



மடைதிறந்த வெள்ளமாய்
மனதினுள் கேள்விகள்
மாண்டவர் நினைவினுள்
மாலையாய்க் கேள்விக் கணைகள்!

பயமின்றி வாழ்ந்தோம்
பாரதம் போல சிறு தமிழ்ஈழமாய்
கனவுகளோடு கட்டிளம் காளைகள்
கனவுகள் பலிப்பதற்காய் காலத்தின்
கட்டடாயம்.

ஊரும உறவு ஒன்று சேர
ஒன்றுக்கொன்று உறவாடி மகிழ
அவரவர் வாழ்வு இனிமையாக
ஆலயத்திருவிழாக்களும்
ஆரவாரமாகும்.

இடையிடையே இரையும் ஊர்திகள்
கொட்டிய குண்டுகள் ஆங்காங்கே
அதிலும் மீள்வோம் அன்பு
உறவுகளுடன்தான்
அதுவும் கடந்து போனது அழுகையாய்.

கானமழைபொழிந்த கரிகாலன் தேசத்தில்
கடுகிய நேரத்தில் கருகின யாவும்
மின்னலென தாக்கிய வியூகத்தில்
மின்னாமல் முழங்காமல்
பறிபோனது எம்மவர் வாழ்வு

உடல்கள் கருகின உயிர்கள் குவிந்தன
அங்கங்கள் சிதறின ஆங்கே
குருதியாறே ஓடியுது
ஓடியவர் ஓட மாண்டவர் மாள
இருந்தவர்கள் யாவருமே
காற்றடைத்த பொம்மைகள் !

நிழலான காவல்
தெய்வங்கள் தொலைந்தன
நிர்க்கதியான நிலையில் உறவுகள்
உணர்வூட்டிய காலநதியென
வாழ்ந்தவர்களும்
கண்காணாமல் கலந்தனர் மண்ணோடு.

குடும்ப அமைப்பு குலைந்தது
குறைந்தபட்ச அன்பும் விலையானது
நிம்மதி எங்கே பாடல் நினைவுகளில்
நீண்டும்காலம் மாண்டுபோகவில்லை
தமிழராய் வாழ்ந்து
தொலைநதிகளை தேடுகிறோம்.

**கவிச்சுடர் சிவரமணி**
**திருகோணமலை**

# தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் கைகோர்த்துள்ள AkzoNobel




இலங்கையில் டியுலக்ஸ் பெயின்ட் வகைகளின்தயாரிப்பாளரான AkzoNobel பெயின்ட்ஸ் லங்கா (பிரைவட்) லிமிடெட், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையுடன் (VTA) புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம், நாடு முழுவதையும் சேர்ந்த டியுலக்ஸ் பெயின்ட் பூச்சில் ஈடுபடும் மேற்பூச்சாளர்களுக்கு, "நிபுணத்துவ பெயின்ட் பூசல்" என்பதில் நிலை 3 தேசிய தொழிற்பயிற்சி தகைமை (NVQ) சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

NVQ நிலை 3 சான்றிதழ் என்பது உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த தகைமை வாய்ந்த பெயின்ட் பூச்சாளர்களுக்கு உதவும் வகையிலான நிபுணத்துவ மற்றும் தொழில்நுட்ப கற்கையை பெற்றுக் கொடுப்பதுடன், வெளிநாடுகளில் பணியாற்ற விரும்பினால் அதற்கு உதவும் வகையிலும் அமைந்துள்ளது.

பெயின்ட் மற்றும் மேற்பூச்சு வகைகளில் உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக திகழும் AkzoNobel, பெயின்ட் பூச்சில் ஈடுபடுவோரின் நலன் மற்றும் திறனை மேம்படுத்துவதில் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், இலங்கையில் உறுதியான பெயின்ட் பூச்சாளர் சமூகத்தின் திறன்கள் விருத்தி, தன்னிறைவு மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு உதவும் வகையிலும் அமைந்துள்ளது. பிரத்தியேகமான "டியுலக்ஸ் பெயின்ட் பூச்சாளர்" வெகுமதி நிகழ்ச்சித் திட்டமும் இந்த நடவடிக்கையின் அங்கமாக அமைந்திருப்பதுடன், இந்த பெயின்ட் பூச்சாளர் குழுவிலிருந்து, இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கான பங்குபற்றுநர்கள் தெரிவு செய்யப்படுவர்.

# இலங்கை – வியட்நாம் வர்த்தக மாநாடு

நுஸைக் பாரூக்



இலங்கையில் உள்ள வியட்நாம் தூதரகத்துடன் இணைந்து வியட்நாமின் வின் லாங் மாகாணம் அண்மையில் கொழும்பில் கிராண்ட் பெல் ஹோட்டலில் வர்த்தக மாநாட்டை நடத்தியது.

வியட்நாமின் வின் லாங் மாகாணத்துக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாவை மேம்படுத்துவது குறித்து இந் நிகழ்வு கவனம் செலுத்தியது.

வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ஜில்மா தஹநாயக்க, வர்த்தக திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி ஷிவந்தி அபேரத்ன, இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் உறுப்பினர்கள் மற்றும் தேசிய வர்த்தக சபையின் உறுப்பினர்கள் மற்றும் வணிக சங்கத்தின் பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்த மாநாடு வின் லாங் மாகாணத்தின் வர்த்தக ரீதியான பலங்களை எடுத்துக் காட்டியதுடன், பொருளாதார வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்காக இருதரப்பு உறவுகளை வளர்ப்பதன் மூலோபாய முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

பங்கேற்பாளர்கள் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான யோசனைகளை முன்வைத்தனர்.

# e–காப்புறுதி ஆவணங்களை அறிமுகம் செய்துள்ள யூனியன் அஷ்யூரன்ஸ்




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ் தனது 'Go Green' செயற்பாடுகளினூடாக, நிலைபேறாண்மை மற்றும் சூழல் பொறுப்புணர்வுச் செயற்பாடுகள் பற்றி தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த பசுமையான செயற்பாடுகள் தொடர்பில் நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை மேலும் விஸ்தரிக்கும் வகையில், தொழிற்துறையின் சூழல் தாக்கத்தை தணிப்பதற்காகவும், நிலைபேறான செயன்முறைகளை ஊக்குவிப்பதற்காகவும் பரந்தளவு சூழல் பாதுகாப்பு முயற்சிகளுக்கு பங்களிப்பு வழங்குவதற்காகவும் காப்புறுதி சான்றிதழுடன் கோப்புறுதி ஆவணத்தையும் அறிமுகம் செய்துள்ளது.

காப்புறுதிதாரரின் ஆயுள் காப்புறுதித் திட்டம் தொடர்பான பிரதான தகவல்கள் மற்றும் அனுகூலத்தின் சாராம்சங்கள் ஆகியவற்றை காப்புறுதி சான்றிதழ் கொண்டிருக்கும். காப்புறுதி சான்றிதழுடன், காப்புறுதிதாரர்களுக்கு கோப்புறுதி ஆவணங்களை பல்வேறு தெரிவுகளினூடாக மாற்றிக் கொள்வதற்கான அணுகும் வசதி வழங்கப்படும். காப்புறுதிதாரர்களுக்கு தமது பதிவு செய்து கொண்டுள்ள மொபைல் இலக்கத்துக்கு அனுப்பி வைக்கப்படும் SMS link இனூடாக, QR குறியீட்டை ஸ்கான் செய்வதனூடாக மற்றும் Clicklife App இனூடாக காப்புறுதி ஆவணத்தை பார்வையிட அல்லது தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். இதனூடாக பாவனையாளருக்கு நட்பான மொபைல் செம்மைப்படுத்தப்பட்ட வசதி வழங்கப்படுகின்றது.

இந்தத் திட்டம் தொடர்பாக யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில், "யூனியன் அஷ்யூரன்ஸில் புத்தாக்கம், முன்னேற்றம் மற்றும் ESG பெறுமதிகளை பேணுதல் ஆகியவற்றில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

# சிங்கர் அறிமுகப்படுத்தும் பிரீமியம் ஸ்மார்ட்போன் நாமமான Honor



நாட்டின் நுகர்வோர் இலத்திரனியல் மற்றும் உபகரணத் துறையின் நம்பக நாமமான சிங்கர், உலகப் புகழ்பெற்ற Honor வர்த்தக நாமத்தை இலங்கையில் அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. நீண்டகால கூட்டாண்மையின் கீழ், நாட்டில் Honorரின் ஒரே விநியோகஸ்தர் சிங்கர் ஆகும். Honor கையடக்கத்தொலைப்பேசி; மாதிரிகளுடன், இலங்கையில் உள்ள நுகர்வோருக்கு உயர்தர ஸ்மார்ட்ஃபோன்கள் மற்றும் துணைப்பாகங்களை போட்டி விலையில் வழங்குவதையே இக் கூட்டாண்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சிங்கர் ஸ்ரீலங்கா பீ.எல்.சி யின் பிரதம நிறைவேற்று அதிகாரி . மகேஷ் விஜேவர்தன கூறுகையில், "Honor உடன் கைகோர்த்து எமது வாடிக்கையாளர்களுக்கு இவ்வர்த்தக நாமத்தை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இவ் Honor குறிப்பெயரின் அதி நவீன அம்சங்கள் மற்றும் மலிவு விலைகள் இலங்கை நுகர்வோருக்கு தனித்துவமான மொபைல் அனுபவத்தை வழங்கும் என்பதை நாம் நன்கு அறிவோம். Honor ஆனது இலங்கை சந்தையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திடும் என்பது உறுதி" என கருத்து தெரிவித்திருந்தார்.

சீனாவின் முதல் தர ஆண்ட்ராய்டு ஸ்மார்ட்போனாக Honor, உலகளாவிய ஸ்மார்ட்போன் சந்தையில் பெருமளவில் அறியப்பட்டதோடு, உலகில் வேகமாக வளர்ந்து வரும் கையடக்கத்தொலைபேசி நாமங்களில் ஒன்றாகும். Honor சிறப்பியல்புகளாவன புதுமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் திருப்திக்கான அதன் புதிய அம்சங்கள் மற்றும் ஒப்பற்ற கெமரா தரம், பேட்டரி ஆயுள் மற்றும் ஒட்டுமொத்த செயல்திறனுடன் முதன்மை பெற்றுள்ளது.

# Emil Frey உடன் மூலோபாய கூட்டணியை உருவாக்கியுள்ள TVS Motor Company



இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனத் துறையில் செயல்படும் ஒரு முன்னணி உலகளாவிய வாகன உற்பத்தியாளரான TVS Motor Company, ஐரோப்பிய சந்தையில் நுழைவதாக அண்மையில் அறிவித்துள்ளது. 100 ஆண்டு பழமை வாய்ந்த நிறுவனம் மற்றும் வாகன விநியோகத்தில் முன்னணி பெயர் என்று கருதப்படும் Emil Frey உடன் இறக்குமதி மற்றும் விநியோக ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

Emil Freyஇன் விரிவான விநியோக வலையமைப்பு மற்றும் ஐரோப்பாவில் ஆழமான சந்தை நுண்ணறிவு ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் TVS Motor Companyற்கான உலகளாவிய விரிவாக்கத்தை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியை இந்தக் கூட்டாண்மை குறிக்கிறது.

புத்தாக்கம் மற்றும் தரத்திற்கான அர்ப்பணிப்புக்காக அறியப்பட்ட TVS Morot Company, ஐரோப்பிய வாடிக்கையாளர்களுக்கு உயர் செயல்திறன் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட இரு சக்கர வாகனங்களை வழங்க உள்ளது.

TVS Motor Companyயும் Emil Frey பொறுப்புமிக்க மற்றும் நிலையான போக்குவரத்துக்கு அர்ப்பணித்துள்ளன, மேலும் சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் திருப்தியை வழங்குவதில் அதிக கவனம் செலுத்துகின்றன.

# மூன்றாம் காலாண்டில் மிதமான நிதிசார் வளர்ச்சியை பதிவு செய்துள்ள SLT குழுமம்



2023 செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த மூன்றாம் காலாண்டு பகுதிக்கான நிதிப் பெறுபேறுகளில் SLT குழுமம் மிதமான நிதிசார் வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. SLT PLC வருமானம் ரூ. 17,490 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது 3.7% வளர்ச்சியடைந்திருந்தது. மொபிடெல் 2022 மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 2.7% சரிவை பதிவு செய்திருந்தது.

காலாண்டில் குழுமத்தின் மொத்த வருமானம் 3.9% இனால் அதிகரித்து ரூ. 27.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. இப்பெறுமதி 2022 மூன்றாம் காலாண்டில் ரூ. 26.7 பில்லியனாக காணப்பட்டது. SLT PLC வருமான வளர்ச்சியில் புரோட்பான்ட் (Broadband), PEOTV மற்றும் நிறுவனசார் தீர்வுகள்(Enterprise Business) வருமான மூலங்கள் பங்களிப்பு செய்திருந்தன. மூன்றாம் காலாண்டில், மொபிடெல் தொடர்ச்சியாக சில காலாண்டுகளில் சரிவை பதிவு செய்திருந்ததை தொடர்ந்து, வளர்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், இரண்டாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் மூன்றாம் காலாண்டில் 3% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது.

2022 மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், SLT குழுமத்தின் தொழிற்பாட்டு செலவு (Opex) நடப்பு ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 13.3% இனால் அதிகரித்து ரூ. 19.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. SLT இன் தொழிற்பாட்டு செலவு அதிகரிப்பில் பிரதானமாக, மின்சார கட்டண அதிகரிப்பு, பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள் அதிகரிப்பு போன்றன பங்களிப்புச் செய்திருந்தன.

# இலங்கையின் தொழில்முயற்சியாளர்களுக்கு ஆதரவளிக்க 30 மில். அமெரிக்க டொலர்கள்



அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் (DFC) பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நேதன் கொழும்புக்கு நவம்பர் 7முதல் 8 ஆம் திகதி வரை விஜயம் செய்திருந்த போது, பெண் தொழில்முயற்சியாளர்கள், நிலைபேறான நிதியளிப்பு மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு (MSMEs) ஆதரவளிக்கும் வகையில் 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் இந்த அர்ப்பணிப்புக்கான உறுதிப்படுத்தும் கைச்சாத்திடல் DFC இன் சார்பாக பிரதம நிறைவேற்று அதிகாரி நேதன் மற்றும் CDB சார்பாக முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மஹேஷ் நாணயக்கார ஆகியோரிடையே கைச்சாத்திடப்பட்டிருந்தது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் USAID குழுவின் இலங்கைக்கான பணிப்பாளர் கேப்ரியல் கிரவு ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்று, இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வலுவூட்டலை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அமெரிக்காவின் தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தியிருந்தனர்.

முதன் முறையாக, இந்தளவு உயர் பெறுமதியான நிதி வசதியை CDB பெற்றுக் கொண்டுள்ளதுடன், கூட்டாண்மை செயற்பாடுகளில் நிறுவனத்தின் உறுதியான அர்ப்பணிப்பு மீள உறுதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், நிதியளிப்பு முகவர் அமைப்புகளால் CDB இன் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு இந்த கடன்வசதியளிப்பு முன்னுதாரணமாக அமைந்துள்ளதுடன், உறுதித்தன்மை, ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றுக்கு நிறுவனத்தின் பங்களிப்புகளையும் ஏற்றுக் கொள்வதாக அமைந்துள்ளது.

# வலுவான செயல்திறனை கொண்டுள்ள Sunshine Holdings PLC



பன்முகப்படுத்தப்பட்ட இலங்கை கூட்டு நிறுவனமான Sunshine Holdings PLC (CSE: SUN) நிலவும் நுண் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் 13.0% மற்றும் 15.4% எனும் உறுதியான உயர்நிலை மற்றும் கீழ்நிலை வளர்ச்சியைப் பதிவுசெய்தது. நடப்பு நிதியாண்டின் முதல் பாதியில் (1HFY24) குழுமம் 28.2 பில்லியன் ரூபாவாக ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயைப் பதிவுசெய்தது, இந்தக் காலகட்டத்தில் குறைந்த நிதிச் செலவுகளின் விளைவாக வரிக்குப் பிந்தைய லாபம் (PAT) 3.6 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. குழுமத்தின் முக்கிய துறைகளான சுகாதாரம், நுகர்வோர் மற்றும் வேளாண் வணிகம் ஆகியவற்றில் வலுவான வருவாய் வளர்ச்சியின் காரணமாக வருவாய் அதிகரிப்பு முக்கியமாகும்.

குழுமத்தின் Healthcare துறையானது சன்ஷைனின் Toplineஇல் மிகப்பெரிய பங்களிப்பாளராக உருவெடுத்தது, மொத்த வருவாயில் 49.2%, நுகர்வோர்34.4%மற்றும் விவசாய வணிகம் மொத்த வருவாயில் 16.3% ஆகும்.

செயல்திறன் குறித்து கருத்து தெரிவித்த Sunshine Holdings PLCஇன் தலைவர் அமல் கப்ரால், "குறைக்கப்பட்ட பணவீக்கம், குறைந்த வட்டி விகிதங்கள், மற்றும் இலங்கை ரூபாயின் வலுவூட்டல் போன்ற முக்கிய பெரிய பொருளாதார குறிகாட்டிகளில் சாதகமான மாற்றம் ஏற்பட்டுள்ள வணிக நிலப்பரப்பின் மத்தியில், முதல் பாதியில் (1HY24) குழுவின் வலுவான செயல்திறனைக் குறிப்பிடுவது மகிழ்ச்சி அளிக்கிறது. வருவாய் மற்றும் இலாபம் ஆகிய இரண்டிலும் கணிசமான வளர்ச்சி அனைத்து வணிகத் துறைகளிலிருந்தும் நெகிழ்ச்சியான பங்களிப்புகளுக்குக் காரணமாக இருக்கலாம்.

# விருந்தோம்பல் துறையில் இளைஞர்களின் திறனை மேம்படுத்த NYC உடன் கைகோர்க்கும் SHMA



விருந்தோம்பல் துறையில் நாளையை தலைவர்களை நிலை நிறுத்தச் செய்யும் குறிக்கோளுடன் அவர்களின் திறன்கள் மற்றும் திறமைகளை கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையின் இளைஞர்களை ஊக்குவித்து அவர்களை வலுவூட்டும் நோக்குடன், ஏ.பவர் அன்ட் கம்பனி பிரைவட் லிமிடெட் நிறுவனத்தின் சுவிஸ் ஹோட்டல் மனேஜ்மன்ட் அகடமி பிரைவட் லிமிடெட் (SHMA), இலங்கை தேசிய இளைஞர் படையணியுடன் (NYC) புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் அண்மையில் கைச்சாத்திட்டது.

விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தேசிய இளைஞர் படையணி, நிலைபேறான வளர்ச்சிக்கான திறன்கள் (SSG) செயற்திட்டத்தின் பயிற்றுவிக்கும் பங்காளராக இயங்கும். இந்த செயற்திட்டம், பவர் மற்றும் அபிவிருத்தி மற்றும் ஒன்றிணைவுக்கான சுவிஸ் முகவர் (SDC) அமைப்பு, சுவிட்ஸர்லாந்தின் வெளி விவகார செயற்பாடுகளுக்கான சர்வதேச ஒன்றிணைவுக்கான பெடரல் திணைக்களம் ஆகியவற்றுக்கிடையிலான அரச மற்றும் தனியார் துறை பங்காண்மையாக அமைந்துள்ளது.

2002 ஆம் ஆண்டு முதல் இளைஞர் அபிவிருத்திக்காக அர்ப்பணிக்கப்பட்ட அரச ஸ்தாபனமாக NYC திகழ்வதுடன், நாடு முழுவதிலும் 58 பயிற்சி நிலையங்களைக் கொண்டுள்ளது. தனது பிரத்தியேகமான பயிற்சி மாதிரிகளினூடாக இளைஞர்களை ஊக்குவித்து, வழிநடத்தி, தயார்ப்படுத்தி அவர்களுக்கு அவசியமான மென் திறன், கல்விசார், தொழிற்பயிற்சி, பொழுது போக்கு மற்றும் சமூக அடிப்படையிலான பயிற்சிகளை வழங்குகின்றது.

# ஹெவ்லொக் சிட்டிமோலில் சிக்னேச்சரின் புதிய காட்சியறை



சிக்னேச்சர், இலங்கையில் தயாரிக்கப்படும் முன்னணி ஆடவர் ஆடை வர்த்தக நாமமான சிக்னேச்சர், தனது 10வது காட்சியறையை ஹெவ்லொக் சிட்டிமோலில் திறந்து வைத்தது.

புதிய கிளை பிரபல இசைக்கலைஞர் சங்க தினேத், பிரபல சமையற்காரர் சரித் என் சில்வா (வைல்ட் குக்புக்) மற்றும் பிரபல கலைஞர் மாதவ விஜேசிங்க ஆகியோரால் பல சிக்னேச்சர் ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் முன்னிலையில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. ஆரம்ப நாளில், புதிய சிக்னேச்சர் ஷோரூம் கடை முழுவதும் தாராளமாக 20% தள்ளுபடியுடன் ஷொப்பிங் செய்பவர்களை மகிழ்வித்தது, இது ஃபேஷன் ஆர்வலர்களுக்கு தவிர்க்க முடியாத இடமாக அமைந்தது.

ஹெவ்லொக் சிட்டி மோலின் 02ஆம் நிலை எண். 4இல் அமைந்துள்ள இந்த காட்சிறை இணையற்ற வசதியையும் விசாலமான வசதிகளையும் வழங்குகிறது. முறையான, சம்பிரதாயமான, ஸ்மார்ட் கேஷுவல், சாதாரண, கைத்தறி, பார்ட்டி உடைகள், சூட்கள், சட்டைகள், பிளேசர்கள் மற்றும் கால்சட்டைகள் ஆகியவற்றின் விரிவான தொகுப்புடன், வாடிக்கையாளர்கள் சமீபத்திய போக்குகளுக்கேற்ப மற்றும் உயர்தர தயாரிப்புகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் வழங்குகின்றது. சிக்னேச்சரின் அர்ப்பணிப்பு வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தோற்றத்தை பூரணமாக்க உதவுவதோடு பரந்த அளவிலான தோல் தயாரிப்புகள் மற்றும் ஆண்களுக்கான அணிகலன்கள் வரை அதன் உற்பத்தி வரிசை விரிவாக்கப்பட்டுள்ளது,

# அவள் இன்னும் காத்திருக்கிறாள்

அந்த நள்ளிரவு நேரம் வெண்ணிலவின் வருகை ஜன்னல் வழியாக ஊடுருவி ஒளிக்கீற்றுகளாக அவள் கண்களில் பட திடுக்கிட்டு எழுந்தாள் பரிமளா. அவளுக்கு இனந்தெரியாத ஒரு பயம், தனியாகத் தூங்கும் போதும் சரி, தனியாக அமர்ந்திருக்கும் போதும் சரி, எத்தனையோ முறை இந்தப் பயம் அவளை கவ்விக்கொண்டே இருக்கிறது. கண்களிலிருந்து தாரை தாரையாய் கண்ணீர் கொட்டும்.

மெதுவாக எழும்பி ஜன்னலை திறந்துவிட்டு வானத்தைப் பார்த்தாள். வளர்பிறை வானத்தை அலங்கரித்த வண்ணம் இருந்தது. உறக்கம் எங்கேயோ ஓடிப் போனது. உடனே அவன் நினைவு அவள் மனம் முழுவதும் வியாபித்துக் கொண்டது. அவன் சாதுர்யமாகப் பேசிய வார்த்தைகள் அவளைக் குடைந்தன. கண்ணீர் கண்களைக் குளமாக்கின. மீண்டும் படுக்கையில் வந்து படுத்துக்கொண்டு தலையணையை முகத்தில் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

'பரிமளா' இருபது வயது நிரம்பிய இளம் பெண். அவள் அப்பாவும் அம்மாவும் அந்த தேயிலைத் தோட்டத்திலே சாதாரண தொழிலாளர்கள். பரிமளா தோட்டப் பாடசாலையிலேயே சாதாரண தரம் வரை கல்வி கற்றுவிட்டு வறுமை காரணமாக மேற்படிப்பை மேற்கொள்ளவில்லை. அவளுக்கு கீழே தம்பியும் தங்கையும் இருந்ததால் அவர்களும் படிக்க வேண்டுமே. பெற்றோரின் உழைப்பு போதியதாக இருக்கவில்லை. படித்தது போதுமென அவளே முடிவு பண்ணிக்கொண்டு வீட்டிலேயே நின்றுவிட்டாள். அம்மாவுக்கு உதவியாக வீட்டு வேலைகளில் ஈடுபட்டு தனது பொழுதைக் கழித்தாள்.

ஒருநாள் பரிமளாவின் அப்பா முருகானந்தம் கவ்வாத்து மலையிலிருந்து வேலைமுடித்து வீட்டுக்கு வந்து கொண்டிருக்கும் போது "கொஞ்சம் நில்லுங்க முருகானந்தம்" என்றொரு குரல் கேட்டது.

"எங்க ஸ்கூல்ல இப்போ பிள்ளைகள் அதிகம்.... போதிய ஆசிரியர்கள் இல்லை... கஷ்டமாக இருக்குது... பரிமளா வீட்டில சும்மா தானே இருக்கிறாள்.... கொஞ்சம் ஸ்கூலுக்கு வந்து உதவி பண்ணச் சொல்லுங்க, அவளுக்கும் பொழுது போன மாதிரி இருக்குமே, அத்தோடு தொண்டர் ஆசிரியர் நியமனமும் வழங்கப் போறாங்களாம். பரிமளாவ மெதுவா போட்டு விடுறேன்" என்று பரிமளா படித்த அதே தோட்டப் பாடசாலையின் அதிபர் 'சரோஜா டீச்சர்' முருகானந்தத்தைக் கேட்டுக்கொண்டபோது அவராலும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவோ, எடுத்தெறியவோ முடியவில்லை. வீட்டுக்குப் போய் தன் மகளிடம் விடயத்தைக் கூறியபோது பரிமளா புள்ளிமானாய்த் துள்ளிக் குதித்தாள். தொண்டர் ஆசிரியர் ஆட்சேர்ப்பு பற்றியும் அவள் கொஞ்சம் தெரிந்து வைத்துத்தான் இருந்தாள். தன் மகள் பேருக்காவது டீச்சரா போகப் போறாளே என்று அவள் அம்மா கமலத்துக்கும் விருப்பமாக இருந்தது. "என்னம்மா உன் யோசனை என்ன, சரோஜா டீச்சருக்கு நான் என்ன சொல்ல" அப்பா கேட்க "நம்ம பரிமளாவையே தேடி வந்திருக்கிற இந்த வேலைய அவ மட்டும் என்ன வேணான்னு சொல்லவோ போறா? நீங்க பெரிய டீச்சருக்கிட்ட சரின்னு சொல்லிடுங்க" கமலம் ஆனந்தத்தோடு கூற "ஆமாம் அப்பா, டீச்சரே சொல்லி அனுப்பி இருக்காங்க இல்ல, இன்னும் எத்தனை புள்ளைங்க படிச்சிட்டு இருக்கும்போது ஏம்மேல மட்டும் நம்பிக்கை வச்சி சொல்லி இருக்காங்க இல்ல, சரின்னு சொல்லுங்கப்பா" மகளும் பூரிப்போடு கூறும்போது "அப்போ சரியம்மா. நான் டீச்சருக்கு சரின்னு சொல்லிடுறேன்" என்று முருகானந்தமும் ஆமோதித்தார்.

பரிமளா சிறுமியாக இருக்கும்போது கமலத்தின் பழைய சேலைகளை கட்டிக்கொண்டு ஒரு டீச்சரைப்போல ஆடி ஓடித் திரிந்தது கமலத்துக்கு நினைவுக்கு வந்தது. அவள் அன்று விளையாட்டாக செய்தது, இன்று நிஜமாகப் போகப் போகிறதே என்று கமலமும் ஆச்சரியப்பட்டாள். அந்த மாரியம்மனை நினைத்து மனதுக்குள் வணங்கிக் கொண்டாள்.

இரண்டு நாட்களில் ஒரு ஆசிரியைப் போல தன்னை தயார்படுத்திக் கொண்டு, அவள் படித்த அந்தப் பாடசாலைக்கே போன போது, அவளுக்கு எல்லையில்லா மகிழ்ச்சியாக இருந்தது. சரோஜா டீச்சர் உட்பட ஏனைய ஆசிரியர்களும் பரிமளாவுக்கு தெரிந்தவர்கள் தான். ஆகவே எல்லோரும் அவளை ஆசையோடு வரவேற்றார்கள். இப்படியாக அவள் மாணவர்களோடும் பாடசாலை சூழலோடும் ஒன்றிணைந்து போவதைக் கண்ணுற்ற அவள் பெற்றோருக்கும் பெருமிதமாக இருந்தது. அவளின் இந்தச் செயலால் அவள் குடும்பத்துக்கே அந்த தோட்டத்தில் தனியொரு மதிப்பும் கிடைத்தது.

நாட்கள் நகர்ந்தன. மாதங்கள் இரண்டை எட்டிப் பிடித்தபோது, அந்தப் பாடசாலைக்கு வேறு மாவட்டத்திலிருந்து புதிதாக ஒருவர் ஆசிரிய நியமனம் பெற்று வந்தார். அவர் பெயர் சுந்தர், வாட்டசாட்டமான இளைஞன். எடுப்பான தோற்றம், நேர்த்தியான நடை, உடை, பாவனை. சுந்தரின் வரவால் அனைத்து ஆசிரியர்களுக்கும், ஏன் மாணவர்களுக்கும் கூட மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் பரிமளாவுக்கு மட்டும் என்னவோ போல் இருந்தது. "பரிமளா, நீங்க ஒண்ணும் யோசிக்காதீங்க, நான் கல்விப் பணிப்பாளருக்கு உங்களைப்பத்தி சொல்லி வச்சிருக்கேன், தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்கு உங்க விபரத்தை எல்லாம் அனுப்பச் சொல்லி இருக்கிறார். நீங்க நிக்காம தொடர்ந்து வாங்க" என்று சரோஜா டீச்சர் சொன்னபோது அவளுக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. ஆகவே அவளும் தொடர்ந்து போய்க் கொண்டே இருந்தாள்.

சுந்தர் வெளிமாவட்டத்திலிருந்து வந்திருப்பதால் சரோஜா டீச்சர் அவரை அங்குள்ள தோட்ட குமாஸ்தாவின் வீடொன்றில் தங்குவதற்கு ஏற்பாடு செய்து தந்திருந்தார். சுந்தர் எல்லோருடனும் சகஜமாகப் பழகினான். ஆனால் பரிமளாவோடு கொஞ்சம் அதிகமாகவே பழகினான். ஆனால் பரிமளாவுக்கு அவனைக் காணும் போதெல்லாம் இனம்புரியாத ஓர் பய உணர்வு மேலிட்டது. அது ஏன் என்று சில சமயங்களில் அவளுக்கே புரியாமல் இருந்தது.

"ஏன் பரிமளா... என்னைக்கண்டு இப்படி பயப்படுறீங்க, நான் என்ன உங்கள கடிச்சித் தின்னுடவா போறேன்" என்று நகைச்சுவையாகப் பேசுவான். "இல்ல சுந்தர் சேர், அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல" என்று அவள் ஒருவித கூச்சத்தோடு தயங்கித் தயங்கி பதலளித்தபோது "சேர்... கீர்... எல்லாம் வேணாம்... சுந்தர் என்றே கூப்பிடுங்க" என்று அவளை ஆசுவாசப் படுத்தினான். நாளடைவில் பரிமளா மீது அதிக அக்கறை எடுத்துக் கொள்வது போல் அவளுக்கு தோன்றியது. சரோஜா டீச்சரும் ஏனைய ஆசிரியர்களும் அதற்கு ஒத்து ஊதுவதும் அவளுக்கு புரிந்தது. "ஏன் பரிமளா, சுந்தரைக் கண்டா பயமா இருக்கா, நல்ல எடுப்பான வாலிபன் தானே. உங்களுக்கு ரொம்ப பொருத்தம், வேறு யாருமா இருந்தா இன்னேரம் கைக்குள்ள போட்டிக்கிட்டு இருப்பாங்க" என்று அவர்கள் பகிடி பண்ணும் போதெல்லாம் அவளுக்கு தூக்கி வாரிப்போடும்.

அதன் பின்னர் அவன் கொஞ்சம் அதிகமாகவே நெருங்கினான். "இங்க பாருங்க பரிமளா, எனக்கு உங்கள ரொம்ப பிடிச்சிருக்கு, நான் உங்கள லவ் பண்றன்" என்று அவன் சொன்னபோது அவள் திடுக்கிட்டுத் தடுமாறினாள்". என்ன சொன்னீங்க?" "ஆமாம் மிஸ் பரிமளா. ஐ லவ் யூ மைடியர்" "இங்க பாருங்க சேர். இது ரொம்ப அதிகம். நான் யாரு நீங்க யாரு. நான் லயத்தில இருக்கிறேன். எங்களுக்கென்று பெரிசா ஒண்ணும் இல்ல, ஏதோ இப்படியாவது ஒரு தொழில் புடிச்சிக்குவோம்னுதான் இதுக்கு வந்தேன். ப்ளீஸ் கொஞ்சம் புரிஞ்சுக்குங்க".... "அதெல்லாம் எனக்குத் தெரியும் பரிமளா. ஆனா நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க, உங்க அழகில நான் மயங்கிட்டேன். ப்ளீஸ் என் காதலை ஏற்றுக்கொள்ளுங்க", அவன் அசடுவழிய சொன்னபோதும் அவள் வளைந்து கொடுக்கவில்லை.



"இங்க பாருங்க மிஸ்டர். என்னை உங்க விளையாட்டு பொம்மையா நினைச்சீங்களா. என்னை நம்பிதான் எங்க குடும்பமே இருக்கு. கொஞ்சம் புரிஞ்சுக்குங்க. இந்த விளையாட்டெல்லாம் வேற யாருக்கிட்டவாவது வச்சுக்குங்க!" ஆனால் அவள் என்ன சொன்னாலும் அவன் விட்டபாடில்லை. "வெரி சொரி பரிமளா. நீங்க என் காதலை ஏத்துக்க இல்லையின்னா நான் ட்ரான்ஸ்ஃராகி ஊருக்கே போயிடுவேன், அப்போ உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல ஆசிரியரை இழக்க வேண்டி இருக்கும். " அவன் பேச்சைக் கேட்டு அவள் அதிர்ந்து போனாள். உடனே தலை வலிப்பதாக சரோஜா டீச்சரிடம் பொய் சொல்லிவிட்டு வீட்டுக்கு போய் விட்டாள்.

வீட்டுக்கு போனவளுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. மயக்கம் வருவதுபோலிருந்தது. உடனே ஒடிப்போய் கட்டிலில் சாய்ந்து கொண்டாள். அன்றைய சம்பவங்கள் அனைத்தும் அசைபோடத் தொடங்கின. 'ஏன் நாம் இப்படி நடந்துகொள்கிறோம். சுந்தர் நல்லவராகத் தானே தெரிகிறார். அவருக்கு சம்மதத்தை கொடுத்தால் என்ன? அத்தோடு மாற்றலாகி போகப்போவதாகவும் கூறுகிறாரே? எவ்வளவோ காலத்துக்குப் பிறகு நம் பாடசாலைக்கு ஒரு நல்ல திறமையான ஆசிரியர் ஒருவர் கிடைத்திருக்கிறார். அதை நழுவ விடுவதா? இந்த விடயம் சரோஜா டீச்சருக்கும் ஏனைய ஆசிரியைகளுக்கும் தெரியவந்தால் என் நிலை என்னவாகும்' அவள் குழம்பிப்போய் இருந்தாள். நான் என்ன செய்வது? 'சம்மதித்து விடு! சம்மதித்து விடு' என்று அவள் மனசாட்சி சொன்னது. நாளை விடியட்டும் பார்ப்போம். அப்படியே அவள் உறங்கிப்போனாள்.

மறுநாள் பொழுதும் ரம்மியமாக விடிந்திருந்தது. வழமைபோல தன்னை தயார்படுத்திக் கொண்டு பாடசாலைக்கு போனபோது பரிமளாவின் வரவுக்காக காத்திருந்தது போல சுந்தரின் சுபாவம் தெரிந்தது. "ஹாய் குட்மோர்னிங், எப்படி?" என்றவாறு அவள் முன்வந்து நின்றான். "என்ன, என் கோரிக்கைக்கு பச்சைக்கொடி தானே"அவள் தலை குனிந்தாள். "என்ன மிஸ் பரிமளா. ஓகே தானே" அவள் 'ம்' என்று குனிந்த தலை நிமிராமல் நாணத்தோடு தலையாட்டினாள். அவள் முகம் சிவக்க ஆரம்பித்தது.

"அப்பட்டா. இப்போ தான் எனக்கு உயிரே வந்திருக்கு, நாளைக்கு சனிக்கிழமை தானே. நம்ம ரெண்டு பேருக்குமே லீவு நாள். ஜாலியா எங்கேயாவது வெளியில போய் மனசார பேசுவோமே" அவள் ஆச்சரியம் மேலிட அவனை நோக்கினாள். எதுவுமே பேசாமல் வகுப்பறையை நோக்கி நடக்கலானாள். மனதில் ஏதோவொரு இனம்புரியாத பயம் கௌவிக் கொண்டது. வகுப்பறையிலும் அவளால் இருக்க முடியவில்லை. ஏதோ மாணவர்களோடு ஒருவாறு பட்டும் படாமலுமாக பொழுதைக் கழித்தாள்.

காலமும் நேரமும் தன்பாட்டில் ஓடியது. பாடசாலையை விட்டு வீட்டுக்கு போனவளுக்கு ஒரே மனக்குழப்பமாக இருந்தது. "என்னம்மா, ஒரு மாதிரியா இருக்க , என்னாச்சு" அம்மாவுக்கும் அவளின் மாற்றம் புரிந்துவிட்டது போலும். "கொஞ்சம் தலை வலிக்கிறமாதிரி இருக்கம்மா" "சரி சரி, ரெண்டு பெனடோலைப் போட்டுக்கொண்டு படு. எல்லாம் காலையில சரியாய் போகும்" என்று அம்மா கூற 'காலையில் சரியாகிடுமா? அந்த மறுநாள் தானே என் டென்ஸனுக்கு காரணமே.... பாவம் அம்மா, ஒண்ணும் புரியாம பேசுறா, அம்மாவை ஆசுவாசப்படுத்துவதற்காக போய்ப் படுத்துக்கொண்டாள். எப்படியோ கொஞ்சம் உறங்கிப் போனாள்.

கதிரவனின் வரவு கண்டு காலைப்பொழுது மிகவும் ரம்மியமாக புலர்ந்திருந்தது. சேவல் கூவும் சிங்கார ஒலிகேட்டு பரிமளா திடுக்கிட்டு எழும்பி சுவர்க்கடிகாரத்தை பார்த்தாள். நேரம் காலை ஐந்தரையையும் தாண்டி இருந்தது. 'அடடா இவ்வளவு நேரம் தூங்கிவிட்டோமே' என்று பதறியடித்துக்கொண்டு எழுந்து ஆயத்தமானாள்.

"என்ன மகள்? எங்க போகப் போறீங்க, இன்னைக்கும் ஸ்கூல்லா?" கவ்வாத்து மலைக்கு கையில் கத்தியோடு போவதற்கு தயாராகிய அவள் அப்பா கேட்டபோது 'இல்லப்பா இன்னைக்கு செமினார், கொஞ்சம் நேரத்தோட போகணும்"..... "சரி சரி கவனம் கவனம்" என்று சொல்லிக்கொண்டே அப்பா புறப்பட்டு விட்டார்.

அந்தக் காலைப் பொழுது என்னவோ அவளுக்காகப் புலர்ந்தது போலிருந்தது. மொட்டவிழ்ந்திருந்த மலர்களில் முத்து முத்தாய் தேங்கி நின்ற பனித்துளிகள் தகதகவென ஜொலித்த அந்த காலை வெயிலால் காய்ந்து கொண்டிருந்தது. பார்ப்பதற்கு மனோரம்மியமாக இருந்தது. தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு நின்ற பரிமளா முற்றத்தில் வந்து நின்று சுற்றும் முற்றும் மெதுவாக பார்வையைச் சுழல விட்டாள். பாதையில் ஜனநடமாட்டம் குறைவாக இருந்தது. மெதுவாக நடந்து பாடசாலைக்கு போகும் பாதையோரமாக பதற்றத்தோடு நின்று கொண்டிருந்தாள்.

சற்று நேரத்தில் மோட்டார் சைக்கிளில் சுந்தர் வந்து சட்டென நின்றான். "ஹாய் பேபி, எங்கே வரமாட்டீங்களோன்னு பயந்து போய் வந்தேன். குட் கேர்ள், நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க' சரி ஏறுங்க" என்று தலைக் கவசத்தையும் நீட்டினான். இதயம் 'படக் படக்' எனத் துடிக்க, ஒருவித பீதியோடு ஏறிக்கொண்டாள். அந்த மோட்டார் சைக்கிள் காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாகப் பறந்தது. அவளுக்கோ ஆகாயத்தில் பறப்பது போல் இருந்தது. ஏனெனில் இது அவளைப் பொறுத்தவரையில் ஓர் புது அனுபவம், அவளையும் அறியாமல் சுந்தரை இறுகப் பற்றிக் கொண்டாள். அந்த மோட்டார் சைக்கிள் ஒரு அழகான பூங்காவுக்குள் நுழைந்தது. "பரிமளா பயப்படாதீங்க. இங்க யாரும் நம்மள பெரிசா கண்டிக்க மாட்டாங்க. இங்கிருக்கும் பூக்களோடு பூக்களாய் நீங்களும் வண்டுகளோடு வண்டாய் நானும் ஜாலியா இருக்கலாம்", அவன் என்னதான் தைரியத்தை வரவழைத்துத் தந்தாலும், அவளுக்கு என்னவோ ஒருவித பதற்றமாகவே இருந்தது. வாழ்க்கையில் முதல்முறையாக அதுவும் ஆடவன் ஒருவனுடன் இவ்வாறு இருப்பது அவளுக்கு புது அனுபவம். அந்த அச்ச உணர்வு அவன் முகத்தில் கொஞ்சம்கூட காணாததையும் அவள் கண்ணுற்றாள். இதற்கு முன்னும் இவர் இப்படி வந்திருப்பாரோ என்ற சந்தேகமும் அவளுக்கு ஏற்படத் தொடங்கியது.

"பரிமளா.... கமான் பேபி கமான்" அவள் கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு அவன் ஆனந்தமாய் நடந்தான். அந்த அழகிய நந்தவனத்தின் நடுப்பகுதிக்கு அவளை அழைத்துச் சென்று, நன்கு பூத்துக் குலுங்கி நின்ற மரத்துக்கு அடியல் அவளை அமரச் செய்தான். அவள் மடியில் அவனும் தலை சாய்ந்து கொண்டே இருவரும் பல கதைகள் பேசினார்கள். பரிமளாவுக்கோ இதுவரையில் காணாத ஓர் இன்பம் உடலெங்கும் பரவியது. இன்னும் இன்னும் அவன் நெருங்க மாட்டானா என்று துடிதுடித்து நின்றாள். நேரம் போனதே இருவருக்கும் தெரியவில்லை. இவ்வாறு சுந்தரும் பரிமளாவும் அடிப்படி இப்படி உல்லாசமாய்ச் சுற்றித் திரிந்தார்கள். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே. அது தன்பாட்டில் ஓடியது. சுந்தர் ஆசிரியர் பயிற்சிக்காக கலாசாலைக்கு விண்ணப்பித்திருந்தான். மலையகத்தில் உள்ள ஆசிரியர் கலாசாலைக்கு அவன் தெரிவுசெய்யப்பட்டிருந்தான். இவ்விடயத்தை தெரிந்துகொண்ட பரிமளா துடிதுடித்துப் போனாள். "கவலை படாதீங்க பரிமளா பயிற்சியை முடித்துக் கொண்டு இதே ஸ்கூலுக்குத் தான் வருவேன். வந்தவுடன் நம்ம கலியாணத்தை வச்சுக்குவோம், என்னை நம்புங்க" அவள் கரங்களைப் பற்றிக்கொண்டு கனிவோடு அவன் கூறியபோது பரிமளா அவனை முழுமையாக நம்பினாள். கண்ணீரோடு அவளை வழியனுப்பி வைத்தாள். போய் ஒருசில வாரங்களில் அவளுக்கு கடிதமும் அனுப்பி இருந்தான்.

இப்போதெல்லாம் அவளுக்கு சுந்தர் இல்லாமல் அந்தப் பாடசாலை வெறுத்துப் போய் இருந்தது. பாடசாலைக்கு போவதை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொண்டு வந்தாள். அவளின் நடவடிக்கைகளை கவனித்த சரோஜா டீச்சரும் ஏனையோரும் அவ்வப்போது அவளை சமாதானப்படுத்தினார்கள்.

ஒருநாள் பரிமளா வகுப்பறைக்குள் திடீரென மயக்கமுற்றாள். குழம்பிப் போன ஆசிரியர்கள் அவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று டாக்டரிடம் காட்டியபோது, டாக்டர் புன்னகையோடு கூறியதைக் கேட்டு வியந்து போனார்கள். "அதிர்ச்சி அடையத் தேவையில்லை. இவங்க தாய்மைப் பேற்றை அடைந்திருக்காங்க. டிஸ்சார்ச் பண்ணுறன். கூட்டிக்கிட்டு போகலாம்", விடயம் வீட்டாருக்கும் தெரியவந்தது. பரிமளாவுக்குத் தெரியும். அவள் எதிர்பார்த்ததுதான். அவள் அப்பா கோபத்தில் கொதித்தெழுந்தார். அம்மா அவளை கட்டிப்பிடித்துக்கொண்டு ஓவென்று அழுதாள். "அழுகாதீங்க அம்மா. அவரு நிச்சயம் என்னை ஏத்துக்குவார். கலாசாலையிலிருந்து வந்தவுடன் என்னைக் கட்டிக்கிறதாக சத்தியம் செய்துவிட்டு போய் இருக்கிறார்" என்றாள், அவள். "அது அப்போ! இப்போ இது தெரிஞ்சா என்னாகும்" "ஒண்ணுமே யோசிக்காதீங்க. அவரை நான் நம்புறன். நீங்களும் நம்புங்க". அவள் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. இருந்தாலும் பரிமளாவின் பெற்றோருக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. "நாங்க கண்ட கனவெல்லாம் நாசமாப் பேச்சே கடவுளே. ஏன் இப்படிப் பண்ணிட்டியே ஆண்டவா" என்று புலம்பினார்கள். "சரி, சரி, நடந்தது நடந்து போச்சு. இனி என்ன பண்ண? எல்லாத்தையும் அந்த மாரியாத்தா மேல போட்டுவிட்டு நடக்குறத பாருங்க" அக்கம் பக்கத்தார் ஆறுதல் கூறினார்கள். ஆனாலும் கமலம் குசினியின் ஒரு மூலையில் அமர்ந்தவாறு ஒப்பாரி வைத்துக்கொண்டு இருந்தாள். என்ன இருந்தாலும் பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்து சீராட்டி பரிமளாவை வளர்த்தெடுத்த தாய் அல்லவா! அவள் என்னென்ன கனவெல்லாம் கண்டிருப்பாள். எல்லாமே ஒட்டுமொத்தமாக இப்படி கலைந்து போனால் யாரால் தான் தாங்கிக்கொள்ள முடியும்? தன் மூத்தமகள் ஏனையவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருப்பாள் என்று எதிர்பார்த்திருந்த அவள் அப்பா முருகானந்தனும் சோர்ந்து துவண்டு போயிருந்தார். அன்று அவர்கள் வீடே சோகமயமாக இருந்தது. யார் யார் ஆறுதல் சொன்னாலும் அவர்களின் உள்ளத்து வலி அவர்களுக்கு மட்டுமே புரியும்.

நாட்கள் நகர்ந்தன. அவள் உடலிலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாய் பல மாற்றங்கள் நடந்தன. அவள் அதைப்பற்றி கொஞ்சம்கூட ஆதங்கப்படவில்லை. 'சுந்தர் எப்படியும் வருவார்' என்று அவன் வரவுக்காக நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள்.

இதற்கிடையில் இந்த விடயம் காற்றாய்ப் பறந்து சுந்தரின் காதுகளுக்கும் எட்டியது. அவனுக்கு என்னவோ இந்த விடயம் கசப்பைத் தந்தது. அவன் பயிற்சி முடிவடையும் காலமும் நெருங்கி இருந்தது. பயிற்சி முடிந்ததும் வேறொரு பாடசாலைக்கு, ஏன் வேறொரு மாகாணத்துக்கே போய்விட வேண்டுமென்று எண்ணிக்கொண்டான்.

அன்று பரிமளாவுக்கு பிரசவநாள். ஓர் அழகான ஆண் குழந்தையை பெற்றெடுத்தாள். சரோஜா டீச்சரும் ஏனைய ஆசிரியர்களும் பார்க்க வந்திருந்தார்கள். "கவலைப் படாதீங்க பரிமளா. சுந்தர் நல்லவர்தான். நாங்க அவருக்கு செய்தி அனுப்பி இருக்கோம் கூடிய சீக்கிரம் வரலாம்" என்று ஆசுவாசப்படுத்தினார்கள்.

இரண்டு நாட்களில் தாயையும் சேயையும் வீட்டுக்கு கூட்டி வந்தார்கள். அனைத்து அலுவல்களையும் பரிமளாவின் அம்மா கமலமே பார்த்துக் கொண்டாள். அவள் அப்பா முருகானந்தம் வெளியில் தலைகாட்டவில்லை.

வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார். என்னதான் தன் மகள் சொன்னாலும் சுந்தர் மீது அவருக்கு நம்பிக்கை வரவே இல்லை. யாருக்கும் சொல்லாமல் மகள் தந்த சில தகவல்களை வைத்துக்கொண்டு சுந்தரைத் தேடித்தேடி அலைந்து திரிந்தார். அவன் எங்குமே கிடைக்கவில்லை. இனி அவன் வரவே மாட்டான் என்ற முடிவுக்கு வந்தார். ஆனால் எப்போதாவது அவன் தன்னைத் தேடி வருவான் என்ற திடநம்பிக்கையோடு அவள் மட்டும் காத்திருக்கிறாள்.

**பசறையூர் ஏ.எஸ். பாலச்சந்திரன்**

---

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
### இல: 97

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | | 03 | ■ | 04 | 05 |
| | ■ | | ■ | 06 | 07 | | |
| 08 | 09 | | 10 | ■ | 11 | | |
| 12 | | | | | ■ | ■ | |
| ■ | | ■ | | ■ | 13 | 14 | ■ |
| 15 | | 16 | ■ | 17 | | | 18 |
| | ■ | 19 | | | ■ | 20 | |
| 21 | | | ■ | | ■ | 22 | |

திரு/திருமதி.செல்வி ...............................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ...............................................

...............................................

...............................................

............................ ............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 97
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 97

### இடமிருந்து வலம்

*01. சித்திரை, வைகாசி மாதங்களை இப்படிச் சொல்வர்*
*04. ஒரு நீர் நிலை*
*06. ஓர் இடத்தில் அதிகளவில் மக்கள் குவிவதால் ஏற்படும் ஒழுங்கற்ற நிலை*
*08. ஏதாவது ஒன்றின் பாதிப்பால் எற்படும் கலக்கம். (குழம்பியுள்ளது)*
*11. வீட்டு சுவர்களில் காணப்படும் ஒரு ஐந்து*
*12. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள் (குழம்பியுள்ளது)*
*13. தையல் வேலைக்குப் பயன்படுவது*
*15. ஒரு வகை அரிசி*
*17. வித்தியாசமான நிலை*
*19.வெட்கம் (குழம்பியுள்ளது)*
*20. கருமையான யானை திரும்பி நிற்கிறது*
*21. உறுதி அல்லது நிலையானது*
*22. பாரம்*

### மேலிருந்து கீழ்

*01. வசிப்பிடம்*
*02. சம்பளம்*
*03. இதிலிருந்துதான் அரிசி கிடைக்கின்றது (தலைகீழ்)*
*04. கட்டடமொன்றின் நுழையும் பகுதி*
*05. இது ஒரு கிராமியக் கலை இசை வடிவம்*
*07. குதிரை கவிழ்ந்து விட்டது*
*09. சூளுரை*
*10. அச்சம் (குழம்பியுள்ளது)*
*13. தீங்கு*
*14, பரிந்துரை*
*15. சேறு*
*16. அம்பு*
*17. இந்த மரம் மருத்துவக் குணம் நிரம்பியது.*
*18. அளவுக்கு அதிகமான அல்லது தீவிரமான நிலை (குழம்பியுள்ளது)*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 96

### விடைகள்

#### இடமிருந்துவலம்

*1. காத்திரம்*
*5. மாசி*
*7. சருமம்*
*8. பதுக்கல்*
*9. பசி*
*10. கரும்பலகை*
*12. ஆம்*
*14. கார்*
*15. வடை*
*17. விண்*
*19. சில்லு*
*20. சயனம்*
*21. கர்வம்*

#### மேலிருந்து கீழ்

*1. காப்பகம்*
*2. திருக்கை*
*3. கரகம்*
*4. சம்பல்*
*6. சிற்பம்*
*9. சிலர்*
*11. காருண்யம்*
*13. ஆவல்*
*16. கடைசி*
*17. விசர்*
*18. அம்மா*
*19. வலு*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 96

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **மனோகரன் தாரணி,**<br>"கமல் வாசம்"<br>வித்தனை ஒழுங்கை<br>வல்வெட்டித்துறை | **எம்.எப். இம்தியாஸ் மொஹம்மட்,**<br>இல 275/ஏ ஜயமலபுர,<br>நாவலப்பிட்டி வீதி,<br>கம்பளை | **எஸ். தவநாயகி,**<br>24/41, செல்வநாயகம் வீதி,<br>முதலாம் குறுக்கு,<br>மட்டக்களப்பு |

### பாராட்டு பெறுவோர்

***1. எஸ் ஸ்ரீ கிருஷ்ணராஜா***
*மட்டக்யளப்பு*
***2.எஸ் கனகரட்ணம்***
*திருகோணமலை*
***3. ஏ.எச்.எம் இல்ஹாஸ்.***
*ரஜவெல்ல*
***4. என்.கே. வேணி***
*பலாங்கொடை*
***5. எம்.எச்.சீ.என். சம்ரா***
*வெலிகம*
***6. கே.எம்.எம் பாரூக்***
*மாத்தளை*
***7. எம்.டபிள்யூ.எப். மிப்ராஸ்***
*துல்ஹிரிய*
***8. எம்.எம். ஷஸாத்***
*மருதமுனை 4*
***9. இல்யாஸ் தாஸிம்***
*பாணந்துறை*
***10. எம்.எம்.எம். நிஸாம்***
*காலி*

## சர்ச்சையாக... (04ஆம் பக்க தொடர்...)

ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவை தொடர்பாக பல விடயங்களை சபையில் முன்வைத்துள்ளார். குறிப்பாக அரசியலமைப்பு பேரவையின் இறுதி நியமனத்தை மேற்கொள்ளாமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரை குற்றம் சாட்டியுள்ளார். இந்நியமனம் எவ்வாறு நடைபெற வேண்டும் என்பது தொடர்பில் அரசியலமைப்பின் 41 (ஏ) உறுப்புரையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு சித்தார்த்தன் எம்.பி.யின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனினும் ஏன் அந் நியமனத்தை மேற்கொள்ளப்படவில்லை என நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் வினவியுள்ளேன். எவ்வாறெனினும் இறுதி நியமனம் தொடர்பான பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவருக்கு கிடையாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அரசியலமைப்பு பேரவையின் செயல்பாடுகளை ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவ்வாறு செயற்பட அதிகாரம் இல்லை. நிறைவேற்று அதிகாரத்தின் அதிகாரங்களை ஓரளவிற்கு குறைக்கும் வகையில் தடைகள் மற்றும் சமன்பாடுகளை ஏற்படுத்தவே அரசியலமைப்பு பேரவை அமைக்கப்பட்டது. அவ்வாறில்லாமல் ஜனாதிபதி பெயரிட்டு அனுப்பும் அனைத்துக்கும் சம்மதம் எனத் தெரிவிக்க முடியாது.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக அரசியலமைப்பு பேரவை தெளிவாக ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளது.

எனவே அரசியலமைப்பு பேரவையின் இறுதி நியமனம் தொடர்பில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்கான காரணம் என்ன என்பதை ஜனாதிபதிக்கு சபாநாயகர் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் இது தொடர்பாக நாட்டுக்கு தவறான தகவலே போய்ச் சேரும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதம் இடம்பெற்று வரும் நிலையில் விவாதங்களில் அதற்கு வழங்க வேண்டிய முக்கியத்துவங்கள் தவிர்க்கப்பட்டு அரசியலமைப்பு பேரவை தொடர்பான விடயங்கள் பெருமளவு நேரத்தை வீணடிக்கின்றன. அது தொடர்பில் ஆளும் கட்சியினரின் பெரும் அதிருப்தி சபையில் முன் வைக்கப்பட்டு வருகின்றது.

உண்மையில் கடந்த வெள்ளிக்கிழமை நாட்டின் மிக முக்கியமான விடயமான மின் சக்தி, எரிசக்தி அமைச்சின் குழு நிலை விவாதம் நடைபெற்ற போது, அன்றைய தினம் அரசியலமைப்பு தொடர்பான சர்ச்சைகள் மற்றும் அது தொடர்பில் ஜனாதிபதி சபையில் ஆற்றிய உரை தொடர்பான விவாதங்களே பெரும் நேரத்தை எடுத்துக் கொண்டன.

## கைதிகளை விடுவிக்கும்... (08ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையில் இஸ்ரேலிய கப்பல்கள் வழமையான கடல் போக்குவரத்து பயணத்தை மாற்றி 3500 கிலோ மீற்றர்கள் சுற்றிச் செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

தற்போது நான்கு நாட்கள் யுத்த நிறுத்தத்திற்கு இஸ்ரேலிய அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ள போதிலும் கடந்த 47 நாட்களாக நீடித்த யுத்தத்தில் 14,854 மேற்பட்ட பலஸ்தீனர்கள் காஸாவில் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 6150 மேற்பட்டவர்கள் சிறுவர்களாகவும் 4000 பேர் பெண்களாகவும் உள்ளனர். 6200 பேர் காணாமல் போயுள்ளனர். 33 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். 1.5 மில்லியன் மக்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். 26 வைத்தியசாலைகள், 55 கிளினிக்குகள் தாக்குதல்கள் காரணமாக செயலிழந்துள்ளன என்று காஸா சுகாதார அமைச்சு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அதேநேரம் காஸா நிர்வாகம் விடுத்துள்ள அறிக்கையில், இந்த யுத்தத்தில், 2 இலட்சத்து 30 ஆயிரம் வீடுகள் குண்டு வீச்சுக்கு இலக்காகி மக்கள் வசிக்க முடியாதபடி சேதமடைந்துள்ளன. 44 ஆயிரம் வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. காஸாவிலுள்ள மொத்த வீடுகளில் 60 வீதமானவை தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த ஐக்கிய நாடுகள் சபை நடாத்தும் அகதி முகாம்களில் சுமார் 9 இலட்சம் பேர் தங்கியுள்ளனர். அம்முகாம்களும் தாக்கப்பட்டுள்ளதோடு 176 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 778 பேர் காயமடைந்துள்ளனர். 108 ஐ.நா. பணியாளர்களும் 53 ஊடகவியலாளர்களும் கூட இந்த யுத்தத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

இருந்தும் கூட ஹமாஸ் பிடித்து வைத்துள்ள பணயக்கைதிகளை இஸ்ரேலால் மீட்கக் கிடைக்கவில்லை. இந்நிலையில் இந்த யுத்த நிறுத்தத்தின் ஊடாக ஹமாஸ் பிடித்துள்ள 50 இஸ்ரேல் பணயக் கைதிகளையும் இஸ்ரேல் சிறையிலுள்ள 150 பலஸ்தீன கைதிகளையும் விடுவிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் கீழ் மனிதாபிமான உதவி, அத்தியாவசிய மருந்துப்பொருட்கள், எரிபொருள் என்பன காஸாவுக்குள் அனுப்பி வைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

'இந்த யுத்த நிறுத்த காலத்தில் இஸ்ரேல் யுத்தத்தை முன்னெடுக்காது, எவரும் கைது செய்யப்பட மாட்டார்கள், தெற்கு காஸா வான் பரப்பில் விமானங்கள் முற்றாக பறக்க தடையிருக்கும். வடக்கு காஸாவில் ஒவ்வொரு நாட்களும் 6 மணித்தியாலயங்கள் நடைமுறையில் இருக்கும்' என்று ஹமாஸ் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் விடுவிக்க உள்ள 300 பேரின் பெயர்ப்பட்டியலை கடந்த வியாழனன்று வெளியிட்டிருந்தது. என்றாலும் இந்த யுத்த நிறுத்தம் இன்றைய தினத்திற்கு பின்னரும் நீடிக்க வேண்டும் என்பது தான் அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரும் எதிர்பார்ப்பாக உள்ளது.




## அரசின் இலட்சியங்களை... (05ஆம் பக்கத் தொடர்)

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கவும், உள்ளூர் கடனை மேம்படுத்தவும், கடன் தீர்வுக்காக உலகளாவிய நிதி நிறுவனங்களுடன் நேர்மறையாக ஈடுபடவும் முயற்சிகள் நடந்து வருகின்றன. நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்தும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன்தொகையில் இரண்டாவது தவணை விரைவில் பெறப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. எல்லாத் தரப்பிலிருந்தும் அதற்கான ஒத்துழைப்பு அவசியமாகும்.

**கே: வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச முறிகளின் தீர்வுக்காக முன்மொழியப்பட்டுள்ள 3 ட்ரில்லியன் ரூபா ஒதுக்கீட்டின் பின்னணியில் உள்ள காரணத்தை விளக்க முடியுமா?**

பதில்: இரண்டு மாதங்களுக்கு முன்பு கடன் எல்லை அதிகரிக்கப்பட்டது. தற்போதுள்ள பத்திரங்களை மாற்றுவதற்கு இந்த இடம் மிகவும் முக்கியமானது, மேலும் இதற்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் அவசியம். இந்த அதிகரிப்பு உள்ளூர் கடன் மேம்படுத்தல் திட்டத்திற்கான நெகிழ்வுத்தன்மையை வழங்கியது. இதேபோல், முன்மொழியப்பட்ட 3 ட்ரில்லியன் ரூபா கடன் வாங்குவதற்கான முயற்சி அல்ல, இது மறுசீரமைப்பிற்குத் தேவையான நடவடிக்கை. இதில், 450 பில்லியன் ரூபா வங்கித் துறையை மறுமூலதனமாக்குவது, நம்பகத்தன்மை மற்றும் நம்பிக்கையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 3 ட்ரில்லியன் ரூபா ஒதுக்கீட்டின் முக்கிய நோக்கம் நீண்ட காலப் பத்திரங்களாக மறுசீரமைப்பதாகும், இது விரிவான கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு முக்கியமானது.

**கே: வரவுசெலவுத் திட்டம் ஏறத்தாழ சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியால் தயாரிக்கப்பட்டது என எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. இதில் உங்கள் கருத்து என்ன?**

பதில்: எந்தவொரு நாட்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தையும் சர்வதேச நிறுவனங்கள் எதுவும் நேரடியாக உருவாக்குவதில்லை. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு இருக்கும் போது, வரவுசெலவுத் திட்டம் சர்வதேச நாணய நிதியத்தினால் தயாரிக்கப்படுகிறது எனக் கூறுவது தவறானது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவது பாராளுமன்றத்தில் பகிரங்கமாக விவாதிக்கப்பட்டது. மேலும் அத்தகைய உதவி கோரப்படுவது இரகசியமல்ல.

எதிர்க்கட்சியின் நிலைப்பாடு முரண்பாடானதாகத் தோன்றுகிறது, ஏனெனில் அவர்கள் முன்பு சர்வதேச நாணய நிதியத்தை அணுகவும், பொருளாதாரப் புயலில் இருந்து விடுபட அதன் உதவியை நாடவும் வாதிட்டனர். எங்களின் முடிவுகள் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் அர்ப்பணிப்பை அடிப்படையாகக் கொண்டவை, அரசியல் பிரபலத்திற்காக அல்ல.

நாட்டின் பொருளாதார நல்வாழ்வுக்கான ஆக்கபூர்வமான திட்டங்களை வழங்குவதை விட, எதிர்க்கட்சிகளின் விமர்சனங்கள் வாய்மொழி சொல்லாடல்கள் பற்றியதாகவே தெரிகின்றன. நாங்கள் விரும்புவது அதுவல்ல, தற்போதைய பொருளாதார சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க அவர்களின் ஒத்துழைப்பை நாங்கள் நாடுகிறோம்.




## உணவு, மருந்து, தண்ணீர்... (05ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையில் பல்வேறு நாடுகளும் பலஸ்தீனத்திற்கு தங்களால் முடிந்த அளவுக்கு உதவியை செய்து வருகின்றன.

இஸ்ரேல் – ஹமாஸ் போரால் காஸா பகுதியில் பலஸ்தீன மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். காஸாவின் தெற்குப் பகுதியில் உள்ள நிவாரண முகாம்களில் தங்கியிருக்கும் பலஸ்தீன மக்கள் கடந்த ஒன்றரை மாதமாக மின்சாரம், தண்ணீர், எரிபொருள் இன்றி தவிக்கின்றனர்.

குண்டு வீச்சு காரணமாக ஏராளமானோர் பார்வை மற்றும் கேட்கும் திறன் இழந்து தவிக்கின்றனர். படுகாயங்களுடன் மருத்துவ வசதியின்றி பலர் அவதிப்படுகின்றனர். அங்கு கடும் குளிர் வாட்டிவதைக்கிறது.

மின்சாரம், எரிபொருள் இல்லாததால் கடல்நீரை சுத்திகரிக்கும் ஆலைகள் இயங்கவில்லை. உப்புத் தண்ணீர் மற்றும் அசுத்தமான நீரைப் பருகுவதால் பல குழந்தைகள் நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளன.

"நாள் ஒன்றுக்கு ஒரு வேளை உணவுதான் கிடைக்கிறது. நிவாரண முகாம்களில் வழங்கப்படும் பேரீச்சம்பழம், பிஸ்கட் ஆகியவற்றை உண்டு உயிர்வாழ்கின்றோம்" என்று அம்மக்கள் தெரிவிக்கின்றனர். தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.


## LRDC சேவைகள் நிறுவனம்

2024 வருடத்திற்கான

விநியோகஸ்தர்களை பதிவு செய்தல

(நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ்)

2024 வருடத்திற்கான கீழ்வரும் பண்டம் மற்றும் சேவைகளுக்கான விநியோகஸ்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு பண்டம் மற்றும் சேவைகளுக்கு வெவ்வேறாக ரூ.3000/- பணம் எமது நிறுவனத்தின் காசாளரிடம் செலுத்தி விண்ணப்பத்தை பெற்று 2024.01.31 ஆம் திகதி பி.ப.2.00 முன்பு இல.28/10 கிரிமண்டல மாவத்தை, நாவல, ராஜகிரிய எனும் விலாசத்திற்கு கடிதம் மூலம் அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டும். விண்ணப்ப இறுதி திகதியின் பின் பதிவு செய்யப்படும் விநியோகஸ்தர்களிடம் இருந்து ரூ.5000/- அறவிடப்படும்.

| | |
|---|---|
| 01 | பண்டம் வழங்குதல் |
| 01.1 | [illegible] |
| 01.2 | [illegible] |
| 01.3 | [illegible] |
| 01.4 | [illegible] |
| 01.5 | [illegible] |
| 01.6 | [illegible] |
| 01.7 | [illegible] |
| 01.8 | [illegible] |
| 01.9 | CCTV [illegible] |
| 01.10 | [illegible] |
| 01.11 | [illegible] |
| 01.12 | [illegible] |
| 01.13 | [illegible] |
| 02 | சேவை வழங்குதல் |
| 02.1 | [illegible] |
| 02.2 | [illegible] |
| 02.3 | [illegible] |
| 02.4 | [illegible] |
| 02.5 | [illegible] |
| 02.6 | [illegible] |
| 02.7 | [illegible] |
| 02.8 | [illegible] |
| 02.9 | [illegible] |
| 02.10 | [illegible] |
| 02.11 | [illegible] |
| 02.12 | [illegible] |
| 02.13 | [illegible] |
| 02.14 | [illegible] |
| 02.15 | [illegible] |
| 02.16 | [illegible] |
| 02.17 | [illegible] |
| 02.18 | [illegible] |
| 02.19 | [illegible] |

[illegible]

மேலதிக விபரங்களுக்கு - 0112861948/860 022/023 (விரிவாக்கம் : 218)



## பாவிக்கப்பட்ட 1000 KVA மின்பிறப்பாக்கியொன்றை விற்பனை செய்தல்

**மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபைக்கு உரிமையுள்ள மின்பிறப்பாக்கியொன்றை விற்பனை செய்வதற்காக பெறுகைதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.**

பொறியியல் சேவைகளின் முகாமையாளரின் ஒருங்கிணைத்தலுடன் 2023.11.27 ஆம் திகதியிலிருந்து 2023.12.14 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் மின்பிறப்பாக்கியானது பரீட்சிக்கப்படலாம்.

2000 ரூபா மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவையும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாகிய 5000 ரூபாவையும் நிதி முகாமையாளரிடம் செலுத்திய பின்னர், மேலேயுள்ள காலப்பகுதியில் நிதிக்கான முகாமையாளரிடமிருந்து விபரமான கேள்விப்படிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

முன்வைப்பை அடக்கியுள்ள தபாறையின் இடது பக்க மேல் மூலையில் "Tender for 1000 KVA Generator" என அடையாளமிடப்பட்டு 2023.12.15 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் கீழே குறிப்பிட்டுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கேள்வியானது அதே நாளில் பி.ப. 3 மணிக்கு திறக்கப்படும்.

மேலேயுள்ள கேள்வி தொடர்பான மார்ஷலின் தீர்மானமானது இறுதியானதும் முடிவானதாகும்.

**மார்ஷல்,**
**மீயுயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி முகாமைத்துவ சபை,**
**த.பெட்டி 223,**
**கொழும்பு-12.**



## அறிவித்தல்

தற்பொழுது தாதித் தொழில் பற்றிய பாடநெறி நடத்திச் செல்லப்படும் சகல தனியார் நிறுவனங்களும் இலங்கை தாதியர் பேரவையின் ஒழுங்குபடுத்தல்களுக்கு உட்படல் வேண்டும். அதன் காரணமாக உங்கள் நிறுவனங்களில் நடத்தப்படும் பாடநெறிகளும் தாதியர் சபையினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டியுள்ளதால் அதனைக் கவனத்தில் கொள்வதற்காக கீழ்காணும் மாதிரிப் பத்திரத்தை பூர்த்தி செய்து 2023.12.11ம் திகதிக்கு முன்னர் இலங்கை தாதியர் பேரவை முதலாம் மாடி, ஆரம்பத்திற்கு பின்னரான தாதியர் கல்லூரி, ரீஜன்ட் வீதி, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்யுங்கள்.

மாதிரிப் பத்திரம்

| நிறுவனத்தின் பெயர் | பாடநெறியின் பெயர் | முகவரி | கால எல்லை |
|---|---|---|---|
| | | | |

நிறுவனத் தலைவரின் பெயர்:

பதவி/உத்தியோகபூர்வ முத்திரை:

கையொப்பம்:

திகதி:

**பதிவாளர்,**
**இலங்கை தாதியர் சபை.**



## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

(தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு)

### விலைமனுவிற்கான அழைத்தல்

**BID No.:PR/02/15-2**

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சி உபகரணங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்**

2023 டிசம்பர் 18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் இவெவேப பயிற்சி நிலையங்களுக்கு கவனிப்பு பயிற்சி கற்கைநெறிகளுக்கான பயிற்சி உபகரணங்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 234 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

2023.11.27 ஆம் திகதியிலிருந்து 2023.12.17 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் 5,000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், விலைமனுக்கோரலை சமர்ப்பிக்கும் நிறுவனத்திலிருந்து எழுத்துமூலமான கோரிக்கையொன்றை முன்வைப்பதன் மூலம் இவெவேப பெறுகைக்கான முகாமையாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களிலேயே முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுவானது "Supply & Delivery of Training Equipments மற்றும் விலைமனு இலக்கமான PR/02/15-2" ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்பட்டு 2023.12.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 234 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக 2 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து விலைமனுக்களும் கேள்வியை மூடிய பின்னர் அதே முகவரியில் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் திறக்கும் நிகழ்விற்கு சமுகமளிக்கலாம்.

விலைமனுதாரரின் பின்வரும் விபரங்கள் மதிப்பீட்டு நோக்கத்திற்காக விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- o 2022, 2021 மற்றும் 2020 ஆம் ஒவ்வொரு ஆண்டிலும் வழங்கப்பட்ட வாடிக்கையாளர்களின் பட்டியல்.
- o 2022, 2021 மற்றும் 2020 ஆம் ஒவ்வொரு ஆண்டிலும் பொருட்களின் வழங்கலுக்காக பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் பட்டியல் மற்றும் அவைகளின் பெறுமதி ஆகியன.
- o இங்கே பட்டியலிடப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திகளின் உற்பத்தியாளரானவர் முன்வைக்கப்பட்ட உரித்தான உற்பத்திகளுக்கான தர உத்தரவாத பதிவுச்சான்றிதழான ISO 9001 ஐ கொண்டிருத்தல் வேண்டும்.
- o உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுடன் தொழில்நுட்ப விபரக்குறிப்புக்களின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள உத்தரவாதங்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரருக்கான தகுதித்தன்மை தகவுத்திறன்:

1. கடந்த 5 வருடங்களில் விலைமனுதாரரானவர் இலங்கை நிகரான கொள்ளளவுகளில் பயிற்சி உபகரணங்களின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தலை சித்திகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கடந்த 5 வருடங்களாக இலங்கையில் இந்த செயற்பாட்டில் விலைமனுகூறப்பட்ட வர்த்தக உரிமைப் பெயருடன் விற்பனைக்கு பிந்திய சேவை வசதிகளுடனான உள்ளூர் முகவரொருவரை கொண்டிருத்தல் வேண்டும்.
3. கடந்த 3 வருடங்களில் விலைமனுதாரரின் நிதிப்புரள்வானது சாதகமானதாக விருத்தல் வேண்டும்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக திணைக்கள பெறுகைக் குழுவானது அனைத்து அல்லது எந்தவொரு விலைமனுவையும் அல்லது விலைமனுவின் பகுதியை மாத்திரம் ஏற்றுக் கொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பெறுகைக்கான முகாமையாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி: 0112887585).

**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்

# பட்ஜெட் 2024
# சுற்றுச் சுழலுக்குப் பொறுப்பான நாடொன்றுக்கான முன்மொழிவுகள்

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 13.11.2023 நண்பகல் 12 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின் கொண்டு வரப்படும் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் நாட்டில் அனைத்து தரப்பினரதும் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. அரசியல் நோக்கங்களுக்காக மாயைகளைப் பரப்புவதை நிறுத்துமாறும், அரசியலை விட நாட்டைப் பற்றி சிந்தித்து நாட்டை உயர்த்துவதற்கு அனைவரும் தம்மை உண்மையாக அர்ப்பணிக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

அரச சேவையாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்க வேண்டுமாயின் அரச வருமானத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது நாணயம் அச்சிடப்பட வேண்டும், அல்லது கடன் பெற வேண்டும். ஒரு தரப்பினரை மட்டும் திருப்திப்படுத்துவது சமவுடைமை கொள்கைக்கு எதிரானது. சம்பளத்தை அதிகரிக்குமாறு ஒரு தரப்பினர் போராடுகின்றார்கள். அரச சேவையாளர்கள் மட்டுமல்ல. ஒட்டுமொத்த மக்களும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். அரச சேவையாளர்களுக்கு ஒரே கட்டத்தில் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, அரச துறையின் மாதாந்த சம்பளத்திற்காக 93 பில்லியன் ரூபா காப்புறுதி, மருந்துகள், ஒய்வூதியம் உட்பட பொதுநல செலவுகளுக்கு 30 பில்லியன் ரூபா, கடன் வட்டி செலுத்த 220 பில்லியன் ரூபா என 03 பிரதான செலவுகளுக்காக மட்டும் அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் 383 பில்லியன் ரூபாவை செலவிடுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

2021ஆம் ஆண்டுக்குள் 900 பில்லியன் ரூபாவாக இருந்த வங்கி மிகைப்பற்று 70 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி தெரிவித்தார். அரச வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% இலிருந்து 15% ஆக அதிகரிக்காவிட்டால் நாடு மீண்டும் பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஒரு சில குழுக்களின் எளிய மற்றும் அழகான வாக்குறுதிகளால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது எனவும் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடம் புரண்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை கடந்த வருடத்தில் மீண்டும் சரியான பாதையில் தூக்கி நிறுத்த முடிந்ததாகவும், அதற்காக மக்கள் கடுமையாக உழைத்த போதும் சில தரப்பினர் நாட்டை பின்நோக்கி இழுக்க முயற்சித்ததாகவும் குறிப்பிட்டார். கற்பனைக் கதைகளால் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது




எனவும் நீண்ட காலமாக அரசியல் கட்சிகள் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளின் இறுதி முடிவு நாட்டை வங்குரோத்து அடையச் செய்ததாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, துரதிர்ஷ்டவசமாக நாட்டில் உள்ள சில தரப்பினர் இதனை இன்னும் புரிந்து கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கடினமான பாதையில் நாம் தொடர்ந்து பயணித்தால் சிறந்த பொருளாதாரத்தை விரைவில் உருவாக்க முடியும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, கடந்த வருடத்தை திரும்பிப் பார்க்கும் போது நாடு சரியான பாதையில் செல்வது 100% உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இதுவரையான பயணத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் பாடுபடுவதாகத் தெரிவித்தார்.

பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்கமாக குறைக்க முடிந்தால் பணவீக்கத்தின் தாக்கத்திலிருந்து நாட்டை மீட்க முடிந்துள்ளதாக உரையின் போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை மீட்டெடுப்பது மிகவும் கடினமான செயற்பாடு என்று தெரிவித்த ஜனாதிபதி, ஆட்சியைக் கைப்பற்றும் அரசியல் நோக்கத்துடன் மக்களிடையே நிவாரணம் வழங்கும் கனவு மாளிகைகளை நிர்மாணித்தால், நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்கே தள்ளப்படலாம் எனவும் தெரிவித்தார். இதுவரையான பயணத்தின் வெற்றிக்கு அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டமே காரணம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதன் ஊடாக 2022ஆம் ஆண்டைப் போன்று பொருளாதார நரகத்தில் வீழ்ந்துவிடாமல் முன்நோக்கிச் செல்வதற்கு அடித்தளமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் நட்டத்தை ஈடுசெய்ய அரச வங்கிகளில் தொடர்ச்சியாக கடன்களைப் பெற்று வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த நிலைமையினால் அந்த வங்கிகள் பலவீனமடைந்து வீழ்ச்சியடைவதைத் தடுக்க மக்களின் வரிகளைப் பயன்படுத்த அரசுக்கு நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

குறைந்த செலவில் பாரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை பிரதான கட்டமைப்புடன் இணைப்பதற்குத் தேவையான அனைத்து சட்ட ரீதியான தடைகளும் நீக்கப்பட்டுள்ளதாகவும், செயற்றிறனற்ற மின்சார சபையை வினைத்திறன்மிக்க நிறுவனமாக மறுசீரமைப்பதற்கான ஒழுங்குவிதிகள் தற்போது வகுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் வரி விலக்குகள் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், அதன் ஊடாக அரச வருமானம் அதிகரிக்கும் போது அதனை விட அதிகமான வரிச் சலுகைகளை வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

**நிதி ஒருங்கிணைப்பு**

அரசாங்க வருவாயை செலவினங்களுடன் சீரமைத்தல், பட்ஜெட் ஒழுக்கத்தை மேம்படுத்துதல், வருவாய் சேகரிப்பை மேம்படுத்துதல் மற்றும் செலவினங்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் இலங்கையில் நிலையான நிதிக் கொள்கையை அடைதல்.

நிதிக் கட்டுப்பாடு / ஒழுக்கம்

அரசாங்க செலவுகள் மற்றும் கடன் வாங்குதல் ஆகியவற்றில் உச்ச வரம்புகள் அமுல்படுத்துவதன் மூலம் நிதி ஒழுக்கத்தை உறுதி செய்தல் மற்றும் பொது நிதிகளை பொறுப்புடன் நிர்வகிப்பதற்கான கட்டமைப்பை வழங்குதல்.

**பொருளாதார ஸ்திரத்தன்மை**

உட்கட்டமைப்பு, சமூக பாதுகாப்பு கட்டமைப்பு, கடன் மேலாண்மை மற்றும் பணவீக்கக் கட்டுப்பாடு ஆகியவற்றில் மிகுந்த கவனம் செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சி, பணவீக்கக் கட்டுப்பாடு மற்றும் நிலையான பொது நிதி ஆகியவற்றுக்கு இடையே சமநிலையை அடைதல்.

வரி முன்மொழிவுகள் வரி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

**வருமான வரி**

NGJA – (National Gem & Jewellery Authority) நடத்துகின்ற ஏலத்தில் விற்கப்படும் இரத்தினங்களின் விற்பனை விலையில் 2.5% WHT விலக்கு தொடர்பான சிறப்பு வரி ரிட்டர்ன் (Return) சமர்ப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

WHT சான்றிதழை நிறுத்தி வைத்திருப்பவருக்கு கட்டணம் வசூலிக்காமல் வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட தகவலைச் சமர்ப்பிக்கும் யூனிட் அறக்கட்டளைகள் (Unit Trusts) மட்டுமே தகுதியான வணிகத்தை நடத்துவதாகக் கருதப்படும்.

வரிக் கணக்குகள் மற்றும் வரி அதிகாரிகளுக்குத் தேவைப்படும் தகவல்களைச் சமர்ப்பிக்காத நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர சிறப்பு தண்டனை விதிகள் (Special Penal Provision) அறிமுகமாக்கப்பட்டுள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க...)

---

தமிழ் ஆராய்ச்சி மாநாடு
2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 14

# "கள்ளிக்காட்டு இதிகாசம்" "கருவாச்சிக் காவியம்" இரண்டும் இதிகாசங்களாகவே பார்க்கப்படுகின்றன

ஆன்மிக செயற்பாடுகளில் மிக ஆர்வம் கொண்ட ஒருவராக பார்வதி இராஜேந்திரன் அம்மையாரை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. கோலாலம்பூர் பத்து முருகன் ஆலய வளாகம் முழுதும் வழிபாட்டில் ஈடுபட்டு வந்தார். ஆன்மிக ஈடுபாட்டின் மொத்த உருவையும் அவரில் காண முடிந்தது. வழிபாட்டை திருப்திகரமாக முடித்து அம்மையார் ஆறுதலாக அமர்ந்திருந்த நிலையில் வணக்கம் கூறி என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். வணக்கம் ஐயா, என மிக அன்பான வார்த்தைகளோடு தொடர்ந்த உரையாடல் மாநாடு நிறைவுற்றும் தொடர்கிறது. எனது தொடர்பு எண்ணை பெற்றிருந்த நிலையில் ஊருக்கு சென்றவுடனேயே வட்சப் மூலமாக நலன் விசாரித்து செய்தி அனுப்பியிருந்தார்.

பார்வதி இராஜேந்திரன் அம்மையார் இலக்கியம், மெய்யியல் ஆகிய துறைகளில் முதுநிலை பட்டத்தை பெற்றிருந்தார். "குயின் மீரா" சர்வதேச பாடசாலையின் பேராசிரியராக கடமையாற்றும் அம்மையார் சிறந்த பேச்சாளுமையைக் கொண்ட நபராக தடம் பதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆன்மிகம், தமிழியல் குறித்த விடயப்பரப்புடன் கூடிய தலைப்புகளில் இவருடைய உரைகள் ஊடகங்களில் மிகப் பிரசித்திப்பெற்று விளங்குகின்றன. மெய்யியல் துறையில் இவர் பெற்ற நிபுணத்துவம் "ஜெயித்துக் காட்டுவோம்" "வெற்றி நிச்சயம்" போன்ற தொடர் உரையாடல் அலகுகள் ஊடகங்களில் மிகப் பிரசித்தம் பெற்றதாக விளங்குகின்றன. பக்தி இலக்கியங்கள் தொடர்பில் "திருப்புகழ்" "திருமந்திரம்" "திருக்குறள்" போன்ற இலக்கியங்கள் தொடர்பில் அவரது முன்வைப்புகள் குறிப்பிடத்தக்கவைகளாகின்றன. விஜய், கலைஞர் தொலைக்காட்சிகளில் அவரது உரைகள் முக்கியம் இடம் பெறுகிறது. கோச்சடை மதுரையில் வசிக்கும் அம்மையார் "தமிழ்ப் புதையல்" எனும் யூடியூப் செனலை சொந்தமாக வைத்திருக்கும் நிலையில் பல செனல்களிலும் வலம் வரும் ஆளுமையாவார். தமிழ் தொன்மங்கள் தொடர்பிலும் தமிழர் பண்பாட்டியல் தொடர்பிலும் மிக உணர்வு பூர்வ ஈடுபாட்டைக் கொண்டவராகவும் அவரை அடையாளப்படுத்த முடிந்தது.

பதினோராவது தமிழாராய்ச்சி மாநாட்டில் "கருவாச்சி காவியத்தில் தமிழக நாட்டுப்புறப் பெண்களின் சிக்கல்கள்" எனும் தலைப்பில் ஆய்வுரையை முன் வைப்பது தொடர்பிலும் விபரித்தார். கவிஞராக, பத்தி எழுத்தாளராக, கட்டுரையாளராக நன்கு அறியப்பட்ட வைரமுத்துவை, நாவலாசிரியராக வேறு ஒரு பரிமாணத்தில்





அடையாளப்படுத்தியதில் "கள்ளிக்காட்டு இதிகாசம்" "கருவாச்சி காவியம்" என்பன முக்கிய பங்கினை வகிக்கின்றன எனலாம். "கருவாச்சி காவியம்" நாவல் ஊடாக தமிழக கிராமப்புர பெண்களின் சிக்கல்களை எடுத்துரைக்கும் முனைப்போடும் அது பற்றிய சம்பாசணைக்கான களத்தை உருவாக்கும் நோக்கோடும் இவரது ஆய்வு நோக்கத்தை அறிய முடிந்தது. அவ் ஆய்வுரைபற்றிய அம்மையாரின் பின்வரும் முன்வைப்புகள் மனதில் அழுத்தமாக பதியும் வகையில் அமைந்திருந்தது. "வைரமுத்து படைப்புகள் வறுமையில் வாழ்கின்ற தான் வாழ்ந்த கிராம மக்களின் வாழ்வியலைப் பதிவுசெய்கின்றது. வானம் பார்த்த மண்ணாக இருக்கும் நிலத்தில் அடிப்படை வசதிகளைக் கூட நிறைவேற்ற முடியாத நிலையில் வறுமையை மட்டுமே வாழ்க்கையாகக்கொண்டு போராடும் மக்களின் வாழ்வியல் சிக்கல்களைக் கருவாச்சி காவியம் பதிவு செய்கின்றது. உறவு என்ற பெயரில் கருவாச்சியை கட்டையன் ஏமாற்றி திருமணம் செய்து பாலியல் வன்கொடுமை செய்து தீர்த்துக் கட்டுகின்றான். கணவனால் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டாலும் தன்னம்பிக்கை மட்டும் தளராமல் தன் கணவனையும் வறுமையையும் எதிர்த்துப் போராடும் பெண்ணாகக் கருவாச்சியின் பாத்திரம் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. கணவனால் மட்டுமல்லாமல் தன் மகனாலும் பல்வேறு இன்னல்களை அனுபவிக்கும் நிலைக்குக் கருவாச்சி தள்ளப்படுகின்றாள். தனி ஒரு பெண்ணாக வாழ்க்கையோடு போராடும் கருவாச்சியின் வாழ்வியல் சிக்கல்களை ஆய்வதை கிராமப்புற பெண்களின் வாழ்க்கையோடு சோதித்துப் பார்ப்பதும் தனது ஆய்வின் எதிர்பார்ப்பு என்றார். பெண்ணியவாதிகளின் கருத்துக்களோடு கருவாச்சி காவியம் எடுத்துரைக்க விளையும் கருத்தியல் தொடர்பிலான பார்வையையும் தெளியுறுத்தும் போக்கும் அவரில் மேலோங்கியிருந்தது.

பெண்ணியவாதிகளின் கருத்துக்கள் சைமன் டி பெவாயர் என்னும் பெண்ணியவாதி பெண்ணின் விடுதலையைப் பற்றி கூறும் நிலையில், "பெண்ணோ, ஆணோ சமுதாயத்தில் பெண்களின் நிலையை மாற்றப் போராடுவதோடு, வகுப்பு வேறுபாடின்றி எல்லா நிலைகளிலும் பெண்களின் உயர்வுக்கு உழைப்பவராக இருக்க வேண்டும்" என்று கூறுகின்றார்.

பெண்ணியவாதிகள் ஆண்களுக்கு எதிரானவர்கள், எதையும் எதிர்க்கும் குணம் கொண்டவர்கள் என்ற தவறான கண்டோட்டம் சமூகத்தில் நிலவுகின்றது.

"பெண்ணியவாதிகள் ஆண்களை வெறுப்பவர்கள் அல்லர். ஆணாதிக்கத்தையும், ஆண் என்னும் அகம்பாவத்தையும் வெறுப்பவர்கள். ஏனெனில், இத்தன்மைகள் தான் ஆண் மேலாதிக்கமாகவும், சுயநலமாகவும், ஆக்கிரமிப்பாகவும், கொடுமையாகவும் வெளிப்படுகின்றன. இதனால் பெண்களைச் சமமாக மதிக்காது, பெண்கள் தங்களின் சொத்து அல்லது பொருள் எனக் கருதி செயற்படுகின்ற ஆண்கள், பெண்ணியவாதிகளின் எதிரிகளாகின்றனர். பெண்ணியவாதிகள் பெண்ணியக் கருத்துக்களை ஆதரிக்கும் ஆண்களுடன் சேர்ந்து செயற்படவே விரும்புகின்றனர். ஆனால் அவ்வாறான ஆண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இதற்குக் காரணம் ஆண்களும், பெண்களும் வளர்ந்து வரும் சமூகச் சூழ்நிலைகளேயாகும். பெண்களின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் ஆண்களுக்கு எதிரானவை என்ற எண்ணமே ஆண்களின் கருத்தில் மேலோங்கி நிற்கின்றது. அதனால் பெண்ணினத்தைக் கண்டு அவர்கள் அஞ்சுகின்றனர். அன்றியும் ஆண்களைப் பொறுத்தவரையில் தாங்கள் இதுவரை அனுபவித்து வந்த அதிகாரங்களை அவர்கள் இழக்க விரும்பவில்லை.

பெண்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் பல்வேறு போராட்டங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை இருக்கின்றது. பெண்களுக்கு அனைத்து வகையிலும் ஆண்களுக்கு இணையான சமூக மதிப்பு வேண்டும் என்று பெண்ணியவாதிகள் தொடர்ந்து போராடி வருகின்றார்கள். ஆனால் அந்தப் போராட்டங்கள் ஆண்களிடையே வெறுப்பையே உண்டாக்குகின்றது. உறவுகளுக்குள் பாதுகாப்பு இருக்கும் என்று நினைத்தால் கணவனாலேயே பெரும்பாலான பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதைக் கருவாச்சியின் வாழ்க்கை உணர்த்துகின்றது. கட்டையன் கருவாச்சியை பாலியல் வன்கொடுமை செய்து தீர்த்துக்கட்டுவதோடு மட்டுமல்லாமல் கருவாச்சியின் வாழ்வியல் ஆதாரங்களை அழிப்பது ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாக அமைகின்றது. ஆனால் கட்டையன் கொடுக்கும் இன்னல்களை ஒரு பொருட்டாக நினைக்காமல் எந்த நிலையிலும் வாழ்ந்து காட்ட வேண்டும் என்று நினைக்கின்ற கருவாச்சியின் வாழ்க்கை பெண்ணினத்திற்குச் சான்றாக அமைகின்றது. பெண்களுக்கு வாழ்க்கையில் உறவுகளாலும் சமுதாயத்தாலும் தொடர்ந்து தடைகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அந்த தடைகளைக் கண்டு துவண்டுவிடாமல் தடைக்கற்களைப் படிக்கட்டுகளாக மாற்றி அதில் ஏறிச்செல்லவேண்டும் என்பதைக் கிராமத்தில் படிப்பறிவு என்பதே இல்லாத பெண் கருவாச்சி வாழ்ந்து காட்டுகின்றாள். எந்த நிலையிலும் நேர்மையான வழியைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதைக் கருவாச்சியின் வாழ்க்கை ஒவ்வொரு பெண்ணிற்கும் உணர்த்துகின்றது.

உலக இயங்கியலில் அதிகார கட்டமைப்புகளை ஜனநாயகப்படுத்தும் முனைப்பில் நாவல் இலக்கியம் முக்கிய பங்காற்றியுள்ளது. ஒவ்வோர் தேசமும், ஒவ்வொரு சமூகமும், ஒவ்வோர் இனக்குமுமமும் சுயம் சார்ந்த தனித்துவத்தில் விடுதலையையும் விமோசனத்தையும் பெற்ற வரலாற்றை பதிவதிலும் போதிப்பதிலும் இந்த நாவல் வடிவம் மிக முக்கியத்திற்குரியதாக விளங்குகிறது. தமிழில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியம் என்பதாகவே வரலாறு சொல்லி நிற்கிறது. "கள்ளிக்காட்டு இதிகாசம்" "கருவாச்சிக் காவியம்" போன்றவற்றையும் இரட்டைக் காப்பியங்களாகவே பார்க்கும் சாராரும் உள்ளார்கள். இது தொடர்பில் வேறுபட்ட விமர்சன நிலைகளையும் நோக்கலாம்.

தென்னிந்திய தமிழர்களுடன் தொப்புள்கொடி உறவுடன் தொடர்புபட்ட ஒரு சமூகமாக இலங்கையில் வாழும் மலையக சமூகம் தொடர்பில் அவரது புரிதலை அறியும் ஆவலுடனும் எனது உரையாடல் வியூகம் அமைந்திருந்தது. இருநூறு வருடங்களுக்கு முன்பு தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த சமூகம்தான் "மலையக சமூகம்" உருவாக்கத்தின் நீட்சி நிலையாக தொடர்கிறது என்பதை வலியுறுத்தினேன். நாவலோடும், இலக்கியத்தோடும் அதீத ஈடுபாடு கொண்டிருந்த அம்மையாருக்கு அதன் வழியில் மலையக சமூக இருப்பை தெளிவுறுத்தும் பணி தொடர்ந்தது. இவ்விடயம் தொடர்பாக அவரின் ஆர்வ மேலோங்கல் எனக்குள்ளும் மிகுந்த தெளிவை பிறப்பித்தது.

2017ஆம் ஆண்டு எனது மதுரை விஜயம் தொடர்பிலான ஞாபகம் மீட்புக்கு வந்தது. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம். முத்தமிழ் கல்லூரி, முதுகலை பயின்ற மாணவர்களுக்கான கருத்தரங்கில் அவர்களுக்காக உரையாற்றும் வாய்ப்புக் கிட்டியது. அச்சந்தர்ப்பத்தில் அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்தவனாக எனது உரையை இவ்வாறு தொடங்கினேன். டைட்டானிக் கப்பலை பற்றி தெரிந்தவர்கள் கைகளை உயர்த்திக் காட்டுங்கள் என கூறியதற்கு அமைய அரங்கில் இருந்த அனைவரும் கைகளை உயர்த்தி ஆரவாரித்தார்கள். தொடர்ந்து "ஆதிலட்சுமி" கப்பலை தெரிந்தவர்களை கையை உயர்த்திக்காட்டுமாறு பணித்தேன். அரங்கு மிகவும் மௌனித்துப்போனது. பின்னர் இருநூறு வருட வரலாற்றின் தடங்களை எடுத்துரைப்பதாக எனது உரை தொடர்ந்தது. அரங்கில் செவிமடுத்திருந்த மாணவர்களிடம் மலையக சமூகம் குறித்த விடயப்பரப்புகளையும் ஆய்வுத் தலைப்புகளாக தெரிவு செய்யுமாறு வேண்டிக்கொண்டேன். என்னோடு இணைந்திருந்த மற்றுமொரு உரையாளர் நண்பர் வே.இராமர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எம்மோடு மதுரை விஜயத்தில் இணைந்திருந்த மலையக மூத்த எழுத்தாளர்கள் முக்கிய நிகழ்வுகள் என எம் இருவரையும் தவிர்த்திருந்த நிலையில் அதைவிட முக்கியமாக அமைந்துபோன அந்த இரண்டு நாள் நிகழ்வுகள் என்னையும் நண்பர் இராமரையும் மெய்சிலிர்க்க வைத்தமை குறிப்பிடத்தக்கது.

மலையக நாவல்கள் பல பெண்ணியப் பார்வையில் நோக்கத்தக்கதாக இருக்கின்றன. "கருவாச்சிக் காவியம்" போன்று தனித்துவமாக மிளிரக்கூடிய சம்பவங்களை மலையகம் கொண்டிருந்த போதிலும் அவ்வாறான "நாவல்" உருவாக்கத்தை இதுவரையில் மலையகம் பெறாமல் இருப்பதும் கவலைக்குரிய விடயமாகவே அமைகிறது. பெருந்தோட்டத்துறை பொறிமுறையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் இச் சமூகம் முதலாளிகளுடனான முரண்பாட்டுச் சூழலில் "ஆராயி" என்ற பெண் தொழிலாளி ஸ்தலத்திலேயே வீரச்சாவடைந்த வரலாறையும் மலையகம் கொண்டமைந்துள்ளமை கவனிக்கத்தக்கது. மீனாட்சியம்மாள், சிவபாக்கியம், பெரியக்கா, நல்ல சிவம் போன்ற பெண் ஆளுமைகள் மலையக சமூக உருவாக்கத்தில் முக்கிய மைல்கற்களாகவே அமைகிறார்கள்.

**பயணம் தொடரும்...**

# கார்த்திகை சோமவார விஷேட சங்கு பூசையும் அபிஷேகமும்



கார்த்திகை சோமவாரம், பௌர்ணமி திதி, நாளை காலை 9 மணிக்கு, கொட்டாஞ்சேனை ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய, ஐங்கரன் மண்டபத்தில் அமைந்துள்ள சாயி நாதனின் சரணாலயத்தில், 108 சங்குகளால் அபிஷேகமும், பூசையும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சங்கு மிகவும் புனிதமான பொருளாக கருதப்படுவது யாவரும் அறிந்ததே. கடலில் பிறக்கும் சங்குகளில், மணிசங்கு, துவரிசங்கு, பாருதசங்கு, வைபவசங்கு, பார்துயிலா சங்கு, வெண்சங்கு, பூமா சங்கு மற்றும் திரிசங்கு என்று எட்டு வகைகள் உள்ளன. இச்சங்குகள் ஒவ்வொரு தெய்வங்களின் கரங்களிலும் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. சிவாலய சங்காபிஷேகங்களின் போது வலம்புரி சங்கு சிவனின் அம்சமாகவும், இடம்புரி சங்கு சக்தியின் அம்சமாகவும் நடுநாயகமாக பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதிக்கப்படுகின்றன. சங்கை வீட்டில் வைத்து வழிபட்டு வந்தால், மகாலட்சுமி கடாட்சமும் சகல ஐஸ்வரியங்களும் நம்மை வந்தடையும். தோஷங்கள், முக்கியமாக, வாஸ்து அல்லது பிரம்மஹத்தி தோஷங்கள் இருந்தால் விலகிவிடும் என்று வேத வாக்கியம் சொல்கிறது.

**"சங்க மத்யே ஸ்திதம் தோயம் ப்ராமிதம் சங்கரோபரி**
**அங்க லக்ஷ்ணம் மனுஷ்யானாம் ப்ரம்மஹத்யாதிகம் தஹேத்"**

சங்கில் நீர் நிரப்பி மஞ்சளும் துளசியும் இட்டு அந்த தீர்த்தத்தை வீட்டில் தெளித்தால் குறைகள் யாவும் நீங்கிவிடும். சங்காபிஷேக தரிசனத்தை காண்பதே பெரும் புண்ணியம் தரும். முக்கியமாக கார்த்திகை மாதம் வரும் திங்கட் கிழமைகளில் அதாவது சோமவாரத்தில் நம் இஷ்ட தெய்வத்திற்கு சங்கு தீர்த்த அபிஷேகம் செய்தால், தெய்வப் ப்ரீதியும் அநுக்கிரகமும் கிடைக்கும், நம் சங்கடங்கள் விலகும்.

இவ்வளவு சிறப்புடைய சங்குக்கு பக்தர்கள் அவரவர் கைகளாலேயே பூஜை செய்து அதில், புண்ணிய தீர்த்தமிட்டு, சற்குரு சீரடி பாபாவிற்கு அபிஷேகமும் செய்ய குருவருள் கூடியிருப்பது, நாம் முன் செய்த புண்ணியமே. பூசையின் பின், அவரவர் பூஜித்த சங்கை தத்தமது வீடுகளுக்கு எடுத்துச் சென்று பூஜை அறைகளில் வைத்து வழிபடலாம். சீரடி சாயி சத்சரித்திரத்தில், பஞ்ச மகா யக்ஞங்கள் மிக எளிதாக பாபாவால் விளக்கப்பட்டுள்ளன. உலகில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அனைத்துக்கும், நாம் அறங்காவலர்கள், உரிமையாளர்கள் அல்ல என்று இரபீந்திரநாத் தாகூரும் சொல்லி இருக்கிறார். கடல் வாழ் பிராணிகளுக்கு நாம் அறிந்தோ அறியாமலோ இடர் விளைவித்திருந்தோமானால், அக்குற்றத்தை மன்னித்து, கடலையும், ஜீவராசிகளையும், நம்மையும் ரட்சிக்கும்படி வேண்டுவதே. இப்பூசையின் நோக்கமாகும். பக்தர்கள் இப்புனித பூசையில் கலந்துகொண்டு, சாயி நாதனின் அருள் பெறுமாறு கொட்டாஞ்சேனை ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய, ஐங்கரன் மண்டபத்தில் அமைந்துள்ள சாயி நாதனின் சரணாலய அறங்காவலர்கள் வேண்டிக்கொள்கிறார்கள்.

# வாழ்க்கை

**கவிஞர். எஸ்.ரபீக்**

ஒரு முட்காடு
ஆனாலும்
பூப்பறிக்கிறேன்...

வாழ்க்கை
ஒரு பாலைவனம்
ஆனாலும்
பயிர் செய்கிறேன்...

சிறகுகள்
வேதனை வலையில்
சிக்குண்டாலும்
பறவையின் எண்ணமெல்லாம்
வானம் முழுவதும்
வலம் வருவதுதான்...

இலக்கு வங்கியில்
முதலீடு செய்துகொண்டே
இருக்கிறேன்
முயற்சி எனும்
மூலதனத்தை...
மனதின்
காயங்களுக்கு
களிம்பாகி விடுகிறது
விழிகள் பொழியும்
கண்ணீர்த்துளிகள்...

விதி போடும்
புதிருக்கு
யாரால்தான்
பதில் கூறமுடியும்...?

இலையுதிர் காலம்
இல்லையென்றால்
வசந்தகாலத்தின்
பெருமைதனை
யாரறிவார்...?
ஒரு காரிருள்
பல கோடி
மழை மாணிக்கங்களை
மண்ணில் சொரிகிறது...

ஒரு சிறு தோல்வி
பல நூறு வெற்றிகளை
நமக்குச் சீதனமாய்த்
தருகிறது...

என் கவலைகளுக்கு
நிறைய நான்
நன்றி சொல்ல வேண்டும்
அவைகள்தான்
என்னைக்
கவிஞனாக்கின...

என் கவிதைகள்
காலைத் தென்றல் போல்
படிப்பவர் இதயங்களை
வருடிவிடும்...
சோகங்களின்
சுமையினால்
நலிந்து போனவர்களுக்கு
நம்பிக்'கை' கொடுத்து
தூக்கிவிடும்....

வாழ்வின்
இருள் சூழ்ந்த
சாலைகளில்
என்னை
வழிமறிக்கும் இடர்களையெல்
லாம்
சுடர்களாக்கிக் கொண்டு
என் பயணத்தைத்
தொடர்கிறேன்...

# பதினாறு ஜனாதிபதி விருதுகளை வென்றுள்ள MAS Holdings

உலகளாவிய ஆடை மற்றும் ஜவுளி நிறுவனமான, MAS ஹோல்டிங்ஸ், அதன் துணை நிறுவனங்களான MAS Active Trading (Pvt) Ltd மற்றும் MAS Intimates (Pvt) Ltd ஆகியவற்றின் மகத்தான சாதனையை பாராட்டும் வகையில் 2021/22 மற்றும் 2022/23 ஆம் ஆண்டிற்கான பிரசித்தி பெற்ற ஜனாதிபதி ஏற்றுமதி விருது வழங்கும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டது.

இலங்கையின் ஏற்றுமதித் துறையில் நிறுவனத்தின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக, MAS Active ஆனது 2021/22 மற்றும் 2022/23 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதியாளர் (overall exporter of the year) விருதையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த இரண்டு மிகவும் வரவேற்கப்படும் விருதுகளுடன், MAS Active மற்றும் Intimates இணைந்து, நிகழ்வில் மொத்தம் 16 விருதுகளைப் பெற்றன.

இலங்கையின் ஏற்றுமதித் துறைக்கு MAS இன் பங்களிப்புகளுக்கான இந்த அங்கீகாரம், நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு தொழில்துறை முன்னோடியாகவும் முக்கியமான பங்காளராகவும் கம்பனியின் நிலைப்பாட்டையும் உறுதிப்படுத்துகிறது.

MAS Active (Active மற்றும் KREEDA பிரிவுகள்), 2021/2022 மற்றும் 2022/23 ஆகிய இரண்டுக்கும் இலங்கையின் ஒட்டுமொத்த ஏற்றுமதியாளர் விருதை வென்று குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்தது.

2021/22 காலப்பகுதியில், நிறுவனத்தின் ஒட்டுமொத்த சந்தைப் பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதியாளர் மற்றும் வளர்ந்து வரும் சந்தைகளில் சிறந்த செயல்திறன் கொண்ட ஏற்றுமதியாளர் என்ற விருது வழங்கப்பட்டது. Active மேலும் ஆடைத் துறையில் மிகப்பெரிய பிரிவில் Merit விருதைப் பெற்றது.



MAS Active தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்தது மற்றும் ஏற்றுமதியின் நிலையான வளர்ச்சிக்கு பங்களித்ததற்காக பல விருதுகளை வென்றது, அத்துடன் ஆண்டின் புத்தாக்கமான ஏற்றுமதியாளர், வளர்ந்து வரும் சந்தைகளில் சிறந்த செயல்திறன் கொண்ட ஏற்றுமதியாளர் மற்றும் 2022/23 ஆம் ஆண்டிற்கான ஆடைத் துறை பெரிய அளவிலான பிரிவில் சிறந்த ஏற்றுமதியாளருக்கான விருதை வென்றது.

2021/22 காலப்பகுதியின் போது, MAS Intimates ஏற்றுமதி களத்தில் இணையற்ற சிறப்பை வெளிப்படுத்தியது. இந்த ஆண்டுக்கான நிகர அந்நியச் செலாவணி சம்பாதிப்பாளருக்கான ஒட்டுமொத்த விருதையும் நிறுவனம் பெற்றது மட்டுமல்லாமல், தயாரிப்பு பல்வகைப்படுத்தலில் சிறந்த ஏற்றுமதியாளர் என்ற பெரிய பிரிவில் விருதையும் பெற்றது.

# யாழ்ப்பாணத்தில் விபஸ்ஸனா தியான பயிற்சி முகாம்

## 2023 டிசம்பர் 05 முதல் 16வரை



சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தரால் போதிக்கப்பட்ட, பர்மாவைச் சேர்ந்த ஊ.பா.கினால் பரப்பப்பட்ட விபாசனாவை இந்தியா மற்றும் உலகம் முழுவதும் கற்றுத் தந்த எஸ். கோயங்காவின் விபஸ்ஸனா தியான முறை பற்றிய அறிமுகம், குருஜி எஸ் என் கோயங்காவின் வழிவந்த தியான ஆசிரியர்கள், மோகன் ராமசந்திரன், ஜானகி சுப்பிரமணியம், மற்றும் சிறுவர்களுக்கான தியான ஆசிரியர்கள் பாலசந்திரன் கிருஸ்ணமூர்த்தி, சரவணன் செல்வராஜ், சத்யவாணி முருகன் ஆகியோர் ஒன்றிணைந்து தமிழ், ஆங்கில மொழிகளில் டிசம்பர் 5 முதல் 16ம் திகதி வரை பத்து நாட்களுக்கு விபஸ்ஸனா தியான வதிவிடப்பயிற்சிகளாக நடத்தப்படவுள்ளன. இவர்களது பயிற்சிநெறியில் கலந்து கொள்ளும் 18வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அனைத்து தியான நிகழ்ச்சிகளும். உணவும், தங்குமிட வசதியும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், பாத்திமா ரிட்ரீட் ஹவுஸ் பண்டதரிப்பு எனுமிடத்தில் இப்பயிற்சி நடைபெறவுள்ளது. மனத்தூய்மைக்கான இந்த தியான பயிற்சி நெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக தகவல்களுக்கு 0773504491, 0716439454 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**எச். எச்.விக்கிரமசிங்க**

# நானுஓயாவரை தடைப்பட்ட ரயில் சேவை வழமைக்கு திரும்பியது

ஊவா சுழற்சி நிருபர்



ஒஹிய மற்றும் இதல்கஸ்ஹின்னவுக்கு இடையிலான ரயில் பாதையில் மண்மேடு சரிந்து விழுந்ததால் நானுஓயாவரை தடைப்பட்டிருந்த மலையகத்துக்கான ரயில் சேவை தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதாக, ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இந்த ரயில் பாதையில் கடந்த 22ஆம் திகதி மண்மேடு சரிந்து விழுந்ததைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த இரவுநேர தபால் ரயில், ஒஹிய ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டதுடன், பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த உடரட்ட மெனிக்கே ரயில் ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. தொடர்ச்சியாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கும் அனைத்து ரயில் சேவைகளும் நானுஓயாவரை மட்டுப்படுத்தப்பட்டன.

இந்நிலையில், தியத்தலாவை இராணுவ வீரர்களால் மண்மேடு சரிந்து விழுந்த ரயில் பாதை சீர்செய்யப்பட்டதை அடுத்தே அனைத்து ரயில் சேவைகளும் வழமைக்கு திரும்பியுள்ளதாகவும், ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்தது.

# பலஸ்தீனப் பிரச்சினை எங்களுக்கு முதன்மையானது

## மன்னர் ஸல்மான் உச்சிமாநாட்டில் கருத்து




பலஸ்தீனிய விவகாரம் தொடர்பாக, சவூதி அரேபியா இன்று நேற்றல்ல, ஆக்கிரமிப்பு தொடங்கியது முதல் இன்றுவரை, அம்மக்களுக்கான நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக, என்னென்ன முயற்சிகளை மேற்கொள்ள முடியுமோ அத்தனையையும் இராஜதந்திர ரீதியாக மேற்கொண்டு வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்கு வரலாறு மிகப்பெரிய சான்றாகும். சவூதியின் ஸ்தாபகத் தந்தையான மன்னர் அப்துல் அஸீஸ் காலத்திலிருந்து, சவூதி அரேபியா பலஸ்தீன பிரச்சினையை விவாதிக்க கி.பி. 1935 இல் லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்ட, வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்டு பலஸ்தீன மக்களுக்காக குரல் கொடுத்திருந்தது.

பலஸ்தீன மக்களின் உரிமைகளை பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட வலுவான முயற்சிகளில் ஒன்றாக, வரலாற்றில் இச்செய்தி நோக்கப்படுகிறது. பலஸ்தீன மக்களுக்கான சவூதியின் ஆதரவு தடையின்றி மேலும் தொடர்ந்தது. ஜூன் 1967 ல் சவூதி முழுவதும் பலஸ்தீன மக்களுக்காக நன்கொடைகள் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. சொற்ப நேரத்திலேயே 16 மில்லியன் ரியால்களுக்கு மேல் சேகரிக்கப்பட்டது.

1969 ஆம் ஆண்டில், அப்போதைய ரியாத் நகரத்தின் ஆளுனராக இருந்த மன்னர் ஸல்மான், பலஸ்தீன மக்களுக்காக நன்கொடை சேகரிக்கும் குறித்த குழுவின் தலைவருக்கு இரண்டு வகையான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை வழங்கியிருந்தார். முதலாவது, ஒவ்வொரு சவூதிப் பிரஜையும் தனது சம்பளத்தில் மாதாந்தம் 1% விகிதத்தை, பலஸ்தீன மக்களுக்கு வழங்குவதற்கான அழைப்பு. இரண்டாவது, தனிநபர்கள், தொழிலதிபர்கள், வணிக நிறுவனங்கள் தொடர்ச்சியான நன்கொடைகளை குறித்த அமைப்புக்கு வழங்கல். இதன் பலனாக 1988 இல் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக திரட்டப்பட்ட நிதியானது, 160 மில்லியன் ரியால்களை தாண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னர் சல்மான், சவூதி மன்னராக முடிசூடியதன் பின்னர் நடந்த 2017 அரபு உச்சிமாநாட்டின் போது "பிராந்தியத்தில் நடக்கும் மோசமான நிகழ்வுகள், பலஸ்தீன பிரச்சினையின் மையத்தன்மையில் இருந்து எம்மை திசைதிருப்பி விடக்கூடாது என்று குறிப்பிட்டதுடன் 2019 மக்காவில் நடந்த அவசர அரபு உச்சி மாநாட்டில் "பாலஸ்தீனப் பிரச்சினை எங்கள் முதல் பிரச்சினை" என்று வலியுறுத்தியதோடு, பலஸ்தீன மக்கள் தங்களிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகளைப் பெற்று, கிழக்கு ஜெருசலத்தை தலைநகரமாகக் கொண்ட சுதந்திர அரசை நிறுவும் வரை எங்கள் முயற்சிகளை கைவிட மாட்டோம் எனவும் சூளுரைத்தார்.

பலஸ்தீனில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த 1967ஆம் ஆண்டைய வரைபடத்துடன், கிழக்கு ஜெருஸலத்தை தலைநகராகக் கொண்ட பலஸ்தீன பூமியை உருவாக்க தேவையான நியாயமான உரிமைகளை பலஸ்தீன மக்கள் அடைந்து கொள்ள இரு நாடுகளின் தீர்வு தொடர்பான சர்வதேச தீர்மானங்களை செயல்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை என்பதே சவூதி அரேபியாவின் நிலைப்பாடாகும்

**. முஜாஹித் சுபைர் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி மூதூர்**

## ஆரோக்கியமான ஊடக... (02 ஆம் பக்க தொடர்ச்சி)

நாட்டில் பணம் இல்லை என்றால், கப்பலில் பெட்ரோலியம் கொண்டு வந்தாலும், அதற்குப் பணத்தைச் செலுத்தி விடுவித்துக் கொள்ள முடியாமல் போகும். எரிவாயு கப்பல் வந்தாலும் அதை வாங்க பணம் இல்லாமல் போகும். எனவே, வெளிநாட்டு சொத்துக்கள் மற்றும் வளங்கள் தொடர்பாக 2027ம் ஆண்டளவில் 3911 மில்லியன் டொலர்கள் போதுமானதாக இருக்காது.

2027ம் ஆண்டில், சர்வதேச பரிவர்த்தனைகளில் இலங்கைக்கு 3911 மில்லியன் டொலர்கள் பற்றாக்குறை ஏற்படும். 2027ம் ஆண்டில், அந்தத் தொகையை ஈடுகட்ட சர்வதேச நாணய நிதியத்தின் நீடிப்புக் கடன் திட்டத்திலிருந்து 329 மில்லியன் டொலர்கள் பெறப்படும்.

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் இங்கு உரையாற்றும் போது கூறியதாவது,

"ஒரு வருடத்துக்கு முன்னர் இந்த ஊடக அகடமி ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளை நினைத்துப் பார்க்கிறேன். ஊடக அகடமி தொடங்குவது என்பது லேக்ஹவுஸின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தின் ஆரம்பம் என்று அன்று நான் சொன்னது இன்று போல் எனக்கு நினைவிருக்கிறது. இன்று நாம் அந்த நோக்கத்தை அடைந்திருக்கின்றோம். தற்போது லேக் ஹவுஸ் ஊடக அகடமி என்ற பெயர் லேக் ஹவுஸ் நிறுவனத்திற்கு சொந்தமான ஒரு தனியான நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று இரண்டு டிப்ளோமா பாடநெறிகளுடன், பல ஒரு நாள் செயலமர்வுகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, இந்தப் பாடநெறிகளுக்காக NVQ நிலையினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை தொலைக்காட்சி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி உட்பட பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதற்கான பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. அதேபோன்று லேக் ஹவுஸ் ஊடக அகடமியை ஊடகப் பல்கலைக்கழகமாக ஆக்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் குறித்து தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

அதேபோன்று 2024ம் ஆண்டில் லேக்ஹவுஸ் நிறுவனத்துக்கு நிதிசார் பலத்தினை வழங்கும் வலுவான துறைகளில் ஒன்றாகவும் ஆக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பப் புரட்சி, புதிய பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட அனைத்து ஊடகத் துறையும் சவால்களுக்கு உள்ளாகியுள்ள தருணத்தில் பாரம்பரிய ஊடக கட்டமைப்பை தைரியமாக மாற்றியமைத்து அதன் மூலம் லேக்ஹவுஸை ஊடக நிறுவனங்களில் முன்னணிக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். லேக்ஹவுஸ் நிறுவனம் புதிய நோக்கிற்கான பயணத்தில் ஊடக அகடமியை ஆரம்பிப்பதற்கு எமக்கு வழிகாட்டுதலையும், தேவையான பலத்தையும் வழங்கியமைக்காக முன்னாள் தலைவரும், ஊடகத் துறை அமைச்சின் செயலாளருமான அனுஷ பல்பிட்டவை இத்தருணத்தில் மிகுந்த மரியாதையுடனும் அன்புடனும் நினைவுகூருகின்றேன். கலாநிதி பந்துல குணவர்தன எனது பொருளியல் பாட ஆசிரியராகும். அன்று நீங்கள் கற்பித்த தத்துவார்த்த அறிவை இன்று நடைமுறையில் பயன்படுத்துகிறேன்" என்றார்.

மிகவும் பொறுப்புமிக்க மற்றும் நம்பகத் தன்மையைக் கொண்ட பத்திரிகை, சஞ்சிகைகளை வாசிக்கும் இலட்சக் கணக்கான வாசகர்களுக்குத் தேவையான தகவல், அறிவு, புரிந்துணர்வு மற்றும் ரசனையினைக் குறைவின்றி வழங்கிய லேக்ஹவுஸ் நிறுவனம் இந்நாட்டு ஊடகத் துறையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கிய மிகமுக்கிய நிகழ்வாக லேக்ஹவுஸ் ஊடக அகடமியின் உருவாக்கம் அறியப்படுகிறது.

அதன்படி, 2022 செப்டெம்பர் 28ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊடக அகடமியினால் தற்போது பல டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் பல ஒரு நாள் பயிற்சி செயலமர்வுகளையும் ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. லேக்ஹவுஸ் ஊடக அகடமியினால் தனது அகடமியில் கற்கும் இளைஞர், யுவதிகளுக்கு அச்சு ஊடகத்தோடு தொடர்புடைய அறிவினை மட்டுமின்றி, தொலைக்காட்சி, வானொலி, டிஜிட்டல் மீடியா, கலைநிகழ்ச்சிகள், விளம்பரம் மற்றும் விளம்பரக் கலை போன்ற ஊடகத் துறையின் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய அறிவையும் புரிதலையும் வழங்குவதோடு, மிகவும் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஊடக தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறி மற்றும் டிஜிட்டல் ஊடக தொடர்பாடல் டிப்ளோமா கற்கை நெறியை பயின்ற இளைஞர்களும் யுவதிகளும் அதற்கு சாட்சியாக உள்ளனர்.

இதற்கு மேலாக, தொலைக்காட்சி மற்றும் வானொலி அறிவிப்பு, செய்தி வாசிப்பு, பொதுப் பேச்சு, திருமண புகைப்படம் எடுத்தல், கட்டடக்கலை மற்றும் அரசாங்க வரிகள் உட்பட பல்வேறு துறைகள் தொடர்பான ஒரு நாள் பயிற்சி செயலமர்வுகள் லேக்ஹவுஸ் ஊடக அகடமியால் கடந்த காலத்தினுள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. லேக்ஹவுஸ் ஊடக அகடமியினால் நடத்தப்பட்ட பல்வேறு பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்ததுடன், தொடர்ந்தும் ஊடகத் துறையுடன் தொடர்புள்ள பாடநெறிகள், செயலமர்வுகள் மற்றும் வேறு துறைகளுடன் தொடர்புடைய பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளை ஏற்பாடு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ள பாடநெறிகளில் மாணவர்களுக்கு லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் வளரும் ஊடகவியலாளர்களாக பணியாற்ற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், லேக்ஹவுஸ் ஊடக அகடமியினால் நடாத்தப்படும் கற்கைநெறிகளுக்கு புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

லேக்ஹவுஸ் ஊடக அகடமியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகத்துறை மற்றும் அதனோடு தொடர்புடைய அனைத்து பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளும் முறையான பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்களினதும், அச்சு, இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்கள் உள்ளிட்ட ஊடகத்துறைகளில் அனுபவம் வாய்ந்த மற்றும் புகழ்பெற்ற ஊடகவியலாளர்கள் பலரினதும் ஒத்துழைப்புக்களைப் பெற்றும் நடத்தப்படுவதோடு, விடயத்துடன் தொடர்புடைய பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளும் அந்த விடயங்களுடன் தொடர்புடைய அறிவினைக் கொண்டுள்ள மற்றும் நிபுணர்களின் ஒத்துழைப்பைப் பெற்று நடத்துவதற்கு லேக்ஹவுஸ் ஊடக அகடமி எதிர்பார்க்கின்றது.

டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வுடன், லேக்ஹவுஸ் ஊடக அகடமியின் உத்தியோகபூர்வ இணையத்தளமும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், இந்நிகழ்வில் கலந்துகொண்டமைக்காக லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்தினால் அமைச்சருக்கு நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கையின் அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றதோடு, இந்நிகழ்வில் ஊடகத் துறை அமைச்சின் மேலதிகச் செயலாளர் எம். எஸ். பீ. ஜயசுந்தர, அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் தனித் சிந்தக கருணாரத்ன, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் கலாநிதி பிரசாத் சமரசிங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டியூடர் வீரசிங்க, கலாநிதி சந்தன திலகரத்ன, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர்களான சிசிர பரணதந்திரி, மஞ்சுள மாகும்புர, கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, சட்டத்தரணி ஜனக ரணதுங்க, பொதுமுகாமையாளர் சுமித் கொத்தலாவள, கம்பனிச் செயலாளர் சுதர்ஷனி ஹேவாவசம், மேலதிக பொதுமுகாமையாளர் வீ. எஸ். பொயிஸ், பிரதி பொதுமுகாமையாளர்களான சந்தன பண்டார, சிந்தக யாப்பா, பிரமித்தா ஜயமக, தினமின பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மனோஜ் அபயதீர, சிலுமின பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தர்மன் விக்ரமரத்ன, டெய்லி நியூஸ் மற்றும் சண்டே ஒப்சர்வர் பிரதம ஆசிரியர் பிரமோத் டி. சில்வா, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

## மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்
## கொழும்பு பல்கலைக்கழகம்

**2024 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்**

2024 ஆம் ஆண்டிற்காக கீழே குறிப்பிட்டுள்ள அம்சங்கள், வேலைகள் அல்லது சேவைகளை கொழும்பு பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு நிறுவனத்துடன் தம்மை பதிவு செய்வதற்கு விரும்பும் அரசாங்க தாபனங்கள், புகழ்வாய்ந்த வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், உள்ளூர் முகவர்கள், விற்பனையாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளின் பெறுகை:

1. காகிதாதிகள் மற்றும் அலுவலக நுகர்வுப் பொருட்கள்
2. அலுவலக உபகரணம் மற்றும் வன்பொருட்கள்
3. அலுவலக தளபாடம் - பலகை/உலோகம்/பிளாஸ்டிக்
4. ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்
5. கற்றல் உபகரணங்கள்
6. மின்னியல் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்
7. மோட்டார் வாகன உதிரிப்பாகங்யகள்
8. சுகாதார சுத்திகரிப்பு அம்சங்கள்/முக்கியமான அம்சங்கள்
9. சமையலறை பாவனைப் பொருட்கள்/உபகரணங்கள் மற்றும் தளபாடம்
10. ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள்
11. கட்டிடப் பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு பொருட்கள்
12. அச்சடித்தல்
13. சேவைகளை வழங்கல்
14. ஏனைய வேலைகள்
15. சிவில் நிர்மாணங்கள், புதுப்பித்தல்கள், அலுமினியம், தரைசீராக்கல் மற்றும் ஏனைய வேலைகள்.

**https://pgim.cmb.ac.lk** என்ற பட்டப்பின்படிப்பு நிறுவன இணையதளத்தின் வழியாக விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பங்களை மூடும் திகதியானது 2023 டிசம்பர் 28 ஆம் திகதியென்பதுடன் தாமதமான அல்லது பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**பிரதி நிதியாளர்,**
**மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்,**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-00700.**
**தொலைபேசி: 011 26962760-112696261 நீடிப்பு: 166**

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவு
### பகிரங்க ஏலத்தில் பொருட்களை விற்றல்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவின் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பு பகுதிக்குச் சொந்தமான கழிக்கப்பட்ட பொருட்களை 2023.11.30 மு.ப. 10.00 இற்கு அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல் பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவின் எபரெக்க, கடவெத்துவவில் அமைந்துள்ள அலுவலக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் பகிரங்கமாக விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள கழிக்கப்பட்ட பொருட்கள்

1. அலுவலக தளபாடங்கள்
2. மின் துணைப்பாகங்கள்
3. கணனி துணைணப்பாகங்கள்
4. புல்வெட்டும் இயந்திரம்
5. கல்வனைஸ் செய்யப்பட்ட தகடு (Guardrail)
6. தீயணைப்பு உபகரணம்
7. பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ஏனைய கழிக்கப்பட்ட பொருட்கள்

ஏலவிற்பனை வளாகத்தில் பிரவேசிப்பதற்காக அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு மீளளிக்கப்படாத ரூ. 500.00 தொகையை (பெறுமதி சேர் வரி மற்றும் ஏனைய வரிகள் உட்பட) அன்றைய தினத்திற்கு அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவின் எபரெக்க அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

ஏலவிற்பனையுடன் சம்பந்தப்பட்ட கழிக்கப்பட்ட பொருட்களை 2023.11.29 மு.ப. 10.00 முதல் நன்பகல் 12.00 வரை அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பாரமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவின் பெரெக்க அலுவலக வளாகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக காசு செலுத்தி அன்றே அகற்றிக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அகற்றிக்கொள்ளாத எந்தப் பொருட்கள் சம்பந்தமாகவும் பொறுப்புக்கூறப்பட மாட்டாது. கேள்விவைத்தல், விற்பனையை முடிவுறுத்தல் ஏலவிற்பனை சபையினால் மேற்கொள்ளப்படும். ஏலவிற்பனை சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**மேலதிக பணிப்பாளர்,**
**அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல்,**
**பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவு**
**அதிவேக நெடுஞ்சாலை நீடிப்பு**

## இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**விலைமனுக் கோரல**
**ஹற்றன் கற்கை நிலையத்திற்காக கட்டடம் ஒன்றினை வாடகைக்கு / குத்தகைக்கு வழங்குதல்**

1. ஹற்றன் நகரத்தில் இருந்து 2km தூரத்தினுள் அமைந்த கட்டடம் ஒன்றினை ஹற்றன் கற்கை நிலையத்திற்காக வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்க விரும்புபவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் **18 டிசம்பர் 2023 1400 மணி வரை** ஏற்றுக் கொள்ளப்படும். குறித்த கட்டடம் 4000 சதுர அடிக்கு அதிகமான தரைப் பகுதியையும், வாகனத் தரிப்பிட வசதியையும், சுகாதார வசதிகள், நீர் மற்றும் மின்சார வசதிகள் போன்றவற்றினையும் கொண்டிருத்தல் வேண்டும். பிரதான வீதியினை முகப்பாகக் கொண்டிருக்கும் கீழ்த்தளக் கட்டடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குறித்த கட்டடம் விரிவுரைகள்/ பரீட்சைகளை நடாத்துவதற்கு பொருத்தமான அலுவலக வசதிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

2. ஆர்வமுள்ள மனுதாரர்கள் காணி உறுதியின் பிரதி, கட்டிடத்தின் வரைபடம், தரைப்பகுதியின் பரப்பளவு, அறைகளின் எண்ணிக்கை, உள்நுழையும் பாதை விபரங்கள், எதிர்பார்க்கும் மாதாந்த வாடகை/ குத்தகை மற்றும் சொத்து உரிமை தொடர்பான விபரங்களுடன் கிடைக்கக்கூடியதாக இருக்கும் ஏனைய வசதிகள் போன்ற தேவையான விபரங்களுடன் விலை மனுக்கோரல்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். முழுமையாக பூர்த்திசெய்யப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

3. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களின் இடதுபக்க மேல் மூலையில் ஹற்றன் கற்கை நிலையத்திற்காக கட்டடம் ஒன்றினை வாடகைக்கு/குத்தகைக்கு வழங்குதல் எனக் குறிப்பிட்டு, **"தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஆதன நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு, இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட"** என்ற முகவரியில் உள்ள ஆதன நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடப்படல் வேண்டும் அல்லது **18 டிசம்பர் 2023 1400 மணி** அல்லது அதற்கு முன்னர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆதன நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடல் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக **12 டிசம்பர் 2023 1400** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர், ஹற்றன் கற்கை நிலையம் அவர்களிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள் **18 டிசம்பர் 2023 1400** மணிக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தின் சபா மண்டபத்தில் திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் அல்லது மனுதாரரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர்.

5. மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள, உதவிப் பணிப்பாளர்/ ஹற்றன் கற்கை நிலையம் (0512225139) சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ ஆதன நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு,(தொலைபேசி இலக்கம் 011-2881286) அல்லது அவர்களை வேலை நாட்களில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
திணைக்கள பெறுகைக் குழு
ஆதன நடவடிக்கைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட
26 நவம்பர் 2023

### மக்கள் வங்கி
## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

மக்கள் வங்கியின் சுயசேவை வங்கி அலகு/ATM களுக்காக கிளைகள்/சேவை நிலையங்கள் மற்றும் SIGNAGE களுக்கான பெயர்பலகைகளின் ஒட்டுவேலைகள் வழங்குதல் மற்றும் நிறுவுதல்.

01. கீழே விபரிக்கப்பட்டவாறு மக்கள் வங்கியின் சுயசேவை வங்கி அலகு/ATM களுக்காக, கிளைகள்/சேவை நிலையங்கள் மற்றும் SIGNAGE களுக்கான பெயர் பலகைகளின் ஒட்டுவேலைகள், வழங்குதல் மற்றும் நிறுவுவதற்காக தகைமையும் திறமையும் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை, கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, இல. 75, மக்கள் வங்கி, கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவர் அழைக்கின்றார்.

| கேள்விப் பெயர் மற்றும் அடையாள இல. | விபரம் | எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட செலவு (VAT நீங்களாக) | விலைமனுப் பிணை | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| கேள்வி இல - 040/2023 மக்கள் வங்கியின் கிளைகள் / சேவை நிலையங்களுக்கு ஒட்டுவேலை, வழங்குதல் மற்றும் நிறுவுதல் | **Name Board** fabricating with hot dip galvanized framework, 3M or approved equivalent Flex Backing Material with 3M or approved equivalent Sticker Letters and Logo, LED Tube Light Illumination for **Service Centers.** | 100 | ரூ. 64.0 மில் | ரூ. 640,000.00 | 10,000.00 |
| கேள்வி இல - 041/2023 மக்கள் வங்கியின் சுயசேவை வங்கி அலகிற்கு Pylonsignage ஐ ஒட்டு வேலை வழங்குதல் மற்றும் நிறுவுதல் | **SSBU Signage,** total height Approx. 28Ft. consist of 3 panels (Panel 1 - 8'x4', Panel 2 - 4'x4', Panel 3 - 4'x4'), fabricating with hot dip galvanized framework, 3M or approved equivalent Flex Backing Material with 3M or approved equivalent Sticker Letters and Logo, LED Tube Lights Illumination, and panels to be mounted to 6" dia. Heavy Duty Gl pipe and complete with necessary structural work<br><br>**ATM Signage,** total height Approx. 24Ft. consist of 2 panels (Panel 1 - 8'x4', Panel 2 - 4'x4'), fabricating with hot dip galvanized framework, 3M or approved equivalent Flex Backing Material with 3M or approved equivalent Sticker Letters and Logo, LED Tube Light Illumination, and panels to be mounted to 6" dia. Heavy Duty GI pipe and complete with necessary structural work. | 75 | ரூ. 78.5 மில் | ரூ. 785,000.00 | 10,000.00 |

02. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காக முடிவடைந்த காலம் 180 நாட்களாகும்.

03. தகைமையுள்ள தனி விலைமனுதாரர் அல்லது பல விலைமனுதாரர்களுக்கு மேற்படி ஒப்பந்தத்தை வழங்குவதற்கான உரிமையை வங்கி கொண்டிருக்கும்

04. தேசிய போட்டி விலைமனுக்கோரல் முறைமையூடாக விலைமனுக்கள் நடத்தப்படும்.

05. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கீழக்காணும் தகவல்களை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.
சமமான தன்மையுடைய மற்றும் சிக்கலான திட்டங்களில் வேலை அனுபவம் பற்றிய தகவல், கடந்த 03 வருடங்களுக்கான கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்று முன்னைய வேலைகளின் சான்றுகள் மற்றும் சான்றுகள் கையிறுப்பில் உள்ள வேலைகள் மற்றும் உள்ள வளங்கள் பற்றிய விபரங்களை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு - 02, சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, இல.75, தலைமையகக் கட்டிடம், மக்கள் வங்கி, 6ம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே - 0112473206, பெக்ஸ் : 0112341591) மற்றும் 2023 நவம்பர் 29 முதல் 2023 டிசம்பர் 19 வரை சாதாரண வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களை பரிசீலிக்கலாம்.

07. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு ஒரு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் மு.ப.9.00 முதல் பி.ப.03.00 வரை 2023 நவம்பர் 29 முதல் 2023 டிசம்பர் 19 வரை மேற்படி முகவரியில் கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விமைனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.

08. நகல்களுடனான பொறியிடப்பட்ட விலைமனுக்களை தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சம்பந்தப்பட்ட கேள்வியின் பெயர் மற்றும் அடையாள இலக்கத்தைக் குறிப்பிட்டு, கொழும்பு - 02 சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, இல. 75, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம், 6ம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிடடபொறியியல் சேவைகள் தலைவரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும் அல்லது 2023 டிசம்பர் 20 பி.ப.3.00 மணி அல்லது அதற்கு முன்பு அவரை அடையுமாறு மேற்படி முகவரியில் உள்ள பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் விலைமனுதாரர்களினால் சமுகமளிக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்பட்ட பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும்.

09. விலைமனுக்கள் 2024 மார்ச் 20 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

10. மக்கள் வங்கி தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் ஓர் நம்பகமான வங்கியிலிருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ளும் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு ஓர் விலைமனுப்பிணையை எல்லா விலைமனுவுடனும் இணைத்தல் வேண்டும். எல்லா விலைமனுப் பிணையும் 2024 ஏப்ரல் 17 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

11. ஓர் விலைமனுவுக்கு முன்னரான கூட்டம், கொழும்பு - 02, தலைமையகம், மக்கள் வங்கி, 6ம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் 2023 டிசம்பர் 07 மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

**கட்டிட பொறியியல் சேவைகள் தலைவர்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6ம் மாடி, மக்கள் வங்கி, தலைமையகம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த,**
**கொழும்பு - 02**

1961 PEOPLE'S BANK
Pride of the Nation

## சுற்றுச் சுழலுக்கு...
(18ஆம் பக்கத்தொடர்)

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் (IRA) பிரிவு 18 (நிதிச் செலவின் விலக்கு அளவு), 67 (காப்பீட்டு வணிகம்), 163 (நீதிமன்ற நடவடிக்கைகள்) ஆகியவற்றின் விண்ணப்பத்தின் தெளிவை மேம்படுத்த திருத்தப்படும்.

வரி தணிக்கைகள் அல்லது நிர்வாக மதிப்பாய்வுகளின் போது சமர்ப்பிக்கப்படாத ஆவணங்கள், இலங்கையில் கிடைக்கப் பெறும் சாட்சியங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் மற்றும் மற்றவர்களுக்கு 9 மாதங்களுக்குள், வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் விசாரணையின் போது சமர்ப்பிக்க அனுமதிக்கப்படாது.

வரி செலுத்துவோர் அடையாள எண்ணின் (TIN) சான்றிதழின் நகலை பின்வருவனவற்றிற்குச் சமர்ப்பித்தல் கட்டாயத் தேவையாக்கப்பட்டுள்ளது.

எந்த வங்கியிலும் வங்கி நடப்புக் கணக்கைத் திறக்கும் போது.

விண்ணப்பதாரர் கட்டடத் திட்டத்துக்கான ஒப்புதலைப் பெறும் பொழுது.

மோட்டார் உரிமையாளர் வாகனத்தைப் பதிவு செய்யவும் அல்லது உரிமத்தைப் புதுப்பிக்கும் சந்தர்ப்பத்தில்,

நிலம் வாங்குபவரால் அல்லது நிலத்திற்கான உரிமையைப் பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில்.

தேவையான வழிகாட்டுதல்கள் கமிஷனர் ஜெனரலால் (Commissioner General) வெளியிடப்படும்.

**பெறுமதி சேர் வரி (VAT)**

வரி விலைப்பட்டியல் வடிவம் (Tax Invoice Format) உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையர் குறிப்பிடும் வகையில் அறிமுகப்படுத்தப்படும்.

VAT சட்டத்தின் பிரிவு 83இல் "வரி விதிக்கக்கூடிய காலம்" என்ற வெளிப்பாடு, அனைத்து வரி செலுத்துவோருக்கும் ஒரே மாதிரியான படிவம் (Return) தாக்கல் முறைமை கொண்டதாக வரையறுக்கப்படும்.

ஜனவரி 1, 2024 ஆண்டு முதல் VAT விகிதத்தை 18%ஆக அதிகரிப்பதாக வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படும்.

பதிவு செய்யப்பட்ட நபர்கள், பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதில் VAT வசூலை ஆதரிப்பதற்காக, விலைப்பட்டியல் மற்றும் விற்பனைப் பதிவை தானியங்குபடுத்தும் பாயின்ட் ஆஃப் சேல் (Point of Sale POS) இயந்திரங்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுவார்கள்.

**பிற வரி சீர்திருத்தங்கள்**

இலங்கையின் வருவாய் அதிகார சபையை நிறுவுதல்.

கலால் திணைக்களம் (Excise Department ED) மற்றும் சுங்க திணைக்களம் (Customs) ஆகியவற்றின் முக்கிய நிர்வாக செயற்பாடுகளுடன் தொடர்புடைய முக்கிய செயற்திறன் குறிகாட்டிகள் (KPI Key Performance Indicators) அறிமுகம் செய்யப்படும்.

கலால் திணைக்களத் துறைக்கு Revenue Administration System for Excise Department (RASED) வருவாய் நிர்வாக அமைப்பு அறிமுகம் செய்யப்படும்.

**முன் பட்ஜெட் வரி முன்மொழிவுகள்**

முன் பட்ஜெட் வரி திருத்தங்கள்;

VAT விலக்குகளில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

பெற்றோல், டீசல், எல்பிஜி (LPG), இரசாயன உரம் போன்றவற்றின் மீதான வாட் (VAT) வரி விலக்குகளை மேலும் நீக்கப்பட்டுள்ளன.

01.01.2024 முதல் VAT விகிதம் 18% ஆக அதிகக்கப்பட்டுள்ளது.

VAT மற்றும் SSCLக்கான பதிவுக்கான வரம்பு(Threshold) ஆண்டுக்கு ரூ. 60 மில்லியனாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அனைத்து வகையான சுயாதீன சேவை வழங்குநர்களையும் உள்ளடக்கும் வகையில் சேவைக் கட்டணங்களில் WHTயின் பொருந்தக்கூடிய நோக்கத்தை விரிவுபடுத்துதல்.

சீனி மீதான எஸ்.சி.எல் (SCL) அளவை கிலோ ஒன்றுக்கு 25 ரூபாயிலிருந்து ஒரு கிலோவுக்கு 50 ரூபாய் மற்றும் அதிகபட்ச சில்லறை விலையை 02.11.2023 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும்,

டிஜிட்டல் மயமாக்கப்படும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

2024ஆம் ஆண்டில் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் டிஜிட்டல் மயமாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

**மின்சார பேருந்து**

மேல் மாகாணத்தில் இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து 200 மின்சார பேருந்துகளை இயக்கும் முன்னோடி திட்டம் ஆரம்பிக்கப்படும். அத்துடன் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி நகரின் வாகன மற்றும் பயணிகள் போக்குவரத்து நெரிசலை நீக்கி பேருந்து மற்றும் பிற டாக்சிகளை ஒருங்கிணைக்கும் வகையில் உலக வங்கியின் கடனுதவியின் கீழ் 2024 ஜனவரியில் கண்டியில் பல்போக்குவரத்து மையத் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

மேலும், இந்த மையத்திற்காக 1.5 பில்லியன் ரூபாய் பாதீட்டில் ஒதுக்கப்படுவதாக என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரவுசெலவுத் திட்ட தொடக்கத்தை நாம் பாராட்டும்போது அதன் உருவாக்கத்தின் பின்னணியில் உள்ள கூட்டு முயற்சியை அங்கீகரிப்பது அவசியம். நமது நாட்டின் நிதி எதிர்காலத்திற்கான ஒரு விரிவான மற்றும் நுட்பமான அணுகுமுறையை உறுதி செய்வதற்காக இணைந்து பணியாற்றியுள்ளது.

இந்த பட்ஜட் முன்மொழிவு உள்ளடக்கம், நிலைத்தன்மை மற்றும் புதுமைக்கான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றது. பின்னணி/சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல் அனைத்து குடிமக்களுக்கும் பயனளிக்கும் வலுவான பொருளாதாரத்திற்கு இது களம் அமைக்கின்றது.

முன்மொழியப்பட்ட ஒதுக்கீடுகளை நாம் ஆய்வு செய்யும்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார ரீதியில் மட்டுமல்ல, சமூக மற்றும் சுற்றுச்சூழலுக்கும் பொறுப்பான ஒரு தேசத்தை கற்பனை செய்கின்றார் என்பது தெளிவாகின்றது.



# வாரபலன்

26.11.2023 - 02.12.2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

புத்திக் கூர்மையுடன் செயல்களை செய்து எதிலும் வெற்றி பெறுவீர்கள். மதிப்பும், மரியாதையும் கூடும். மனதுக்கு பிடிக்காத இடத்திற்கு சென்று வரவேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பார்கள். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே தேவையற்ற மன வருத்தம் உண்டாகலாம். மருத்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம். பெண்கள் புத்திசாலித்தனமாக செயல்பட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பர்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

செயல்திறன் மேலோங்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் என்பனவற்றில் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கையில் கிடைக்கும். பயணங்களால் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த ஆடை, ஆபரணம் வாங்க நேரிடும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் விருந்துகளுக்கு சென்று வருவீர்கள். பெண்களுக்கு எந்த ஒரு காரியமும் இலாபகரமாய் நடந்து முடியும். செயல்திறன் கூடும். கலைத்துறையினருக்கு இருந்த போட்டிகள் அகலும். நீங்கள் செய்யும் காரியங்களுக்கு இருந்த தடை நீங்கும். மாணவர்கள் கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடையும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றிய திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயணங்கள் சாதகமான பலனை தரும். உத்தியோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வேலை பற்றிய கவலை நீங்கும். நிர்வாகத்தின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் வாக்குவாதங்கள் உண்டாகலாம். வாழ்க்கை துணையையும், குழந்தைகளிடமும் அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்திற்காக கூடுதலாக உழைக்க வேண்டியது இருக்கும். பெண்கள் திட்டமிட்டு செயல்படுவது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

கடினமான விஷயங்களில் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வருவீர்கள். பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் வாக்கு வன்மையால் எளிதாக தங்களது தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கப் பெறுவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். முக்கிய நபர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான நிலை காணப்படும். பெண்கள் நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பர். கலைத்துறையினருக்கு ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

ஆக்க பூர்வமான யோசனைகள் தோன்றும். கடிதப் போக்குவரத்து அனுகூலமான பலனைத் தரும். புதுவியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். கடிதப் போக்குவரத்து மூலம் தொழில் வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசி அவர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதிர்காலம் பற்றிய திட்டங்களை வகுப்பர். குடும்பத்தினரிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் பேசி செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். பெண்களுக்கு மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவு உண்டாகும். கலைத்துறையினருக்கு வெளியூர்ப் பயணம் அதன் மூலம் அலைச்சல் என்பன உண்டாகலாம்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்லியபடி நடப்பது நன்மை தரும். சிலர் புதிய வேலைக்கு முயற்சி செய்வார்கள். குடும்பத்தில் சுமூகமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கைத் துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார். உறவினர் வருகை இருக்கும். அனுபவபூர்வமான அறிவு திறனை உபயோகித்து எதிலும் வெற்றி காண்பீர்கள். பெண்களது செயல்களுக்கு மற்றவர்களின் ஆதரவு கிடைக்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

எதையும் திட்டமிட்டு செய்வதன்மூலம் சாதகமான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஆலோசனை செய்து வியாபாரத்தை மேற்கொள்வது கூடுதல் லாபம் கிடைக்க வழிசெய்யும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களிடம் அனு சரித்து நடந்து கொள்வது அமைதியை தரும். கணவன், மனைவி இருவரும் சேர்ந்து எடுக்கும் முடிவுகளால் குடும்ப விஷயங்கள் சாதகமாக நடக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெண்களுக்கு மற்றவர்கள் உதவியுடன் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். சிக்கனத்தை கடைப்பிடிப்பது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எதிர்காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். எதிலும் அவசரப்படாமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்க பெறும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பெண்கள் எந்த ஒரு செயலை செய்யும் முன்பும் அதில் இருக்கும் நல்லது கெட்டதை ஆராய்ந்து பார்த்த பின் அதில் ஈடுபடுவது நல்லது. கலைத்துறையினருக்கு பணிகளில் கவலைகள் இருந்தாலும் நிறைவாக முடியும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். வீண் அலைச்சலும் எதிர்பாராத செலவும் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சகஊழியர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பத்தில் ஏதாவது ஒரு விஷயம் தொடர்பாக வாக்குவாதம் ஏற்படும். கணவன், மனைவி அனுசரித்து செல்வது நல்லது.பெண்கள் மனத் தடுமாற்றம் இல்லாமல் எதையும் செய்வது நல்லது.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் வேகம் பிடிக்கும். புதிய ஆர்டர்கள் கிடைக்கும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். உத்தியோகத்தில் அலுவலகத்தில் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து முடிப்பர். அலுவலக வேலையாக வெளியூர் செல்ல நேரலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் குறையும். பிள்ளைகளின் மீது கவனம் தேவை. வாகனங்களால் செலவு இருக்கும். குடும்ப உறுப்பினர்களின் உடல் நிலையில் கவனம் தேவை. பெண்களுக்கு மனதில் மகிழ்ச்சி உண்டாகும் படியான சூழ்நிலை உண்டாகும்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம். குடும்பத்தில் மனைவி குழந்தைகளுடன் மனஸ்தாபம் ஏற்பட்டு நீங்கும். பெண்கள் அடுத்தவர் பேசுவதை காதில் வாங்காமல் தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினர் அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும் போது கவனம் தேவை. அவற்றை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்தியோகத்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது. விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். பெண்கள் எந்த ஒரு காரியத்தையும் செய்து முடிக்க கூடுதல் நேரம் உழைக்க வேண்டி இருக்கும்.

# உன்னதமான இராஜயோகங்களை கொண்டவர்கள் யார்?

## ஓர் இலகுவான கைரேகை விளக்கம்

இராஜயோகம் என்றொரு சொல் சோதிடத்தில் அடிக்கடி பாவிக்கப்படுகிறது. கைரேகை சாத்திரத்தில் கூட அச்சொல்லின் பிரயோகமுண்டு. இராஜயோகமென்றால் அந்த யோகத்திற்குரிய நபர் ஓர் அரசனாக முடி சூடிக்கொள்வதென்பதல்ல, அரசாங்கத்தில் சேவகம் செய்து, அல்லது அரசின் சலுகை அல்லது கௌரவம் பெற்று அன்றாடம் வயிற்றுப் பாட்டுக்கு பஞ்சமில்லாமல் வாழ்தல். அன்றாடம் பாடுபட்டு உழைத்தாலேயே வீட்டில் அடுப்பெரியும் என்ற நிலையில் அநேகம் பேர் வாழ்ந்திருக்க, இந்த இராஜயோகம் பெற்றவரோ அதிகம் பாடுபடாமல் அல்லது பாடுபடுவதே இல்லாமல் வசதிகளுடன் வாழ்க்கை நடத்தும் அதிர்ஷ்டம் உள்ளவராயிருப்பார். உடலுழைப்பு கொஞ்சமும் ஊதியம் அதிகமுமாயிருக்கும். வாழ்நாள் பூராகவுமோ, அல்லது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலிருந்தோ எதற்கும் தட்டுப்பாடில்லாமல் வாழ்க்கை நடத்துமளவுக்கு அவருக்கு வருமானமோ, வசதிகளோ, சலுகைகளோ கிடைத்திருக்கும்.

இதனை வைத்துக்கொண்டு அரசாங்க உத்தியோகம் பார்ப்பது தான் இராஜயோகமென்று கருதி விடக்கூடாது. அரசாங்கத்தில் மாத்திரமல்ல, அரசியலிலோ, கல்வித்துறையிலோ கலைத்துறைகளிலோ பிரவேசித்து மக்களின் அமோக ஆதரவை நாளடைவில் பெற்று ஒரு நட்சத்திர அந்தஸ்தில் பிரகாசிப்பதும்கூட இராஜயோகந்தான்.

இப்பிரபல்யத்தின் மூலம் அத்தகையவரின் அன்றாட வயிற்றுப் பாட்டுப் பிரச்சினை தீர்வதோடு, செல்வமும் செல்வாக்கும் சௌகரியங்களும் தென்னங் குரும்பையினுள்ளே இளநீர் சேருமாப் போல இவர் அறியாமலேயே இவரிடம் வந்து சேர்ந்து விடும் என்பது தான் இந்த இராஜயோகத்திலுள்ள மகிமையாகும்!

இக்கட்டுரையில் கைரேகை வாயிலாக ஏற்படும் இராஜயோகத்தின் ஒரு சில விதங்கள் குறித்துப் பார்ப்போம்...

ஒவ்வொருவரினதும் உள்ளங்கையில் காணப்படும் பிரதான ரேகைகளாக ஆயுள், புத்தி, இருதய ரேகைகள் கருதப்படுகின்றன. இவை உற்பத்தியில் ஒன்றையொன்று தொடாமல் (படத்தில் காட்டப்பட்டுள்ளது போல) ஆரம்பித்தால் அதுவொரு உன்னத இராஜயோகத்தின் அறிகுறியாகவே கருதப்படும்.

குடும்பம், காதல், உறவுகள் ஆசாபாசங்களுக்குக் கட்டுப்படாமல் தனித்து நின்று சுயமாக சிந்தித்து ஸ்திரமான முடிவுகள் எடுத்து ஒரு குடும்பத்தையோ, நிறுவனத்தையோ, கட்சியையோ அல்லது ஆட்சியையோ கொண்டு நடத்த இந்த அமைப்பு அவர்களுக்கு உதவியாக இருக்குமாம். மற்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்டாலும் சூழ்நிலைகள் பாதித்தாலும் முடிவுகளை தற்றுணிவின் பேரிலேயே எடுப்பார்கள். இந்த வரிசையில் சிறந்த உதாரணங்களாக இங்கிலாந்தின் வின்ஸ்டன் சேர்ச்சில், மார்க்ரெட் தட்சர், சீனாவின் மாசேதுங், கியூபாவின் பிடெல் காஸ்ட்ரோ, இந்தியாவின் இந்திராகாந்தி, தமிழகத்தின் காமராஜர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்றவர்களும், இலங்கையின் டட்லி சேனாநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்கா போன்றவர்களும் விளங்கினரென்றும் இவர்கள் இந்த ஆயுள் புத்தி, இருதய ரேகைகள் ஒன்றிணைந்து உற்பத்தியாகாத ரேகை அமைப்பை தத்தம் கைகளிலே கொண்டு, இதனாலுண்டான இராஜயோகத்தின் சிறப்பை உலகிற்கு உணர்த்தினரென்றும் இந்தியாவின் பிரபல சோதிட சஞ்சிகையான *ASTROLOGICAL MAGAZINE* தனது கைரேகை ஆய்வுக் கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளது. இந்த யோகம் பற்றி இன்னொரு கருத்தும் அக் கட்டுரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதாவது எந்தளவுக்கு செல்வமும் செல்வாக்கும் அதிகாரமும் ஏற்படுகின்றனவோ, அந்தளவுக்கு அத்தகையவரின் வாழ்க்கைத் துணை நலத்தையும் இரத்த உறவுகளையும் பாதித்து அவரோடு ஒட்டாமல் செய்து விடுமாம்!

எவரையும் ஒதுங்க நிழல்தேடி ஓடச்செய்யும் ஏறுவெயில் இந்த யோகத்திற்கும் செல்வாக்கிற்கும் உதாரணம் காட்டப்படுகிறது.

அதேசமயம் இம்மூன்று பிரதான ரேகைகளில் ஒன்றான புத்திரேகையை, ஆரோக்கிய ரேகையெனப்படும் புதன் ரேகையும் (A) சூரிய ரேகையும் (B) தொட்டுக் கொண்டோ, அல்லது ஊடுருவியோ ஒரு முக்கோண வடிவவை அதில் அமைத்தால் (C) மேற்சொன்ன இராஜயோகத்துடன்தான் கைக்கொண்ட துறையிலே நிபுணத்துவயோகமும் உண்டாக அது வழி வகுக்கிறது.

எதிலும் எவரும் கஷ்டப்பட்டு உழைத்தால் தான் ஊதியம் கிடைக்கு மென்பது பொதுவான விதி. அதே வேளை செய்யும் தொழிலில் ஏனோ தானோ என்றில்லாமல் அதில் இஷ்டப்பட்டும் உழைத்தால்தான் தமது சுயதிறமையை வெளிப்படுத்தி, அதில் ஈடுபட்டுள்ள மற்றவர்களை முந்திக்கொண்டு அபிவிருத்தியடைவதுடன் அதிகமான ஊதியத்தையும் பெற முடியுமென்பதும், அதில் தனது தனித்துவத்தையும் நிலை நாட்ட முடியுமென்பதும் முக்கியமாய் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இத்தகைய அமைப்பின் மூலம் முக்கியமான மூன்று அம்சங்களை நாம் அறிந்து கொள்ள முடியும். அவையாவன கலைத்துறையில் மேம்பாட்டை சூரிய ரேகையும், பெயரும் புகழும் அடையும் வண்ணம் அந்தந்த துறையில் ஆழ்ந்த புலமையைப் பெறத்தக்க அறிவைத் தருகின்ற புத்தி ரேகையும் அத்தகைய கலைஞர்கள் தங்கள் தொழில்களை வியாபார ரீதியில் செய்து பெரும் பொருளீட்டவும், எக்காலமும் நின்று நிலவுகின்ற கீர்த்தியைத் தருகின்ற புதன் ரேகையும் ஒன்று கூடுவதன் மூலமே இந்த நிலை உருவாகின்றது.

எத்தகைய பின்னமோ பிளவுகளோ இல்லாமல் சீராகவும் நேராகவும் அமைந்த இம் முக்கோணத்தையுடையவர்கள். தமக்கு ஆர்வமான மேற்சொன்ன துறைகளில் முயன்றால் கண்டிப்பாக உன்னதநிலைக்கு வந்தே தீருவார்கள். எனவே தான் இம்முக்கோணத்தை இராஜயோக முக்கோணமென்று கைரேகை சாத்திரம் குறிப்பிடுகிறது.

அதே சமயம் சுக்கிர மேட்டில் உற்பத்தியான நெடிதான ரேகையொன்று இந்த முக்கோணத்திலுள்ள சூரிய ரேகையுடன் இணைந்து காணப்பட்டால் (D) நெருங்கிய நண்பர் விசேடமாக காதலி அல்லது காதலன் மூலம் அதுவுமில்லாவிடில் நெருங்கிய உறவினர் ஒருவரின் விதிவசமான உதவி மூலம் இத்தகைய முக்கோணத்தைக் கொண்டவர் இராஜயோகத்தை அடைகிறார் எனலாம்.




இவ்வமைப்பு இருந்தும் ஒருவர் முன்னுக்கு வரவில்லையென்றால் அவர் தமக்கு ஆர்வமான துறையில் ஊக்கமெடுத்து முயற்சி செய்யக்கூடிய வகையில் அவரது விதி ரேகை ஒழுங்காக, சாதகமாக அமையவில்லையென்றே கொள்ளவேண்டும்.

இதே மாதிரியான இன்னொரு முக்கோணம் குறித்தும் இக் கட்டுரையில் குறிப்பிடுவது பொருத்தமானதெனக் கருதுகிறேன். அதாவது புத்திரேகையை புதன் ரேகையோடு விதிரேகையும் (E) குறுக்கிட்டுச் செல்வதால் ஏற்படுகின்ற முக்கோணம் (F) இன்னொரு வகையில் சிறப்பைத் தரும் விதத்திலானது.

இந்த அமைப்புள்ளோர் ஆன்மிகம், யோகம், சோதிடம் போன்றவற்றில் அளவு கடந்து ஈடுபாடு கொண்டு சாமானியரிலிருந்து தம்மை வேறுபடுத்திக் காண்பித்துக் கொண்டு வாழ்வர். தெய்வபத்தி இவர்களுக்கு இயல்பானது. யோகக் கலையின் சூட்சுமங்களைப் பயின்று அதனை அடுத்தவரின் உள, உடல் ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வாக பயன்படுத்தும் ஆசான்களாக விளங்குவது இவர்கள் தான்.

இவ்விதம் முக்கோணம் கொண்டவர் ஒரு சோதிடராயின், சொன்ன வாக்கு பலிக்கும். இவரது தியானத்திலும் ஆன்மாவோடு பேசும். மனம் இலயித்த நிஷ்டையிலும், அவரையும் அவரை அண்டி வருவோரையும் வாட்டும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்லப்படும். அப்படியொரு அருட்சக்தியை இம்முக்கோணம் உண்டு பண்ணும்.

அத்துடன் இம்முக்கோணமானது பலருடனும் நெருங்கிப் பழகுகிற ஒரு சௌஜன்ய நிலையை உருவாக்கும். சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றுத்தரும் அந்தளவுக்கு ஒருவரது அறிவாற்றலை வளர்க்கிற தன்மை புத்திரேகைக்கு உண்டு. அதே சமயம் அருள்மேடு என்று கூறப்படும் சந்திர, செவ்வாய் மேடுகளின் ஓரத்தில் உள்ளங்கையின் அடிப்புறமிருந்து ஆரம்பிக்கும் ஆரோக்கிய (புதன்) ரேகையானது அருட்சக்தியைக் கொடுக்கும்.

ஆற்றலைத்தரும் விதிரேகையோ அவருக்கு பல விடயத்திலும் புகழையும் பொருளையும் சேர்க்கும். எனவே புதன் ரேகையால் அருளும் விதிரேகையால் பொருளும். புத்தி ரேகையால் ஆற்றலும் ஏற்பட இந்த முக்கோணம் அமைந் திருக்க வேண்டியதும் இன்றியமையாததென கருதப்படுகிறது.

இம்முக்கோணத்தினுள் ஒரு புள்ளடிக் குறியோ (H) அல்லது வலைக்குறியோ இருக்கக் காணப்பட்டால் அப்படியமைந்தவர் வாழ்வில் வெற்றி பெறுவது கஷ்டமே. இந்தப் புள்ளடியானது அவரது தொழில் நிலையிலும் அறிவாற்றலிலும் ஒரு தேக்கத்தை உண்டு பண்ணும்.

மேற்சொன்ன இருவகை முக்கோணங்களுக்குள்ளேயும் சூலக்குறி அமைந்து காணப்படின், (J) தான் கைக்கொண்ட சாமானியருக்கு எளிதில் விளங்காத மனோவசிய, மாயா ஜாலவித்தை, (Magic) சோதிடம் போன்றவற்றில் தேர்ச்சி பெறுவதோடு நில்லாமல், ஒருவரின் முகத்தைப் பார்த்தே அவரது முக்காலங்களையும் சொல்லக்கூடிய ஞானதிருஷ்டியையும் அத்தகையவர் பெற்றிருப்பார்.

அதே சமயம் இம்முக்கோணங்களுக்குள்ளே நட்சத்திரக்குறி இருப்பது குறித்து சிறப்பாகச் சொல்லப்படவில்லை. அந்த முக்கோணங்களுக்குள்ளும் சரி, ஆயுள், புத்தி, ஆரோக்கிய ரேகைகளாலான மற்றொரு வகை முக்கோணத்திற்குள்ளும் சரி, நட்சத்திரக்குறி காணப்பட்டால் (K) அப்படி அமைந்தவரின் மலட்டுத்தன்மையை அது குறிப்பதாகும் என சொல்லப்படுகிறபோதும், அது நாளடைவில் பார்வை குருடாகி வருவதை அறிவிக்கும் அறிகுறியென கைரேகைக் கலையின் பிதாமகரான ஜெர்மெயின் தமது ஆய்வு நூலில் பதிவு செய்துள்ளார்.

திருவோணம்

# படித்ததும் பகர்வதும் 168





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### இதுவும் கடந்து போகட்டும்!




இலங்கையின் மிகப் பிரபலமான பொதுப் பரீட்சைகளில் ஒன்றாக 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை திகழ்கிறது. கல்விப் பொதுத்தராதர சாதாரணதர, உயர் தர பரீட்சைகளுக்கு தயாராவது போன்ற அதே முக்கியத்துவத்தை அல்லது அதைவிட அதிகமான ஆர்வத்தை பெற்றோர்கள் இப் புலமைப்பரிசில் பரீட்சை மீது கொண்டிருப்பதை காணமுடிகிறது.

இவ்வருடம் அக்டோபர் 15ம் திகதி நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் கடந்த வாரம் வெளியாகின. 3 இலட்சத்து 32 ஆயிரத்து 949 மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றிய போதிலும் 50,664 மாணவர்களே சித்தி பெற்றுள்ளனர். இது 15.22% வீதமாகும். இவர்களில் ஐந்து பேர் அதி கூடிய புள்ளிகளாக தலா 198 புள்ளிகளும் நால்வர் தலா 197 புள்ளிகளும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு கொடுப்பனவுகள், உதவித் தொகைகள், வழங்கப்பட்ட போதிலும் இதில் சித்தியடைகின்றவர்கள் தமது கல்வியைத் தொடர பிரபலமான ஜனரஞ்சக பாடசாலைகளுக்கு செல்லும் வாய்ப்பை பெறுவதே முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படுகிறது. இதனாலேயே இப் பரீட்சையில் தமது பிள்ளையை சித்தியடைய செய்ய பெரும்பாலான பெற்றோர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர்.

பல ஆசிரியர்களும், பல புத்தக நிறுவனங்களும் இப்பரீட்சையை தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் ஒரு விடயமாகக் கொண்டு செயல்படுவதையும் காண முடிகிறது. இதனால் இது அதிக பணமீட்டும் ஒரு வியாபாரமாகவும் மாறியுள்ளதை மறுக்க முடியாதுள்ளது. விஷேட வகுப்புகளை நடத்துதல், விஷேட கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல், புதிய நூல்களை வெளியிடுதல், கடந்த கால வினாப் பத்திரங்களையும் மாதிரி வினா பத்திரங்களையும் புத்தகங்களாக வெளியிடுதல் போன்ற பல நடவடிக்கைகள் இப்பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றன. இவை அனைத்தும் இலாபம் பெறும் நோக்கிலேயே இருப்பதை அவதானிக்க முடியும்.

இப்பரீட்சையில் தமது பிள்ளைகளை சித்தியடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அதிபர்கள், உறவினர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மீது செலுத்துகின்ற அழுத்தம் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை பலரும் கவனத்தில் கொள்ளாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும். இது அவர்களது உளவியலை அதிகம் பாதிக்கும் என்பதை பலரும் எடுத்துக் கூறுகின்ற போதிலும், உரியவர்கள் உணர்ந்து கொள்வதில்லை.

இப்பரீட்சையும் ஏனைய பரீட்சைகள் போன்று பொதுவான பரீட்சை ஒன்று தான் எனக் கருதிச் செயற்பட வேண்டும். சித்தி பெறாதவர்களை கண்டித்து, அவர்களை திறமையற்றவர்களாகக் காட்டி, மன அழுத்தத்தை ஏற்படுத்துவது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகும்.

இப்பரீட்சையில் சித்தியடைபவர்கள் பெரும் சாதனை படைத்தவர்களாக மாறுவதோ, சித்தியடைய தவறியவர்கள் ஒன்றுக்கும் பிரயோசனமற்றவர்களாக ஆவதோ நடைமுறையில் நடப்பதில்லை என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, சித்தியடைந்தவர்களை தட்டிக்கொடுத்து உற்சாகமூட்டும் அதே வேளையில் சித்தியடைய தவறியவர்களை தடவிக்கொடுத்து ஆறுதல் கூறி தைரியமூட்டி சித்தியடைய தவறியதை ஒரு பொருட்டாக கருதாமல் சாதாரண நிகழ்வாக கருதி “இதுவும் கடந்து போகும்” என்பதை உணர்த்தி கல்வியில் ஆர்வத்தோடு ஈடுபட தூண்டுதல் வேண்டும்.


நடந்ததை முடிந்ததாகக் கொண்டு, நடப்பதை நல்லதாக்கி வெற்றிக் கம்பத்தை அடைய வழிகாட்ட வேண்டும். இவ்விடயத்தில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெற்றோர், உறவினர், கற்பித்த ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் பொறுப்போடு செயல்படுதல் இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும்.

## நெஞ்சுக்கு நீதி

**பரீட்சைகள் தடை தாண்டல்தான் புரிந்திடுவீர்**
**பிள்ளைகளை அதற்காக அதிகம் வருத்தாதீர்**
**வெற்றி தோல்விகள் சகஜமே உணர்த்திடுவீர்**
**வெல்லுவார்கள் வரும் நாட்களில் நம்பிடுவீர்**

## புது வரவு

### “செல்வா” சீர்மைக் காவியம்




அண்மையில் இலங்கையில், இறம்பொடையில் நடைபெற்ற இந்திய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ‘முனைவர்’ பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர் திருகோணமலை மாவட்ட மூதூரைச் சேர்ந்த காப்பியக் கதிரோன் முகம்மது முகைதீன் அனஸ். முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ள முனைவர் எம். எம்.ஏ. அனஸ், அதிகளவில் காவியங்களை எழுதி வெளியிட்டுள்ளார். மாகாண சாகித்திய விருது பெற்ற “நாயகக் காவியம்” முதல், அஷ்ரப் அமரக்காவியம், மஜீது காவியம், உட்பட இம்தியாஸ் இதயக் காவியம் வரை 15க்கும் மேற்பட்ட காவியங்களை படைத்துள்ளார். இறுதியாக, அண்மையில் சில மாதங்களுக்கு முன் வெளிவந்த இவரது காவிய நூல் தான் “செல்வா: சீர்மைக் காவியம் இலங்கை தமிழர்களின் இதயம் கவர்ந்த அரசியல்வாதி ‘தந்தை செல்வா’ பற்றி அவர் எழுதியுள்ள காவிய நூல் இதுவாகும்.

“முகம்மது முகைதீன் அனஸ் ஏறத்தாழ பதினொரு காவியங்கள் மற்றும் ஆறு கவிதைகள் உட்பட மழலைக் கீதம், சிறுவர் கவிப்பேழை, நன்னெறிக் குறள் எனப் பன்முகப்படுத்தப்பட்ட நோக்கில் படைப்புக்களை யாத்துள்ளார். காவியம், ஆசிரியருக்கு கைவந்த கலைப் படைப்பாக இருப்பதை இப்படைப்பின் மூலம் காண முடிகின்றது.

காவியமாவது தன்னிகரில்லாத் தலைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு படைக்கப்படுவதாகும். அந்த வகையில் ஈழத்தமிழர்களின் குறைகளை நீக்கி அவர்கள் தமக்குரிய உரிமைகளைப் பெற்று வாழவேண்டுமென அரசியல் ரீதியாகப் போராடிய தந்தை செல்வாவைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இக்காவியம் போற்றுதற்குரியது. இக்காவியத்தைக் கற்கும் பொழுது நெஞ்சம் நெகிழ்கின்றது. அதே வேளை நெஞ்சம் மகிழ்வடைகின்றது. எங்களுடைய அரசியல் தந்தை செல்வாவின் வரலாறு இப்படைப்பின் வழி காவியமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வரலாற்றுப் படைப்பு எல்லோர் கைகளிலும் தவழுமென நம்புகின்றேன்.”

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் (செல்வி) செ. சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.

“ஈழத்திலே பிரபலமானவர்களை காவியமாக்கிப் பாடுகிற பணியில் பல மூத்த கவிஞர்கள் ஈடுபட்டுள்ளனர். இவ்வழியே மூதூர் உமர் நெய்னார் புலவரின் பரம்பரையில் வந்த காவிய கவிஞர் அனஸ் பல காவியங்களை பாடியுள்ளார். அவ்வகையில் தங்கத்துரை, மூதூர் அப்துல் மஜீத், தலைவர் அஷ்ரப் ஆகிய அரசியல் தலைவர்களை அவர் காவியமாக்கியுள்ளார். இவ்வெல்லா அரசியல் நாயகர்களுக்கெல்லாம் நாயகனான எஸ். ஜே. வியைத் தான் கவிஞர் அனஸ் இந்நூலில் “செல்வா சீர்மைக்காவியம்” எனப் பாடியுள்ளார்.” என்று தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாமீது அபிமானம் கொண்ட அனைவரும் தவறாது வாசிக்க வேண்டிய நூல் இந்த “செல்வா சீர்மைக்காவியம்” என்றால் மிகையல்ல. மாகாத்மா காந்தி போன்று, சத்தியத்தின் பாதையை அரசியலில் தளமாக்கிய தந்தை செல்வா பற்றி “செல்வா: சீர்மைக்காவியம் நூலில் ஓரிடத்தில் அவர் பாடியுள்ளதை இங்கே தருகிறோம். மாதிரிக்காக.

காரியங்கள் ஆற்றுவதில் கடும்திறமை மிக்கார்
கடினமென விடயத்தைக் கருதிடவே மாட்டார்
நேரியதாம் பாதைதனில் நிலைபெற்றே நின்று
நெஞ்சமெல்லாம் தமிழர்களில் நிறைந்தவராய் ஆனார்.

நூல்: “செல்வா: சீர்மைக் காவியம், ஆசிரியர்: காப்பியக் கதிரோன் முகம்மது முகைதீன் அனஸ், பக்கங்கள்: 85, முதற்பதிப்பு: 2023 மார்ச், விலை: 400.00, வெளியீடு: செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை. தொடர்புகளுக்கு: 0776288299,

## அன்றும் இன்றும்

### இளமையும்! முதுமையும்!!



நான் இளமையாக இருந்தபோது, எழும்புவது சிரமமாக இருந்தது.

நான் வயதாகும்போது, எனக்கு தூங்குவது சிரமமாக இருக்கிறது.

நான் இளமையாக இருந்தபோது, எனது பருக்கள் பற்றி நான் கவலைப்பட்டேன்.

நான் வயதாகும்போது, எனது தோல் சுருக்கங்களைப் பற்றி கவலைப்படுகிறேன்.

நான் இளமையாக இருந்தபோது, ஒருவரின் கையைப் பிடிக்கக் காத்திருந்தேன்.

நான் வயதாகும்போது, யாராவது என் கையைப் பிடிப்பார்களா எனக் காத்திருக்கிறேன்.

நான் இளமையாக இருந்தபோது, என்னுடைய பெற்றோர் என்னை தனியாக இயங்க விட்டுவிட வேண்டும் என்று விரும்பினேன்,

நான் வயதாகும் போது, நான் தனித்து விடப்படுவதைப் பற்றி கவலைப்படுகிறேன்.

நான் இளமையாக இருந்தபோது, அறிவுரை கூறப்படுவதை வெறுத்தேன்.

நான் வயதாகும்போது, என்னுடன் பேசவோ ஆலோசனை கூறவோ யாரும் இல்லையே! என ஆதங்கப்படுகிறேன்.

நான் இளமையாக இருந்தபோது, அழகான விஷயங்களைப் பாராட்டினேன். நான் வயதாகும்போது, என்னை சுற்றியுள்ள விஷயங்களில் அழகையே தேடுகிறேன்.

நான் இளமையாக இருந்தபோது, அந்த தருணங்களை மகிழ்வோடு கொண்டாடினேன்.

நான் வயதாகும்போது, எனது அந்த நினைவுகளை எண்ணி மகிழ்கிறேன்.

நான் இளமையாக இருந்தபோது, என் இதயத் துடிப்பினை இரசித்தேன். நான் வயதாகும்போது, என் இதயம் நின்றுவிடுமோ என்று அஞ்சுகிறேன்.

இளைஞராக இருந்தாலும் சரி, வயதானவராக இருந்தாலும் சரி, இவை இயற்கையின் நியதிகள். இளமையாயினும், முதுமையாயினும் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் அனுபவிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அன்பை தாராளமாக அள்ளி வழங்க வேண்டும். பாசத்தை பெரிய அளவில் பகிர்ந்தளிக்க வேண்டு. எப்போதும், எல்லா நிலைகளிலும் மகிழ்ச்சியோடு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்! அதுவே நிம்மதியான வாழ்வுக்கு வழி.

## அந்த நாள் ஞாபகம்!



இஸ்ரேல் பலஸ்தீனத்தில் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு யுத்தம் பற்றி இன்று பரவலாகப் பேசப்படுகின்றது. இஸ்ரேலின் உருவாக்கத்திலிருந்தே பிரச்சினைதான். சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையின் பிரபலமான கல்லூரியான, கொழும்பு மருதானை சாஹிராக் கல்லூரிஅமைந்துள்ள வளாகத்தில் இருக்கும் மருதானை ஜும்ஆ பள்ளிவாசல் முன்றலில், 1948 ஜனவரி மாதம் 10ம் திகதியன்று இஸ்ரேலுக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமும் எதிர்ப்புக் கூட்டமும், நடைபெற்றுள்ளது. அதன்போது எடுக்கப்பட்டுள்ள அபூர்வமான படமிது.. இதில் கலந்து கொண்டோரில் எத்தனை பேர் இன்று உயிருடன் இருக்கிறார்களோ தெரியவில்லை.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

# துர்காவுக்குள் மறைந்திருக்கிறதே ஒரு மர்மம் அதைக் கண்டு பிடிப்பது கொஞ்சம் சிரமம்!




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

சிறிது நேரம் வரையில்,
சிந்துஜனையே பார்த்துக் கொண்டிருந்த சிரஞ்சீவி,
அவனைப் பார்த்து நக்கலாகச் சிரித்தார்.
“என்ன சிந்துஜா? அந்தப் பெண்ணின் அழகின்மீது உனக்கு இப்போதே சந்தேகம் வந்துவிட்டதா?”
சிரஞ்சீவி இப்படிக் கேட்டதும்,
சிந்துஜன் பரபரப்படைந்தான்,
அவன் முகம் சிவந்துவிட்டது,
நாணம்
அவன் முகத்தில் நாட்டியமாடியது!
“ஐயையோ, அப்படி எதுவும் இல்லை மாமா, எட்டு வருடங்களாக செல்வராகவனிடமிருந்து கடிதங்கள் எதுவும் வரவில்லை என்று நீங்கள் தானே சொன்னீங்க? அதனால்தான் அப்படிக் கேட்டேன்.! சமாளித்தான் சிந்துஜன்.
“ஆமாம், எட்டு வருடங்களாக செல்வராகவனிடமிருந்து கடிதங்கள் எதுவும் கூட வரவில்லை என்பது உண்மைதான். ஆனால் பொலிஸ் சுப்ரிண்டென்டை நான் சமீபத்தில் சந்தித்தேன். முன்பு ஒரு சமயம் ஜீவா என்ற வங்கியில் இருந்து, அங்கே கடமை புரிந்த அதிகாரி ஒருவர் 30 இலட்சம் ரூபாவைக் கையாடல் செய்து விட்டார். இந்த திருடனைப் பிடிப்பதற்காக செல்வராகவனையும், இன்ஸ்பெக்டர் சொலமனையும்தான் நியமித்திருந்தார்கள். ஆனாலும் அவர்களால் அந்த குற்றவாளியைப் பிடிக்க முடியவில்லை. அதேநேரம் திருட்டில் சம்பந்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட அந்த அதிகாரி கள்ளத் தோணியில் இந்தியாவிற்கு தப்பிச் சென்று விட்டதாகத் தகவல் கிடைத்தது. இதே நேரம் நமது பொலிசார் கொடுத்த தகவலின் அடிப்படையில் இந்திய பொலிசார் பணத்தைத் திருடிய அந்த அதிகாரியைக் கைது செய்துவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இது சம்பந்தமாக விசாரிப்பதற்காகத்தான் பொலிஸ் சுப்ரிண்டென் செல்வராகவனைத் தேடிச் சென்றிருக்கிறார். அவர்தான் செல்வராகவனுக்கு அழகிய ஒரு மகள் இருப்பதாக என்னிடம் சொன்னார்!”
“ஓ, அப்படியா, சரி கைது செய்த அந்த அதிகாரிதான் பணத்தைக் கையாடல் செய்வரா?
“இல்லை, அவர் ஒரு அப்பாவியாம்!”
பதுளையில் இருந்த ஒரு மலைப்பகுதியில் கட்டப்பட்டிருந்தது செல்வராகவனின் இரண்டு மாடிகளைக் கொண்ட பங்களா!
சுருக்கமாகச் சொல்லப் போனால்,
கொழும்பில் கூட அப்படியான ஒரு பங்களா இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.
அந்த அளவுக்கு,
எல்லா வசதிகளையும் கொண்ட பங்களாவாகவே அது இருந்தது!
விஜயராகவன்!
அழகின் இருப்பிடமும் அல்ல, அவலட்சணத்தின் பிறப்பிடமும் அல்ல!
சுமாரான ஓர் உருவம்!
கறுப்பு நிறம் அவருக்கு சொந்தம்!
சுமாரான உயரம்தான்!
கருணை மனம் என்பது,
அவருக்கு கடுகளவும் இல்லை!
இவர்தான்,
விஜயராகவன்!
மாடியில் அமர்ந்து இயற்கை காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்தார். விஜயராகவன்
அப்போது,
அறைக்குள் நுழைந்தாள்,
துர்கா!
அவள் கையில்
இரண்டு கடிதங்கள்
விஜயராகவனிடம் அதைக் கொடுத்தாள்
அதைவாங்கி,
முன்பக்கத்தைப் பார்த்து விட்டு,
பக்கத்தில் இருந்த மேசை மீது போட்டார்,
பிறகு,
துர்காவைப் பார்த்து,
“சிரஞ்சீவியிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா?” என்று கேட்டார்.
“இல்லையே அப்பா!” என்று
ஒருவித பாவனையுடன்
அமைதியாகப் பதில் சொன்னாள் துர்கா.
“துர்கா!
விஜயராகவனின் மகள் அழகானவள்” என்று சிரஞ்சீவி சிந்துஜனிடம் சொன்னது உண்மையாகத்தான் இருந்தது.
ஆமாம் அவள் பேரழகியாகத்தான் இருந்தாள்.
இன்னும் சொன்னால்,
ரவிவர்மனின் ஓவியத்தை விட அழகாகத்தான் இருந்தாள்!
பொதுவாகவே,
அழகான பெண்களிடம்,
ஒருவித கர்வமும்,
அகம்பாவமும் நிறைந்திருக்கும்,
ஆனால்”
துர்காவிடம்



மருந்துக்குக் கூட அது எதுவும் இருக்கவே இல்லை!
அதற்குப் பதிலாக,
ஓர் அப்பாவித்தனம் தான்
குடிகொண்டிருந்தது,
உண்மையை உடைத்துச் சொல்வதாக இருந்தால்,
துர்கா விஜயராகவனின் மகளே அல்ல!
ஆனாலும்,
அவரிடத்தில் துர்கா காட்டும் அன்பும் பணிவும்,
அவளை ஓர் உயர்ந்த இடத்தில் வைத்திருந்தது!
இதுவரையில் திருமணமே செய்து கொள்ளாமல் இருந்த விஜயராகவனுக்கு அவருடைய அம்மாதான் எல்லாமாக இருந்தார்.
இருந்தபோதும்,
அவருடைய சில நடவடிக்கைகள் அவர்களுக்கு பிடிக்காமல்,
அவரும் சிறிது காலம் விலகித்தான் இருந்தார்.
அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில்,
இவரால் அவர்பட்ட வேதனைகளை நினைத்துப் பார்த்தாலும்,
இப்போகூட
துர்காவின் மேனியில் ஒரு நடுக்கம் ஏற்படும்!
இதனால்,
விஜயராகவனின் மீது,
வெறுப்பு கலந்த ஓர் அன்புதான் துர்காவுக்கு இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும்!
தூரத்து உறவான ஒருவரின் மகளான துர்காவை,
விஜயராகவன் இங்கே அழைத்து வந்தார்
அன்று முதல்,
அவளுக்கு அங்கே சிறைவாசம்தான்
சுருக்கமாகச் சொன்னால்
விஜயராகவன் துர்காவின் மீது வைத்திருக்கும் அன்பு,
ஒரு முதலாளி,
ஒரு தொழிலாளியின் மீது வைத்திருக்கும் அன்பைப் போன்றதுதான் மற்றப்படி,
அவருக்கென்று மகள்கள் யாரும் இல்லை!
அந்த அவசியமும் அவருக்கு இருக்கவில்லை.
தான் பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றியபோது,
பழகிய தோழிகளைப் பற்றி நினைக்கும் போது,
இப்போது கூட,
அவள் விழிகளில் கங்கை பொங்கும்!
“இரண்டு அறைகளையும் தயார்படுத்தி விட்டாயா துர்கா?”
கொடூரமான குரலில் கேட்டார் விஜயராகவன்!
“ஆமாம், அப்பா"?”
“ம், நீதான் அவர்கள் இருவரையும் சிறப்பாக கவனிக்க வேண்டும், என்ன புரிந்ததா?”
கட்டளையிடும் தோரணையில் கேட்டார் விஜயராகவன்,
“ஓ, அதற்கென்ன சிறப்பாக கவனிக்கலாமே,!” பலமாகத் தலையை ஆட்டினாள் துர்கா.
“சிரஞ்சீவி என்பது பழைய நண்பர் ஆனால் அவருடன் கூட வரப்போகும் அந்த சிந்துஜனை நான் இதுவரையில் பார்த்ததில்லை. அது அவருடைய மருமகனாம், கிட்டத்தட்ட எட்டு வருடங்களாக நான் சிரஞ்சீவியை சந்திக்கவே இல்லை.!
“என்னது? எட்டு வருடங்களாக சந்திக்கவே இல்லையா?” வியப்பை விழிகளில் காட்டிக் கொண்டாள் துர்கா!
அவர் தலையை மேலும் கீழும் ஆட்டுவதைப் பார்த்து விட்டு,
“அவர் சிறந்த ஒரு துப்பறியும் நிபுணரா?”
இந்த கேள்வியைக் கேட்டதும்,
விஜயராகவன் துள்ளிக் குதிப்பார் என்று அவள் எதிர்பார்த்தாள்.
ஆனாலும்,
அப்படி செய்யாமல்,
அவளை வியப்பில் ஆழ்த்தும் விதத்தில்
தலையை ஆட்டினார்.
“ஆமாம், அவர் மிகவும் திறமையான ஒரு துப்பறியும் நிபுணர். எங்கள் ஈழநாட்டுக்கு அவர் ஒரு வரப்பிரசாதம். என் யூகம் சரியென்றால் அவரது மருமகனும் அவரது பாதையிலேயே செல்வார் என்று எதிர்பார்க்கிறேன்!
“மருமகனா! அப்போ அவர் ஒரு வாலிபரா?” படாரென்று, எதிர்பாராமல் வார்த்தைகள் உதிர்ந்தன. துர்க்காவின் வாயில் இருந்து!
அவள் இப்படிக் கேட்டதும்,
படாதென்று திரும்பி
அவளை முறைத்துப் பார்த்தார் விஜயராகவன்!
துர்காவின் மேனியில்
மெல்லிய ஒரு நடுக்கம் படர்ந்தது!

தொடரும்...

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 90

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| ■ | 07 | ■ | ■ | 08 | 09 |
| 10 | 11 | 12 | 13 | ■ | 14 |
| 15 | 16 | ■ | 17 | ■ | 18 |
| ■ | ■ | ■ | 19 | 20 | ■ |
| 21 | 22 | 23 | ■ | 24 | 25 |

பெயர் ..............................

வகுப்பு ..............................

தொலைபேசி இல ..............................

பாடசாலை பெயர் ..............................

வதிவிட முகவரி ..............................

..............................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) கடிதம், தந்தி ஆகிய பாரம்பரிய தகவல் பரிமாற்ற சாதனங்களையெல்லாம் முறியடித்தவாறு, நினைத்த நேரத்தில் கணப்பொழுதில் வீட்டில் இருந்தவாறே உலகின் எந்தவொரு மூலைக்கும் செய்தி அனுப்பக் கூடிய தகவல் பரிமாற்றம் இது. கைத்தொலைபேசி அல்லது கணினி மாத்திரம் இருந்தால் போதும்.

(8) மாலை நேரத்தில் அல்லது அதிகாலைப் பொழுதில் இதனை உணரலாம். அதிக குளிர் தருவது. புகைமூட்டம் போலக் காணப்படும். மலையகப் பகுதியில் இதனை அதிகம் உணரலாம். (தலைகீழான சொல்)

(10) ஆதாரம் எதுவுமின்றிப் பரவுகின்ற, உண்மைக்குப் புறம்பான செய்தியை இவ்வாறு கூறலாம்.

(15) மனிதனுக்கு உணவு, உறையுள் போன்று இதுவும் மிக அவசியம். (தலைகீழான சொல்)

(19) பெயராகவும் வினையாகவும் வருகின்ற சொல் இது. பெயராக வருகின்ற போது சிங்கத்தைக் குறிக்கும். வினையாக வருகையில் மரக்கறி போன்றவற்றை சிறுதுண்டுகளாக வெட்டுவதைக் குறிக்கும்.

(21) ஆடு, நாய், பூனை, வாழை போன்றவற்றின் இளமை மரபுச்சொல்.

(24) ஆண் மானைக் குறிக்கும் மரபுச்சொல்.

**மேலிருந்து கீழ்**

(2) உலகின் பிரதான சக்திமுதல் இது. (தலைகீழான சொல்)

(5) சூரியக் குடும்பத்தில் உள்ள கோள்களில் ஒன்று இது. கவர்ச்சிகரமான கிரகம் என்ற பெயர் கொண்டது.

(6) கடலில் பயணம் செய்வதற்கான போக்குவரத்துச் சாதனம். உலகெங்கும் பொருட்களின் போக்குவரத்தில் உதவும் சாதனம். (தலைகீழான சொல்)

(10) உழுந்து, பருப்பு போன்றவை கொண்டு, எண்ணெயில் பொரித்தெடுத்து தயாராகும் உணவுப் பண்டம்.

(13) இருப்பிடத்தையும் உடைமைகளையும் இழந்து இடம்பெயர்ந்து நிர்க்கதிக்குள்ளானவரைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)

(20) யானைக்கு இவ்வாறும் ஒரு பெயர் உண்டு. (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 89

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. திருக்குறள் 10. கங்கை 13. அணை
16. தோடை 19. கதிர் 22. பகல் 25. பானை

**மேலிருந்து கீழ்**

01. திங்கள் 04. குடை 06. அவள் 12. தோடை
17. கடை 18. கனி 20. திணை 21. பார்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 88

### பாராட்டு பெறுவோர்

**1. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. பஹ்மா**
தரம் 9A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22, இளவதுறை, கம்பளை.

**3. எப். சீணஸ்**
தரம் 04, அல் ஹிக்மா மகா வித்தியாலயம்,
பாடசாலை வீதி, நொச்சியாகம.

**4. அனீஸ் பாத்திமா அப்லா**
தரம் 07, அல் அமான் மு.ம.வித்தியாலயம்,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**5. எம்.ஆர்.எம். அப்ஸான்**
தரம் 07B, அஜ்மீர் தேசிய கல்லூரி,
இல. 1/C, மானாம்பொட, உக்குவளை.


**6. லீனா மர்யம் முஜாஹித்**
தரம் 05, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

**7. எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 05, மா/ சாஹிரா தேசிய கல்லூரி,
இல. 37. கண்டிவீதி, வறக்காமுறை, உக்குவளை.

**8. எம்.ஏ.எப். அலீனா**
தரம் 9B, க/ பதிஉதீன், ம.வித்தியாலயம், கண்டி,
இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 90
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அறன் வலியுறுத்தல் : அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்...**

**தெளிவுரை :**

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடித்து ஒழு...

## நாணயம் உண்டாக்கிய நம்பிக்கை



ஒரு முறை ராஜா எதிரிகளைத் தாக்க ஓர் இராணுவப் படை ஒன்றை தயார் செய்து போருக்குத் தயாரானார். அவர் எப்படியும் இந்தப் போரில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் இருந்தார். ஆனால் அந்தப் படையினரோ பெரும் சந்தேகத்துடனேயே இருந்தனர். அனைவரும் சோர்ந்து போய் நம்பிக்கையின்றி இருந்தார்கள்.

இதனால் அந்த ராஜா தன் படை வீரர்களுக்கு தைரியத்தை வரவழைக்க என்ன செய்யலாம் என்று, ஒரு ஜென் துறவியைப் பார்க்கச் சென்றார். அப்போது அந்தத் துறவி ராஜாவிடம், ஒரு யோசனையைச் சொன்னார். அதேபோல் ராஜாவும் செய்தார்.

அந்த ராஜா போர் செல்லும் வழியில், அவர்கள் குல தெய்வக் கோவிலில் நிறுத்தி பிரார்த்தனை செய்து விட்டு, ஒரு நாணயத்தை எடுத்து வீரர்களின் முன் காண்பித்து நான் இப்போது இந்த நாணயத்தை சுழற்றி விடுவேன். "தலை விழுந்தால் நாம் வெற்றி பெறுவோம், இல்லையேல் போரில் தோற்போம்" என்று துறவி சொன்னதைச் சொன்னார். வீரர்களிடம் "நம் தலை விதியை: இந்த நாணயம் நிர்ணயிக்கட்டும்" என்று கூறி நாணயத்தை சுழற்றினார்.

அனைவரும் அதைக் கூர்ந்து கவனித்தனர். அப்போது தலை விழுந்தது. அதனால் அந்த வீரர்கள் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடனும் சந்தோசத்துடனும் எதிரிகளைத் தாக்க தயாரானார்கள். யுத்தத்தில் வெற்றியும் பெற்றனர்.

யுத்தத்திற்கு பின்னர், துணை மந்திரி விதியை யாராலும் மாற்ற முடியாது என்று ராஜாவிடம் சொல்ல... ராஜா அந்த நாணயத்தின் இரு பக்கத்திலும் தலை இருப்பதைக் காண்பித்தார்.

நம்பிக்கையுடன் செயல்பட்டால் எத்தகைய காரியத்தையும் எளிதில் வெல்லலாம், விதியையும் மாற்றி அமைக்கலாம்.

## இவ்வார மழலை




மொஹமட் அரபாத் – பாத்திமா அஸ்மா

## ஒரு பொருள் பல சொல்

**சந்திரன்**

அம்புலி, மதி, நிலா, திங்கள், இந்து, உடுபதி, நிலவு, தண்சுடர், தாராபதி, மதியம், வெண்கதிரோன், பிறை, சுதாகரன், கலாநிதி, சோமன்.

**சூரியன்**

அருணன், ஆதித்தன், இரவி, பரிதி, கதிரவன், தினகரன், ஞாயிறு, செங்கதிர், வெய்யோன், பொழுது, தினமணி, பகலோன், பானு, விண்மணி, வெயில், செஞ்சுடர்.

சாரணாகையூம்...

## ரோஜாப் பூ

சின்னச் சின்ன ரோஜா
சிரிக்கும் நல்ல ரோஜா
விண்ணைப் பார்த்து பூக்கும்
வேதனை நெஞ்சில் போக்கும்

வண்ண வண்ண ரோஜா
வசீகரம் செய்யும் ரோஜா
என்னைப் பார்த்து சிரிக்கும்
எழிலை மண்ணில் சேர்க்கும்

அழகுக் கழகு ரோஜா
அள்ளிச் செல்லும் ரோஜா
முள்ளின் நடுவே பூக்கும்
மென்மை இதழில் சேர்க்கும்

ஆசைக் காசை ரோஜா
ஆனவ மில்லா ரோஜா
வாச மதில் வீசும்
வையகமே யதை பூசும்

கலர் கலர் ரோஜா
கண்ணைக் கவரும் ரோஜா
மெல்லிய இதழ் ரோஜா
மலர்களுக் கது ராஜா

வரக்காமுறையூர் ராசிக்...

## உலகில் மிக நீளமான வேலி

அவுஸ்திரேலியாவிலுள்ள ஒரு வேலியானது, அமெரிக்காவிலுள்ள சியாட்டிலுக்கும் மியாமிக்கும் இடையிலுள்ள இடைவெளியை விட நீளமானதாகும்.



இவ் இரண்டிற்கும் உள்ள இடைவெளி 5,343 கிலோ மீற்றராகும். இந்த வேலியானது 5,614 கிலோமீற்றர் நீளமானது.

The DingoProof Fence எனப்படும் இவ் வேலி 'உலகிலேயே மிக நீளமான வேலி' என கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது. இது 1885 ஆம் ஆண்டு பூர்த்தியாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## தியான்சி மலைகள்



சீனாவின் ஹுனான் மாகாணத்தின் வடமேற்கில் காணப்படும் இந்த அதிர்ச்சியூட்டும் சுண்ணாம்பு உச்சிப்பாறைகள், பசுமையான தாவரங்கள் மற்றும் பெரும்பாலும் மூடுபனியால் மூடப்பட்டிருக்கும். இப் பாறைகள் தியான்சி மலைகள் ('சொர்க்கத்தின் மகன்') என்று அழைக்கப்படுகின்றது. ஒரு கேபிள் கார் ஹுவாங்ஷி கிராமம் வரை செல்கிறது. இங்கிருந்து தியான்சியின் காட்சிகளைப் பார்க்க ஏராளமான தடங்கள் உள்ளன.

அவதார் படத்தில் வரும் மிதக்கும் மலைகளுக்கு இவ்விடம் உத்வேகமாக அமைந்திருக்கும் என்று நம்பப்படுகின்றது.

## சிறுவர் சித்திரங்கள்





**எம்.எச்.எம். முஹாத்**
தரம் 04E, சாஹிரா கல்லூரி, கொழும்பு - 10



**முரளிதரன் அஜந்தன்**
தரம் 05, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு - 04









தி/கிண்ணியா அப்துல் மஜீது வித்தியாலயத்தில் தரம் ஒன்று ஆசிரியைகளான எம்.வை. சாஜிதா மற்றும் சிபாயா ஆகியோர் தலைமையில் புத்தாண்டு தினவிழா கொண்டாடப்பட்ட போது... (படங்கள்: கிண்ணியா சஹறா)

## வோல்ட் டிஸ்னி





பெரியவர்களை கூட குழந்தைகளாக மாற்றி சிரிக்க வைத்த 'மிக்கிமவுஸ்' (MICKY MOUSE) என்ற மந்திர கதாபாத்திரத்தை உலகிற்கு தந்தவர் வோல்ட் டிஸ்னி. சுமார் 82 ஆண்டுகளுக்கு முன்பு கேலி சித்திர உலகத்தில் அடியெடுத்து வைத்து கற்பனை உலகில் கொடி கட்டி பறக்க வைத்தது அந்த கதாபாத்திரம்.

1901 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி அமெரிக்காவின் இல்லினாய்ஸ் மாநிலத்தில் பிறந்தார் வோல்ட் டிஸ்னி. அவருக்கு சிறுவயதில் இருந்தே ஓவியங்கள் வரைவதில் ஆர்வம் இருந்தது. ஏழு வயதான போதே அவர், ஓவியங்கள் வரைந்து அண்டை வீட்டுக்காரர்களிடம் விற்பார். பள்ளி பாடங்களை படிப்பதற்கு பதில், எப்போதுமே இயற்கை காட்சிகளையும், விலங்குகளையும் வரைந்து கொண்டிருப்பார். தந்தைக்கு அது பிடிக்கவில்லை என்றாலும், பிடித்த துறையை தேர்ந்தெடுக்குமாறு வோல்ட் டிஸ்னிக்கு தாயார் ஊக்கம் ஊட்டினார்.

குடும்பச் சூழ்நிலை காரணமாக சிறு வயதிலேயே தந்தையுடன் சேர்ந்து செய்தித்தாள் டெலிவரி செய்யும் வேலையை சிலகாலம் செய்துவந்தார். இது அவரின் பள்ளி வாழ்க்கையை மிகவும் பாதித்தது.

பின்னர், சிகாகோவின் மெக்கின்லி உயர் நிலைப் பள்ளியில் ஓவியம் மற்றும் புகைப்பட துறையில் படித்தார் வோல்ட் டிஸ்னி.

இரவில் ஒரு நுண்கலை கழகத்தில் சேர்ந்து தனது ஓவியத் திறமையை வளர்த்துக் கொண்டார். தனக்கு மிகவும் விருப்பமான திரைப்பட நாயகன் சார்லி சாப்லினைப் போல் அவர் பள்ளியில் நடித்து காட்டுவார்.

ஆசிரியர்கள் அவரை கதை சொல்லுமாறு கேட்டுக் கொள்வார்கள். அவர் கரும்பலகையில் வரைந்துக் கொண்டே கதை சொல்வார். தந்தைக்கு தெரியாமல் இரவு நேரங்களில் உள்ளூர் அரங்குகளில் நகைச்சுவை நாடகங்களில் நடித்த அனுபவமும் அவருக்கு உண்டு.

செய்தித்தாள்களில் கார்ட்டூனிஸ்ட் பணிக்காக, பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்ட டிஸ்னிக்கு தோல்வியே கிட்டியது. காரணம்,

1922 ஆம் ஆண்டு 21 வயதான போது, வோல்ட் டிஸ்னி LaughOGram என்ற தனது முதல் நிறுவனத்தை சகோதரர் ராயுடன் இணைந்து சிறியளவில் தொடங்கினார். தனது மாமாவிடம் இருந்து, 500 டொலர் கடனாக பெற்று அந்த நிறுவனத்தை ஆரம்பித்தார். கேலி சித்திர படங்களை உருவாக்குவதில் சோதனைசெய்து பார்த்த அவர், 'ஆலீஸ் இன் தி கார்ட்டூன் லேண்ட்' என்ற கேலி படத்தை தயாரித்தார். அது தோல்வியை தந்தது. நிறுவனமும் நொடித்து போனது.

ஆனால், அந்த முதல் தோல்வியால் அவர் வருந்தவில்லை. மனம் தளராத வோல்ட் டிஸ்னி அடுத்து 'ஒஸ்வல்ட் தி லக்கி ரெபிட்' என்ற புதிய கேலி சித்திரத்தை உருவாக்கினார். இந்தப் படம் வெற்றி பெற்ற போதிலும், படத்துக்கான உரிமையை இன்னொருவர் வாங்கி கொண்டு டிஸ்னியை ஏமாற்றிவிட்டார்.

அப்போதும் மனம் தளராத வோல்ட் டிஸ்னி தன் சகோதர் ரோயிடம், "இனிமேல் நாம் சொந்தமாக தொழில் செய்வோம் நமக்கு கை கொடுக்க போவது ஓர் எலி. அது நமக்கே சொந்தமாக இருக்கும்" என்று கூறினார்.

**அடுத்த வாரம் தொடரும்...**



# விளையாட்டு

# உலகக் கிண்ணம்



## ஒரே பார்வை

ஒன்றரை மாதமாக இந்தியாவில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இறுதிப் போட்டி வரை வெற்றியுடன் வந்த இந்தியா தோற்க, ஆறாவது முறையாக கிண்ணத்தை வென்றது அவுஸ்திரேலியா. நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா அரையிறுதி வரை உலகக் கிண்ணத்தை வெல்லப்போவது போல் ஆடிவிட்டு அரையிறுதியில் கோட்டை விட்டு முதல் உலகக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பை தவறவிட்டது.



தொடர் முழுவதும் ஏற்றத்தாழ்வுகளை சந்தித்த பாகிஸ்தான் அணி கடைசி வரை அரையிறுதி நம்பிக்கையை தக்கவைத்துக் கொண்டது பெரிய செய்தி. ஆப்கானிஸ்தான் அணி 9 ஆட்டங்களில் நான்கில் வென்று எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் எதிரணிகளுக்கு எச்சரிக்கையையும் கொடுத்திருக்கிறது.

நடப்புச் சம்பியனாக வந்தது மாத்திரமல்ல இம்முறை உலகக் கிண்ணத்திலும் பலமான அணி என்று எல்லோராலும் எதிர்வுகூறப்பட்ட நிலையில் எல்லோரையுமே ஏமாற்றியது இங்கிலாந்து. அஞ்சலோ மத்தியூஸை 'டைம் அவுட்' செய்ததைத் தவிர பங்களாதேஷ் அணி பற்றி சொல்லும்படியாக ஒன்றுமில்லை.

காயங்கள், குழப்பங்கள் என்று இலங்கை அணியின் உலகக் கிண்ணமே குழம்பிவிட்டது. கடைசி இடத்தைப் பிடித்த நெதர்லாந்து இம்முறை உலகக் கிண்ணத்திற்கு முன்னேறியதே பெரும் சாதனை. அதிலும் இரண்டு போட்டிகளில் வென்றது முன்னேற்றமே.

10 அணிகள், 10 மைதானங்கள் மொத்தம் 48 போட்டிகளுடன் முடிவுற்ற இம்முறை உலகக் கிண்ணப் போட்டியின் போக்கு பற்றி பார்ப்போம்.

### பெரும் வெற்றிகளின் தொடர்

2023 ஒருநாள் உலகக் கிண்ணத்தின் மொத்தம் 48 போட்டிகளில் 22 ஆட்டங்கள் 100க்கும் மேற்பட்ட ஓட்ட இடைவெளி அல்லது 4க்கும் மேற்பட்ட விக்கெட் வித்தியாசத்தில் மற்றும் 60க்கும் மேற்பட்ட பந்துகளை மிச்சம் வைத்து வெற்றியீட்டப்பட்டுள்ளன. இந்த 22 இல் 18 போட்டிகள் முழு அங்கத்துவ நாடுகளுக்கு இடையிவான ஆட்டங்களாகும்.

அதாவது இந்த உலகக் கிண்ணப் போட்டி அதிக வீதமான (45.83) ஒரு பக்க முடிவுகள் தந்த உலகக் கிண்ணத் தொடர்களில் இரண்டாவது இடத்தை பகிர்ந்துகொண்டது. அது 1975 ஆம் ஆண்டு முதல் உலகக் கிண்ணத்திற்கு மாத்திரமே பின்தங்கியுள்ளது (53.33). 2015 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடந்த உலகக் கிண்ணத்திலும் இம்முறை போன்றே 48 போட்டிகளில் 22 ஆட்டங்கள் பெரும் வெற்றிகளைத் தந்த போட்டிகளாகவே முடிந்தன.

### அட்டவணை 1

தொடர் முழுவதும் முதலில் துடுப்பெடுத்தாடிய அணிகள் பெரும்

ஒரு பக்க முடிவுகள் தந்த உலகக் கிண்ணங்கள்

| ஆண்டு | போட்டிகள் | பெரும் வெற்றிகள் | % | சராசரி ஓட்ட வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1975 | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

வெற்றிகளை பெற்றன. இரண்டு முறை 300 ஓட்டங்களுக்கு மேல் துரத்தப்பட்டன. ஒருநாள் உலகக் கிண்ணத்தில் இதற்கு முன் இப்படி நடிக்கவில்லை. முதலில் துடுப்பெடுத்தாடிய அணிகள் சாராசரியாக 134.68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் போட்டியில் வெற்றியீட்டி இருக்கின்றன. இது வேறு எந்த உலகக் கிண்ணத்தை விடவும் அதிகமாகும்.

### முக்கியமில்லாமல் போன நாணய சுழற்சி

48 போட்டிகளில் 19 ஆட்டங்களில் மாத்திரமே நாணய சுழற்சியில் வென்ற அணிகள் வெற்றியீட்டின. இதன் வெற்றி தோல்வி விகிதம் 0.655 ஆகும். எந்த ஒரு உலகக் கிண்ணத் தொடரிலும் இது இரண்டாவது மிகக் குறைவான எண்ணிக்கையாகும். 1979 ஆம் ஆண்டு நாணய சுழற்சியில் வென்ற அணிகளின் வெற்றி தோல்வி விகிதம் மிகக் குறைவாக 0.555 ஆக பதிவாக இருந்தது.

### அட்டவணை 2

நாணய சுழற்சியில் வென்ற அணியின் மிகக் குறைவான வெற்றி தோல்வி விகிதம்

| ஆண்டு | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை | வெ தோ |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

42 பகலிரவு போட்டிகளில் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய அணிகள் 16 ஆட்டங்களில் வென்றன. இந்த 42 போட்டிகளின் பாதி அளவான ஆட்டங்களில் நாணய சுழற்சியில் வென்ற அணிகள் பந்துவீச்சை தேர்வு செய்தபோதும் எட்டு தடவைகள் மாத்திரமே வெற்றியீட்டின.

முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த அணிகளும் 21 ஆட்டங்களில் எட்டில் தான் வென்றன. நடைபெற்ற ஆறு பகல் போட்டிகளில் நாணய சுழற்சியில் வென்ற அணிகள் ஐந்து முறை முதலில் பந்து வீச தீர்மானித்தன. அதில் மூன்று போட்டிகளில் அந்த அணிகள் வெற்றி பெற்றன.

### அட்டவணை 3

### சாதித்த அறிமுகங்கள்

பகலிரவு போட்டிகளில் நாணய சுழற்சியில் எடுக்கப்பட்ட முடிவுகள்

| முடிவு | போட்டி | வெற்றி | தோல்வி | வெ தோ |
|---|---|---|---|---|
| முதலில் துடுப்பாட்டம் | | | | |
| முதலில் பந்துவீச்சி | | | | |

2023 உலகக் கிண்ணம் அறிமுக வீரர்களுக்கான தொடராக மாறி இருந்தது. குறிப்பாக துடுப்பாட்டத்தில் தனது கன்னி உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்ற வீரர்கள் அதிக ஓட்டங்கள் பெற்றவர்கள் வரிசையில் முன்னிலை பெற்றனர். முதல் முறை களமிறங்கிய ரச்சின் ரிவிந்திரா மற்றும் டரில் மிச்சல்ல இருவரும் முறையே 578 மற்றும் 552 ஓட்டங்களை பெற்று நியூசிலாந்து சார்பில் ஆதிக ஓட்டங்கள் பெற்றவர்கள் வரிசையில் முதல் இரு இடங்களை பெற்றனர். தனது கன்னி உலகக் கிண்ணத்தில் ஆட வாய்ப்புக் கிடைத்த ஷ்ராயஸ் ஐயர் 530 ஓட்டங்களுடன் அதிக ஓட்டங்கள் பெற்றவர் வரிசையில் ஏழாவது இடத்தை பிடித்தார்.

ரவிந்திரா, மிச்சல் மற்றும் ஐயருக்கு முன்னர் தனது கன்னி உலகக் கிண்ணத் தொடரில் 500க்கு மேல் ஓட்டங்கள் பெற்ற ஒரே வீரராக ஜொன்னி பெஸ்டோ இருந்தார். 2019 உலகக் கிண்ணத்தில் அவர் மொத்தம் 532 ஓட்டங்களை பெற்றார். அதேபோன்று தனது முதல் உலகக் கிண்ணத் தொடரிலேயே மூன்று சதங்கள் பெற்ற முதல் வீரராகவும் ரிவிந்திரா பதிவானார்.

பாகிஸ்தான் அணிக்காக அதிக ஓட்டங்கள் பெற்ற மொஹமட் ரிஸ்வான் (395), ஆப்கான் அணிக்காக அதிக ஓட்டங்கள் பெற்ற இப்ராஹிம் சத்ரான் (376), இங்கிலாந்து அணிக்காக அதிக ஓட்டங்கள் பெற்ற டேவிட் மாலன் (404) மற்றும் இலங்கை அணிக்காக அதிக ஓட்டங்கள் பெற்ற சதீர சமரவிக்ரம (373) ஆகிய அனைவருமே தமது கன்னி உலகக் கிண்ணத் தொடரில் களமிறங்கியவர்களாவர்.

உலகக் கிண்ணத் தொடரில் அதிக விக்கெட் வீழ்த்தியவர்களில் முதல் ஐந்து இடங்களில் இருப்பவர்களில் இருவர் தமது கன்னித் தொடரில் பங்கேற்றவர்களாவர். அவர்கள் டில்ஷான் மதுஷங்க (21) மற்றும் கொரால்ட் கோட்சீ (20) ஆவர். தடுமாறிய இலங்கை அணியில் தடுமாற்றம் இல்லாமல் ஆடிய ஒரே வீரராக மதுஷங்க இருந்தார். இலங்கை அணி வீழ்த்திய மொத்த விக்கெட்டுகளில் 42 வீதமானது மதுஷங்க வீழ்த்திய விக்கெட்டுகளாகும். ஒருநாள் உலகக் கிண்ணத்தில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய தென்னாபிரிக்க வீரர் என்ற சாதனையை கோட்சீ படைத்தார்.

### பவர் பிளேயின் பலம்

2023 உலகக் கிண்ணம் அதிக ஓட்டங்கள் பெறப்பட்ட உலகக் கிண்ணமாக சாதனை படைத்தது. இம்முறை தொடரில் ஓட்ட விகிதம் 5.82 ஆக இருந்ததோடு அது 2015 உலகக் கிண்ணத்தில் பதிவான 5.65 சாதனையை முறியடித்தது. ஒட்டுமொத்த ஓட்ட விகிதத்தில் முதல் பத்து ஓவர்களில் பெறப்பட்ட பிரமாண்ட ஓட்டங்கள் பெரும் பங்களிப்பு செய்தன. அதாவதது பந்துக்கு பந்து தரவுகள் பதிவு செய்ய ஆரம்பிக்கப்பட்ட 1999 உலகக் கிண்ணம் தொடக்கம் முதல் பத்து ஓவர்களில் அதிக ஓட்ட விகிதம் பதிவான உலகக் கிண்ணமாக இம்முறை தொடர் சாதனை படைத்தது. அது 5.52 ஆக இருந்தது. அதாவது 2023 உலகக் கிண்ணத்தில் பெறப்பட்ட மொத்த ஓட்டங்களில் 21.54 வீதமான ஓட்டங்கள் முதல் பத்து ஓவர்களுக்குள் பெறப்பட்டுள்ளன. இது 2003 ஆம் ஆண்டு தொடருக்கு அடுத்து (22.73) இரண்டாவது அதிகபட்சமாகும்.



### அட்டவணை 4

முதல் பத்து ஓவர்களில் வேகமாக ஓட்டங்கள் பெற்ற அணிகள் வரிசையில் 6.97 ஓட்ட விகிதத்துடன் இந்தியா முதலிடத்தில் இருப்பதோடு சம்பியனான அவுஸ்திரேலியா ஓவருக்கு 6.5 ஓட்டங்கள் என இரண்டாவது இடத்தை பிடித்தது. முதல் பத்து ஓவர்களுக்குள் 90 அல்லது அதற்கு மேல் ஓட்டங்கள் ஐந்து தடவைகள் பெறப்பட்டன. இதில் மூன்று முறை இந்தியா இடம்பெற்றது. முந்தைய ஆறு ஒருநாள் உலகக் கிண்ண தொடர்களை எடுத்துக் கொண்டால் வெறுமனே இரு முறை தான் முதல் பத்து ஓவர்களுக்கும் 90க்கு மேல் ஓட்டங்கள் பெறப்பட்டுள்ளன.



உலகக் கிண்ணங்களில் முதல் 10 ஒவர்களின் அதிக ஓட்ட விகிதம்

| ஆண்டு | ஓட்ட விகிதம் | ஓட்டங்கள் % | இன்னிங்ஸில் + ஓட்டங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

## குறிப்புகள்

★ இந்த உலகக் கிண்ணத்தில் மொத்தமாக 100 ஓவர்களும் முழுமையாக விளையாடப்பட்ட போட்டிகள் ஒன்று கூட நிகழவில்லை. அதாவது ஒரு போட்டியில் கூட முழு ஓவர்களும் விளையாடப்படாத ஒரே ஒரு உலகக் கிண்ணத் தொடராக இந்தத் தொடர் பதிவானது. இம்முறை தொடரின் மிக நீண்ட போட்டி அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக்கு இடையில் தர்மசாலாவில் நடைபெற்ற ஆட்டமாக இருந்தது. அந்தப் போட்டி 99.2 ஓவர்கள் வரை நீடித்தது. பதிலெடுத்தாடிய நியூசிலாந்து 50 ஓவர்களுக்கும் துரத்தி ஆடியபோதும் நிர்ணயிக்கப்பட்ட 389 ஓட்ட இலக்கை ஆறு ஓட்டங்களால் தவறவிட்டது. அதாவது இந்த உலகக் கிண்ணத்தில் பதிலெடுத்தாடிய அணி 50 ஓவர்கள் வரை விளையாடிய ஒரே போட்டி இது தான்.

★ இம்முறை உலகக் கிண்ணத்தில் ஹட்ரிக் விக்கெட் விழுத்துவதற்கான வாய்ப்புகள் 19 தடவைகள் நெருங்கி வந்தபோதும் தொடர் முழுவதும் ஒரு ஹட்ரிக் விக்கெட் கூட வீழ்த்தப்படவில்லை. ஹட்ரிக் இல்லாத உலகக் கிண்ணம் இதற்கு முன்னர் 1996 ஆம் ஆண்டே நிகழ்ந்துள்ளது. 1999 மற்றும் 2019 இற்கு இடையே உலகக் கிண்ணங்களில் பத்து தடவைகள் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தப்பட்டதோடு கடந்த ஆறு தொடர்களிலும் குறைந்தது ஒரு ஹட்ரிக்கேனும் பெறப்பட்டுள்ளது. எனினும் 1975 தொடக்கம் 1996 வரையான முதல் ஆறு உலகக் கிண்ணங்களிலும் ஒரே ஒரு ஹட்ரிக் விக்கெட்டை வீழ்த்திய வராக சேடன் ஷர்மா இருந்தார். 1987 தொடரில் அவர் இந்த சாதனையை படைத்தார்.

★ ஒருநாள் உலகக் கிண்ண போட்டியில் அடுத்தடுத்த பந்தில் தமது சதத்தை பூர்த்தி செய்த நான்காவது ஜோடியாக டேவிட் வோர்னர் மற்றும் மிச்சல் மார்ஷ் பதிவாகினர். பாகிஸ்தானுக்கு எதிரான லீக் சுற்று போட்டியின் 31ஆவது ஓவரில் அவர்கள் இவ்வாறு சதம் பெற்றனர். முன்னதாக 2000 ஆம் ஆண்டு தொன்னாபிரிக்காவுக்கு எதிராக மைக்கல் பெவன் மற்றும் ஸ்டீவ் வோ, 2009இல் இலங்கைக்கு எதிராக விராட் கொஹ்லி மற்றும் கௌதம் காம்பீர் அதேபோன்று 2015 இல் ஸ்கொட்லாந்துக்கு எதிராக திலகரத்ன டில்ஷான் மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் அடுத்தடுத்த பந்தில் சதம் பெற்றிருந்தனர்.

★ பங்களூரில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான லீக் போட்டியில் பாகிஸ்தான் அணி டக்வர்த் லுவிஸ் முறையில் வெற்றி பெற்றபோதும் அந்த அணி நியூசிலாந்தை விடவும் 201 ஓட்டங்கள் குறைவாகவே பெற்றது. இது ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் சாதனையாகும். முன்னதாக 2006 கோலாலம்பூரில் நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டியில் 309 ஓட்டங்களை துரத்திய மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களை பெற்ற நிலையில் டக்வர்த் லுவிஸ் முறையில் மேற்கிந்திய தீவுகள் வெற்றியீட்டியது. இதன்போது மேற்கிந்திய தீவுகள் அணி 168 ஓட்டங்கள் பற்றாக்குறை வைத்ததே அதிகமாக இருந்தது.



★ இந்த உலகக் கிண்ணத்தில் பட் கம்மின்ஸ், மெக்ஸ்வெல்லுடன் இணைந்து இரண்டு சந்தர்ப்பங்களில் மொத்தமாக 305 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துகொண்டனர். ஆனால் இதல் கம்மின்ஸின் பங்கு வெறுமனே 20 ஓட்டங்கள் தான். அதாவது டெல்லியில் நடந்த நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் மெக்ஸ்வெல் 91 ஓட்டங்களும் கம்மின்ஸ் 8 ஓட்டங்களும் பெற இருவரும் 103 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர். பின்னர் மும்பையில் நடந்த ஆப்கானிஸ்தானுக்கு எதிரான போட்டியில் இருவரும் 201 ஓட்ட இணைப்பாட்டத்தை பகிர்ந்துகொண்டனர். ஆனால் இதில் மெக்ஸ்வெல் பெற்ற ஓட்டங்கள் 179.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2023 நவம்பர் 26 ஞாயிற்றுக்கிழமை




தமிழ்
பிரபஞ்சத்தின்
அழகு ராணி
காரைதீவு
நிவேதிகா

# ஒரு விமான டிக்கெட்டில் ஓர் ஆண்டு இலவசமாக சாப்பிட்ட ஆடவர்

பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

சீனாவில் ஆடவர் ஒருவர் முதல் வகுப்பு விமான டிக்கெட் ஒன்றை வாங்கி அதனை 300 தடவைகள் மீண்டும் மீண்டும் முன்பதிவு செய்து விமானநிலையத்தின் வி.ஐ.பீ பகுதியில் ஓர் ஆண்டாக இலவசமாக சாப்பிட்டு பொழுதை கழித்திருக்கிறார்.

ஈஸ்ட் சைனா விமான சேவையில் இந்த டிக்கெட் உணவுடன், மீளளிக்க முடியுமான சலுகையை கொண்டது. இதில் இருக்கும் பெரிய ஓட்டையை அந்த சீன ஆடவர் கண்டுபிடித்துவிட்டார். அவர் இப்படியான ஒரே ஒரு முதல் வகுப்பு டிக்கெட்டைத் தான் வாங்கினார். அதனை பயன்படுத்தி விமான நிலையத்தின் வி.ஐ.பி பகுதிக்கு சென்று இலவசமாக ஆடம்பர சாப்பாட்டை சாட்டுவிட்டு, ஓய்வெடுப்பார். பின்னர் அந்தக்



டிக்கெட்டை அடுத்த நாளைக்கு மறுபதிவு செய்வார். அடுத்த நாளைக்கும் அவர் இதனையே செய்வார்.

ஷியான் சர்வதேச விமான நிலையத்தில் அவர் இப்படி 300 நாட்களாக இந்த வேலையை செய்திருக்கிறார். ஈஸ்ட் சைனா விமான சேவைக்கு இந்த மோசடியை கண்டுபிடிக்க ஓர் ஆண்டாகி இருக்கிறது. இப்படி செய்யும் ஆடவரையும் கையும் களவுமாக பிடித்துவிட்டார்கள். அது பற்றி தீவிர விசாரணைகளையும் ஆரம்பித்துவிட்டார்.

ஆனால் அந்த ஆடவரோ தான் வாங்கிய முதல் வகுப்பு டிக்கெட்டை ரத்துச் செய்து தான் செலுத்திய பணத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டு போய்விட்டார். விமான நிறுவனத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

# பிரிட்டனில் தடுக்கப்பட்ட பண மழை

ஒரு நாடே திருட்டு நாணயம் அச்சடித்தால் எப்படி இருக்கும். நாஜிக்கல் அதனையும் செய்தார்கள். இரண்டாவது உலகப் போரில் நேச நாடுகளின் மிகப்பெரிய பலத்தில் ஒன்று பிரிட்டனில் பொருளாதாரம். போர் உச்சம் பெற்றபோது துப்பாக்கிகள், குண்டுகளை விடவும் பலமான ஆயுதம் ஒன்று பற்றி நாஜிக்கள் சிந்தித்தார்கள். அப்போது தான் இந்த திருட்டு நாணயம் அச்சடிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஹிட்லரே அதற்கு உத்தரவு போட்டார்.

போர்களில் யாரும் சிந்திக்காத சதி அது. அதாவது பிரிட்டன் நாணயத்தை போலியாக அச்சடிப்பது. இப்படி பல மில்லியன் பௌண்ட்களை அச்சடித்து குண்டுகளுக்கு பதில் பிரிட்டனில் கொண்டுபோய் வீசி விடுவது என்றுதான் சதிபோட்டார்கள்.

பெரும் எண்ணிக்கையான போலி நாணயத்தை மழையாகக் கொட்டினால் எது போலி, எது அசல் என்று கண்டுபிடிக்கவே முடியாமல் போய்விடும். அளவுக்கு அதிகமான நாணயப் புழக்கத்தால் பிரிட்டனில் பெரும் பண வீக்கம் ஏற்படும். கடைசியில் அது அந்த நாட்டின் பொருளாதாரத்தையே வீழ்த்திவிடும்.

ஹிட்லரின் திட்டம் கச்சிதமானது. அதற்கு ஏற்ப தனிக் குழு ஒன்றே அமைக்கப்பட்டு போலி நாணயம் அச்சிடும் பணி ஆரம்பிக்கப்பட்டது. பார்க்க அசல் நாணயம் போன்றே போலி நாணயங்களை அச்சிட்டார்கள். சுமார் 132.6 மில்லியன் தொடக்கம் 300 மில்லியன் பௌண்ட் நாணயங்களை அச்சிட திட்டமிடப்பட்டது.

ஆனால் பிடிபட்ட நாஜி வீரர் ஒருவர் இந்த சதியை அம்பலத்திற்கு கொண்டுவந்தார். போர் உச்சம் பெற்றபோது பொருட்களுக்கு பற்றக்குறை ஏற்படவே நாணயம் அச்சுடுவதற்கு தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காமல்போனது.

எனவே திட்டமிடப்பட்டதில் 10 வீதம் அளவான நாணயங்களையே அச்சிட முடிந்தது. அதில் நாஜிக்கள் சில பொருட்களை வாங்குவற்கு பயன்படுத்தியது போக அவர்களால் பிரிட்டனில் பண மழை பொழிவிக்க முடியாமல்போனது.

இரண்டாம் உலகப் போரில் நாஜிக்கள் வீழ்த்தப்பட்டபோது அச்சிடப்பட்ட பெரும் எண்ணிக்கையான



போலி நாணயங்களை தீ வைத்து அழித்ததோடு மேலும் கணிசமான அளவை தொலைதூர ஆஸ்திரிய ஏரி ஒன்றில் போட்டுவிட்டார்கள். பின்னர் அந்த ஏரியில் சில நாணயத் தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆபத்துப் பற்றி தொடர்ந்து பயந்த இங்கிலாந்து உலகப் போருக்குப் பின் ஐந்து பௌண்ட்களுக்கு மேற்பட்ட அனைத்து நாணயத் தாள்களையும் வாபஸ் பெற்றது. புதிய காகிதத்தில் புதிய வடிவத்தில் நாணயங்களை அச்சிட்டது.



# போட்டி முடிந்தும் கோல் காத்த வீரர்

1937 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் லண்டனில் உள்ள ஸ்டான்ட்போர்ட் பிரிட்ஜ் அரங்கில் செல்சி மற்றும் சார்ல்டன் கழகங்கள் மோதிய கால்பந்து போட்டி நடைபெற்றது. ஆனால் எதிரே இருப்பவர்கள் கூட தெரியாத அளவுக்கு கடுமையான பனிமூட்டம். போட்டியை தொடர முடியாதபோது 60 ஆவது நிமிடத்தில் ஆட்டம் கைவிடப்பட்டது.

ஆனால் சார்ல்டன் அணியின் கோல்காப்பாளர் சாம் பார்ட்ரமுக்கு அது பற்றி தெரியவில்லை. கோல் கம்பத்திற்கு முன் பந்தைத் தடுப்பதற்கு தயாராக காத்திருந்தார். போட்டியை நிறுத்துவதற்கு மத்தியஸ்தர் ஊதிய விசில் சத்தம் கேட்காததால் போட்டி முடிந்து 15 நிமிடங்களாக அவர் தனியே மைதானத்தில் கோல் காப்பில் ஈடுபட்டார்.

கடைசியில் மைதானத்தில் இருந்த பொலிஸார் ஒருவரே அவர் அருகில் சென்று போட்டி கைவிடப்பட்ட செய்தியை கூறினார். "நான் கோல் கம்பத்தில் காத்திருப்பதை எனது சகாக்கள் மறந்தவிட்டார்களே!" என்று சார்ல்டன் கவலையோடு கூறினார்.



# பியானோ கலைஞரின் சாதனை

அமெரிக்காவின் பியானோ கலைஞரான ஏர்ல்ட் வைல்ட் 1915 ஆம் ஆண்டு பிறந்தவர். அமெரிக்க தொலைக்காட்சியில் முதல் முறை பியானோ வாசித்தவர் இவர்தான். அது நிகழ்ந்தது 1942 ஆம் ஆண்டு. பின்னர் 1997 ஆம் ஆண்டு இணையதளத்தில் முதல் முறை பியானோ வாசித்த கலைஞராகவும் பதிவானார். அவர் 2010 ஆம் ஆண்டு தனது 95 வயதில் காலமானார்.



## சினிமாவைக் கட்டியெழுப்ப

# அர்ப்பணிப்புடன் செயல்பட்ட முன்னோடித் திரைப்படத் தயாரிப்பாளர்

# கே. குணரத்னம்

### "யுகாபிமானி விருது" வழங்கி கௌரவிப்பு




ஜனாதிபதி திரைப்பட விருது வரலாற்றில் முதன்முறையாக யுகாபிமானி என்னும் விருது இவ் ஆண்டு வழங்கப்பட்டது.

இவ் விருது இந் நாட்டில் சினிமாவைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயல்பட்ட ஒரு முன்னோடித் திரைப்படத் தயாரிப்பாளருக்கு வழங்கப்படுவதாகும்.

இம்முறை முதன்முறையாக பிரபல திரைப்பட தயாரிப்பாளராக இருந்த கே. குணரத்னம் அவ் விருதால் கௌரவிக்கப்பட்டார். இந்த விருதினை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து அவரது புதல்விகளான பிரியா கிங் குணரத்தினம் மற்றும் விஜயா குணரத்னம் ஆகியோர் பெற்றுக்கொண்டார்கள்.

இந்த விருதை மறைந்த தனது புகழ் பெற்ற தந்தைக்கு அர்ப்பணித்த தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சட்டத்தரணி தீபால் சந்திரரத்னவுக்கும் ஊடக அமைச்சர் பந்துல குணவதர்த்தனவுக்கும் தமது மரியாதையை தெரிவித்தார்கள்.

வரலாற்றில் மறக்கடிக்கப்பட்டிருந்த தங்கள் தந்தைக்கு வழங்கப்பட்ட விருது, உள்ளூர் திரைப்படத் துறைக்கான அவரது பணிக்காக முதன்முதல் கிடைத்த இராஜதந்திர பாராட்டு என்று அவர்கள் மரியாதையுடன் குறிப்பிடுகின்றனர்.

உள்ளூர் திரைப்பட வணிகத்தை ஒரு புதிய பாதையில் கொண்டு சென்று, அதாவது நாட்டின் திரைப்படத் துறையை நவீன போட்டி மிகு வணிக மாதிரியாக மாற்றுவதற்கு, கே.(கனக சபை) குணரத்தினம் சினிமாஸ் கம்பனி லிமிடட்டை 1947 ஆம் ஆண்டு நிறுவினார்.

இலங்கையின் வடபகுதியில் பிறந்து, நாட்டின் திரையுலகில் நுழைந்த மூன்றாவது நபரான இவர், இலங்கை சினிமாவின் பிரபலமான தயாரிப்பு பாணியின்



அனைத்து வடிவங்களும் அவர் திரைப்பட வணிகத்தில் நுழைந்த பின்னரேயே உருவானது.

முதன்முறையாக, 'கிரகப்பிரவேசம்' படத்துக்கான சிங்கள உரையாடல்களை 'மன ப்ரியன்தய' என்ற பெயரில் டப்பிங் செய்வதில் பங்கேற்றார்.

அதன்பின்னர் தியேட்டர்களை சொந்தமாக வாங்குவதல் ஈடுபட்ட அவர்

திரைப்பட தயாரிப்பிலும் ஈடுபட்டார். அவர் முதன்முறையாக இறக்குமதி செய்த தமிழ்த் திரைப்படமான 'வாழ்க்கை' திரைப்படம்வெற்றியடைந்ததால் உள்ளூர் சினிமாத் துறையில் கே.குணரத்னம் என்னும் பெயர் நிலைநிறுத்தப்பட்டது.

அன்று ஒரே பாணியில் இருந்த திரைப் படத்துறை ஏகபோகத்திற்கு சவால் விடும் வகையில், 1950 ஆம் ஆண்டு வெளியான 'ஹதிஸி வினிஸ்சய' திரைப் படத்தின் மூலம் சிங்களப் படங்களின் விநியோகத்தில் இணைந்தார், மேலும் உள்ளூர் திரைப்படத்து றையில் நேரடியாக போட்டியிடத் தொடங்கினார்.

பின்னர், மருதானையிலுள்ள தேசிய திரையரங்கை சிங்களப் படங்களைத்திரையிடுவதற்கான பிரதான அரங்காக மாற்றிய அவர், அதற்கு சிங்கள அரசர் காமினியின் பெயரை உள்ளூர் திரைப்பட இயக்கத்தின் மீது கொண்ட பெரும் நம்பிக்கையினால் சூட்டினார்.

1951 ஆம் ஆண்டில், காமினி சினிமா தியேட்டரை மையமாகக் கொண்டு அந்த

ஆண்டின் முதல் திரைப்படமான ஸ்ரீ தேவியைத் திரையிட்டு, இலங்கையில் ஒரு குறிப்பிட்ட திரையரங்குகளைக் கொண்ட ஒரு சினிமா சபையொன்றை உருவாக்குவதில் குணரத்னம் வெற்றிப் பெற்றார்.

அதன்பின்னர் இந்நாட்டின் திரைப்படத் தயாரிப்பில் அதுவரை கண்டிராத பல புதிய கருத்துகளை அறிமுகப்படுத்தி 1953ஆம் ஆண்டு நாட்டின் ஜனரஞ்சக திரைப்பட வரலாற்றின் திருப்புமுனையாகக் கருதப்படும் சுஜாதா திரைப்படம் தயாரிக்கப்பட்டது.

மேடை நாடகங்களை சினிமாவாக்கும் மரபைக் கைவிட்டு, பிரேம் ஜெயந்த், புளோரிடா ஜெயலத் ஆகியோரை முக்கிய வேடங்களில் நடிக்க வைத்து பொழுதுபோக்குப் படங்களை உருவாக்கினார்.

முதன்முறையாக, விளம்பரங்களையும் நவீன சினிமா பாணிகளையும் சுஜாதா பட தயாரிப்பில் புகுத்தினார். அதன் பின்னர் வரத காகெத, ரதல பிலிருவ, துப்பதாகே துக, சூரயா, வன மோஹினி, சந்தேஷய,

வீர விஜய, அதட வெடிய ஹெட ஹொதய், உடரட மெனிக்கே, தீவரயோ, சண்டியா, ஒப துடு தா, சூர சௌரயா, அட்டவெனி புதுமய, ஆத்ம பூஜா. ஹொதய் நரகய், அப்சரா போன்ற திரைப்பட தயாரிப்புகள் மூலம் இந்த நாட்டில் பிரபலமான திரைப்படங்களின் பல திருப்புமுனைகளுக்கு பங்களித்தார். அவர் 'தொஸ்தர' திரைப்படத்தை இந்தியாவின் பிரபல பட நிறுவனமான ஏ. வி. எம். நிறுவனத்துடன் இணைந்து தயாரித்தார். அங்குலிமாலா, பதிவத, வீர புத்தா, சுது ஆகிய படங்கள் அவரது தயாரிப்பாகவே டப்பிங் செய்யப்பட்டன. சர்வதேச படமான 'கஹ பலல்லு' மற்றும் 'ரன்முத்து தூவ' போன்ற பல படங்களின் தயாரிப்புக்கும் அவர் பங்களிப்புச் செய்தார்.

1961 ஆம் ஆண்டு ஹெந்தல விஜயா ஸ்டூடியோவை அமைத்தார். அது தெற்காசியாவின் முழுமையான கருப்பு வெள்ளை ஸ்டூடியோவாகும்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த திரைப்பட ஆய்வுக்கூடம் ஆசியாவிலேயே காணப்பட்ட மிகச் சிறந்த கருப்பு வெள்ளை திரைப்பட ஆய்வுக்கூடமாகும்.

திரைப்படத் தயாரிப்பில் காந்தி குணதுங்க, அல்பிரெட் எதிரிமான்ன, சந்தியா குமாரி, ஜீவராணி குருகுலசூரிய, விஜித மல்லிகா, வீணா ஜயக்கொடி, போன்ற பிரபலங்களை திரையுலகுக்கு அறிமுகம் செய்தார்.

அது மட்டுமல்ல காமினி பொன்சேக்கா, ஜோ அபிவிக்கிரம போன்றோரையும் சினிமா நட்சத்திரங்களாக மிளிரச் செய்தார்.

தனது திரைப்பட பிரசார நடவடிக்கைக்காக 'கலா' என்னும் சினிமா பத்திரிகையையும் நடத்தினார். தொழில் ரீதியான திரைப்பட தயாரிப்பாளர் என்னும் அர்த்தத்துடன் அறிமுகம் செய்யக்கூடிய ஒரே ஒரு இலங்கையரான திரைப்படத்தயாரிப்பாளர் அவராவார்.

அவர் திரைப்படத் தயாரிப்பில் திரைக்கதையிலிருந்து படம் திரைக்கு வரும் வரை அனைத்து விடயங்களையும் திட்டமிட்டு செயல்படுத்தினார்.

தமது தயாரிப்பில் திருப்தி ஏற்படும் வரை அப்படத்தை அவர் ஒருபோதும் திரையிடவில்லை.

கொழும்பு காமினி, லிடோ,சபையர்,



கிங்ஸ்லி, கெப்பிட்டல், நீர்கொழும்பு ராஜ், அம்பாறை விஜய ஆகிய திரையரங்குகள் அவருக்கு சொந்தமாக இருந்தன. திரைப்படத் தயாரிப்பு, வெளியீடு, விநியோகம், இறக்குமதி, ஸ்டுடியோ என திரைப்படத் துறைக்கு தேவையான அனைத்து அம்சங்களும் கொண்ட இலங்கை திரைப்படத்துறையின் பொன்னான காலத்தை உருவாக்கிய அவர் 1917 ஜூலை மாதம் 30ஆம் திகதி பிறந்து 1989 ஆகஸ்ட் 09ஆம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்தார்.

அருணா குணரத்ன















# தமிழ் மொழியை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்த சங்கவி பிலிம்ஸ் நிறுவன பணிப்பாளருக்கு கௌரவம்

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் மன்னார், பேசாலை சங்கவி திரையரங்கில் அண்மையில் கயல்விழி விருது வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில், கொழும்பு கலாசார அதிகார சபையில் தமிழ் மொழியை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்த சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஷ் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

# இரு தங்கப்பதக்கங்களை வென்ற 75 வயது பெண்

75 வயதில் வெறும்காலுடன் ஓடி சாதனை படைத்த அகிலதிருநாயகி. அண்மையில் பிலிப்பைன்ஸ் இல் நடைபெற்ற Masters & Seniors Athletics போட்டியில் இலங்கையிலிருந்து கலந்து கொண்ட முள்ளியவளை, முல்லைத்தீவை சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகி (ஓய்வு பெற்ற சிறைச்சாலைகள் உத்தியோகத்தர்) இரண்டு தங்கப்பதக்கங்களையும் ஒரு வெண்கலப்பதக்கத்தையும் பெற்றார்.

# திருக்கோவில் யுவதி 'மிது' 5000M ஓட்ட பந்தய தூரத்தை 19 நிமிடம் 36 வினாடிகளில் ஓடி மூன்றாமிடம்!




(சாய்ந்தமருது விசேட நிருபர்)

2023.11.17 ம் திகதி தொடக்கம் 18,19,20ம் திகதி வரை கொழும்பு சுகததாச தேசிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற தேசிய மட்ட இளைஞர் விளையாட்டு போட்டியில் அம்பாறை மாவட்டம் சார்பாக கலந்து கொண்ட திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவி, 20வது வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான 5000M ஓட்ட பந்தய தூரத்தை 19 நிமிடம் 36 வினாடிகளில் ஓடி முடித்து மூன்றாம் இடத்தினை பெற்று தனது கமு/திகோ/ தாண்டியடி விக்னேஸ்வரா பாடசாலைக்கும் தனது பிரதேசத்திற்கும், அம்பாறை மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

பு.மிது பயிற்சி பெறுவதற்கு சரியான களங்கள் இல்லாத நிலையில் அவரின் விடா முயற்சியும் கடின உழைப்பும் தான் வெற்றிக்குக் காரணம் என அறிவிக்கப்படுகிறது.

# பெண் அறிவிப்பாளர் றம்ஸானா சமீல்



கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பிரதேசத்தின் பட்டியடிப்பிட்டியில் வசித்து வரும் அப்துல் மஜீட் ஸஹ்வா உம்மா தம்பதியின் 2 ஆவது புதல்வி றம்ஸானா சமீல். இவர் தனது ஆரம்ப கல்வியை அக்/அர்ரஹீமியா வித்தியாலயத்திலும் உயர்தரத்தை அக்கரைப் பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியிலும் கற்றார். தற்போது இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலைமாணி பட்டதாரியாவார். இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிறை எப் எம் இல் 17 வருடங்களாக அறிவிப்பாளராக கடமையாற்றி வருவதோடு முகநூல் தொலைக் காட்சிகளில் பெண்களுக்கான சிறப்பு நேர்காணல் நிகழ்வுகளையும் தொகுத்து வழங்கும் தொகுப்பாளராகவும் கடமையாற்றி வருகிறார்.

### ? அறிவிப்பு துறையில் ஆர்வம் ஏற்படக் காரணம்?

பாடசாலையில் கல்வி கற்கும் போது இலங்கை வானொலி தென்றல் மற்றும் வர்த்தக சேவை போன்றவற்றின் நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்டு வருவேன் . அறிவிப்பாளர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் விதம் அதன் நிகழ்ச்சிகள் யாவும் என் மனதை கவர்ந்தவையாகவே இருந்ததால் எனக்கும் அறிவிப்பாளராக வர வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.மேலும் பாடசாலையில் ஒரு வாசிப்பை மேற் கொள்ளும் போதிலும் அல்லது கலை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதிலும் எனது உச்சரிப்பு நான் பகிர்ந்து கொள்ளும் விடயங்கள் ஒரு அறிவிப்பாளரைப் போலவே இருக்கின்றன என்று எனது ஆசிரியர்கள், எனது சக நண்பிகள் என்னை உற்சாகமூட்டிய விதம் எனக்குள் இப்படி வரவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

### ? உங்கள் ஊடகப் பயணம் எப்போது ஆரம்பமானது?

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பிறை எப் எம் 2005.11.04 இல் ஆரம்பிக்கப் பட்டு அதன் இரண்டாவது வருட நிறைவுக்குள் 2007 ம் ஆண்டு அறிவிப்பாளருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.அந்தவகையில் நானும் ஓர் அறிவிப்பாளினியாக தெரிவு செய்யப் பட்டு அன்று முதல் இற்றை வரை சுமார் 17 வருடங்களாக கடமையாற்றிக் கொண்டிருக்கிறேன்.

### ? அறிவிப்புத் துறையில் உங்கள் அனுபவம் பற்றிக் கூறுங்களேன்...

அறிவிப்புத் துறை என்பது ஒரு கடல் போன்றது என்னைப் பொறுத்தவரை இன்னும் இன்னும் கற்க வேண்டிய விடயங்கள் இருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.குறிப்பிட்ட சில நாட்களே பயிற்சியளிக்கப்பட்டு எமது வானொலியின் மதிப்பிற்குரிய பிரதிப் பணிப்பாளர் அல்ஹாஜ் பசீர் அப்துல் கையூம் வேண்டுகோளுக்கிணங்க பல்வேறு நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி வருகின்றேன். இதிலும் கடந்த 7 வருடங்களாக பிரதி வெள்ளிக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் 'மகளிர் மட்டும்' என்ற நிகழ்ச்சியை தயாரித்து தொகுத்து வழங்கி மங்கையர் மட்டுமல்லாமல் அனைத்து நேயர்களின் வரவேற்பையும் பெற்று வந்ததோடு எந்த சந்தர்ப்பத்தில் என்ன நிகழ்ச்சி வருகின்றதோ அதாவது மனதோடு பிறை, இடைவேளை, றிதம், இசைமாலை, இவ்வார நேயர், மாலை மருதம் போன்ற நிகழ்ச்சிகளையும் நேயர்களின் விருப்பத்திற்கேற்ப சுவை பட மிகத்திறமையாக தொகுத்து வழங்கி பல்லாயிரக்கணக்கான நேயர்களின் அபிமானத்தை பெற்றதோடு முகநூல் தொலைக் காட்சிகளிலும் சாதனை படைத்த பெண்களை செவ்வி கண்டு அனேக மானவர்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளேன்..

இன்னும் வெளிக்கள நிகழ்வுகளை தொகுத்து வழங்கி வர்த்தக விளம்பர நிகழ்ச்சி மூலம் சிறந்த வர்த்தக நிகழ்ச்சி தொகுப்பாளர் என்ற பெயரையும் பெற்றுள்ளேன்.கடந்த 6 வருடங்களுக்கு மேல் இலங்கை வானொலி தென்றலில் இடம்பெற்ற.' அல்லியுடன் ஒரு நிமிடம் ' நிகழ்ச்சியை மூத்த அறிவிப்பாளர் k. ஜெயகிருஷ்ணா அவர்களுடன் இணைந்து தொகுத்து வழங்கி அன்னை வானொலி தென்றலிலும் குரலை பதிவு செய்துள்ளேன்.

### ? சான்றிதழ்கள் , விருதுகள்....?

★ கிழக்கிலங்கை இளைஞர் அமைப்பினால்' சிறந்த பெண்' அறிவிப்பாளருக்கான விருதினை இரண்டு தடவைகள் பெற்றுள்ளேன் .

★ லக்ஸ்டோ மீடியாவினால் "சிறந்த பெண் அறிவிப்பாளருக்கான விருது
'கலை முத்து' பட்டம்..

★ Srilanka pen clubஇனால் 'சிறந்த நிகழ்ச்சி தொகுப்பாளருக்கான' விருது, Zaithoon nhar foundation Canada இனால் 'சிறந்த பெண் குரல்' க்கான விருது

★R J மீடியாவினால் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'சிறந்த பெண் அறிவிப்பாளருக்கான'விருது

★ 2022 கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல் திணைக்களத்தால் வழங்கும் ஊடகத் துறைக்கான 'இளம்கலைஞர்' விருது.

★ அனேகமான நேயர்களால்' பிறைக் குயில், என்ற பட்டத்தையும் பெற்றுள்ளேன்.

### ? அறிவிப்பாளருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பற்றிக் கூறுங்களேன்.?

அறிவிப்பாளருக்கு இருக்க வேண்டிய முக்கிய தகைமைகளாக தமிழ் மொழியை சிறப்பாக உச்சரிக்கக் கூடியவராகவும் க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ் மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பதோடு அறிவிப்புத் துறையில் ஆர்வம் உள்ளவராகவும் புத்தாக்க சிந்தனையுடையவராகவும் இருக்க வேண்டும்.



### ? பெண்ணாக நீங்கள் இத்துறையில் சந்தித்த சவால்கள் இருப்பின் கூறுங்கள்?

கள விஜயங்களிலுள்ள கஷ்டம் அகால வேளைகளிலான நிகழ்ச்சிகளில் தனித்து பணியாற்றுவதிலுள்ள சிரமம் , தகவல்களை பெறுவதில் உள்ள சிரமம், பாலியல் தொடர்பான விழிப்புணர்வு அறிவிப்பு செய்வதில் கலாசார வரம்பு, குழந்தை வளர்ப்பு பிரச்சினை, உண்மை கருத்துக்களை துணிந்து வெளிப்படுத்த முடியாத நிலை, புரிதலற்ற நேயர்களின் நக்கல் நையாண்டிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆண் அறிவிப்பாளர்களோடு சமாந்தரமாய் பணியாற்றக் கூடிய ஆற்றல் இருப்பினும் சமூக விமர்சன அச்சம் நிர்ப்பந்தத்தோடு குறைந்த கொடுப்பனவுகளை பெறவேண்டிய நிலை ஆண்களுக்கு ஈடான கொடுப்னவுகள் வழங்கப்படாமை போன்றன .









### ? ஒரு குடும்பப் பெண்ணாக இருந்து கொண்டு அறிவிப்பாளராகவும் பணியாற்ற உங்களால் எப்படி முடிகிறது?

குடும்பத்தின் கடமைகளை நிறைவேற்றுவதிலும் அதில் எந்த குறைகளையும் வைக்காமல் குறியாக இருப்பதோடு மேலதிகமாக ஓய்வு நேரங்களில் இத்துறையை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு செயற்படுவேன்.. இன்னும் சொல்லப் போனால் ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பதைப் போன்று என்னுடைய வெற்றிக்குப் பின்னால் ஒரு ஆணாக இருந்து என் கணவர் எனக்கு செய்யும் ஆக்கமும் ஊக்கமும் எனது குடும்பத்தின் நிறைய விடயங்களை கவனிப்பதும் எனக்கு எந்த சவால் வருகின்ற சந்தர்ப்பத்திலும் அதனை எதிர் கொண்டுஎனக்குதரும்நம்பிக்கையும்என்னால் ஒரு குடும்ப பெண்ணாக இருந்து கொண்டு அறிவிப்பாளராகவும் பணியாற்ற முடிகிறது.

### ? அறிவிப்பு துறை மாத்திரமன்றி வேறு துறைகளிலும் ஈடுபாடு உண்டா?.

ஆமாம் , இலக்கியத் துறையில் கவிதைகளை எழுதி வருகின்றேன்..இப்போது சிறு சிறு கவிதைகளை எனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டு வருகின்றேன்..40க்கு மேற்பட்ட கவிதைகளை எழுதி பதிவிட்டதோடு இன்ஷா அல்லாஹ் விரைவில் அதனை புத்தகமாக வெளியிடவும் இருக்கின்றேன்.


மேலும் சமூக சேவையில் சுமார் 18 வருடங்களாக சேவையாற்றிக்கொண்டு வருகின்றேன். கிராமங்களில் ' பின் தங்கிய பிரதேசங்களில் என்று அக்கரைப்பற்று மாநகர மற்றும் பிரதேச சபைக்கு கீழ் இருக்கின்ற மக்களில் பெண்தலைமைதாங்கும் குடும்பம், விசேட தேவை உடையவர்கள், வருமானம் குறைந்த குடும்பங்கள், சிறுவர்கள் முதியோர் என்று பல பிரிவினர்களுக்கும் சமூகசேவை நிறுவனங்கள் ஊடாக பல உதவிகளைப் பெற்று சேவை செய்து கொண்டு வருவதோடு பல சமூக சேவை நிறுவனங்களில் தலைவியாக, உப தலைவியாக செயலாளராக, பொருளாளராக, கணக்காய்வாளராக, நிர்வாக சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டு எனது பொறுப்பையும் சரிவர நிறைவேற்றிக் கொண்டு வருகின்றேன்.

நேர்காணல் : மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி

# தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களில் தன் திறமையைக் காட்டிய எம். டி குணா

## இலங்கையிலே தமிழ் சினிமாவை உருவாக்க முயற்சி

தெளலத், கத்தி, பாதை, ரட்னவேல் பாண்டியன், கடை எண் ஆறு, காசு பணம் துட்டு, வந்தாமலை, புறம்போக்கு ஆகிய படங்களின் உதவி இயக்குனராகவும் வாரிசு திரைப்படத்தின் படப்பிடிப்பு உதவியாளராகவும் இந்தியன் 2 திரைப்படத்தின் கலை உதவியாளராகவும் தன் திறமையைக் காட்டிய இலங்கையைச் சேர்ந்த திரைப்படத் தொழில்நுட்பக் கலைஞர் நடிகர் எம். டி குணா. தமிழ் சினிமா மீது தீவிர ஆர்வம் கொண்ட இவர்,



இலங்கையிலே தமிழ் சினிமாவை உருவாக்கவேண்டுமென்ற குறிக்கோளுடன் இயங்கி வருகிறார். இவர் சினிமாத் துறை மட்டுமல்ல தற்காப்புக் கலையான கராத்தே துறையிலும் தன் திறமையை நிலைநாட்டி வருபவர். இவர் அண்மையில் எமது தினகரன் ஆசிரியர் பீடத்திற்கு வருகை தந்தபோது அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவற்றுக்கு அவர் அளித்த விபரங்களும் வருமாறு,

**? உங்கள் பூர்வீக வரலாற்றைப் பற்றிக் கூறுங்களேன்.**

இலங்கையில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள தலவாக்கலை எனது பிறந்த ஊர். தலவாக்கலை ஹோல்டன் எஸ்டேட்டில் பிறந்த நான், ஜிசிஈ ஓஎல்வரை பூண்டுலோயா தமிழ் மகா வி்த்தியாலயத்தில் படித்துவிட்டு கொழும்புக்கு வந்துவிட்டேன். படிக்கின்ற போது விளையாட்டுத்துறையில் தீவிரமாக ஈடுபட்டேன். கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களில் தீவிரமாக ஆர்வம் செலுத்தி விளையாடினேன். 2003, 2004 ஆம் ஆண்டளவில் எனக்கு சினிமா மீது தீவிர மோகம் ஏற்பட்டது.

எனக்கு இவ்வாறு சினிமாவில் பிரியம் ஏற்பட்டது. நான் தேசிய அணியில் விளையாடுவதற்கு உத்தேசம் கொண்டு அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டேன். ஆனால் எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. பல அணிகளிடம் சென்று வாய்ப்புகளை நானும் இன்னும் நாலைந்து பேரும் சேர்ந்து கேட்டோம். ஆனால் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. அதனால் விளையாட்டுத் துறையை விட்டுவிட்டு வேறு துறைகளில் ஆர்வம் செலுத்தி முன்னேறலாமென்று எண்ணினேன். அதற்கமையத்தான் சினிமா துறையை தேர்ந்தெடுத்தேன்.

அதற்கப்புறம் இந்தியா போய் ஒரு பெரிய கலைஞன் ஆகலாமென்றும் நன்றாகச் சம்பாதிக்கலாமென்றும் எண்ணினேன். யுத்த காலத்திலேயே இந்தமாதிரி ஆசை எனக்குள் ஏற்பட்டது. நான் படிக்கின்ற காலத்திலேயே டான்ஸ் ஆடுவதிலும் கராத்தே பயிற்சிகளிலும் ஈடுபட்டதுண்டு. இக்காலகட்டங்களில் அம்மா வந்து சொல்லுவாங்க 'பிரபுதேவா மாதிரி டான்ஸ் ஆடுகிறாய், வடிமேல் மாதிரி ஜோக்காக நடிக்கிறாய்' என்று பாராட்டுவாங்க.



**? அம்மா மட்டும் அப்படி பாராட்டுவாங்களா?**

ஆமாம் அம்மா மட்டும் தான் அப்படி பாராட்டுவாங்க.


அதற்கப்புறமாகத் தான் சினிமா பற்றி அணுகி அதை தேடத் தொடங்கினேன். அந்தக் காலகட்டத்தில் தொலைக்காட்சியில் காப்புறுதி நிறுவனம் விளம்பரமொன்றை ஒளிப்பதிவு செய்தார்கள். அந்த விளம்பர ஒளிப்பதிவு கொழும்பு புறக்கோட்டை யூனியன் பிளேஸில் நடைபெற்றபோது கொழும்பு, புறக்கோட்டை 2 ஆம் குறுக்குத்தெருவில் உள்ள ஒருவரை தேடி அணுகினேன். அவர் இன்னொருவரை சந்திக்கச் சொன்னார். அவரைப் போய் சந்தித்தவுடன் அவர் வேறு ஒரு நேரத்தைக் கூறி அந்த நேரத்திற்கு வரும்படி கூறினார். மறுநாள் சென்ற போது அந்த விளம்பர ஒளிப்பதிவு யூனியன் பிளேஸில் நடைபெற்றது. சும்மா நிற்பதற்காக என்னை நடிக்க அழைத்தார். அதில் நடித்துக் கொடுத்தேன். அதன்பின்பு அவர்கள் தமிழ்த் திரைப்படமொன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிட்டார்கள்.



அதற்கான கலைஞர்கள் தேர்வு நடைபெற்றது. அந்தத் தேர்வில் நான் பங்கேற்றேன். அந்தப் படம் தயாரிக்கப்பட்டது. ஆனால் அதில் எனக்கு முழுத் திருப்தி ஏற்படவில்லை. எங்களுடைய அம்மாவின் தங்கை இந்தியாவிலிருந்து அடிக்கடி கடிதம் போட்டுக் கொண்டிருப்பாங்க, அந்த கடிதத்திலே அவருடைய தொலைபேசி இலக்கமிருந்தது. அதனால் நான் தொலைபேசி மூலம் உடனடியாக தொடர்புகொண்டு பேசி இந்தியாவுக்கு போக முயற்சித்தேன்.

இந்தியாவிலிருந்து அவர்கள் பேசும்போது நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று கேட்டார்கள். நான் சினிமாத் துறையில் ஈடுபட்டிருக்கிறேன் என்று கூறினேன். அவர்கள் இந்தியாவிலுள்ள இயக்குனர் ஒருவரைப்பற்றி கூறினார்கள். அவருடன் தொலைபேசியில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அடிக்கடி நாங்கள் பேசினோம். அதற்கமைய அவர் இந்தியாவுக்கு வரும்படி கூறினார். நான் இங்கு அந்த நேரத்தில் கராத்தே துறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். அதனால் கராத்தே மாஸ்டரும் நானும் இந்தியாவுக்கு திருச்சியில் போய் இறங்கினோம்.

அதன் பிறகு மெட்ராஸ் போனோம். மெட்ராஸில்தான் அந்த இயக்குநர் இருந்தார். சென்னையிலுள்ள கேகேஎஸ் நகரில்தான் அந்த இயக்குநர் இல்லமிருந்தது. அங்கு போய் அவரைச் சந்தித்தபின் அவர் இன்னும் பலரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்களுடன் தொடர்புகொண்டு கதைத்துவிட்டு மீண்டும் இலங்கைக்கு திரும்பினோம். அதன்பின் வியாபாரத்தில் ஈடுபட்டோம். அதுவும் எனக்கு திருப்தியளிக்கவில்லை. எனவே மீண்டும் இந்தியாவுக்குச் சென்று சினிமாத் துறையைப் பற்றி கற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது. மீண்டும் மெட்ராஸ் போய் அவரைச்சந்தித்தேன். ஆபிஸ் ஒன்றில் இருந்துகொண்டு சான்ஸ் தேடினால் கிடைக்காது. அதனால் இயக்குநர்கள் நடிகர்களுடைய தொலைபேசி இலக்கங்களைக் கண்டுபிடித்து அவர்களுடன் பேசினேன். அதன் பிறகு மீண்டும் இலங்கைக்கு வந்தேன். இலங்கைக்கு வந்து சிறிது நாட்களின் பின்னர் மீண்டும் இந்தியாவுக்குச் சென்றேன். அங்குபோய் ஆபிஸ் ஒன்று திறந்து அதில் தங்கிக் கொண்டு எனது போட்டோவை இயக்குநர் பலரிடம் அனுப்பினேன்.



நிறைய இயக்குநர்களை அணுகி போட்டோக்களை கொடுத்துவிட்டு வந்தேன். ஆனால் எவருமே என்னை அழைப்பதாகத் தெரியவில்லை. நான் மிஸ்கின் சேரை ஒருமுறை சந்தித்து, போட்டோவைக் கொடுத்துவிட்டு வரும்போது அவர் 'தம்பி இங்கே வா' என்று கூப்பிட்டார்.

'தம்பி இப்படி போட்டோ கொடுக்கக்கூடாது' என்றார். அப்படியென்றால் எப்படிக் கொடுக்கலாமென்று நான் அவரிடம் கேட்டேன். அப்பொழுது அவர் பக்கத்திலுள்ள ஒரு பையனைக் கூப்பிட்டு 'தம்பி சினிமாவில சான்ஸ் கேக்கிறதென்றால் எப்படி கேட்பதென்று இவருக்குக் கொஞ்சம் சொல்லிக் கொடுங்கள்' என்றார். அவர் சொன்னபடி அதன் பின் நான் சான்ஸ் கேட்டு போனேன்.

அதற்கப்புறம்தான் எனக்கு ஒன்றிரண்டு சான்ஸ் கிடைத்தது. அதற்கப்புறம் இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள் பலருடைய தொலைபேசி இலக்கங்கள் எனக்குக் கிடைத்தன. அவற்றை வைத்துக் கொண்டு நான் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன். எனக்கு அதன் பிறகு சில வாய்ப்புகள் கிடைத்தன.

ஒரு இயக்குநர் என்னிடம் கூறினார், 'நீங்கள் நடிப்பதை விட தொழில்நுட்பக் கலைஞனாக மாறினால் நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். அப்படி வாய்ப்புகள் கிடைக்கின்ற போது, நடிப்பதற்கும் வாய்ப்புகள் வரும்' என்றார். அவர் கூறிய மாதிரி நானும் தொழில்நுட்பக் கலைஞனாக முயற்சிசெய்தேன். அதில் வெற்றியும் கண்டேன். சில படங்களில் நடிப்பதற்கு வாய்ப்புகளும் கிடைத்தன.

அதற்கமைய 'வாரிசு' திரைப்படத்திலே ஒளிப்பதிவாளருக்கு உதவியாளனாக செயற்படுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அப்புறம் 'புறம்போக்கு', 'வந்தாமலை', 'தெளலத்' கடைசியாக 'இந்தியன் 2' திரைப்படத்தில் கலை இயக்குநருக்கு உதவியாளராக இருந்தேன். இந்தியா சினிமாத் துறையில் நான் நிறைய கற்றுக்கொண்டேன் என எனக்குத் தெரிகிறது. இந்தியாவை விட இலங்கையிலே சினிமாத் துறையில் ஈடுபட ஆரவம் ஏற்பட்டது. இலங்கையில் வந்து என்னைமாதிரி நிறைய கலைஞர்கள் சினிமாவில் ஈடுபட ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு சினிமாவைச் சொல்லிக் கொடுத்து வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கலாமென்று எண்ணியுள்ளேன்.



நான் கராத்தே மாஸ்டராக இருந்தாலும்கூட சினிமாவிலே ஸ்ரென்த் என்ற ஒன்றிருக்கு. அது கற்றுக் கொண்டால்தான் சினிமாத் துறையில் ஈடுபடலாம்.


அதை சென்னை கேகேஎஸ் நகரிலுள்ள ஸ்ரூடியோவில் போய் கற்றுக்கொண்டேன். இந்தியாவில் சினிமாத் துறையில் இன்டஸ்ரியல் இருப்பதுபோல இலங்கையிலும் தமிழ் சினிமாத் துறைக்கு இன்டஸ்ரியல் ஏற்படுத்தவேண்டுமென்பதே எனது எண்ணமாகும்.

07 ஆம் பக்கம் பார்க்க...

06 ஆம் பக்கத் தொடர்ச்சி...

அதுமாதிரி மட்டுமன்றி இந்திய தொழில்நுட்பக் கலைஞர்களைக் கொண்டு இலங்கையிலே திரைப் படங்கள் தயாரிக்கலாமென்று இருக்கிறேன். அப்படிச் செய்யும் போது இலங்கையிலுள்ள கலைஞர்களுக்கும் அவற்றில் பங்கேற்பதற்கு வாய்ப்புகள் வழங்கவுள்ளேன்.

என்னுடன் சேர்ந்து இயங்கினால்,



நான் சினிமாத்துறை சார்ந்து கற்றுக்கொண்ட அனைத்து விடயங்களையும் அவர்களுக்கும் கற்றுக் கொடுப்பேன். அதன்பின் அவர்கள் இந்தியாவிற்குச் சென்று சினிமாத் துறையில் நன்றாகப் பிரகாசிக்கலாம். அதற்கான அத்திவாரத்தைத் தான் இலங்கையில் இடுவதற்கு தீர்மானி˙ததுள்ளேன். இலங்கையில் கலைஞர்கள் பிரதேசவாரியாக பிரிந்துள்ளார்கள். இந்த பிரிந்துள்ளவர்களை ஒன்றாக இணைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணம். இலங்கையில் நிறைய பிலிம் அக்கடமிகள் இருக்கின்றன.

( இவர்களிடம் சென்று கற்றுக் கொள்வதாக இருந்தால் இவர்கள் ஒன்று, படம் எடுத்தவர்களாக இருக்கவேண்டும் அல்லது படங்களில் நடிப்பதற்கான வாய்ப்புகளை வழங்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் பணத்திற்காக எல்லாம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நான் அப்படியில்லாமல் எல்லாம் முறையாக செய்ய எண்ணுகின்றேன். என்னிடம் இப்போது சினிமா இருக்கிறது, நீங்கள் என்னுடன் சேர்ந்து இயங்கினால்தான் எனக்கு எவ்வளவு சினிமா தெரியுமென்பதும் நீங்கள் எவ்வளவு சினிமாவை தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்பதும் தெரிந்துவிடும்.

நீங்கள் என்னுடன் வந்து சேர்ந்து இயங்கினால் நன்றாக இருக்கும். சினிமா என்பது ஒருகூட்டு முயற்சி, தனியாக இயங்க முடியாது. எனக்கு சினிமா தெரியுமென்பதற்காக நான் தனித்து இயங்கமுடியாது. எல்லாரும் கூட்டு சேர்ந்து இயங்கினால்தான் ஒரு சிறந்த திரைப்படத்தை உருவாக்கமுடியும். இப்படி எல்லாரும் சேர்ந்து வந்தால் எல்லாருக்கும் நல்ல எதிர்காலம் அமையும். அதுபோல சினிமா துறையும் வளர்ச்சிபெறும்.

நான் சக்சஸ் பிலிம்ஸ் என்று ஒரு கொம்பனி ஆரம்பித்து வைத்திருக்கிறேன். அந்தக் கம்பனி பெயரில் கனடாவிலுள்ள ஒருவர் இலங்கைக்கு வந்து படம் ஒன்று தயாரிப்பதற்கு என்னைத் தொடர்புகொண்டுள்ளார். அதற்கான பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அது வெற்றிபெற்றால் கூடிய சீக்கிரத்தில் அந்தத் திரைப்படம் தயாரிக்கப்படும். இதுபோல் இலங்கையில் தமிழ் சினிமாவை உருவாக்குவோமென்று பேஸ்புக் குறுாப்பொன்றை ஆரம்பித்திருக்கின்றேன்.

**இலங்கையிலே தமிழ் சினிமாவை உருவாக்கவேண்டுமென்று கூறுகின்றீர்கள். அப்படியென்றால் இதுவரை இலங்கையில் தமிழ் சினிமா உருவாகவில்லையா?**

அப்படி தமிழ் சினிமா உருவாகியிருந்தால், நான் ஏன் இந்தியாவைத் தேடிச்சென்று தமிழ் சினிமாவை நாடவேண்டும். இலங்கையில்தான் இன்னும் தமிழ் சினிமா வளரவில்லையே. அதனால் அதனை வளர்க்க வேண்டிய பொறுப்பு எனக்குள்ளது. ஏனென்றால் நான் இந்தியாவில் போய் சினிமாத் துறையைப் பற்றி நன்றாகக் கற்றுக்கொண்டேன். இப்ப எனக்கத் தெரிகிறது சினிமா என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும். ஆனால் நான் நினைத்துக் கொண்டிருந்த சினிமா வேறு என்று இப்போது எனக்கு நன்றாகத் தெரிகிறது. இலங்கையில் சினிமா பண்ணுவதற்குரிய சகல வளங்களும் இருக்கின்றன. கமராவாகவிருக்கட்டும தொழில்டநுட்ப கலைஞர்களாகவிருக்கட்டும் நடிகர்களாக இருக்கட்டும் எல்லாமே இங்கே இருக்கு.

இலங்கையில் சிங்களத் திரைப்



படங்களைப் பொறுத்தவரையிலே இலங்கைக்குள் மாத்திரம்தான் பார்க்கப்படுகின்றது. ஆனால் தமிழ்த் திரைப்படங்களைப் போல வேர்ள் வைட்டாக செல்வதில்லை. அப்படிச் செல்லும் பட்சத்திலே சிங்கள சினிமாவுக்கு சரியான சர்வதேச அங்கீகாரம் வரும். கனடா தயாரிப்பாளருடன் சேர்ந்து தயாரிக்கப்படும் படத்தை முதலிலே தமிழில் தயாரித்துவிட்டு அதற்குரிய போஸ்ட் புரடக்ஷன்ஸ் எல்லாம் முடித்துவிட்டு அதனைச் சிங்களத்தில் எடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளேன்.

சிங்களத்தில் எடுக்கப்படும் திரைப் படத்தை நான்தான் இயக்குவேன். கதை திரைக்கதை வசனம் எல்லாம் அவருடையதாகவிருக்கும்.

**உங்களுடைய எதிர் கால நோக்கமென்ன?**

எனக்கு இலங்கையில் நிறைய படங்கள் உருவாகவேண்டும். அதற்குரிய துறை உருவாகவேண்டும். அதற்கு இலங்கையில் நிரந்தரமான ஒரு இன்டஸ்ரீ உருவாகவேண்டும். இந்தியாவில் ஒரு இன்டஸ்ரீ இருப்பதால் தான் அதற்கு கீழே எல்லாருமே வேலைசெய்யக்கூடியதாக இருக்கிறது. அதேபோல இலங்கையிலும் உருவாகவேண்டும். அதிலேதான் திரைப்படக் கல்லூரிகளெல்லாம் இயங்கிக்கொண்டிருக்கிறது.




நானும் எனது கொம்பனியை திரைப்படக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு தகுந்த வகையில் பதிவுசெய்து வைத்திருக்கிறேன். நான் கூத்து பட்டறையில் கற்றுக் கொண்டஅனைத்தையும் இங்கு நான் கற்றுக்கொடுக்க எண்ணியுள்ளேன். டான்ஸ் கற்றுக்கொள்ளவேண்டுமென்று நினைத்தால் டான்ஸ் கற்றுக்கொடுப்பேன். பைற் கற்றுக் கொள்ள வேண்டுமென நினைத்தால் பைற் கற்றுக்கொடுப்பேன். நடிப்பு கற்றுக்கொள்ள வேண்டுமென்று நினைத்தால் நடிப்பு கற்றுக்கொடுப்பேன். இவையெல்லாவற்றையும் நான் ஒரே இடத்திலே கற்றுக்கொடுப்பேன். இந்தியாவிலே போய் நீங்கள் இதையெல்லாம் கற்றுக்கொள்வதாகவிருந்தால் ரொம்ப சிரமப்படவேண்டிவரும். நான் பட்ட சிரமங்களை நீங்கள் எதிர்கொள்ளக்கூடாதென்ற எண்ணத்தோடு தான் நான் எல்லாவற்றையும் இப்படிக் கற்றுக்கொடுக்க திட்டமிட்டுள்ளேன்.

நான் நன்றாக அனுபவப்பட்டு வந்து கற்றுக்கொடுக்கத் திட்டமிட்டுள்ளேன். ஆனால் இங்குள்ள அக்கடெமியில் இந்தியாவிற்குச் சென்று படித்துவிட்டு வந்து கற்றுக்கொடுப்பவர்கள் யாரும் இல்லை. நீங்கள் வந்து இரண்டுமூன்று கிளாஸ் படிக்கும்போது என்னிடம் சினிமா எவ்வளவு இருக்கிறதென்பது உங்களுக்குத் தெரிந்துவிடும்.

திரைப்படக் கல்லூரி மட்டக்களப்பில் இருக்கிறது. யாழ்ப்பாணத்திலும் ஒரு பிரிவு இருக்கிறது. ஆனால் என்னுடையது வந்து இந்திய திரைப் பட ரீதியாக இருக்கும். என்னிடம் படிக்கின்றவர்கள் சினிமாவில் வேலைசெய்துகொண்டு படிக்கக்கூடியவர்களாகவிருக்கும். ஏனெனில் நான் இந்திய கலைஞர்களையெல்லாம் அழைத்து கற்றுக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளேன்.

இந்தியாவிலுள்ள என்னுடைய நண்பர்கள் அப்படி இலங்கை வந்து விரிவுரைகள் நடத்துவதற்கு தயாராகவிருக்கிறார்கள். கமெராவாகவிருக்கட்டும் நடிப்பாகவிருக்கட்டும் இப்படி எல்லா துறைகளிலும் கற்றுக் கொடுக்கத் தயாராகவிருக்கிறார்கள்.



முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543







கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் "த்ரி குணா" வாணி விழா அதிபர் திருமதி யோகராணி சிவபாலனின் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாக அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர், "கம்பவாரிதி " ஜெயராஜ் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். கல்லூரி மாணவிகளின் இயல், இசை, நாடகம் என முத்தமிழ் சார்ந்த வகையில் ஆற்றுகைகள் இடம்பெற்றன. அனைத்து நிகழ்வுகளும் மனதிற்கும், கண்களுக்கும், செவிகளுக்கும் விருந்தாக அமைந்திருந்தன. இவை அனைவரது பாராட்டையும் பெற்றன.



மாத்தளை கணேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தின் பேரிகை நூல் வெளியீடும் மாபெரும் கலைவிழாவும் பாடசாலை அதிபர் ப.ரஞ்சித்தின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், பிரதம அதிதியாக மாத்தளை கல்வி வலய உதவி கல்வி பணிப்பாளர் திருமதி மோனிக்கா கோமஸும் அயலக பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்விலே மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்வுகளும் அரங்கேறின. படங்கள் : மொனராகலை ஜெயகுமார் ஷான்

# பார்க்கிங் பிரச்சினை சாதாரணமானதல்ல!’

ஹரிஷ் கல்யாண்



ஹரிஷ் கல்யாண், இந்துஜா நடித்திருக்கும் ‘பார்க்கிங்’ பட டிரெய்லருக்கு அவ்வளவு வரவேற்பு. ராம்குமார் பாலகிருஷ்ணன் இயக்கி இருக்கும் இந்தப் படம் டிச.1ல் வெளியாகிறது. 'பலூன்' இயக்குநர் கே.எஸ்.சினிஷ், சோல்ஜர்ஸ் ஃபேக்டரி சார்பில் தயாரித்திருக்கும் இந்தப் படத்தை பேஷன் ஸ்டுடியோஸ் இணைந்து தயாரித்திருக்கிறது. ஹரிஷ் கல்யாணிடம் பேசினோம்.

**சாதாரண பார்க்கிங் பிரச்சினைதான் கதையா?**

பார்க்கிங் பிரச்சினை சாதாரணமானதல்ல. அது எப்படி வளர்ந்து, ஈகோவாகி என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்துது அப்படிங்கறதுதான் இந்தப் படம். கதையை டைரக்டர் சொன்னதுமே அதுல கனெக்ட் பண்ணிக்க முடிஞ்சுது. நானும் சைக்கிள் ஓட்டுற காலத்துலயே, அந்த பார்க்கிங் பிரச்சினையை சந்திச்சிருக்கேன்.

சமீபத்துல கூட பார்க்கிங் பிரச்சினை பெரிய வில்லங்கத்தைக் கொண்டு வந்திருக்கிற செய்திகளையும் பார்த்திருக்கோம். பார்வையாளர்கள் யாரோ ஒருத்தரோட கதையா இதை பார்க்காம, தங்களையும் கதைக்குள்ள இணைச்சுக்கிறதுக்கு இதுல நிறைய ஸ்கோப் இருக்கு. கார், பைக் வச்சிருக்கவங்க எல்லோரையுமே இந்தப் படம் டச் பண்ணும்னு தோணுச்சு. உடனே ஓகே சொல்லிட்டேன்.

**நீங்க என்ன கேரக்டர் பண்றீங்க?**

என் கேரக்டர் பெயர் ஈஸ்வர். திருச்சியில இருந்து சென்னைக்கு புதுசா வந்திருக்கிற ஆள். ஐடி கம்பெனியில வேலை பார்க்கிறேன். இந்த தலைமுறையை பிரதிபலிக்கிற கேரக்டர். ஜாலியா, வாழ்க்கையை அதன் போக்குல அனுபவிக்கிறவன். மனைவியா இந்துஜா நடிச்சிருக்காங்க. இந்தப் படத்தோட கதையும் சரி, மேக்கிங்கும் சரி எல்லோருக்கும் பிடிக்கும்.

**பார்க்கிங் பிரச்சினையை மட்டும் வச்சு இரண்டரை மணி நேரம் கதை பண்றது கஷ்டமாச்சே?**

உண்மைதான். ஆனா, இதுல சில உண்மைச் சம்பவங்களும் இருக்கு. டைரக்டருக்கு இது சவாலாதான் இருந்தது.

இந்தக் கதையை அவர் உருவாக்குனதுமே தன்னோட நண்பர்கள்கிட்ட, தெரிஞ்சவங்ககிட்ட சொல்லியிருக்கார். அப்ப அவங்க ‘எனக்கு இப்படியொரு அனுபவம்,எனக்கு இப்படி நடந்துச்சு’ன்னு சொல்ல ஆரம்பிச்சிருக்காங்க. அவங்க சொன்னதையும் சேர்த்து ரொம்பசுவாரஸ்யமா, எமோஷனலோட இந்தக் கதையை பண்ணியிருக்கார். இப்ப வீட்டுல ஒருத்தருக்கு உடல் நிலை சரியில்லைனா, உடம்பை பார்த்துக்கோங்கன்னுஆறுதல் சொல்வோம். ஆனா, கார்ல ஒருத்தன் கோடு போட்டுட்டான்னு சொன்னா அதைத் தாங்கிக்கவே முடியாது. அப்படியே கொதிச்சுருவோம். இந்த எமோஷன்தான் படம்.

**உங்களுக்கு எம்.எஸ்.பாஸ்கர்தான் வில்லனா?**

வில்லன்னு சொல்ல முடியாது. என் குடும்பமும் எம்.எஸ்.பாஸ்கர் சார் குடும்பமும் வாடகைக்கு இருக்கிறோம். எங்களுக்குள்ள கார் பார்க் பண்றதுல ஆரம்பிக்கிற பிரச்சினை எங்க கொண்டு போய் விடுதுன்னு கதை போகும்.

எம்.எஸ்.பாஸ்கர் சார், முந்தையை தலைமுறையை பிரதிபலிக்கிறவரா ரொம்ப அருமையா நடிச்சிருக்கார். இப்ப ஐடின்னா பெரியவங்களை கூட பெயர் சொல்லிக் கூப்பிடற கலாச்சாரம்தான் அங்க இருக்கு. ஆனா, எம்.எஸ்.பாஸ்கர் சாரால அப்படி இருக்க முடியாது. அதனால ரெண்டு பேருக்குள்ளயுமே கோபம் இருக்கும். அது வெவ்வேற மாதிரி வெளிப்படும். ஸ்கிரிப்ட் புக்ல என்ன இருந்ததோ, அதை அப்படியே படமாக்கி இருக்கார் இயக்குநர்.

**படத்துக்காக 2 காரை புதுசா வாங்கியதா சொன்னாங்களே?**

ஆமா. கதை முழுவதும் அதைப் பற்றிங்கறதால ரெண்டு கார் தேவைப்பட்டது. அது சொந்தமா இருந்தா நல்லாயிருக்கும்னு புதுசாவே வாங்கி படப்பிடிப்பை நடத்தினோம். மொத்தம் 35 நாள் ஷூட்டிங். விருகம்பாக்கம், வளசரவாக்கம் பகுதியிலயே ஷூட்டிங்கை முடிச்சுட்டோம். சில காட்சிகளை மட்டும் ஈசிஆர்ல எடுத்தோம்.

**பார்க்கிங் பிரச்சினைக்குத் தீர்வு ஏதும் சொல்றீங்களா?**


இந்தப் பிரச்சினைக்கு தீர்வுன்னு சொல்ல முடியாது. இது தொடர்ந்துட்டுதான் இருக்கும். அதை எல்லாம் விட மனிதாபிமானம் வேணும்னு சொல்ற படம். இப்ப வண்டியில லேசா இடிச்சுட்டா, கத்திட்டுப் போறதைவிட, ‘ஸாரி’ன்னு ஒரு வார்த்தை இறங்கி வர்றதுல என்ன இழந்திட போறோம்? அப்படி சொன்னா அது அதோட முடிஞ்சுரும். பேசிட்டே இருந்தா அது ஈகோவாகி, பெரிய பிரச்சினையிலதான் முடியும். இதுக்குன்னு இல்லை. எந்த சண்டையை தீர்க்கவும் மனிதாபிமானம் முக்கியம்.

## சர்ச்சைக்குரிய வரிகளுடன் வெளியானது ‘நான் ரெடி’ பாடல்

சர்ச்சைக்குரிய வரிகளுடன் வெளியானது ‘நான் ரெடி’ பாடல்லியோ’ படத்தில் இடம்பெற்ற ‘நான் ரெடி’ பாடலின் இடம்பெற்ற சில வரிகள் திரையரங்கில் நீக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது யூடியூபில் அந்த வரிகள் நீக்கப்படாமல் வெளியாகியுள்ளது.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்த ‘லியோ’ படத்தில் இடம்பெற்ற ‘நான் ரெடி’ பாடலின் லிரிக்கல் வீடியோ சில மாதங்களுக்கு முன்பு வெளியானது. அதில் இடம்பெற்ற சில வரிகள் குடிபோதையை ஊக்குவிப்பதாக கூறி சமூக வலைதளங்களில் சர்ச்சை ஆனது. பலரும் இப்பாடல் வரிகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனையடுத்து படம் திரையரங்கில் வெளியானபோது இப்பாடலில் இடம்பெற்ற அந்த வரிகள் மாற்றப்பட்டன. இந்த நிலையில், இப்பாடலை படக்குழு இன்று (நவ.19) யூடியூபில் வெளியிட்டுள்ளது. அதில் திரையரங்கில் நீக்கப்பட்ட அந்த சர்ச்சைக்குரிய வரிகள் இடம்பெற்றுள்ளன.

லியோ’ திரைப்படம் இதுவரை ரூ.600 கோடியை வசூலித்துள்ளதாக தகவல் வெளியானது. விஜய்யின் படங்களில் அதிகபட்ச வசூலை குவித்த படம் என்ற பெருமையுடன், தமிழ் சினிமாவில் அதிகபட்ச வசூலை குவித்த 3ஆவது படம் என்ற அடையாளத்தையும் ‘லியோ’ பெற்றுள்ளது.






ஆக்‌ஷன் காட்சியுடன்
தொடங்கியது ‘நானி 32’நடிகர் நானி, நடித்துள்ள
‘ஹாய் நானா’ படம் டிச.1ம் தேதி வெளியாகிறது. இதில்
மிருணாள் தாக்குர் நாயகியாக நடித்துள்ளார்.
நானியின் 31வது படத்தை, ‘அடடே சுந்தரா’ படத்தை இயக்கிய விவேக்
ஆத்ரேயா இயக்குகிறார். டிவிவி என்டர்டெயின்மென்ட் சார்பில் டிவிடி தனய்யா
மற்றும் கல்யாண் தாசரி இந்தப் படத்தைத் தயாரிக்கின்றனர். படத்துக்கு ‘சூர்யாவின்
சனிக்கிழமை’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதில், நானிவித்தியாசமான முரட்டுத்
தோற்றத்தில் நடிக்கிறார். பிரியங்கா மோகன் நாயகியாகவும் எஸ்.ஜே.சூர்யா வில்ல
னாகவும் நடிக்கின்றனர். முரளி ஜி. ஒளிப்பதிவு செய்கிறார். ஜேக்ஸ் பிஜோய் இசைய
மைக்கிறார். பான் இந்தியா படமாக உருவாகும் இது, தெலுங்கு, தமிழ், கன்னடம்,
மலையாளம், இந்தி மொழிகளில் வெளியாக இருக்கிறது. இதன் படப்பிடிப்பு
ஆக்‌ஷன் காட்சியுடன் ஹைதராபாத்தில் தொடங்கியுள்ளது. ஸ்டன்ட்
இயக்குநர்களான ராம்லக்ஷ்மண் இதை வடிவமைக்கிறார்கள்.

## ஆக்‌ஷன் காட்சியுடன் தொடங்கியது ‘நானி 32’





## சிம்பு புதிய படங்களில் நடிக்க தடை இல்லை : நீதிமன்றம்

பிரபல தயாரிப்பு நிறுவனமான வேல்ஸ் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் சிம்பு நடிப்பில் ‘வெந்து தணிந்தது காடு’ என்ற படத்தை தயாரித்தது. அடுத்த படமாக ‘கொரோனா குமார்’ என்ற படத்தை தயாரிப்பதாக இருந்தது. இந்த படத்தில் நடிப்பதற்காக சிம்புவுக்கு 9.5 கோடி ரூபாய் சம்பளம் பேசி, முன்பணமாக 4.5 கோடி ரூபாய் கொடுத்து, சிம்புவுடன் ஒப்பந்தம் செய்தது. ஆனால் படம் தொடங்கப்படவில்லை. மற்ற படங்களில் சிம்பு நடித்து வந்தார். இதனால் கொரோனா குமார் படத்தில் நடித்துவிட்டுத்தான் சிம்பு வேறு படங்களில் நடிக்க வேண்டும். இல்லாவிட்டால் முன்பணத்தை திருப்பி தர வேண்டும் என்று வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கு விசாரணையில் ஒப்பந்தத்தில் ஒரு கோடி முன்பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டிருப்பதால் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள 1 கோடிக்கான உத்தரவாதத்தை நடிகர் சிம்பு செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்தநிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சிம்பு தரப்பில் ஒரு கோடி செலுத்திய ரசீது ஒப்படைக்கப்பட்டது. பின்னர் இந்த வழக்கை முடித்து வைத்து நீதிமன்றம் கூறியிருப்பதாவது: இந்த விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்ய, மூத்த வக்கீல் என்.எல்.ராஜா மத்தியஸ்தராக நியமிக்கப்படுகிறார்.

சிம்பு கொடுத்துள்ள 1 கோடிக்கான உத்தரவாதம் 2 மாதங்களுக்கு மட்டுமே செல்லும். அதற்குள் இருதரப்பும் பேசி முடிவுக்கு வரவேண்டும். ‘கொரோனா குமார்’ படத்தில் நடிக்காமல் மற்ற படங்களில் நடிக்க சிம்புவுக்கு தடை விதிக்க வேண்டும் என்ற மனுதாரர் கோரிக்கை ஏற்க முடியாது. வெளிநாடுகளுக்கு செல்லக்கூடாது.

புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யக்கூடாது என்று சிம்புவுக்கு தடை விதித்தால், அது அவரது தொழிலுக்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்துவதாகிவிடும். மேலும், இந்த பிரச்சினையை சட்டப்படி இரு தரப்பினரும் விரைவாக பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு கொண்டு வரவேண்டும். இந்த வழக்கு முடித்து வைக்கப்படுகிறது. இவ்வாறு நீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராம் சரண் ஜோடியாக சாய் பல்லவி?

தெலுங்கு முன்னணி நடிகர்களுள் ஒருவரான ராம்சரண், இப்போது ஷங்கரின் ‘கேம் சேஞ்சர்’ படத்தில் நடித்து வருகிறார். பான் இந்தியா முறையில் இந்தப் படம் உருவாகிறது. இதையடுத்து அவர் நடிக்கும் படத்தை ‘உப்பெனா’ படத்தை இயக்கிய புச்சிபாபு சனா இயக்குகிறார். இதில் கதாநாயகியாக சாய் பல்லவி நடிக்க இருப்பதாக செய்தி கள் வெளியாகியுள்ளன. முக்கிய கேரக்டரில் விஜய் சேதுபதி நடிக்க இருப்பதாக ஏற்கெனவே செய்திகள் வெளியான நிலையில் ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. கிராமத்துப் பின்னணியில் உருவாகும் இந்தப் படம் பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# அதிக தன்னம்பிக்கை கொண்ட பெண்கள் இப்படிதான் இருப்பார்கள்..!



தனித்துவமாக இருக்கும் பெண்களுக்கு என்று ஒரு சில பிரத்தியேகமான பழக்கங்கள் மற்றும் குணங்கள் இருக்கின்றன. குறிப்பாக, அதிக தன்னம்பிக்கை கொண்ட பெண்களுக்கு இவை பொதுவானதாகக் காணப்படுகின்றன.

சமூகத்தில் ஒரு சிலர் மிகவும் தனித்துவமாக, நேர்த்தியாக, பார்க்கும் போதே அதிசயிக்கும் விதமாக இருப்பார்கள். இவர்களைப் போல இருக்க வேண்டும் என்று ஒரு சில பெண்களைப் பார்க்கும் போது ஒரு ரோல் மாடலைப் போலக் காண்பார்கள். இவ்வாறு தனித்துவமாக இருக்கும் பெண்களுக்கு என்று ஒரு சில பிரத்யேகமான பழக்கங்கள் மற்றும் குணங்கள் இருக்கின்றன. குறிப்பாக, அதிக தன்னம்பிக்கை கொண்ட பெண்களுக்கு இவை பொதுவானதாகக் காணப்படுகின்றன. அவ்வாறு தன்னம்பிக்கையுடன் வலம் வரும் பெண்களிடம் காணப்படும் பழக்கங்கள் பற்றி இங்கே பார்க்கலாம்.

நேர்த்தியான, பொருத்தமான ஆடை அணிவது : ஆள் பாதி ஆடை பாதி என்ற பழமொழிக்கு ஏற்ப அதிகமான தன்னம்பிக்கை என்பது ஒருவருடைய தோற்றத்தில் வெளிப்படும். அதில் நாம் எந்த ஆடைகளை தேர்ந்தெடுக்கிறோம் என்பது மிக மிக முக்கியம். தன்னம்பிக்கை நிறைந்த பெண்கள் தங்களுக்கு பொருத்தமான ஆடைகளை நேர்த்தியாக அணிவார்கள். இது டிரெண்டில் இருக்கிறது, இதுதான் இப்போது ஸ்டைல் என்று பொருத்தமில்லாத ஆடைகளை தேர்வு செய்ய மாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலக்குகளை நிர்ணயித்து அதை அடைவார்கள் : பொதுவாகவே வாழ்வில் முன்னேறுவதற்கு நமக்கு என்று தனிப்பட்ட இலக்குகள் மற்றும் லட்சியங்கள் இருக்க வேண்டும். இலக்குகள் இல்லாமல் தோன்றியதையெல்லாம் செய்து கொண்டிருந்தால் ஒரு கட்டத்தில் குழப்பம் ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும் பெண்கள் சின்ன சின்னதாக இலக்குகளை நிர்ணயித்து அதை ஒவ்வொன்றாக அடைந்து நிதானமாக முன்னேறிச் செல்வார்கள். இதன் மூலம், மிகப்பெரிய விஷயங்களைக் கூட படிப்படியாக சாதிக்க முடியும்.

கனிவாக இருப்பார்கள், உதவி செய்ய தயங்க மாட்டார்கள் : தன்னம்பிக்கை அதிகரிப்பதற்கு நீங்கள் பொதுவாகவே அன்பாகவும் கனிவாகவும் இருக்க வேண்டும் மற்றும் மேலும் தயங்காமல் உங்களால் முடிந்த உதவியை மற்றவர்களுக்கு செய்ய வேண்டும். இந்த இரண்டு பழக்கமுமே உங்களுடைய தன்னம்பிக்கையை பெரிய அளவில் அதிகரிக்கும்.

தன்னைத் தானே அறிந்து கொள்வது : உங்களைச் சுற்றி இருப்பதை புரிந்து கொள்வது எவ்வளவு முக்கியமோ, உங்களைப் புரிந்து கொள்வதும் அதே அளவுக்கு முக்கியம். நீங்கள் எதைப் பற்றி அதிகம் சிந்திக்கிறீர்கள், உங்கள் உணர்வுகள், உணர்ச்சிகள் ஆகியவற்றைப் பற்றி எழுதலாம். அல்லது உங்களின் ஏற்ற இறக்கமான உணர்வுகளை பற்றி உங்களுக்கு நெருக்கமானவர்களிடம் பகிரலாம். இதன் மூலம் உங்களைப் பற்றி நீங்கள் நன்றாக புரிந்து கொள்ள உதவும். தன்னுடைய பலவீனங்களை அறிந்தவர்களுக்கு தன்னம்பிக்கை குறையாது.

# குழந்தையின் முதல் நண்பன்



பெற்றோர் மற்றும் குழந்தைகளிடையே நல்ல வார்த்தைப் பிரயோகம் (கம்யுனிகேஷன்) இருப்பது மிகவும் அவசியம். இதை எப்படி செய்யலாம் என்று சொல்கிறார் கயல்விழி அறிவாளன்

ஆண் குழந்தையோ பெண் குழந்தையோ, அம்மாவும் அப்பாவும் தான் அவர்களின் முதல் நண்பர்கள். அவர்களிடம் அவர்கள் வெளிப்படையாக இருப்பது அவர்களில் வளரும் நாட்களில் நல்ல ஒரு பாதிப்பை கொண்டிருக்கும்.

மேலும் ஒரு குறிப்பிட்ட வயதிற்கு பிறகு குழந்தைகளிடம் நம்முடைய குடும்ப விஷயங்கள் அனைத்தையும் பற்றி பேசுவது, விவாதிப்பது, ஆலோசனைகள் செய்வது, தீர்மானம் எடுப்பது, பொதுவான விஷயங்களை மனம் விட்டு பேசுவது; நல்லது கெட்டதை விவாதிப்பது ; குடும்பத்தில் நன்மையே உண்டாக்கும். பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் நெருக்கத்தை உண்டாக்குவது மட்டுமல்லாமல் பிள்ளைகள் சமுதாயத்தில், பொது இடங்களில் பேச, பழக தைரியத்தையும் உண்டாக்கும்.

# பக்கவாட்டு கூந்தல் ஸ்டைல்



பக்கவாட்டு கூந்தல் ஸ்டைல்

பக்கவாட்டில் வாரிவிடும் ஹேர்ஸ்டைலின் புகழ் குறையவே இல்லை. உச்சியில் நடுத்தர நீளத்தில் முடி இருக்கும் போது இந்த ஸ்டைல் கச்சிதமாக பொருந்தும், பக்கவாட்டில் உள்ள முடிகளைக் குறைவான நீளத்தில் வெட்டியிருக்க வேண்டும்.

மிருதுவாக்கும் ஷாம்பூ, கண்டிஷனர் மூலம் தலை முடியை தயார் செய்யவும். சுத்தமான தலைமுடியில்தான் இந்த ஹேர்ஸ்டைலை சிறப்பாக செய்ய முடியும்.

ஈரமான முடியில், மேட் டெக்சரில் உள்ள ஸ்ட்ராங்க் ஸ்டைலிங் வாக்ஸைப் பூசவும்.

பின்பு, ஒரு சீப்பினால், துல்லியமாக வகிடு எடுத்து, பக்கவாட்டில் முடியை இரண்டு பாகமாக பிரிக்கவும், பின்பு வாக்ஸில் வாரி விட்டு, அதை உலர விட்டு முடியை சரியாக பிடித்திருக்க வைக்கவும்.

உங்கள் ஆளுக்கு, தீவிரமான, தட்டையான தோற்றம் பிடிக்காது என்றால், முன்பகுதி மற்றும் பின்பகுதியில் ஒரு ரவுண்ட் பிரஷை வைத்து ப்ளோடிரை செய்வதை முயற்சிக்கவும்.

ஒரு ஷைன் சீரம் மற்றும் ஒரு ஹோல்டிங் ஸ்ப்ரே வால் இந்த தோற்றத்தை முழுமைப்படுத்துங்கள்.

# வீட்டிலேயே கழுத்து வலியை குணமாக்க சில குறிப்புகள்



ஐஸ் பேக்ஸ் (ஐஸ் கட்டி) அதன் மீது வைக்க வலி மற்றும் வீக்கம் குறையும்.

ஒரு பிளாஸ்டிக் பையில் நொறுக்கப்பட்ட ஐஸ் கட்டிகளை வைத்து அதை தலையனை உரைக்குள் வைக்கவும்.

உங்கள் கழுத்து பகுதி அதில் படும் படி ஓய்வெடுக்கவும். சில நிமிடங்களிலேயே மாற்றத்தை உணரலாம்.

மன அழுத்தம் தசை பிடிப்பை உண்டாக்கும். உங்களை பாதிக்கும் மன அழுத்த காரணங்களை கண்டறியுங்கள்.

பிறகு, உங்கள் மன அழுத்தத்தை குறைப்பதற்கான வழிகளை பற்றி ஆக்கப்பூர்வமாக சிந்தித்துப் பாருங்கள். உங்கள் நண்பர் அல்லது நெருக்கமான நபருடன் உங்கள் வருத்தத்தைப் பற்றி பகிர்ந்துகொள்ளுங்கள்.


வெப்பம் ரத்த ஓட்டத்தை அதிகரிக்க உதவும். ஒரு சூடான தண்ணீர் பாட்டிலை வலி பகுதியில் வைக்க அங்கு ரத்த ஓட்டம் அதிகரித்து வலிக்குறையும்.

# பரத நாட்டிய அரங்கேற்றம்



நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குனர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும், திரு. திருமதி , சுபாஷினி ஷண்முகம் செந்தில்குமாரின் புதல்வியுமான செல்வி ஹரித்ரா செந்தில்குமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. இவ் அரங்கேற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக நடனக்கலைஞரும், இயக்குனருமான டி. கே. திருச்செல்வம்க லந்துகொள்வார், கௌரவ அதிதிகளாக பிஷப்ஸ் கல்லூரி அதிபர் திருமதி செமாலி குணதிலக ஹேரத் மற்றும் உப அதிபர் செல்வி கிருஷ்ணிகா கல்படகே ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். கலாசூரி ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் நடன நெறியாள்கையில் நடைபெறும் அரங்கேற்ற நிகழ்வில் குயிலுவக் கலைஞர்களாக அருணந்தி ஆரூரன் (குரலிசை), எஸ். நாகராஜன் (மிருதங்கம்), சண்முகநாதன் திபாஹரன் (வயலின்), ரட்ணம் ரட்ணதுரை (தாளதரங்கம்), பிரியந்த தஸநாயக்க (புல்லாங்குழல்) ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.









# கவின் அழகுபடுத்தலில் எம்.எஸ்.காரியப்பர் கோட்டத்தில் முதலிடம்







**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலயத்தில் கவின் கலையுடன் கூடிய அலங்கரிக்கப்பட்ட வகுப்புக்கள் புதன்கிழமை (08) திறந்து வைக்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மிகவும் வறிய, பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் பெற்றோர்களின் பங்களிப்புடன் ஆரம்பப் பிரிவு 01 ஆம் ஆண்டின் வகுப்பாசிரியைகளான எம்.பி. பாயிஸா, திருமதி என்.எப். பைஸால், 02 ஆம் ஆண்டு கே. ஹப்ஸா, 03 ஆம் ஆண்டு ஏ.எஸ். ஐனுல் சஜானா, 04 ஆம் ஆண்டு எஸ்.எச். மர்சுக்னா, 05 ஆம் ஆண்டு ஏ.டபிள்யூ. றினோஸியா ஆகிய ஆசிரியைகளின் சொந்த நிதியிலிருந்தும் இவ்வகுப்பறைகள் நன்றாக அலங்கரிக்கப்பட்டிருந்தன.

பாடசாலையின் அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.மலிக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன், விசேட அதிதிகளாக ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். ஜஹாங்கிர், ஆசிரிய ஆலோசகர்களான யூ.கே. அன்சார், எம்.எம்.எம். றபீக், பாடசாலையின் ஸ்தாபக அதிபர் ஏ.எல்.ஏ. நாபித் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் நாஸர், பாடசாலைக்கு சகல



விதத்திலும் உதவி வருகின்ற ஊடகவியலாளர்களான சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் மற்றும் செய்தியாசிரியர் பல்துறைக்கலைஞர், கலைச்சுடர் எம்.எஸ்.எஸ்.ஸாகிர் உட்பட ஏனைய வகுப்பு ஆசிரிய, ஆசிரியைகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது அதிதிகள் குழுவினர் அழகுபடுத்தப்பட்ட தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையான 06 வகுப்பறைகளையும் ஒவ்வொன்றாகப்பார்வையிட்டதுடன்,அனைத்து வகுப்பறைகளும் சாய்ந்தமருது பாடசாலைகளில் உள்ள ஆரம்பநெறி வகுப்பறைகளில் முதலிடம் பெற்ற வகுப்பறைகளாக சிலாகித்துப் புகழப்பட்டன. அதிலும் குறிப்பாக, மிகவும் காத்திரமான முறையில் தரம் 04இன் வகுப்பாசிரியையினது நெறிப்படுத்தல் மற்றும் கை வண்ணத்தில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை இலகுவாக்கக்கூடிய வகையில் நிறைய விடயங்கள் சுவரில் நேர்த்தியாக வரையப்பட்டு, வகுப்பறை மிகவும் அழகாக காட்சியளித்தமையும் குறிப்பிடத்தக்கது.

அரும்பாடுபட்டு தியாக உணர்வோடு பாடுபட்ட அதிபர் உட்பட அனைத்து ஆசிரியைகளையும் பிரதம அதிதி பாராட்டிப் பேசியதோடு, ஏனைய பாடசாலைகளையும் அழைத்து அவர்களுக்கு கவின் கலையுடன் அலங்கரிக்கப்பட்ட இவ்வகுப்பறைகளைக் காட்சிப்படுத்தி, அவர்களையும் ஊக்குவிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.மலிக் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.ஜஹாங்கிர் ஆகியோர் அதிபரிடம் கேட்டுக்கொண்டனர். வகுப்பறைகளுக்கு உயிரோட்டம் கொடுத்தமைக்காக வகுப்பாசிரியைகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.







# இலங்கையின் முதலாவது திருமணமாகாத தமிழ் அழகு ராணியாக காரைதீவு நிவேதிகா தெரிவு!



















இலங்கையின் முதலாவது திருமணமாகாத அழகு ராணியாக அம்பாறை மாவட்டம் காரைதீவைச் சேர்ந்த செல்வி நிவேதிகா இராசையா தெரிவு செய்யப்பட்டுள்ளார். கனடிய அமைப்பொன்று இலங்கையில் முதல் முதலாக இந்த போட்டியை கடந்த மூன்று மாத காலமாக நடத்தியது. கொழும்பில் நடைபெற்ற இந்த தெரிவில் முதல் சுற்றில் 120 பெண்கள் நாடளாவிய ரீதியில் கலந்து கொண்டனர். இறுதிச்சுற்றில் 15 பேர் கலந்து கொண்டார்கள். அதில் முதலாவது இடத்தில் நிவேதிகா இராசையாவும் இரண்டாவது இடத்தில் ஆச்சர்யா யோகராஜனும் மூன்றாவது இடத்தில் சந்திரகுமார் விதுர்ஷாவும் தெரிவு செய்யப்பட்டார்கள். காரைதீவைச் சேர்ந்த செல்வி.நிவேதிகா இராசையா காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் செல்லையா இராசையாவின் புத்திரி என்பது குறிப்பிடத்தக்கது. ( காரைதீவு குறூப் நிருபர் சகா)



















அனைத்திந்திய அ.தி.மு.கவின் 52ஆவது ஆண்டு பொன்விழாவையொட்டி அகில இலங்கை எம். ஜீ.ஆர். மன்றம் ஏற்பாடு செய்த விஷேட நிகழ்வு கடந்த 19ஆம் திகதி கொழும்பு 11, பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. அகில இலங்கை எம்ஜிஆர் மன்றத்தின் தலைவர் கலாநிதி எஸ்.எச்.எம். இதிரிஸ், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் எம். டீ. எம். இக்பால், தொழில் அதிபர் எட்மண்ட் பெர்னாண்டோ, ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன், தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம உதவி ஆசிரியர் கே. ஈஸ்வரலிங்கம், மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் குமரகுருபரன், நெய்னார் காப்பகத் தலைவர் இம்ரான் நெய்னார், கவிஞர் பிரேம்ஜி, அச்சக உரிமையாளர் தேவர் முனிவர், ஓம் சரவணா புரடக்ஷன் அதிபர் எஸ். நடராஜா, தெலுங்கு காங்கிரஸ் தலைவர் அ. அன்பழகன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

# கடல்கடந்து இலக்கியம் வளர்க்கும்

# சந்திரகௌரி சிவபாலன்



***சந்திரகௌரி சிவபாலன் இலங்கையில் பிறந்து தற்பொழுது ஜெர்மனியில் இருந்து இலக்கியம் படைத்து வரும் எழுத்தாளர் மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவாளர். இவரின் எழுத்துத் துறை ஆரம்பத்திற்கு தினகரன் தான் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.***

***முதன்முதல் 1983 இல் தினகரனில் இவர் கட்டுரைகள் எழுதியுள்ளார். பத்திரிகையில் முதன் முதல் எழுதியது தினகரனில் தான். புலம்ப்பெயர்ந்து ஜெர்மனி வந்த பின்னர் முழுமையாக எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ளார்.***

***5 நூல்களை இலக்கிய உலகிற்கு அளித்துள்ள இவர் தற்பொழுது நாவலொன்றை எழுதி வருகிறார். யாழ் பல்கலைக்கழக மாணவியான ஜெனா யுகரத்னம் இவரது படைப்புகளை ஆய்வு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. யூடியூப் செனல் ஊடாகவும் இலக்கியத்துறைக்கு பங்காற்றி வருகிறார். இவரை செந்தூரத்திற்காக நேர்காணல் கண்டோம்.***

**இவர் யார் என்று அறிவதற்கு முன் இவர் என்ன செய்து கொண்டிருக்கின்றார் என்னும் விடயம் உங்களுக்குத் தெரிய வேண்டாமா?**

பெண் என்றால் ஒரு பெருமை இருக்கின்றது. வீட்டிற்குள்ளே கறிச் சட்டிக்குள்ளே காலத்தை வீணாக்கும் பெண்களுக்கு மத்தியில் 10 விரல்குகளை நம்பி ஜெர்மனிக்குள் புகுந்த கௌசி என்னும் சந்திரகௌரி சிவபாலன் பற்றியே இந்தப் பதிவு எடுத்து வருகின்றது.

திருமணம் என்ற தாலி பந்தம் அவரை பிறந்த நாடாகிய இலங்கையிலிருந்து ஜெர்மனிக்கு அழைத்துக் கொண்டு வந்தது. அகதி வாழ்வு அவளுக்குப் பழக்கப்படவில்லை என்றாலும் தமிழைப் பிரித்து எடுத்து வந்த சோகம் மனதுக்குள் இருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக் கலைமாணி பட்டத்தைப் பெற்று அதன்பின் கல்வியியல் டிப்ளோமாவையும் கற்றுத் தேறி இலங்கையில் ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் 9 வருயடங்கள் கடமையை மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் வாழ்ந்து வந்தார். தமிழோடு கொஞ்சிய அவகருடைய நாவுக்கும் 1994 மார்கழி மாதம் 25 ஆம் ஆண்டு பனிமுட்ண்



டிய பாதைகளிலே படர்ந்த அவர் பாதங்களுக்கும் புதிய ஏக்கம் ஏற்பட்டது. புரியாத மொழி, தெரியாத கலாசாரம். அறியாத முகங்கள். வாழ்க்கை இனிக்கப் போகிறதா? கசக்கப் போகிறதா என்ற அச்சம். ஆனாலும் ஏற்றத்தை நோக்கிய விழிகளுக்கு தாழ்வுகள் தஞ்சமடைவதில்லை.



முதலில் மொழிக்குப் பழக்கப்பட்டார், தாய்மைக்கு இடம் தந்தார், கணம் வனுடைய சொந்த உணவகத்தில் பொறுப்புக்களை ஏற்றார். குழந்தையும் வளர, மொழி ஆற்றலும் வளர, ஜெர்மனிய நட்புக்களும் வளர வாழ வந்த நாடு அவருக்கு வளர்ப்புத் தாய்நாடாக மாறியது. ஆயினும் கருவறை தந்த மொழி தவிக்கும் நிலை புரிந்தது. தாய்நாடாகிய இலங்கையிலே வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளில் தன்னுடைய எழுத்தைப் பதித்தவர், ஜெர்மனியில் முதன் முதலில் முதலாவது படைப்பாக மண் சஞ்சிகையில் தன்னுடைய எழுத்தைப் பதியமிட்டார். அதனைத் தொடர்ந்து இலண்டன் தமிழ் வானொலியில் இலக்கியங்கள், கவிதை, ஆன்மீக சிந்தனை என்று இரவு பகல் பாராது தமிழோடு கொஞ்சி விளையாடினார், குதூகலமாய் ஆட்டம் போட்டார். காலப் போக்கில் 3 வருடங்கள் ஓடிவிளையாடு பாப்பா என்னும் உலகத் தமிழ் சிறுவர்களின் படைப்புக்களுக்குத் தலைப்பைக் கொடுத்து சிறுவர்களைத் தட்டிக்கொடுத்து விமர்சித்து நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். தொடர்ந்து தமிழ் மகள் அவளோடு ஒட்டிக்கொண்டார். தனக்கு அவளை ஜெர்மனியில் துணையாக அழைத்துக் கொண்டு சென்றார். யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராகவும் யேர்மனி தமிழ் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினராகவும் தொடர்ந்து செயற்பட்டார்.

இலக்கியத் தாகம், தமிழ் மூச்சு தணிந்ததா? இல்லை தொடர்ந்தது. தற்போது தமிழ்வான் அவை என்னும் இணையக் கலந்துரையாடலை மாதந்தோறும் நடத்தி வருகின்றார். அத்தளத்தில் இலக்கிய கர்த்தாக்களை அழைத்து, இலக்கிய உரைகளை ஆற்ற வைப்பதுடன், மறைந்த எழுத்தாளர்களை நினைவுறுத்துவது, அவர்களுக்கான ஆவணப்படங்கள் வெளியிடுவதும், தமிழர் கலைகளையும் நாட்டுப்புறக் கலைகளையும் வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதுடன், சமூகம் சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகின்றார்.

தமிழ் மகளுக்கு இது மட்டும் போதுமா. அவளோடு இன்னும் சல்லாபிக்கலாமே என்று இந்தியா, ஜெர்மனி, அவுஸ்திரேலியா, கனடா, போன்ற நாடுகளின் சஞ்சிகையிலும், இலங்கைப் பத்திரிகைகளிலும், வெற்றிமணி பத்திரிகையிலும் படைப்புக்களை வெளிவரச் செய்வதுடன் தன்னுடைய http://kowsy2010.blogspot.com என்னும் வலையிலும், வல்லமை.கொம் என்னும் இணையத்தளத்திலும் இன்னும் சில இணையத்தளங்களிலும் தமிழை இலக்கியமாகவும் கட்டுரையாகவும், சிறுகதை, கவிதையாககவும் எழுதி வருகின்றார். மேடைப்பேச்சுக்களில் கலந்து கொள்ளுகின்றார். வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகையில் கௌசியினுடைய பேட்டிகள் இடம்பெற்றிருக்கின்றன.

Ilakkiya maalai, Upayam என்னும் 2 youk tube channel களையும் நடத்தி வருகின்றார். அவற்றில் இலக்கியப் பதிவுகளும் ஆன்மீக அனுபவங்களும் இடம்பெறுகின்றன.

கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் போன்றவற்றை தொடர்ச்சியாக எழுதி வரும் கௌசி அவர்கள் ஆன்மீக வகுப்பில் கலந்து பிரம்மஞானம் கற்று பிரம்மஞானியாகத் தேர்ச்சி பெற்றுள்ளார். ஆன்மீக உரைகளும் ஆற்றி வருகின்றார்.

ஊதியத் தொழிலாக டிமென்சியா நோயாளிகளுக்கு பயிற்சியளித்து அவர்களுக்கு உதவி புரியும் கல்வியை ஜெர்மனி மொழியில் கற்று ஒரு நிறுவனத்தில் வயதான டிமென்சியா நோயாளிகளுக்குப் பயிற்சியளித்து உதவி புரியும் பணியைத் தன்னுடைய பெற்றோரின் நினைவாக கௌசி அவர்கள் செய்து வந்தார்.

தற்போது திரைப்படத் துறையிலும் தடம்பதிக்கத் தொடங்கியுள்ள கௌசி



அவர்கள் இந்திய ஜெர்மனி இணைப்புடன் வெளிவர இருக்கின்ற திரைப்படத்திற்கு துணைத் தயாரிப்பாளராகப் பணிபுரிகின்றார்.

பிரான்சில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து உரையாற்றியமையைப் பெருமையாகக் கருதுவதுடன் தன்னுடைய நூல்களை இலங்கை யாழ்ப்பாணப் பழகலைக்கழக மாணவி ஜனா யோகரெத்தினம் பட்டப் படிப்பு ஆய்வினை ஈடுபடுத்துவதையிட்டும் பெருமை கொள்ளுகின்றார்.அத்துடன் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் இவருடைய பனிக்குடம் என்னும் கவிதை நூல் அறிமுகம் செய்தமையும் இவருக்குப் பெருமைக்குரிய விடயங்களாக்கும்.

அவரைச் சுற்றி அன்னிய மொழி ஆட்சி செய்தாலும் அன்னிய நாட்டிலும் தன்னுடைய தாய்மொழியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருவதுடன் அதற்கான அர்ப்பணிப்புக்களைச் செய்து கொண்டிருக்கின்றார்.

***இவர் பெற்ற விருதுகள்***

1.தமிழ்ச்சுடர் தடாகம் கலை இலக்கிய மன்றம், இலங்கை
2.நவயுகக் கவிதாயினி ஊற்று வலையுலக அமைப்பு, இலங்கை
3.வெற்றிமணி விருது வெற்றிமணி, ஜேர்மனி
4.தமிழன்பன் விருது உலகப்பெண் கவிஞர் பேரவை, அட்லாண்டா
5.இலக்கியமாமணி விருது செவிலியர் தமிழ்மாமணி இராச வேங்கடேசன் அறக்கட்டளை புதுச்சேரி

***இவர் இதுவரை 5 நூல்கள் வெளியீடு செய்துள்ளார்***

1.என்னையே நானறியேன் நாவல்.
2.முக்கோணமுக்குளிப்பு கட்டுரைத் தொகுப்பு
3.வெள்ளை உடைக்குள் கரையும் பருவம் சிறுகதைத் தொகுப்பு.
4.நான் பேசும் இலக்கியம் கட்டுரைத் தொகுப்பும்
5.பனிக்குடம் கவிதைத் தொகுப்பு





எம்.எஸ்.பாஹிம்...
Whatsap: 0714901181







ஆண்களுக்கான சுப்ரிம் உயர் விருதுகள் 2023 வழங்கும் வைபவம் கடந்த 19 ஆம் திகதி கொழும்பு – 10, மருதானை, அபேகுணரத்னா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர் மற்றும் ஜீனத் டிரேடிங் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மஹீர் ஹசன் ஆகியோர் கலந்துகொண்டனர். உதவி பொலிஸ் அத்தியட்சகர் மினுர ரசந்த மற்றும் கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் ஊடகத் துறை, சமூக செயல்பாட்டு, கல்வி, சட்டம் மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



# காலத்தின் தவிப்பு

நெஞ்சூறித் தகிக்கும் கனல் துண்டை கவிதையில்
சுற்றியெடுத்து இந்திபாழாவின் கரமளிப்பேன்
இருள் கவிந்த இடிபாட்டினிடை
உயிர் விதைத்தனர் மழலையர்
கண்ணீரில் நீளும் இரவைக்கடக்கவியலா
துயர் கவ்வினர் தாயர்
எதுவுற்றுத் தொடரும் அகாலமா இது
நீரில்லை
உணவில்லை
மருந்தில்லை
உதவுவாரில்லை
இடிந்தடரும் தூசிடை மூச்சயரும்
காலமா இது
சாளரம் திறக்காத இரும்புக்கரங்களுருகாதா
அதன் தலையிலோர்
சம்மட்டியை
விட்டெறிய முடியாக் கவிதையை
எங்கு தொலைப்பேன்
உயிர் மாயுமோர் காலத்தின்
தவிப்பை எங்ஙனம் பொத்தி வைப்பேன்
கூத்தாடிகள் மகிழ்ந்துய்யும் பொழுதில் மனங் கூசுகிறது
மெய்யுலகு
ஒலிவம் சிறகுகளால் நெய்தெடுக்குமொரு
இன்திபாழாவுக்காக
ஆயிரம் கோடி சிறகுகளை
வனைந்தெடுக்கிறது
நம்பிக்கையின் மீச் சொற்கள்

*முல்லை முஸ்ரிபா*

# ரசிகர்களை வரவேற்கும் நாடகக் கலை



அரச நாடக விழா மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் நிகழ்ந்து வருகிறது. கலாசாரத் திணைக்களத்தின் வருடாந்த நாடகப் போட்டியரங்கில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி அரங்காற்றுகைகள் இடம்பெறுகின்றன.

சிங்கள நாடக அரங்கு முதிர்ச்சியடைந்துள்ளதென்பதனை சிங்கள ரசிக அளவு நிரூபிக்கிறது.

ஆனால் தமிழில் பார்வையாளர்கள் சிறியதொகையில் அல்லது விரல் விட்டெண்ணும் படியாகவேயுள்ளது. நாடகத்தின் பெறுமானம் அப்படித்தானுள்ளதெனச் சொல்லத் தோன்றுகிறது. எனினும் சில காத்திரமான தமிழ் அளிக்கைகள் இடம் பிடித்தன.

குறுநாடகங்களில் சில தமிழ் மொழி நாடகங்களைக் காணக் கிடைக்கினும் நீள நாடகங்களில் சிங்கள மொழியிலானது மட்டுமே இடம் பிடித்துள்ளமையும் தமிழின் தேய்நிலைமை அல்லது வளராநிலையையே சுட்டுகிறது. உண்மையில் நாடகம் எனும் கலை மொழி எல்லை கடந்த உடல்மொழியின் வெளிப்பாட்டு வடிவம்தான். அதனை மொழி எல்லைக்குள் சுருக்கிப் பேசுவது பொருத்தமில்லைத்தான்.

இலங்கையில் தமிழ் கலாசார மரபொட்டியதும், சிங்கள கலாசார மொழியொட்டியதுமான நாடக மரபுகளுண்டு. அவை குறித்த தேடல் அல்லது பின்பற்றுகை ஒரு வகையில் அவசியம் எனினும் நவீன நாடக அரங்கு புதிய பாணியிலான நாடக முறையை மேலெடுத்து நிற்கிறது. அரச நாடக விழாவில் இப்போக்கைக் காணக்கிடைக்கிறது.

உடல்மொழியாற்றுகைக் கலையை மேம்படுத்துவோம்.

# இலக்கியம் கற்பித்தலும் கற்பித்தல் இலக்கியமும்



இலக்கியம்: கற்றலும் கற்பித்தலும் மீது முன்பிருந்தே அவதானம் செலுத்தப்படுகிறது. இதற்கான ஒரு பொறிமுறை கற்றலாக்கத்தினூடாக முன்னெடுப்பதற்கான திட்டமிடலும் அனுபவமும் முக்கியமானது. பள்ளிக்கல்வி முறையில் இலக்கியம் கற்றல் கற்பித்தலுக்கான பாடப்பனுவலாக்கம் பின்பற்றப்படுகிறது.

தமிழிலக்கிய மொழியியல் சார் புலமைத்துச் சமூகத்தால் இதற்கென பிரதிக்கட்டமைப்பு வகுப்பு அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவொரு வகை மாதிரிதான்.

இலக்கியம் கற்பித்தலில் ஈடுபடுவோர் இலக்கியப் பற்றும் ஆளுமையும் மொழித்திறனும் மட்டுமன்றி கற்பித்தல் கலையெனும் ஆற்றுப்படுத்தல் திறனும் கைவரப்பெறல் வேண்டும். இன்று இலக்கியம் கற்பித்தல் முன்னைய அணுகுமுறையில் இருந்து நலிவடைந்து விட்டது என்கிற விமர்சனமும் உண்டு.

அத்தோடு கற்றல் முறை,கற்றலாளர் திறன், எதிர்பார்ப்பு, தேடலென கற்றலியல் அனுபவமும் அணுகலும் மாற்றமும் உள்ளது.

இலக்கியம் கற்றல் மீது மிகுந்த கரிசணைக்கட்டமைப்பொன்றின் மீது இன்று அவதானம் கோரப்படுகிறது.

இலக்கியம் கற்றல் ஒரு சுயசெயற்பாடென்றும் அதற்கான ஆர்வ வாசலைத்திறந்து விடுவது மட்டும்தான் கற்பித்தலென்றும் கருதப்படும் கூற்றொன்றுமுண்டு.

தற்கால இலக்கிப் போக்கு அல்லது இலக்கிய இற்றைப்படுத்தலென்பது இலக்கியம் கற்றலில் முக்கியமானது. இன்றைய முறைசார் கல்வி முறைமைக்குள் இலக்கியக் கல்வியை முழுமைப் படுத்த முடியுமா என்கிற எழுவினா உண்டு.பாடப்பனுவலுக்குள் மட்டுமன்றி உசாத்துணைப்பரப்புக்குள் இலக்கியம் குறித்த தேடல் மற்றும் ஆற்றுப்படுத்தல் அவசியமானது.

எனவே இலக்கியம் கற்பித்தல் வெற்றிபெறுவதற்கு கற்பித்தல் இலக்கியம் என்கிற தரமும் இன்றியமையாததாகும்.அத்தகைய கற்பித்தலென்றும் இலக்கியத்தை மேம்படுத்துவோமாக.




மாணவன் இப்ப எதுக்கு சார்! என்னை அடிச்சீங்க! வாத்தியார் பின்ன வகுப்புக்கு லேட்டா வந்தா! அடிக்காம கொஞ்சுவாங்களா! மாணவன் சார்! இது உங்களுக்கே கொஞ்சம் ஓவரா இல்லை! நான் பக்கத்து வகுப்பு மாணவன்! டஸ்ட்டர் வாங்கலாம் என்று வந்தேன்! வாத்தியார் ???

கோபு : டேய் பாபு எனக்கு லைப்பிலே ஒரு பிடிப்பு இல்லே தற்கொலை பண்ணிக்கலாம்னு தோணுதுடா
பாபு : அட அசடு அதுக்காகத் தற்கொலை பண்ணிக்காதே. கல்யாணம் பண்ணிக்கோ. அது போதும்.



ஆசிரியர் : பூமி தன்னைத்தானே சுத்தி சூரியனைச் சுத்துமா? இல்ல சூரியன் தன்னைத்தானே சுத்தி பூமியைச் சுத்துமா?
மாணவன் : எனக்குத் தலையைச் சுத்துது சார்.





வேலு : அதான் டி.வியில் நியூஸ் போடுறானேன்னு நியூஸ் பேப்பரை நிறுத்தினது தப்பாபோச்சு..
பாக்கி : ஏன்... என்னாச்சு?
வேலு : இப்பப் பாருங்க.. ஓசி பேப்பர் வாங்க வரும் பக்கத்து வீட்டுக்காரரு, கொஞ்சம் டி.வி இருந்தாக் கொடுங்க.. நியூஸ் பார்த்துட்டு தர்றேன்னு சொல்றாரு



ஒருவர் : நீங்க இந்த கிளினிக்கை ஆரம்பிச்சதுலேர்ந்து இது வரைக்கும் நான் உங்களைத் தவிர, வேற எந்த டாக்டர்கிட்டேயும் போனதில்லை
மற்றொருவர் : நானும் அப்படித்தான் இந்த கிளினிக்கை ஆரம்பிச்சதுலேர்ந்து இதுவரைக்கும் உங்களைத் தவிர, வேற எந்த பேஷண்ட்டுக்கும் ட்ரீட்மெண்ட் கொடுத்ததில்லை

பாக்கி : உன் வயது பதினெட்டுதானே
ரமனன் : எப்படி கரெக்டா கண்டுபிடிச்சே
பாக்கி : ஓர் அரை லூசின் வயது ஒன்பது



சித்ரா: ஏழு வருஷமா லவ் பண்றோம். இன்னும் நீங்க கல்யாணப் பேச்சையே எடுக்கலையே?
கோபு : சரி சித்ரா, இப்ப கேட்கறேன்.. எப்போ உன் கல்யாணம்?





முட்டாள் 1 : சார்... என் பேரு கந்தசாமி.... சொந்த ஊரு பழனி...
முட்டாள் 2: அதுக்கென்ன இப்போ..
முட்டாள் 1: ஆயிரம் ரூபா கடன் வேணும். ஊர் பேர் தெரியாதவனுக்கு எல்லாம் கடன் குடுக்க முடியாதுன்னு சொன்னீங்களே.. அதான் அறிமுகப் படுத்திக்கிட்டேன்.



ராணி : சென்சார் போர்டுல வேலை செய்யறவரைக் கல்யாணம் செய்துகிட்டது தப்பாப் போச்சு..
வேனி : ஏன்?
ராணி : படுக்கையறையே இல்லாம வீடு கட்டியிருக்காரு..

திருடன் : டேய், நான் திருடன்... மரியாதையா எடு பர்ஸை
போலீஸ் : டேய், நான் போலீஸ்காரன்... மரியாதையா எடு மாமூலை



கவிதா : அந்த ஆள் ரொம்ப சிக்கனப் பேர்வழி... எப்ப மார்க்கெட்டுக்குப் போனாலும் வாழைப்பழம்தான் வாங்குவாரு..
லதா : ஏன்...
கவிதா : அதான் சீப்பா கிடைக்குதாம்



பெரியசாமி: எங்க தலைவர் ஒரு திறந்த புத்தகம் மாதிரி.
சின்னசாமி : ஓ! அதுதான் நேத்து ரோட்டிலே போட்டு ஆளாளுக்குப் புரட்டி எடுத்தாங்களா?





நண்பர் 1 : என்ன சார்... உங்க பையன் அவனோட தாத்தா மேல ஏறிப் படுத்துகிட்டு இருக்கான்...?
நண்பர் 2 : நான்தான் சொன்னேனே.. எங்கப்பா படுத்த படுக்கையா ஆகிட்டாருன்னு..

# லேக்ஹவுஸ் அக்கடமியின் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் விழா ; அமைச்சர் பந்துல பிரதம அதிதி






இலங்கை ஊடகத்துறையில் தனித்துவமான பங்களிப்பை வழங்கிய இலங்கையின் லேக்ஹவுஸ் நிறுவன ஊடக கற்கை நிலையத்தால் நடத்தப்பட்ட ஊடக தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் ஊடக தொடர்பாடல் டிப்ளோமா கற்கைநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்றது. போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தலைமையில் டிப்ளோமோ சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசத்தின் வழிகாட்டலின் கீழ், சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. இலங்கையின் முன்னணி ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் குழு, முகாமைத்துவ குழு உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இங்கு ஊடக தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறியை கற்ற பத்து மாணவர்களுக்கும் டிஜிட்டல் ஊடக தொடர்பாடல் பாடநெறியை கற்ற 16 மாணவர்களுக்கும் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.